stoicdale
publishers

2-ம்
பதிப்பு

# கேரள டயரீஸ்

## வேர் தேடுவோம்...

அருளினியன்



# கேரள டயரீஸ் 1

## வேர் தேடுவோம்...

அருளினியன்

stoicdale publishers

கேரள டயரீஸ் - 1
ஆசிரியர் : அருளினியன்
முதல் பதிப்பு : ஆகஸ்ட்,2017

Language : TAMIL
**KERALA DIARIES-1**
Author : **Aruliniyan**
Second Edition : August, 2017
Copyright : © Author
No.of Pages: 162

Publisher :
**STOICDALE PUBLISHERS**
Delhi | Bengaluru | Chennai
Ph: +91 9003048162, +91 9080133568

Creative & Designing
**JEEVA PATAIPPAGAM**
Velachery, Chennai-42, Tamilnadu, India.
Email : jeevapataippagam@gmail.com
Ph: +91 9994220250 / +91 9843576184

Code No. SP003
இந்தியா ₹ 230
இலங்கை ரூபாய் 450
வெளிநாட்டில் €5 யூரோ

( *தபால் செலவு தனி )

தமிழர் தேசத்தை அமைக்கும்
பெருங் கனவுடன் வித்தாகிப்போன
எனது சகோதர சகோதரிகளின்
நினைவுகளுக்கு இந்நூலை
சமர்ப்பணம் செய்கிறேன்!

நீத்தார் வழிபாட்டின் தொடர்ச்சியாக,
எங்களைக் காத்த மூத்தோர்களாக,
உங்களை நாங்கள் வழிபடுவோம்.
எங்களது வருங்கால சந்ததி நாளை
சொந்தமாக வீடுகட்டும்.
எமது வீடுகளின் சாமியறைகளில்,
நீங்கள் தெய்வங்களாக
வணங்கப்படுவீர்கள்!

- அருளினியன்

## நன்றி

கடையவனேனைக்
கருணையினால் கலந்தாட்கொண்டு,
எனக்கு பத்திரிகை எழுத்தைச்
சொல்லிக் கொடுத்த
என் ஆசான்

வைத்தியநாதன்
சாருக்கு...

# மின்மினிப் பூச்சிகள்

எனக்கு அருளினியனைத் தெரியாது. முகநூலில் நண்பர். ஓரிரு முறை தொலைபேசி உரையாடல்கள் நிகழ்ந்திருந்தது. அந்த உரையாடல்களில் முகம் தெரியாத அவரின் அன்பும் மரியாதையும் என்னை வியக்க வைத்தன. முகநூல் பதிவுகளிலும், பேச்சுக்களிலும் அவர் அழகர், துடிப்பானவனர், தீராக் காதலர் என்கிற பிம்பங்கள் மட்டுமே மனதில் இருந்தன. புத்தக வெளியீட்டு விழாவொன்றில் முதன் முதலாகச் சந்தித்தபோது ஒரு சில நிமிடங்களே பேசிக்கொண்டோம். வாழ்க்கை இப்படியே போய்க்கொண்டிருக்க ஒரு நாள் முகநூலில் புலிமுருகன் போல் ஒரு படத்தைப் போட்டு கேரளா டயரீஸ் என்று அவர் எழுதியிருந்ததைப் பார்த்தபோதுதான் பொதுவாக மனதில் அருளினியனைப் பற்றிய பிம்பங்கள் மாறத் துவங்கின. சரளமான மென்மையான எழுத்து நடைக்குள் மொழி, கலாச்சாரம், வரலாறு, அரசியல் என பல கனமான விஷயங்கள் பொதிருந்தது பெரும் வியப்பாக இருந்தது. பிரதானமாக ஒரு சினிமாப் பத்திரிகையாளராகச் செயல் பட்டுக் கொண்டிருந்த அருளினியனின் சிந்தனையின் மீது வரலாறும் கலாச்சாரமும் எத்தகைய அழுத்தத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உணரச் செய்தது அந்த எழுத்து.

பொதுவாகவே போர்ச் சூழலில் வளர்பவர்களுக்கு கண்ணெதிரே நடக்கும் கொடூரங்களும், நேற்று வரை பேசி உறவாடிக் கொண்டிருந்தவர்கள் இன்றில்லை இனி வரமாட்டார்கள் என்ற கொடிய நிதர்சனத்திலிருந்து எழும் அளவற்ற சோகமும் கோபமும், என் மண்ணில் நான் தொடர்ந்திருக்க முடியாது என்கிற நிச்சயமின்மை தரும் நிரந்தர வேதனைகளும் ஒரு தீர்க்கமான அரசியல் சமூகப் பார்வையை உருவாக்குகிறது. என் இருப்பும், நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடத்தில் நான் தொடர்ந்து இருப்பதும் நிச்சயமற்றதாகும்போது நான் யார் என்ற கேள்வி பூதாகாரமாய் எழுந்து நிற்கிறது. இனம், மதம், மொழி ஆகியவற்றின் வேறுபாட்டால் நான் என் மண்ணிலேய அன்னிய மனிதனாகப் பார்க்கப்படும்போது, என் உரிமைகள் மறுக்கப்படும்போது, வாழ்வின் தினசரி நிச்சயங்கள் தகரும்போது என் உலகப் பார்வையே மாறிவிடுகிறது. உரிமையை மீட்பதற்கான போராட்டம் நடத்தும் அதே நேரத்தில் கட்டமைக்கப்பட்ட சமுக அடையாளங்களை ஊடுருவி மீண்டும் மனித அடையாளத்தை நிலைநிறுத்தும் நீண்டகாலத் தேவையும் எழுகிறது. இப்போது இல்லையென்றாலும் எதிர்கால

சந்ததியினரின் நிம்மதியான வாழ்க்கைக்காக மனிதத்தை மீட்க வேண்டிய தேடல் தொடங்குகிறது.

ஆப்பிரிக்க அமெரிக்கராக நியூயார்க் நகரில் பிறந்த அலெக்ஸ் ஹேலியின் இந்தத் தேடல் அவரை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவின் ஒரு மூலையில் ஒரு சிறுவனாக சிறை பிடிக்கப்பட்டு அமெரிக்கத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக அடிமையாக விற்கப்பட்ட காம்பியா நாட்டில் வாழ்ந்த குண்ட்டா கிண்டே என்கிற மூதாதையர் வரை அழைத்துச் செல்கிறது.

குண்ட்டா கிண்டே அமெரிக்காவின் வர்ஜீனியா மாநிலத்தின் தோட்ட முதலாளியிடம் விற்கப்பட்டபோது, டோபி என்று பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

இந்தத் தேடலின் முடிவில்தான் 1976ஆம் ஆண்டில் "வேர்கள்": ஒரு அமெரிக்கக் குடும்பத்தின் கதை என்கிற அற்புத புதினமாகவும், பின்னர் பிபிசியில் புகழ்பெற்ற தொலைக்காட்சித் தொடராகவும் உருவானது. குழந்தையாக இருந்தபோது தங்கள் மூதாதையரின் வரலாறு குறித்து பாட்டி சொன்ன கதைகளைக் கேட்டு வளர்ந்தவர் ஹேலி.

அலபாமா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த அவரது தந்தை, ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்த அவர் அமெரிக்காவின் வெள்ளை இனவெறியர்களின் எத்தகைய கொடுமைகளைக் கடந்து வந்தார் என்று சொன்ன கதைகளும் ஹேலியின் தேடலுக்குக் ஒரு முக்கியக் காரணம். இது உண்மையும் புனைவும் கலந்த ஒரு கதை.

சல்மான் ருஷ்டியின் "மூரின் கடைசிப் பெருமூச்சு" *(Moor's Last Sigh)* கேரளாவின் கொச்சி நகரிலும், மும்பையிலும் வசிக்கும் நறுமணப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இரு பெரும் செல்வச் செழிப்பான குடும்பங்களின் கதை. குலப் பெருமை பேசும் ஒரு குடும்பத்தின் வேர்கள் ஸ்பெயின் நாட்டை ஆண்ட ஒரு மூரிடம் சென்று முடியும். முற்றிலும் புனைவான ஒரு கதை.

அருளினியனின் தேடலும் ஒரு விதத்தில் இப்படிப்பட்டதுதான்.

ஈழத்திற்கும் கேரளாவிலுள்ள ஈழவர்களையும் நூற்றாண்டுகளைத் தாண்டி இணைக்கும் நுண்ணிய மொழி, கலாச்சார வேர்களைத் தேடும் முயற்சி இது. கையில் ஒரு சில ரூபாய்களை மட்டும் வைத்துக் கொண்டு வட கேரளத்தின் மலைகளிலும், கடல் புறத்திலும், சமவெளிகளிலும் சுற்றித் திரிய வைத்த தேடல் இது. சாதிப் பெருமை, மதப் பெரும்பான்மை வாதம், மொழி வேற்றுமைகள் என கட்டமைக்கப்பட்ட பல சுவர்களின் இடுக்குகளிற்குள் வேர் விட்டு முளைத்து பளிச்சென்று சிரிக்கும் பச்சைச் செடிகளைப் போல் நம்மைப் பரவசப்படுத்தி சிந்தனைக்குள் தள்ளும் எழுத்து அவருடையது. கேரளாவின் இடைவழிகளில் நடந்து

செல்லும்போது காணப்படும் சுவர்கள் அந்தப் பிரதேசத்தின் அழகுகளில் ஒன்று.

அருளினியன் முதன் முதலில் தொலைபேசியில் பேசியபோது அந்தக் குரல் இலங்கையின் நிகரில்லா இனிமைத் தமிழ் போன்றிருந்தது. மலையாளம் போலவும் இருந்தது. இவர் இலங்கைத் தமிழரா அல்லது மலையாளியா? இரண்டாகவும் இருக்கலாம். வரலாற்றில் சற்றுப் பின்னோக்கிப் போனால் மூன்றாகவும் இருக்கலாம். இன்னும் பின்னோக்கிப் போனாலும் மூன்றாகவும் நான்காவாகவும், ஆதிகாலத்து ஒன்றிலிருந்து தோன்றியதாகவும் இருக்கலாம். நாம் எல்லோரும் புலம் பெயர்ந்தவர்கள்தாம் என்று புதிய மரபணு ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

மனிதகுல வரலாற்றின் தொடர்ச்சியில் நாம் அனைவரும் பல கலாச்சார அணுக்களைச் சுமக்கும் துகள்களாகவும் இருக்கிறோம். அலைகளாகவும் இருக்கிறோம்.

நான் எங்கிருந்து வந்தேன், எங்கே செல்கிறேன்? முடிவின்றித் தொடரும் மனித குல வரலாற்றில் தனி மனித வாழ்வு ஒரு சில நொடிகள்தாம். அந்த சில நொடிகளுக்குள் நாம் வேறுபாடுகளைக் கொண்டாடி, ஒற்றுமைகளை வலுப்படுத்தி, முரண்பாடுகளை சமன் செய்து பறக்கும் மின்மினிப் பூச்சிகள்தாம் நாம். அவை இல்லாத போதும் வெளிச்சம் நினைவில் ஒளிரும்.

அடர்ந்த கேரளக் காடுகளுக்குள்ளிருந்து வரும் மின்மினிதான் அருளினியனின் இந்தப் புத்தகம்.

எனக்கு இப்போது அருளினியனைத் தெரியும். இனிவரும் பக்கங்களில் நீங்களும் தெரிந்து கொள்வீர்கள்.



**ஆர். விஜயசங்கர்**
*மூத்த பத்திரிக்கையாளர்*
*ஆசிரியர் - ஃப்ரெண்ட் லைன்*

# பொருளடக்கம்

1. தளிப்பறம்பு நம்பூதிரியும் பின்னே ஞானும்
2. மணிப்பிரவாளமும் இலங்கைத் தமிழும்
3. ஈழவர் என்ற ஈழத்தவர்
4. முருகனைத் தொலைத்த கதை
5. காவுகள் என்ற கோவில் காடுகள்
6. வேர் தேடி
7. வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தின் துயரம்
8. நாவலரும் சைவ வெள்ளாள மேலாதிக்கமும்
9. வீரத்தை இழந்த கதை
10. தேசவழமை என்ற வெள்ளாளச் சட்டம்
11. பணியாக்களும், குறிச்சியர்களும்
12. கொட்டியூர் மர்மங்கள்
13. கண்ணகித் தெய்வமும் கண்டிப் பெரஹராவும்
14. களரி
15. கதகளியும் மத ஒருமைப்பாடும்
16. பாலாறும் பாவலி ஆறும்
17. முத்தப்பனும் தெய்யமும் கள்ளும் கருவாடும்
18. தட்சனின் தாடி
19. மாட்டிறைச்சி அரசியல்
20. மிருக பலி ஆரியர்
21. திலீப் ஏட்டனும் டிங்கோயிஸ்ட்டுகளும்
22. ***Buddy love***

# தளிப்பறம்பு நம்பூதிரியும் பின்னே ஞானும்

கேரளாவில், பையனூர் - கண்ணூர் இடையே உள்ள 'தளிப்பறம்பு' என்ற அழகான ஊருக்கு வேலை விஷயமாக வந்திருந்தேன். எனது பிரதான வேலை ட்ராவலிங் என்பதை நீங்கள் மறக்கக் கூடாது.

தளிப்பறம்பில் உள்ள, "திருச்செம்பரம் ஸ்ரீ கிருஷ்ண சுவாமி கோவில்" என்ற, ஆயிரத்து இருநூறு வருஷப் பழமையான கிருஷ்ணன் கோவிலில்தான் அந்த வயதான நம்பூதிரிகளை சந்தித்தேன். பத்திரிகையாளன் என்று அறிந்தவுடன் எடுத்த எடுப்பிலேயே, "கம்யூனிஸ்ட் அரசு நம்பூதிரிகளை நசுக்குகிறது" என்றார். "ஒன்று தெரியுமா..? தளிப்பறம்பின் பூர்வீக குடிகள் நாங்கள்தான். இன்று, மூன்றாம் தரக் குடிகளாகி விட்டோம்" என்று பெரு மூச்சொன்றை விட்டார்.

"திரேத யுகத்தில், பரசுராமர் என்ற விஷ்ணுவின் ஆறாவது



அவதாரத்தினால் கேரள மண் உருவாக்கப்பட்டது. பரசு என்றால் கோடாரி. அவர் கையில் எப்போதும் கோடாரி வைத்திருந்தார். அதனால் பரசுராமர் ஆனார். ஒருநாள் கடலுக்குள் தனது கோடரியை விட்டெறியவும், கடல் உள்வாங்கியது. அந்த உள்வாங்கிய நிலப் பரப்புத்தான் கேரளம்"

"அதுக்கு...."

"கேரள பூமியை உருவாக்கினால் மட்டும் போதுமா..? நிர்வாகத்தை சரியாக நடத்த வேண்டாமா..? அதனால், கர்நாடகத்தில் இருந்து மிகத் திறமையான மூவாயிரம் பிராமணக் குடும்பங்களை அழைத்துவந்து, தளிப்பறம்பில் தங்க வைத்தார்" என்றவர், மலையாளிகளுக்கு நாகரீகத்தை சொல்லிக் கொடுத்தவர்களே நம்பூதிரிகளாக்கும் என்றார்.

"நம்பூதிரிகளின் பேச்சில் ஐம்பது வீதத்தை மட்டுமே நம்பலாம்" என கேரள ஜர்னலிஸ்ட் சேட்டன் ஒருவர் சொன்னதை நான் மனத்தில் நினைத்துக் கொண்டேன்.

"இங்கே பாருங்கள்... தளிப்பறம்புக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த கேரளத்துக்கும் நாகரீகத்தைச் சொல்லிக் கொடுத்த நம்பூதிரிகள், இப்போது கம்யூனிஸ்டுகளால் திட்டமிட்டு அடக்கப் படுகிறார்கள். 'தளிப்பறம்பு' என்ற இந்த பெரிய நகரத்தில், முன்பு இரண்டே இரண்டு வகையான நிலங்கள் மட்டுமே இருந்தன. 'பிரம்ம ஷோம்' அது பிராமணர்களுக்குரிய நிலம், 'தேவஷோம்' இது தேவனுக்கான நிலம். அதாவது, இறைவனுக்கான கோயில் நிலம். இதைத்தவிர வேறு எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் 'தளிப்பற'ம்பில் நிலம் இருக்கவில்லை. நம்பூதிரிகளும் இறைவனும் ஈக்குவலாக்கும். சில இடங்களில் நம்பூதிரிகள் இறைவனாக்கும்" என்றார்.

"ஆனால்......" பெரு மூச்சொன்றை விட்டபடியே தொடர்ந்தார். "சுதந்திர ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் தலைமையிலான கம்யூனிச அரசு ஒரு மகா கேவலமான விஷயத்தை செய்தது. கேரளம் முழுவதும் நம்பூதிரிகளிடம் இருந்த நிலங்களை வலுக்கட்டாயமாகப் புடுங்கி குடியானவர்களுக்குக் கொடுத்தது. 'தளிப்பற'ம்பில் மட்டும் சுமார் 1000ஏக்கர் பிராமண நிலம் இப்படியாகப் பிடுங்கப்பட்டது. எவ்வளவு பெரிய அநியாயம்!"

"இதிலே மிக வேதனையான விஷயம் என்ன தெரியுமா..? அதைச் செய்த ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் ஒரு நம்பூதிரி. பிராமணனை வைத்து, பிராமணனை அடித்தது கம்யூனிஸ்ட் அரசு. தன் கை விரல்களை வைத்து, தன் கண்களைக் குத்துவதுபோல".



ஈஎம்எஸ்
நம்பூதிரிப்பாட்

'ம்...'

"இப்போது பினராயி விஜயன் அரசும் நம்பூதிரிகளை வஞ்சிக்கிறது. நம்பூதிரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும் என்ற உண்மை மகாவிஷ்ணுவின் அவதாரமான பரசுராமருக்கே விளங்கியிருந்தது. ஆனால், கம்யூனிஸ்ட் அரசுக்கு அது விளங்கவே இல்லை. ச்... ச்சா" என்று அலுத்துக் கொண்டார்.

அவர் தனது மனக்குமுறலைக் கொட்டியபோது நான் திருப்பிப் பேசாமல் மையமாக "ம்..." மட்டும் கொட்டிக் கொண்டிருந்தேன். அந்த "ம்"மை அவர் சம்மதமாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். மேலும், என்னுடைய நிறத்தை வைத்து, என்னை ஒரு தமிழ் பிராமணர் என அவர் நினைத்துக் கொண்டார். "தமிழ் நாட்டில் தமிழ் பிராமணர்களும் திராவிட இயக்கங்களால் வஞ்சிக்கப்படுகின்றன" என்றார். அதற்கும் நான் மையமாக மீண்டும் ஒரு "ம்.." கொட்டி வைத்தேன்.

"இந்த தடவை கேரளத்தின் அனைத்து வகையான ஜாதிய அடக்கு முறைகளுக்கும் நம்பூதிரிகள்தானே ஏதோ ஒரு வகையில் மூல காரணமாக உள்ளார்கள்.." என்றேன். ஒரு சக பிராமணனை இன்னொரு சக பிராமணன் இப்பிடிப் பேசலாமா என்பதுபோலப் பார்த்தவர், "நம்பூதிரிகள் ஜாதி அடக்குமுறைக்கு எந்த வகையிலும் காரணமில்லை. நாங்கள் எல்லோரையும் சரி சமமாகவே நடத்துகிறோம். அதுதான் நம்பூதிரிய தர்மம். கம்யூனிஸ்ட்கள்தான் எங்களைப் பற்றி திட்டமிட்டுக் கதை பரப்புகிறார்கள்" என்றார்.

நான் மீண்டும் 'ம்...' கொட்டினேன்.

"கோயிலில் சாப்பிடுங்கள்" என்றவர். கோயிலின் உள்ளே இருந்த சிறிய குளத்தைக் காட்டி, "மூலிகைக் குளம். அற்புதமான நோய் நீக்கி, குளிப்போம் வாருங்கள்" என்றார்.

அந்த சிறிய பாசி படிந்த குளம். நான்கு கிணறுகளை ஒன்று சேர்த்துக் கட்டியதுபோல இருந்தது.



பினராயி விஜயன்

நான் எனது சட்டையைக் கழற்றி, முண்டு அணிந்து குளிக்கத் தயாரானேன். எனது சட்டை இல்லாத கோலத்தை அப்போதுதான் முதன்முறையாகப் பார்த்த அந்த வயதான நம்பூதிரி திகைத்துப் போனார்.

அவரது திகைப்புக்கான காரணம் எனக்கு ஓரளவுக்கு பிடிபட ஆரம்பித்தது. அவர் எதிர்பார்த்த பூணூல் என் உடம்பில் இல்லை. அவருக்கு முன்பாக குளத்தின் படிக்கட்டுகளில் இறங்கிய என்னை நோக்கி பதறியபடி ஓடி வந்தவர், "நான் உங்களை தமிழ் பிராமணர் என்றெல்லோ நினைத்தேன்" என்றார். "நான் அப்பிடிச் சொல்லவில்லையே" என்றதும், தலையைச் சொறிந்தபடி, "இந்தக் குளத்தில் பிராமணர்கள் மட்டும்தான் குளிக்கலாம். மற்ற ஜாதியினர் குளிக்க, கோவிலுக்கு வெளியே பிரமாண்டமாக மூன்று ஏக்கரில் வேறு குளம் உண்டு. அங்கே குளிங்க. இது சீத்தைக் குளம்" என்றார்.

நம்பூதிரிகளை, ஏன் கலைத்துக் கலைத்து, கேரளக் கம்யூனிஸ்டுக்கள் தாக்குகிறார்கள் என்ற சூட்சுமம் அந்த நொடி எனக்குப் புரிந்து போனது.

# மணிப்பிரவாளமும், இலங்கைத் தமிழும்

"பாடசாலை என்கிறீர்கள், கலாநிதி என்கிறீர்கள், உபதேசம் என்கிறீர்கள் நீங்கள் பேசும் ஈழத் தமிழில், ஏன் இத்தனை சமஸ்கிருதக் கலப்பு.." எனக் குறைபட்டார், தனித் தமிழ்ப் பற்றாளரான தமிழ் நண்பர் ஒருவர். (மேலே கூறிய சொற்கள் எல்லாமே சமஸ்கிருதம்) அவர் சொல்வது உண்மைதான், நாங்கள் ஈழத் தமிழில் அன்றாடம் உபயோகிக்கும் 50 வார்த்தைகளைப் பட்டியல் இட்டால், அதில் குறைந்தது 10 வார்த்தைகளாவது சமஸ்கிருதமாக இருக்கும்.

வார்த்தை - சமஸ்கிருதம், சொல் - தமிழ் என்று சொல்பவர்கள் உண்டு. ஆனால், வார்த்தை என்ற தமிழ்ச் சொல், தமிழில் இருந்தே சமஸ்கிருதத்திற்குச் சென்றது என்போர் பக்கம் நான்

நாங்கள் பேசும் தமிழில் ஏன் இத்தனை சமஸ்கிருத வார்த்தைகள்..? கொஞ்சம் வரலாறு பார்ப்போம். உண்மையில் ஈழத் தமிழர்களாகிய நாங்கள் பேசுவது சேர நாட்டுத் தமிழ். இன்னும் சொல்லப்போனால் மலைவாழ் மக்களின் தமிழ். மலையாளத் தமிழ். மணிப்பிரவாளத்தின் தாக்கத்தில் வந்த தமிழ்.

அது என்ன மணிப்பிரவாளம்...?

மலையாளிகள் பேசும் மலையாளத்தை உற்றுக் கேளுங்கள் அது, தமிழையும், சமஸ்கிருதத்தையும் மாற்றி மாற்றிக் கோர்த்த மாலை போல இருக்கும். அதாவது, மணியும், பவளமும் சேர்ந்து உருவாக்கப்பட்ட மாலை போல, திராவிட மொழியான தமிழும், வட மொழியான சமஸ்கிருதமும் கலந்து எழுதப்பட்ட இலக்கிய நடையே மணிப்பிரவாள நடை.


சங்க காலத் தொகைநூல்களில் ஒன்றான அகநானூறில் உள்ள மூன்று பகுதிகளில், 'மணிமிடைப் பவளம்' ஒன்றாகும். இந்த


'மணிமிடைப் பவள'த்தில் இருந்துதான், மணிப்பிரவாளம் என்ற வார்த்தை உருவாகியுள்ளது. ஆனால், மணிமிடைப் பவளம், இரண்டு முற்றிலும் வெவ்வேறான ஏலியன் மொழிகளை இணைத்து எழுதுவதைக் குறிக்கவில்லை. மாறாக, கஷ்டமான சொற்களையும் எளிய சொற்களையும் சேர்த்து எழுதுவதை குறித்து நின்றது. இந்த மணிமிடைப் பவளம் மருகியே, நாளடைவில் 'மணிப்பிரவாளம்' என்ற பெயர் உருவானது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.


மணிப்பிரவாள நடை, வைணவ உரையாசிரியர்களால் கண்டு பிடிக்கப்பட்டது என்போரும் உண்டு. "ஆழ்வார் பாசுரங்களுக்கு உரை எழுத அவற்றின் உரையாசிரியர்களால் மணிப்பிரவாள நடை உருவாக்கப்பட்டது. இந்த நடை, பதினோறாம் நூற்றாண்டில் துவங்கி, இரு நூற்றாண்டுகள் வழக்கில் இருந்தது. இந்தக் கலப்பு உரைநடை, ஏன் இந்தக் காலகட்டத்தில் தோன்றியது? ஏன் வைணவ உரையாசிரியர்களால் கையாளப்பட்டது? ஏன் கைவிடப்பட்டது? என்ற கேள்விகள் ஆய்வுக்கு உரியவை" என்கிறார் பேராசிரியர் இ.அண்ணாமலை.

சமஸ்கிருதம் தேவ மொழியாக அக்காலத்தில் மதிக்கப்பட, தமிழுடன் சமஸ்கிருதத்தைக் கலந்து எழுதுவதை அக்காலத்தில் உயர்வாக நினைத்தனர். அறிஞர் பெருமக்கள் குத்தி முறிந்து, மணிப்பிரவாள நடையில் எழுதுவதைப் பெருமையாகவே நினைத்தனர். அது ஏனோ தெரியவில்லை, வைணவ இலக்கியங்களில் செல்வாக்குச் செலுத்தியதைப் போல, சைவ இலக்கியங்களில் மணிப்பிரவாள நடையால் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. இதுவும் ஆய்வுக்குரியது.

தமிழுடனான, சமஸ்கிருதக் கலப்பை, சோழ மன்னர்கள்தான் ஊக்குவித்தனர். "அருண் மொழி" என்ற அழகிய தமிழ்ப் பெயரை, "இராஜ ராஜ சோழன்" என்ற சமஸ்கிருதப் பட்டமாக மாற்றிக் கொள்ளும் அளவுக்கு, சமஸ்கிருதம் தேவ மொழி என யாரோ சில பிராமணர் இராஜ ராஜ சோழனின் மண்டையைக் கழுவியிருக்க வேண்டும்.


சேரர் விற்கொடி


சோழர் புலிக்கொடி


பாண்டியர் மீன்கொடி

* இக்கொடிகள் யூகத்தின் அடிப்படையில் வரையப்பட்டவை



**ராஜ ராஜ சோழன்**
**தன் குருவுடன்**
**பிரகதீஸ்வரர் ஆலயம், தஞ்சை**

கம்பராமாயணத்தில் சமஸ்கிருத வார்த்தைகள் குறைவு. ஆனால், அதேகாலத்தைச் சேர்ந்த சோழர்களின் கல்வெட்டுகள் பெரும்பாலானவை மணிப்பிரவாள நடையில் அமைந்திருக்கும். சோழர் ஆட்சியில் இந்தோனேசியா வரைக்கும் தமிழ்க்கொடி பறந்தது. தமிழர்களுக்கு பல வகையிலும் சோழராட்சி பொற்காலமாக இருந்திருக்கலாம். ஆனால், அவர்களின் ஆட்சிக் காலத்தை தமிழ்மொழியின் பொற்கால மெனச் சொல்ல முடியாது என்பது சோழரைக் கொண்டாடும் தமிழர்களுக்கு கொஞ்சம் கசப்பான உண்மைதான்.

அதேநேரம் சேர நாடான இன்றைய கேரளாவில், வித்தியாசமான வட்டார மொழி வழக்கத்தில் இருந்து வந்தது. மதுரைத் தமிழ், கொங்குத்தமிழ்,நெல்லைத்தமிழ் போல. இந்த மலைநாட்டு வட்டாரத் தமிழ், சமஸ்கிருதத்துடன் கலந்து, 'மலையாளம்' என்ற புது மொழியாக உருவெடுத்தது.

சுமார் ஒன்பதாம் நூற்றாண்டில், மலையாளத்தின் தோற்றம் நிகழ்ந்திருக்கலாம் என்பது அறிஞர்களின் முடிவு. உண்மையில் சேர நாட்டு வட்டாரத் தமிழில், சமஸ்கிருதத்தின் தாக்கம் அதிகமாகி, சேர நாட்டினர் மணிப்பிரவாள நடையை தாராளமாகப் பின்பற்றினர். சமஸ்கிருதம் கலந்த சேர நாட்டுத் தமிழ், காலப்போக்கில் மலையாளம் என்ற புதியதொரு மொழியாக உருமாற்றம் பெற்றது.அவ்வாறு மலைநாட்டு வட்டாரத் தமிழுடன் சமஸ்கிருதத்தைக் கலந்து, மலையாளம் என்ற புதுமொழி உருவாகப் பிரதான காரணமானவர்கள் கேரளத்து நம்பூதிரிகள். மணிப்பிரவாள நடைதான் உயர்ந்தது என மக்களை நம்பவைத்தது மட்டும் அல்லாமல், தமிழுடன் வட மொழியான சமஸ்கிருதத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கலந்தனர்.

ஆரியர்களான நம்பூதிரிகள், திராவிட மொழியான தமிழை

வெறுத்ததில் ஆச்சர்யம் எதுவும் இல்லை. ஆரிய மொழியான சமஸ்கிருதம்தான் உயர்ந்தது என இவர்கள் பிரச்சாரம் செய்ய சமூக அன்றைக்குஅந்தஸ்திலும், கல்வியிலும் மேன்நிலையில் இருந்ததால் நம்பூதிரிகளின் கருத்துக்கள் *Deciding Factors* ஆகின.

சோழ, பாண்டிய தமிழ் இராச்சியங்களில் இருந்து, மலைநாட்டை கிழக்கே இருந்த மலைத தொடர் பிரித்தது. இதே நேரம் மலை நாட்டில் சுமார் 3நூற்றாண்டுகளாக ஆட்சியில் இருந்த, சோழரின் செல்வாக்கு குறைந்து, பெருமக்கன்மார் என்ற, மலை நாட்டவர்களின் ஆட்சி அங்க ஏற்பட்டது. தமிழக மக்களுடான வணிக உறவுகளும் குன்றின. இந்தக் காரணங்களினால், சேர நாட்டுத் தமிழ் மொழியில் வட்டார வேறுபாடுகள் அதிகமாகி மலையாளம் என்ற தனி மொழி வேரூன்றியது.

வரலாற்றுக் காலத்தில் இந்தச் சேர நாட்டில் இருந்து, ஈழத்திற்கு, மிகப் பெரிய குடியேற்றம் ஒன்று நடந்தது. போர்த்துக்கீயர்களின் ஆவணங்கள் யாழ்ப்பாணத்தவர்களை, "மலபாரிகள்" என்றே அழைக்கின்றன. ஈழத்தில் குடியேறிய இந்த சேர நாட்டுத் தமிழர்கள், சமஸ்கிருதத்தின் பாதிப்புள்ள மலைநாட்டுத் தமிழையே பேச பெரும்பான்மையான இலங்கைத் தமிழர்கள், பேசும் மொழி தமிழாகவும், வாழ்க்கை முறை அசல் மலையாளிகளின் வாழ்க்கை முறையை ஒத்ததாகவும் உள்ளது.

சேர நாட்டுத் தமிழர்களின் பாதிப்பில் வந்த விடுதலைப் புலிகள், தங்களின் பரம எதிரிகளான *(Arch-rival)* சோழர்களின், புலிக் கொடியை, தங்களின் கொடியாக்கிக் கொண்டது. கூட காலத்தின் விந்தைகளில் ஒன்றே!

# ஈழவர் என்ற ஈழத்தவர், நளவர் என்ற நழுவ வீரர்கள்

கொட்டியூர் சிவன் கோவிலின் விநோதமான சடங்குகளில் "இளநீர் ஆட்ட"மும் ஒன்று மலபார் தேசத்தின் மூலை முடுக்கிலெல்லாமிருந்து இலட்சக்கணக்கான இளநீர்காய்களைக் காவியபடி பல நூறு மைல்கள் நடந்து கொட்டியூர் வரும், தீயா (அல்லது திய்யா) ஜாதியைச் சேர்ந்தவர்கள் அந்த இளநீரால் கொட்டியூர் சிவனை குளிப்பாட்டி அபிஷேகம் செய்வார்கள்.

இந்த தீயா ஜாதியைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான், இப்படி இளநீரைக் காவி வர முடியும். இதற்கு கொட்டியூரில் ஒரு புராதனக் கதையும் சொல்கிறார்கள்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு, அடர்காடாக இருந்த கொட்டியூர் வனத்தில், 'குறிச்சியார்' என்ற வேடுவர்கள் வேட்டையாடிக் கொண்டிருந்தனர். அந்த வேடுவர்களில் ஒருவர், தனது கணையை அங்கே கிடந்த கல்லில் அழுத்திக் கூராக்க, அக்கல்லில் இருந்து இரத்தம் வடியத் தொடங்கியதாம். இரத்தத்தை நிறுத்த அருகில் ஓடிக் கொண்டிருந்த பாவலி ஆற்று நீரை எடுத்து ஊற்றியும் இரத்தம் நிற்கவில்லை. பிறகு, கிராமத்துக்குச் சென்று, அங்கிருந்த மரமேறும் ஜாதியைச் சேர்ந்த, தீயாக்களிடம் விபரத்தை சொல்கிறார் வேடுவர், தீயாக்கள் வந்து இளநீரை ஊற்றி அபிஷேகம் செய்து, அந்த இரத்தப் போக்கை நீக்கினார்களாம். ஆகவே, கொட்டியூரின் வைகாசி மகோற்சவத்தின் 'இளநீர் ஆட்டம்' சடங்கு, தீயாக்களால் மேற்கொள்ளப்படுகிறது.

ஆயிரக்கணக்கான தீயாக்கள் பாவலி ஆற்றிலே குளித்துவிட்டு, வெறி வந்தவர்கள்போல, கொட்டியூர் சிவனை நோக்கி ஓடிச் செல்வார்கள். பார்க்கத் திகிலாகவும், சுவாரசியமாகவும் இருக்கும்.

கேரளத்தின் ஒரு மூலையில் வசிக்கும் இந்தத் தீயாக்களுக்கும், ஈழத்தவன் எனக்கும் ஒரு வரலாற்றுச் சம்பந்தம் உண்டு.

வடக்கு கேரளமாகிய மலபார் தேசத்தில், தீயா// திய்யா என அறியப்படும் இந்த ஜாதியினர், துளு நாட்டில் 'பில்லவா' என அறியப்படுகிறார்கள். கேரளத்தின் மற்றைய பகுதிகளில் இவர்களுக்குப் பெயர் என்ன தெரியுமா..? "ஈழவர்".

இந்த ஈழவர்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு என்கிறது வரலாறு. ஈழத் தமிழர்கள் வரலாறு போல, ஈழவர்களின் வரலாறுமே கூட மகா துயரமானது. மலையாள மக்கள் தொகையில் 23சதவீதமான இவர்கள்தான், கேரளத்தின் மிகப் பெரிய இந்து சாதி. ஆனால், கேரளத்தில் மிகக் கொடுமையான அடக்குமுறையை எதிர்கொண்டவர்களும் இவர்கள்தான். ஈழத் தமிழர்களை, சிங்களவர்கள் அடக்கினார்கள் என்றால், ஈழவர்களை நம்பூதிரிகளும், நாயர்களுமாகக் கூட்டுசேர்ந்து அடக்கினார்கள்.

சரி, ஈழவர்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் வேறென்ன தொடர்பு..?

ஈழவர்களின் நாட்டுப்புறப் பாடலான "வடக்கன் பாட்டுகள்", ஈழவர்களின் முன்னோர்கள் இலங்கையில் இருந்து வந்தவர்கள் என்கிறது. இன்னொரு பாடல், கேரளத்தில் இன்று நிறைந்துள்ள தென்னம் மரங்களை, இவர்கள்தான் ஈழத்தில் இருந்து எடுத்து வந்தார்கள் என்கிறது. மற்றொரு நாட்டுப்புறப் பாடல், ஈழவ மன்னனை ஈழவ இளவரசி மணந்தார் என்கிறது. ஈழத்தை சேர்ந்தவர்கள் என்பதாலேயே அவர்கள் "ஈழவர்" எனப்படுகிறார்கள்.

'துவீபன்' என்ற சமஸ்கிருத வார்த்தையில் இருந்துதான், "தீயர்" என்ற வார்த்தை உருவாகியுள்ளது. "துவீபன்" என்றால் 'தீவைச் சேர்ந்தவர்' எனப் பொருள்படும். கேரளத்தின் ஆதி ஜாதிகளில் ஈழவர்களும் ஒருவர்கள். இராஜராஜ சோழனின் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் இவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. தென்னை மற்றும் பனை மரங்களுடன் தொடர்புடையதாக இவர்களின் வேலைகள் இருந்தாலும், இவர்கள் விவசாயிகளாக, வணிகர்களாக, களரி வீரர்களாக, போர் வீரர்களாக பல வடிவங்களில் வாழ்ந்துள்ளனர். ஆதி சேர நாட்டுப் படைகளில் இந்த ஈழவர்களின் பங்கும் அளப்பரியது.

நம்பூதிரிகளின் கேரள வருகைக்கு முன்பாக, சமூக தளத்தில் மிகப் பலம் பொருந்தியவர்களாக இருந்த ஈழவர்கள், பிற்காலத்தில் நம்பூதிரிகளால் திட்டமிட்டு அடக்கப்பட்டனர் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

## கல்லணையும் இலங்கையும்:

ஈழவர்கள், கேரளாவிற்கு மட்டும் காணப்படும் சாதியினரல்ல. அவர்கள் தென்னிந்தியாவிற்கே பொதுவான சாதியினர் என்கிறார்கள் சில ஆய்வாளர்கள். கேரள மாநிலத்தில், 'ஈழவர்' என்ற பெயரில் அறியப்படும் இவர்கள், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் "ஈடிகா" என்ற பெயரிலும் தமிழகத்தில் 'இல்லத்துப் பிள்ளைமார்' என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறார்கள். 'ஈழத்துப் பிள்ளை'களே மருவி 'இல்லத்துப் பிள்ளை'களாகியது.


இலங்கை மீது பெரும் படையெடுத்த கரிகால் பெருவளத்தான், அங்கிருந்து பன்னிரெண்டாயிரம் வீரர்களைச் சிறைப்பிடித்து வந்தான். அவர்களைக் கடூழியம் செய்ய வைத்து, காவிரிக்கு குறுக்கே கல்லணை கட்டினான். சோழனால் சிறைப்பிடிக்கப்பட்டு வந்த, பன்னிரெண்டாயிரம் இலங்கை வீரர்கள், தென்னிந்தியா எங்கும் சிதறி, ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு பெயருடன் வாழ்ந்தார்கள். அவர்களின் வழி வந்தவர்கள்தான் இந்த "ஈழவர்கள்" என்பது, ஈழவர்களின் தோற்றத் தொடர்பில் கூறப்படும் நம்பிக்கைகளில் ஒன்று.

கல்லணை தமிழர் வரலாற்றின் மகா அதிசயங்களில் ஒன்றாகும்!

கல்லால் கட்டப்பட்ட அணை என்பதனால் அதைக் "கற்சிறை" என்கிறது தொல்காப்பியம். 'தலையேறு மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான் கண்கொண்ட சென்னிக் கரிகாலன்' என்கிறது, 'குலோத்துங்கச் சோழன் உலா'. 'முழுகுல நதிக்கரசர் முடிகொடு வகுத்தகரை முகில்தொட அமைத்தது அறிவோம்' என்கிறது 'குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ்'.

இந்தப் பாடல்கள் எல்லாமே, காவிரி ஆற்றின் கரையைக் கரிகால சோழன் உயர்த்தினான் எனச் சொல்கின்றன. பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை பாடல்களும், தெலுங்குச் சோழக் கல்வெட்டுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் கல்லணையினதும், கரிகால் சோழனதும் பெரும் புகழைப் பாடி நிற்கின்றன.

**கல்லணை, தமிழ்நாடு**



"வருவிசை புனலை கற்சிலைப் போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்" *(தொல். 1009)*
என்கிறது தொல்காப்பியம்.

அதாவது, மிகுந்த வேகத்தோடு ஆற்றில் ஓடிவரும் நீரை, கற்சிறை தடுப்பதுபோல, போர்க்களத்தில் பெருகிவரும் எதிரி நாட்டு வீரர்களை, நமது நாட்டு வீரர்கள் தடுத்தனர் என்று பொருள்.

அன்றைக்கு, பொங்கிப் பிரவாகித்து பெரும் களிப்புடன் ஓடிக் கொண்டிருந்த காவேரி ஆற்றிலே அடிக்கடி வெள்ளம் வந்ததால் மக்கள் மிகவும் துன்பப்பட்டனர். தமிழர் தேசத்தை ஆண்ட சோழ மன்னன் கரிகாலன் காவிரிக்குக் குறுக்கே அணை கட்ட விரும்பினான். ஒரு நொடிக்கு இரண்டு லட்சம் கனநீர் மகா வேகமாகப் பாயும் காவிரிக்குக் குறுக்கே அணை கட்டுவதென்பது அவ்வளவு லேசுப்பட்ட காரியம் இல்லை. காவிரிக்குக் குறுக்கே அணை கட்ட புதுமையானதொரு சூட்சுமத்தைப் பின்பற்றினார்கள் கரிகால் சோழனின் பொறியாளர்கள்.

நீங்கள் கடற்கரையில் நிற்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அலைவந்து உங்கள் கால்களை நனைத்துச் சென்ற பிறகு, பாதங்களுக்குக் கீழே உள்ள மணல் அரித்து, கால் உள்நோக்கிச் செல்லும் இல்லையா..? இதைத்தான் அணைகட்டும் சூத்திரமாக மாற்றினார்கள். காவிரி ஆற்றுக்குக் குறுக்கே பெரிய பெரிய பாறைகளைப் போட்டார்கள். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதன் மேல் மேலும் பாறைகளைப் போட அவை மிகப்பலமான அதேநேரம் அகலமான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுத்தன. மேலும் பாறைகளுக்கு நடுவில், தண்ணீரில் கரையாத ஒருவிதமான ஒட்டும் களி மண்ணைப் பூசிட அவற்றை ஒன்றோடொன்று ஒட்டச் செய்தார்கள். இப்படியாக வெறும் பாறைகளையும், களிமண்ணையும் கொண்டு உருவாக்கப் பட்டதுதான் பழந் தமிழரின் பெரும் புகழைப் பேசும் 'கல்லணை'.

"பெருக்கெடுத்து ஓடும் நீரில் பெரிய பெரிய பாறாங்கற்களை போட்டு, புதையும் கற்கள் மீது, மேலும் வரிசையாக கற்களை போட்டே இந்தக் கல்லணையைக் கரிகாலன் கட்டினான்" என சர் ஆதர் காட்டன் என்ற ஆங்கிலேய அறிஞர் பாராட்டும்வரை, நமது மூத்தோர் பெருமை நமக்குத் தெரியவே இல்லை.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் 'காராவி' ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட 'சாத் எல் - காஃபாரா' *(Sadd El-Kafara)* அணைதான் உலகின் ஆதி அணை. கரிமப் படிவ ஆய்வு *(Carbon dating)* மற்றும்

தொல்லியல் ஆய்வுகள் இந்த அணை சுமார் 4600 ஆண்டுகள் பழமையானது என்பதை உறுதி செய்துள்ளன. அடுத்தபடியாக கல்லணை உலகத்தின் நான்காவது தொன்மையான அணையாகும்.

சாத்-எல்-காஃபாராவுக்கும், கல்லணைக்கும் ஒர் ஆதி சம்பந்தம் உண்டு. கிட்டத்தட்ட கல்லணைக்கு ஒத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கட்டப்பட்டதே 'சாத்-எல்-காஃபாரா' வும்.

ஆற்றின் குறுக்கே பிரமாண்டமான கற்களைப் போட்டு, அந்தக் கற்களின் இடைவெளிகளை ஆயிரக்கணக்கான டன் எடை கொண்ட கூழாங்கற்களால் நிரப்பி, எந்தவிதமான பூச்சும் உபயோகிக்காமல் 'சாத்-எல்-காஃபாரா' அணையைக் கட்டினார்கள் ஆதி எகிப்தியர்கள். ஆனால், காஃபாரா அணையில் போதுமான வெள்ளப் போக்கிகளோ, கலிங்குகளோ இருக்கவில்லை. சரியான திட்டமிடல் இல்லாமல், அமெச்சூர்தனமான கட்டப்பட்டுக் கொண்டிருந்த இவ்வணை, கட்டிக்கொண்டிருக்கும்போதே வந்த பெருவெள்ளத்தில் தகர்ந்து போனது.

ஆனால், 'சாத் எல் - காஃபாரா' அணையின் தொழில்நுட்பத்திற்கும் மேம்பட்ட தொழில்நுட்பத்தில் கட்டப்பட்ட கல்லணை பல வெள்ளங்களையும், வறட்சியையும் கண்டும் சுமார் 2000 ஆண்டுகளாக ஆட்டசைவு இல்லாமல் அப்படியே நிற்கிறது. கி.மு.2650-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட காஃபாரா அணையின் எச்சங்கள் இன்றும் எகிப்தில் பொக்கிஷங்களாகப் போற்றப்படுகின்றன.

*கஜபாகு:*

பன்னிரெண்டாயிரம் படை வீரர்களை, தமிழ் மன்னன் ஒருவன் சிறைக் கைதியாகப் பிடித்துக் கொண்டு போனான் என்றால் அது அசிங்கமாக இருக்கும்



**சாத் எல் காஃப்ரா அணையின் எச்சங்கள் எகிப்து**

இல்லையா..? ஆகவே, அதை ஈடு செய்ய, கஜபாகு என்ற சிங்கள மன்னன் இந்தியா மீது படையெடுத்து, சோழர்களை வென்று, அந்தப் படைவீரர்களை மீட்டு வந்தான் என்கிறன சில சிங்கள இலக்கியங்கள். இந்தப் படையெடுப்புகள் பற்றிய குறிப்புகள் சிங்கள இலக்கியங்களில் மட்டுமே உள்ளன. வேறு எங்கும் இல்லை.

"பாகுபலி" என்றால் வலிமையான கரங்களை உடையவன் எனப் பொருள்படும், அதேபோல "கஜபாகு" என்றால், 'யானையைப் போன்ற கைகளை உடையவன்' எனப் பொருள்படும். அவ்வாறு வலிமையான கரங்களை உடைய கஜபாகு, இள வயதில், ஒருநாள் நகர சோதனைக்குச் சென்றானாம், ஒரு வீட்டில் முதிய விதவைத் தாயொருவர் பெரும் குரலெடுத்து அழும் சத்தம் கேட்டு, அந்தப் பெண்ணை அழைத்து விசாரிக்க, "சோழ மன்னன் கரிகாலன் அணை கட்ட என் மகன்களை சிறைப்பிடித்து சென்று விட்டான். அவர்கள் என்னவானார்கள் எனத் தெரியாமல் அழுகிறேன்" என்றாராம். மனதில் வெஞ்சினம் கொண்ட கஜபாகு, சோழர்களைப் போரில் தோற்கடித்து, அவ் வீரர்களை மீட்பதைத் தன் வாழ்நாள் லட்சியமாக மனதில் வரிந்து கொண்டானாம். வளர்ந்து பெரும்படை திரட்டிய கஜபாகு, சோழ நாட்டின் மீது படையெடுத்து, பன்னிரெண்டாயிரம் படை வீரர்களை கூடவே பல்லாயிரக்கணக்கான தமிழர்களையும் சிறைக் கைதிகளாகப் பிடித்து வந்தானாம். இதைச் சிங்கள இனவாத நூலான "பூஜாவலி" விபரிக்கிறது.

**ஈழவ, ஈழ வாழ்க்கை முறை**

இடுக்கியின் குக்கிராமம் ஒன்றிலுள்ள ஈழவர் வீடொன்றில் புட்டுடன் எனக்கு "சம்பந்தி" கொடுத்தார்கள். "சம்பந்தி"யைப் பார்த்த நான் ஒரு கணம் பரவசப்பட்டேன். ஏனென்றால், தமிழகம் எங்கும் தேடியும் கிடைக்காத ஈழத்தின் இடிச்ச "சம்பலை"த்தான், கேரளாவில் "சம்பந்தி" என்கிறார்கள். சம்பந்தி மட்டுமல்ல, தேங்காய்பாலை, முதல் பால், இரண்டாம் பால் எனப் பயன்படுத்தி, தேங்காய் எண்ணெயில் பொரித்து அவர்கள் செய்யும் உணவுகள் ஈழத்தின் உணவுகளைப் போலவே இருக்கும். எம்மவர்கள் உணவில் தேங்காய் இரண்டறக் கலந்துள்ளதுபோல, கேரள ஈழவர்களில் உணவிலும் தேங்காய் பிரதானம்.

சாப்பாடு மட்டுமா..?

தென் கேரளத்தின் ஈழவக் கிராமமொன்றிற்கு கண்களைக் கட்டி உங்களை அழைத்துச் சென்று, கண்கட்டுகளை அவிழ்த்து விட்டால், நீங்கள் ஈழத்தின் ஏதோவொரு கிராமத்தில் இருப்பதைப்போல

உணர்வீர்கள். குச்சொழுங்கைகள், கதியால் வேலிகள், முற்றமுள்ள வீடுகள், பின் வளவு, வளவிலுள்ள மா, பலா, வாழை, தென்னை, கமுகு மரங்கள், வீடுகளின் கட்டட அமைப்பு என எல்லாமே உங்களை புன்னாலைக்கட்டுவன் பக்கமாக கூட்டிவந்ததைப் போல இருக்கும்.

ஈழவ மக்கள் பேசும் மலையாளத்தை கூர்ந்து கேட்டால், அது இலங்கைத் தமிழ் போலவே இருக்கும். ஈழ மக்களின் வாழ்க்கையைப் போல, ஈழவர்களின் வாழ்க்கையிலும் தென்னம் மரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. தென்னோலைகளை ஊறவைத்துக் கிடுகு பின்னி, பாய், கடகம் இழைத்து, தேங்காய் மட்டைகளை ஊற வைத்து அதைக் கயிறாகத் திரிப்பதில் இருந்து எல்லாவற்றிலும் ஈழத்தின் வாழ்க்கை முறையைப் பார்க்கலாம். ஈழவ நண்பன் அர்ஜுனனின் வீட்டில் குத்தி வைக்கப்பட்டிருந்த அலவாங்கில் பல நாட்களுக்குப் பிறகு தேங்காய் உரித்தேன். கடைசியாக குற்றிய அலவாங்கில் நான் தேங்காய் உரித்தது ஈழத்தில்

ஈழவர்களும் எங்களைப்போல பெண்வழிச் சொத்துரிமை கொண்டவர்களே. ஈழத்தின் கொடுமைகளில் ஒன்றாகச் சொல்லப்படும் சீதனத்திற்கு இன்னொரு பக்கம் உண்டு. குடும்ப சொத்துக்கள், பெண் வாரிசுகளுக்குச் செல்வதை சீதன முறை உறுதி செய்கிறது.

**வில்லவர்கள் ஈழவர்கள்:**

"சேரர்களின் வில்படையில் வில்லவர்கள் என்ற பெயரில் முக்கியமான வீரர்களாக இருந்த ஈழவர்கள், ஈழத்திலும் பரவி வாழ்ந்தார்கள்" என்கிறார் மனோஜ். ஈழத்துக்கும், ஈழவர்களுக்கும் இடையான தொடர்பை பல ஆண்டுகளாக ஆராய்ந்து வருபவர் மனோஜ்.

அவர் சொன்ன, ஈழவர் பற்றிய இன்னொரு கதை...

சேர நாட்டுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிந்த ஈழ மன்னர்களின் படைகளில் வில்லவ வீரர்கள் முக்கியம் பெற்றார்கள். போரில் சிறந்த அவர்கள், ஈழ மன்னர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, படைத் தளபதிகளாக, மெய்பாதுகாவலர்களாக பதவி வகித்தனர்.

மிகச் சிறந்த பௌத்த வழி எனப் பொருள்படும் மகாயான பௌத்தத்தைக் கடைபிடித்த இவர்கள், 'தேரவாத பௌத்தத்தின் கோட்டை' யான ஈழத்தில், மகாயான பௌத்தத்தைக் கடைப் பிடிப்பவர்களாக இருந்தார்கள். பிராமணியத்துக்கு எதிரான பெரும்

சாவலாகப் பௌத்த மதம் இந்தியாவில் பரவியிருந்த போது, பௌத்தத்துக்கு எதிரான புரட்சியைப் பிராமணர்கள் செய்தனர். பிராமணர்களால் மடைமாற்றப்பட்ட இந்து மன்னர்கள், பௌத்துத்துக்கெதிராகவும் வாள் சுழற்றினார்கள்.

ஆதிசங்கரர் கொண்டுவந்த ஒழுங்கமைக்கப்பட்ட இந்து மத அமைப்பானது பிராமணர்களை மிகப் பெரியவர்களாக்கியது. சேர மன்னர்கள் காலத்தில், புகழ் பெற்றவர்களாக செல்வாக்கோடு இருந்த இந்த வில்லவர்கள், நம்பூதிரிகளின் (பிராமணர்களின்) கேரள வருகையொட்டி சமூக ஆன்மிக தளங்களில் திட்டமிட்டு அடக்கப்பட்டனர்.

இக்காலப் பகுதியில் பௌத்தத்திற்கும், சமண சமயத்துக்கும் எதிராக *(State sponsored violence)* மன்னர்களின் உதவியுடன் சைவ சமய நாயன்மார்கள் கட்டவிழ்த்து விட்டனர். ஈழவர்கள் பின்பற்றிய மகாயன பௌத்தமும், கூடவே சமண மதமும் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இருந்து துடைத்தழிக்கப்பட, எஞ்சிய வில்லவர்கள் ஈழத்திற்குச் சென்றார்கள்.

அங்கே மகாயன வில்லவர்களுடன், தேரவாத பௌத்தத்தினர் போர் புரிந்தனர். பின், தமிழ் பேசும் பௌத்தர்கள் கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். வரலாற்றில் பௌத்த மதம் சிங்களவருக்கு மட்டும் உரியதல்ல. கணிசமான தமிழ் பௌத்தர்களும் வரலாற்றில் இருந்துள்ளனர். தொடர்ச்சியான பல நெருக்குதல்களால், கந்தரோடை கைவிடப்பட்டு தனித்துவமான தமிழ் பௌத்தமும் முடிவுக்கு வந்தது. கந்தரோடையில் கண்டெடுத்த பௌத்த மதச் சின்னங்கள் தமிழ் பௌத்தத்துக்கு உரியவை.

தென் ஈழத்தில், மாகாயான பௌத்த விகாரைகள், தேரவாத மதவெறி பௌத்த பிரிவால் அழிக்கப்பட்டன. ஈழத்தில் இருந்து, மகாயான பௌத்த வில்லவர்கள் முற்றாக விரட்டியடிக்கப்பட அவர்கள் மீண்டும் சேர நாட்டுக்கு வந்து தஞ்சம் புகுந்தனர். ஈழத்தில் இருந்து வந்ததால் அவர்கள் "ஈழவர்கள்" என அழைக்கப்பட்டனர் என்றார்.

தமிழ் இலக்கிய பங்களிப்பு:

பௌத்த மதமும், சமண மதமும் தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய பணியை ஆற்றியுள்ளன. பௌத்த இலக்கியங்களும், சமண இலக்கியங்களும் இல்லாமல் தமிழின் ஆதி இலக்கியங்கள் முழுமை பெறாது. ஐம்பெரும் காப்பியங்களில், மணிமேகலை,

வளையாபதி, குண்டலகேசி என்னும் மூன்றையும் பௌத்தரும், சிலப்பதிகாரம், சிந்தாமணி என்னும் இரண்டை சமணரும் இயற்றினர். தமிழில் மகா அற்புதமான அறக்கருத்துக்களை கூறிய நூல்கள் சமண, பௌத்த சித்தாந்தத்தின் குழந்தைகளே!

தமிழ்த்தென்றல் திரு.வி.க, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, மயிலை. சீனி வேங்கடசாமி உள்பட பெரும்பாலான அறிஞர்களும் ஆய்வாளர்களும் சமணத்தின் உன்னதமான கருத்துகளைக் கூறும் நூல்தான் 'திருக்குறள்' என்கிறார்கள். வள்ளுவர் சமண சமயத்தவர் என்பதில் சந்தேகமில்லை என்கிறார் செ.கணேசலிங்கன். எங்களுடைய சைவ சமய நாயன்மார்கள் எல்லாம் கொலைவெறி பிடித்த (*Mass murderers*) இருந்த காலத்தில், அறக்கருத்துக்களைக் கூறும் திருக்குறள் போன்ற அற்புதமான நூலை, சைவ சமயம் வழி வந்தவர்களால் எழுதி இருக்க முடியாது என்பது, ஜே.என்.ஜூ **(JNU)** வில் முனைவருக்குப் படிக்கும் எனது நண்பன் அருணின் வாதம். எது எப்படியோ! பௌத்தர்களும், சமணர்களும் இல்லையென்றால் அறநூல்களும், தமிழ் இலக்கணமும் தமிழில் இன்று இல்லாது போயிருக்கும் என்பது மட்டும் சத்தியமானது.

**சித்தன், ஆராத்தன்:**

ஈழவர்கள் பெரும்பாலானவர்கள் இன்று இந்துக்களாகவே உள்ளனர். பௌத்தத்துக்கும், ஈழவர்களுக்குமிடையான தொடர்பு துடைத்தழிக்கப்பட்டு விட்டது. இன்று கேரளத்தின் மிகப் பெரிய இந்து ஜாதி ஈழவர்கள்தான். கேரளத்தின் சுமார் 40 சதவீதமான இந்துக்கள், ஈழவர்களாக உள்ளனர். ஆனால், பௌத்த மதத்தின் எச்சங்கள் இன்னும் ஈழவர்களிடையே உள்ளன. சித்தன், ஆராட்டன் என்ற, ஈழவர்களின் இரு சிறு தெய்வங்களும் புத்த மதத்தின், சித்தனும், ஆராத்தனும் (*Sidhan and Arhatan*) என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஈழவக் கோவில்களில் பூசை செய்யும் "பண்டாரங்கள்" பௌத்த பிக்குகளின் வழித்தோன்றல்களே என்கிறார் சி.வி.குஞ்சுராமன் என்ற அறிஞர். நம்பூதிரிகளின் கேரள வருகைக்கு முன்பாக, பௌத்த சமயம் வழிவந்த ஈழவர்கள் பெரும் செல்வாக்குடையவர்களாக இருந்துள்ளனர் என்கிறார் டி.கே.வேலுப்பிள்ளை என்ற மலையாள அறிஞர்.

ஈழவர்களுக்கும் ஈழத்துக்கும் சம்பந்தமில்லை எனச் சொல்பவர்களும் உண்டு. ஆனால், கேரளத்தின் ஒரு ஈழவக் கிராமத்துக்குச் சென்றால், நீங்கள் ஈழத்தில் இருப்பதைப்போல பரிசுத்தமாக உணரும் அந்த மெய்யுணர்வை எப்படிப் பொய்யென்று உரைப்பது...?

நழுவ வீரர்கள்

சேர நாட்டு வில்லவர்கள்/ஈழவர்கள் ஈழத்தில் இருந்து தாய் பூமியான கேரளாவுக்கு ஒட்டுமொத்தமாகச் சென்றிருந்தாலும், ஈழவர்களின் வழித்தோன்றல்கள் இன்னும் ஈழத்தில் உள்ளனர். இன்றும் உயர் ஜாதிகளால் மிகவும் கொடுமையாக ஒடுக்கப்படும் "நழவர்" ஜாதியினர்தான் ஈழவர்களின் வழித்தோன்றல்கள் என நான் நம்புகிறேன்.

"ஈழவர் என்னும் மரமேறுஞ் சாதியார் மலையாளத்திலிருந்து இங்கே வந்தபோது, அவர்கள் நழவர் என்று அழைக்கப்பட்டனர். ஈழவர் என்னும் சொல்லின் முதலெழுத்தாகிய 'ஈ', 'ந' என்னும் எழுத்தாக மாற்றம் அடைந்ததே நழவர் என்னும் பெயர் உண்டானதற்குக் காரணமாகும்" என்கிறது "யாழ்ப்பாணக் குடியேற்றம்" நூல்.

இந்த நழவ சாதி, யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே பிரத்தியேகமானது.

கத்திக்காரர்கள்:

"சங்கிலி மன்னுடைய ஆட்சிக்காலத்தில் தமிழகத்திலிருந்து நம்பிகள் என்ற சாதியைச் சேர்ந்த 64 கத்திக்காரர்கள் அவர்களது குடும்பத்தினருடன் மன்னனுடைய மெய்ப்பாதுகாப்புக்காக அழைத்துவரப்பட்டனர்".

அந்த கத்திக்காரர்களுக்கு தலைமை தாங்கிய நம்பியினுடைய மகளை, சங்கிலி மன்னனுடைய மகன் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திவிட்டதால் ஆத்திரமடைந்த அந்த தலைமை நம்பி அவனைக் கொன்றுவிடுகிறான். தன்னுடைய மகனை கொன்ற குற்றத்துக்காக தலைமை நம்பியை தலை வெட்டிக் கொன்ற சங்கிலி மன்னன் ஏனைய நம்பிகளை அரண்மனையிலிருந்து துரத்திவிட, பிழைப்புக்கு வழியில்லாத அவர்கள் அந்தக்காலகட்டத்தில் மரமேறும் தொழிலைச் செய்து வந்த சாணருடன் சேர்ந்து, அவர்கள் தொழிலைச் செய்யப் பழகிக் கொண்டனர். குலத்தொழிலை விட்டு நழுவி வேறு தொழிலைச் செய்ததால், "நழுவிகள்" என்று அழைக்கப்பட்டு, பின்னர் அதுவே நழவர்கள் ஆகிவிட்டதென்று கூறுகிறது "யாழ்ப்பாண வைபவ மாலை" நூல்.

நம்பிகள்:

"பாண்டி நாட்டிலிருந்து ஐம்பது வன்னியர் தமது மனைமக்களோடு புறப்பட்டு வந்தனர். அவர்களுள் நாற்பத்தெட்டு

வன்னியர்கள் நெடுந்தீவிற்கு அண்மையில் மரக்கலம் கவிழ்ந்து இறந்தனர். எஞ்சிய வன்னியன் கந்தரோடையில் தங்கினான். அவன் சங்கிலி படையில் சேர்ந்து சிறு தலைவனாகி கரைப்பிட்டியிலிருந்தான். அவனுடைய படையில் அறுபது நம்பிகள் இருந்தார்கள். அவருள் ஒருவருடைய புத்திரியை கரைப்பிட்டி வன்னியன் கற்புச்சிதைத்தான். அதுகேட்டு அந்நம்பி, வன்னியனைக் கொன்றான். அவன் மனைவி அம்மை நாய்ச்சி சோகத்தால் வாளெடுத்து தற்கொலை செய்து உயிர்விட்டாள். இதனைக் கேள்வியுற்ற சங்கிலி தண்டதிகாரியை அனுப்பி, நம்பியைக் கொலை செய்வித்து, மற்ற நம்பிகளை படை சேவகத்தினின்றும் விலக்கி அவன் திரவியத்தையும் அரசுக்கு உரியதாக்கினான். படைச்சேவகத்தில் இருந்து விலக்கப்பட்ட நம்பிகள் அடுத்த சான்றார் குப்பத்திற்கு போய் சான்றார் தொழிலை மேற்கொண்ட, நளவர் என்னும் சாதியராயினரேன்பர்.நறவர் என்னும் சொல்லே நளவர் ஆயிற்று. நறவு = கள். கள் விற்போர் என்பது அதன் பொருள்." என்கிறார்"யாழ்ப்பாணச்சரித்திரம்" நூலில் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை.

உண்மையில் நளவர்கள், ஈழவர்களின் வழித் தோன்றல்களா, இல்லை நம்பிகளின் வழித் தோன்றல்களா, இல்லை வன்னியர்களின் வழித் தோன்றல்களா என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ள, மரபணுச் சோதனை ஒன்றே வழியாகும்.

எது எப்படியோ! வீரம் செறிந்த போர் வீரர்களாக இருந்த ஒரு குலத்தினரே காலப்போக்கில் தோற்றப் பழங்குடியினராகி,(*lost tribes*) நளவர்களாகி, ஒடுக்கப்பட்டவர்களாகி, யாழ்ப்பாண சாதிமான்களின் கொடும் அடக்குமுறைகளைச் சந்தித்தனர்.இன்றும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். வரலாற்றில், வெள்ளாளர்கள் ஹாயாக வேளாண்மை செய்துகொண்டிருந்தபோது, எதிரிப்படைகளிடம் இருந்து எம்மைக் காத்த வீரர்கள் அவர்கள் என்ற புரிதல் இருந்தால், அவர்களை நாம் சாதியம் பேசி ஒடுக்கியிருக்க மாட்டோம் தானே!.

# முருகனைத் தொலைத்த கதை

கேரளத்தின் பழம்பெருமை வாய்ந்த, ஆதித் தமிழனின் வழிபாட்டுக்குரிய வேல் கோட்டங்கள் எல்லாம் இன்று, நவீன 'முருகன்' கோவில்கள் ஆக்கப்பட்டு விட்டன.

கேரளத்தில் மட்டுமல்ல, சேரநாட்டின் பாதிப்புள்ள ஈழத்திலும் அதே கதைதான். எமது ஆதித் தலைவன் முருகனை நாங்கள் தொலைத்தது பெரிய கதை. ஈழத் தமிழர்கள், ஆரம்பகாலத்தில் வேல் வழிபாடு, கண்ணகி வழிபாடு ஆகிய சேர நாட்டு வழிபாட்டு முறைகளையே பின்பற்றினர். பிற்காலத்தில், சோழ- பிராமண ஆதிக்கம் நிலவி, வேல் வழிபாடு இன்றுள்ள முருக வழிபாடாகவும், கண்ணகி வழிபாடு, அம்மன் வழிபாடாகவும் திரிவடைந்தன.

நடுகல்



முதல் மற்றும் இடைச் சங்கத் தமிழில் 'மதம்' என்ற சிஸ்டம் கிடையாது. இயற்கையுடன் இணைந்த இறை வழிபாட்டையே எங்களது முன்னோர்கள் வலியுறுத்தி இருந்தனர். இந்தத் தமிழில் நீங்கள் எவ்வளவு தேடினாலும், 'சைவம்', 'வைணவம்' போன்ற வார்த்தைகளை உங்களால் கண்டிபிடிக்க முடியாது.

வாழ்க்கை முறைக்கு மாறான, இறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சைவம், வைணவம் போன்ற மத அமைப்புகள் எங்களது மூத்தோரிடம் இருந்திருக்கவில்லை.

நடுகல் வழிபாடு:

தங்கள் ஆதிகுடி காத்த தலைவர்களை, வீரர்களை, எங்களுடைய முன்னோர்கள், நடுகற்களாக வழிபட்டனர். மிகப் புராதன சங்க இலக்கியத்தில் நடுகல் வழிபாடு தொடர்பான தெளிவான பாடல்கள் உண்டு. தொல்காப்பியத்தின், புறத்திணை இயல் நூற்பா பகுதி நடுகல் பற்றித் தெளிவாகச் சொல்கிறது.

"காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்"
என்கிறார் தொல்காப்பியர்.

(காட்சி- கல்லைத் தேர்ந்தெடுத்தல், கால்கோள்- அக் கல்லை நடுவதற்கான தொடக்க விழாவினை மேற்கொள்ளல். நீர்ப்படை- அக்கல்லை நீரில் குளிப்பாட்டி தூய்மை செய்தல், நடுகல் - அந்தக் கல்லை நடல், சீர்தகு மரபில் பெரும்படை- படை வீரர்கள் அக் கல்லுக்கு மரியாதை செலுத்தல். வாழ்த்தல்- எல்லோரும் கூடி, அக் கல்லில் இறந்தவரின் ஆவி குடி கொண்டிருப்பதாக எண்ணி வாழ்த்தி வணங்குதல்

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை-பக்கம் 436)

நடுகல்லாகிப்போன, தங்களது மூத்தோர்களை வணங்கி, அந்தக் கல்லின் பெருமைக்கு பங்கம் வராமல் வாழ்தலை ஆதித் தமிழர்கள் தங்களின் பெரும் கடமையாக நினைத்தார்கள். அவர்களிடம் 'கந்து' வழிபாட்டு முறையும் இருந்தது. இது நடுகல் வழிபாட்டின் இன்னொரு வடிவமே. 'கந்து' என்றால் கல் தூண். நடுகல் அல்லது கல் தூணில், அவ்வீரர்களின் பெயர்களை எழுதியும், அவர்களின் படங்களை வரைந்தும் வணங்கும் வழக்கம் ஆதித் தமிழர்களிடம் இருந்து வந்தது. இந்தக் கந்துதான் கந்தன். கந்தனுக்கும், முருகனுக்கும் சம்பந்தம் கிடையாது. அதே நேரம், 'கந்து' என்ற கல்தூணில் படருகின்ற வள்ளிக் கொடியே, வள்ளி.

இந்த 'கந்து' அதில் படரும் 'வள்ளிக் கொடி' என்பவற்றை, எங்கள் மூத்தோர்களின் காதல் வாழ்வுக்கு அடையாளமாகக் கொள்ளலாம். "மறைந்துவிட்ட தலைவன், தலைவியை, நடுகல்லும், அதில் படரும் கொடியுமாய் நினைவு கூரப்படுதல் தமிழர் காதல் வாழ்வுக்கு அடையாளம்" என்கிறார் 'சங்க இலக்கியத்தில் கடவுள் உண்டா' என்ற கட்டுரையில் முனைவர் கண்ணபிரான் இரவிசங்கர்.

மாவீரர் துயிலும் இல்லங்களைக் கூட, இந்த நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாகத்தான் பார்க்க வேண்டும். "தமிழீழம்" என்ற ஈழத் தமிழர்களின் கனவு சாத்தியமாகி இருந்தால், இந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் எல்லாம் மூத்தோர் வழிபாட்டு இடங்களாக மாறியிருக்கும். பெரும்பாலான ஈழத்தவர்களின் இறந்தவர்களை எரிக்கும் நம்பிக்கைக்கு மாறாக, உடல்களை விதைத்து / புதைத்து, நடுகல்களைக் கொண்ட, மாவீரர் துயிலும் இல்லங்களை அமைக்க வேண்டும் எனப் பிரபாகரன் நினைத்தது கூட, நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சிதானே..?

*முருகன் என்கிற எங்களின் மூத்த தலைவன்:*

தமிழில் இன்று கிடைக்கப்பெறும் மிகப்புராதன இலக்கண நூலான, தொல்காப்பியம் முருகனை, குறிஞ்சி நிலக் கடவுள் என்கிறது. பண்டைய காலத்தில், நிலங்களின் அடிப்படையிலேயே கடவுளர்கள் வகைப்படுத்தப்பட்டனர்.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்" என்கிறார் பொருளதிகாரம் அகத்திணையியலில் தொல்காப்பியர்.

ஆதித் தமிழர்கள் நிலம் சார்ந்து வாழ்ந்தனர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி இதன் தலைவன் சேயோன் என்ற முருகன். காடும், காடு சார்ந்த நிலமும் முல்லை இதன் தலைவன் திருமால். இதை விட வேறு நிலங்களும் அவற்றிற்குத் தலைவர்களும் இருந்தனர். இங்கே உள்ள டுவிஸ்ட். சேயோன் / முருகன்- தற்போதைய ஆறுதலை, பன்னிரண்டு கரம் கொண்ட முருகன் கிடையாது. அதேபோல, திருமால் என்பவர் இன்றைய விஷ்ணு கிடையாது.

ஆதித் தமிழர்களின், நிலம் சார்ந்த கடவுளான முருகன். மலையும், மலை சார்ந்த நிலத்தின் தலைவன். மக்களின் பிரதான தொழில், வேட்டையாடுதல். வேட்டையாடப் பயன்படுத்தப்பட்ட ஆயுதமான ஈட்டி / வேல் *power symbol*- ஆக விளங்கியது. குறிஞ்சி நிலத்தின் தலைவனான முருகன் இந்த நிலத்தின் அடையாளமான "வேல்" மூலம் இனங் காணப்பட்டான்.

"அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக" என்கிறார் நக்கீரர். அரும்பெறல் மரபு - தமிழ் மரபின், பெரும்பெயர் - தலைவன், முருகன் என்கிறார் அவர்.

உண்மையில் முருக வழிபாடு என்பது தலைவன் வழிபாடு. தலைவனை வணங்குவது என்பது ஆதித் தமிழர்களில் இருந்து

அண்மைக்காலத் தமிழன் வரை கடைக் கொள்ளும் முறையாகும்.தேசியத் தலைவரை, "சூரியத் தேவன்" எனப் புகழ்ந்து புதுவை இரத்தினதுரை பாடல்கள் எழுதவில்லையா..? அப்படித்தான் இதுவும்.

குறிஞ்சி நில மக்களின் தலைவன் கையில் வைத்திருந்த ஆயுதமான ஈட்டி / வேல் அதிகாரத்தின் அடையாளமாக, குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களால் போற்றி வணங்கப்பட்டது. வரலாற்றில் மண்சார்ந்த சிறு தெய்வமாகவே முருகன் இருந்துள்ளார். எட்டுத் தொகை பத்துப் பாட்டில், முருகனுக்கு பலி கொடுத்த குறிப்புகள் உண்டு. முருகனை *spirit* ஆகவும் வணங்கி உள்ளனர். "வேலன் வெறியாட்டல்" என்ற பழந்தமிழர் ஆட்டத்தில், முருகன் ஆவியாக பெண்ணுள் இறங்குவார் என்பது அய்தீகம்.

"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து,
வாரணக்கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்"

(திருமுருகாற்றுப்படை, முருகு 218- 222)

என்கிறார் சங்கப் புலவர் நக்கீரர்.

(இந்த அருஞ் சொற்களுக்கு மலேசியப் பேராசிரியர் சிங்காரவேலு சச்சிதானந்தம் கொடுத்துள்ள விளக்கம்.சிறு தினை = சிறிய தினை அரிசி, விரைஇ = கலந்து, மறி = ஆட்டுக்கிடாய், வாரணக்கொடி = கோழிக்கொடி,வயிற்பட = தக்க இடத்தில் அமையுமாறு, நிறீஇ = நிறுத்தி, ஆர்வலர் = திருமுருகப்பெருமானின் பக்தர்கள், மேவரு நிலையினும் = விரும்பி வருகின்ற இடந்தோறும், வேலன் தைஇய = வேலன் இயற்றிய, வெறிஅயர் களனும் = மிகுதியான மகிழ்ச்சியோடு ஆடும் களத்திலும் என்பதாகும்.)

ஊர் கூடித் தங்களது மூத்த குடியான முருகனுக்கு அரிசி பொங்கிப் போட்டு, ஆட்டுக் கிடாய் வெட்டி, வேலன் என்ற பூசாரி நடனமாடி தமிழர் தலைவனை வணங்கியுள்ளனர். இது முற்றிலும் சிறு தெய்வ வழிபாட்டு முறை.

இவை மட்டுமா...?அரிசி பொங்கி, ஆட்டை வெட்டி அதன் இரத்தத்தை அந்த அரிசியில் கலந்து, தலைவன் முருகனுக்குப் படைத்துள்ளனர். இந்தச் சிறுதெய்வ வழிபாட்டு முறையை திருமுருகாற்றுப் படையில் தெளிவாகப் படம் பிடித்துக்

காட்டுகிறார் நக்கீரர்.

"மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ"

மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக் குருதியொடு விரைஇய தூவெள் அரிசி = மிகுதியான வலிமையினையும், நிலைபெற்ற பெரிய தொடையினையும் உடைய கொழுவிய ஆட்டுக்கிடாயின் இரத்தத்துடன் கலந்த தூய வெண்மையான அரிசி. அதாவது, வெண்மையான அரிசியில், வலிமை வாய்ந்த ஆட்டு கிடாயின் இரத்தம் கலந்து பலி அமுதாக பல இடங்களில் வைத்து ஆதித் தமிழர்கள் வழிபட்டுள்ளனர். இவ் வழிபாட்டு முறை பார்க்கப் பயமாக இருக்கும் என்கிறார் நக்கீரர்.

அட, நான் பெங்களூரில் பார்த்த முன்னேஸ்வரன் போன்ற சிறு தெய்வமாகத் தானே இருந்துள்ளான் முருகன்! அப்படியென்றால் நவீன முருகன் எப்படிச் சைவமானார்..? அவருக்கு ஆறு தலை, பன்னிரண்டு கரங்கள் எல்லாம் எப்படி வந்தது..? சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகள் மிதக்கவில்லையா..?அவை எல்லாமே ஆரிய - சமஸ்கிருத கப்சா. சிறு தெய்வமாக, தமிழ் இனத்தின் தெய்வமாக இருந்த முருகன், புராணக் கதைகள், பொய்கள், பிரட்டுகளால் பிணைபட்டு, இன்றுள்ள ஈராறு கரம் கொண்ட முருகன் என்ற பெருந் தெய்வமாக்கப்பட்டார். இது வட நாட்டவர்களால் மிகத் துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட பண்பாட்டுப் படையெடுப்பு.

வடமொழித் தலைவனாக இருந்து, பிறகு, கடவுளாக்கப்பட்ட, சிவனின் மகனாக்கப்பட்டார் முருகன். பிள்ளையார் என்ற, தமிழருக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாத சமஸ்கிருதக் கடவுளின் தம்பியாகவும் ஆக்கப்பட்டார் முருகன். இப்படித்தான், ஓர் இனத்தின், நிலத்தின் தலைவனாக, தெய்வமாக கடவுளாக இருந்த முருகனை நாங்கள் தொலைத்தோம். ஈழத்தில், பிற்காலத்தில் கட்டப்பட்ட முருகன் கோவில்களிலேயே, பெருந்-தெய்வமாக, ஆறு தலைகள், பன்னிரண்டு கரங்களுடன் பரிதாபமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறார் தமிழினத்தின் மூத்த தலைவனான முருகன்.

பிள்ளையார் தமிழ் கடவுள் இல்லையா..?

தமிழ் இலக்கியங்களில், நீங்கள் கண்ணில் விளக்கெண்ணை விட்டுத் தேடினாலும், பிள்ளையார் வழிபாட்டை கண்டுபிடிக்க முடியாது. ஆரிய - சமஸ்கிருத கலப்பற்ற தமிழர் வழிபாட்டில் பிள்ளையாருக்கு

இடமே இல்லை. திட்டமிட்டு, இந்த சமஸ்கிருதக் கடவுளின் தம்பியாக்கப்பட்டார் முருகன்.

இதைக் கேட்டு பிள்ளையார் பக்தர்கள் கோவிக்கக் கூடாது. எனது குடும்பத்தில் கூட நிறைய பிள்ளையார் பக்தர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தின் பிரபலமான பிள்ளையார் கோவிலொன்றை மையமாக வைத்து, எனக்கொரு காதல் கதை கூட இருந்தது. அது ஒரு பெரிய பம்பல் கதை.

வேடுவர்களின் வேல் வழிபாடு:

இலங்கை வேடுவர்கள் வழிபடும் முறையைப் பார்த்திருக்கிறீர்களா..? அவர்களுடைய வழிபாட்டு முறை தமிழர்களின் புராதன வேல் வழிபாட்டு முறையை ஒத்திருக்கும். அவர்கள் வழிபடும் அம்பு அவர்களால், 'ஆயுதா' என்றழைக்கப் படுகிறது. சுமார் 3அடி உயரமான, இந்த 'ஆயுதா' வை நிலத்தில் குற்றி வைத்து விட்டு, அதைச் சூழ நின்று வேடர்கள் ஆடிப் பாடுவது, ஆதித் தமிழர்களின் ஆட்டத்தை நினைவுபடுத்தும். இன்றும் கூட வேடுவர்கள், காட்டுக்கு வேட்டையாடச் செல்லும்போது, குழந்தைகளை, அம்பொன்றை நிலத்தில் குற்றி அதன் அருகில் படுக்கவைத்துச் செல்வார்கள்.

அந்த அம்பைத் தாண்டி அக்குழந்தைகளை எதுவும் தீண்டாது அதேபோலத் தங்களின் அம்பு, கணை, வேலுக்கு காக்கும் திறன் உண்டு என்பதும் வேடுவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.





# காவுகள் என்ற கோயில் காடுகள்

கேரளத்தில் நான் பயணம் செய்யும் இடங்களில் எல்லாம் இரு விஷயங்கள் என்னைத் தீராக் காதலிபோலத் துரத்தி வருகின்றன. ஒன்று பெருமழை. இன்னொன்று, கவிதைகள் அடர்ந்த கோயில் காவுகள். 'காவு' என்றால் பலி அல்ல. மலையாளத்தில் காவு என்பதை, தமிழில் கோயில் காடுகள் என்று அர்த்தப் படுத்திக் கொள்ள வேண்டும்.

காவு/ கோயில் காடுகள் என்றால் என்ன?

காரைக்குடியை அடுத்துள்ள கண்டனூரில் வைகைக் கருப்பர் கோயில் உள்ளது. வெட்ட வெளிக்கு மத்தியில் இந்தக் கோயிலைச் சுற்றி உள்ள சுமார் எண்பது ஏக்கர் நிலப்பரப்பு மட்டும் அடர்ந்த வனம். வெட்ட வெளியிற்கிடையில், அடர்ந்த காடு எப்படிச் சாத்தியமானது என்ற கேள்விக்குப் பின்னால், 'கோவில் காடு' என்ற எமது மூத்தோர்களின் நம்பிக்கை மறைந்துள்ளது.

இறைபக்தியையும், டெரரான இறை நம்பிக்கைக் கதைகளையும் வைத்து, இயற்கையை காக்க, எங்களது மூதாதையர்கள் போட்ட மாஸ்டர் பிளானே, கோயில் காடுகள்! தமிழ் நாட்டில், கோயில் காடு, சோலைக் காடு, சாமிச் சோலை, சாமித் தோப்பு, சாமித் தோட்டம் எனப் பல பெயர்களில் அறியப்படும் கோயில் காடுகள், கேரளத்தில் 'காவு', 'சர்ப்பக் காடு' போன்ற பதங்களால் அறியப்படுகின்றன.

அய்யனார், கருப்பசாமி, வீரன், ஆண்டவன், முனீஸ்வரன், வேடியப்பன், செம்மம்பிடாரி, ஆண்டியப்பன், சேலைக்கட்டியான், சடையப்பன், கன்னியம்மன், பகவதி அம்மன், சப்த கன்னிகள், செல்லியம்மன், எல்லையம்மன், பேச்சியம்மன் பொங்கல் அம்மன், நாச்சி அம்மன், சின்னம்மாள், காளியாயி ஆகிய கடவுளர்களுக்கு, தமிழ்நாட்டின் கோயில் காடுகள் அர்ப்பணிக்கப்படுள்ளன. கேரளத்தின் கோயில் காடுகள், சாஸ்தா, பகவதி, நாகம், மாரியாயி, பவானி, காமாச்சி போன்ற பல கடவுளர்களுக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளன.

சர்ப்பக் காவு, ஐயப்பன் காவு, சாஸ்தா காவு, பகவதி காவு, அம்மன் காவு எனப் பல வகையான காவுகள் கேரளத்தில் உள்ளன. கேரளத்தின் காவுகளை, தனி ஒரு குடும்பத்தால் பராமரிக்கப்படும் காவு, கூட்டுக் குடும்பம் என்ற தரவாட்டினால் பராமரிக்கப்படும் காவு, தேவஸ்தானங்கள் / அரசால் பராமரிக்கப்படும் காவு என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

மலபாரின் அடிமை வியாபாரம் நடைபெற்ற, ‘வள்ளியூர் காவு’ கேரளத்தின் புகழ் பெற்ற காவுகளில் ஒன்றாகும். கொட்டியூர் கோயிலின், ‘வாள் எழுந்னலத்து’ சடங்கு நடைபெறும், ‘முதிரேரிக் காவு’, மலபாரின் குறிப்பிடத்தக்க காவுகளில் இன்னொன்று.

இயற்கை வளங்கள், இறைநம்பிக்கை ஊட்டிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, எம் முன்னோர்கள் இந்தக் கோயில் காடுகளை உருவாக்கியுள்ளார்கள். இக்காடுகள் மக்களின் நம்பிக்கையையும், பயத்தையும், பக்தியையும் ஒருங்கே சேரப்பெற்றவை. காடுகளை ஆளும் தெய்வங்களின் மேல் உள்ள பயபக்தியினாலும், அந்தக் காடுகள் தொடர்பில் மரபு வழியாக சொல்லப்பட்டு வருகின்ற கதைகளினாலும், இக்கோவில் காடுகள் காலங்காலமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கோயில் காடுகள் விசயத்தில் பல ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்கள் உள்ளன. கோயில் காடுகளின் உள்ளே செருப்புப் போட்டு நடக்க முடியாது. அங்குள்ள மரங்களை வெட்ட முடியாது. கிளைகளை ஒடிக்க முடியாது இப்படியான மரபு சார்ந்த நம்பிக்கைகள் கோயில் காடுகள் உயிர்ப்புடன் ஜீவிக்க உதவுகின்றன.

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் கோயில் காடுகள் உள்ளன. இந்தியாவில் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் கோவில் காடுகள் இருந்தாலும், அவற்றில் சுமார் பதின் நான்காயிரம் கோயில் காடுகள்தான் இதுவரை முறைப்படி ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. தோராயமாக 1670 கோயில் காடுகளைத் தமிழ்

நாட்டிலும், இரண்டாயிரம் கோயில் காடுகளைக் கேரளத்திலும் அடையாளம் கண்டுள்ளனர்.

"இந்தியாவில் மட்டுமல்ல சாரே, கோயில் காடுகளை ஒத்த புனிதக் காடுகள், உலகின் பெரும்பாலான நாடுகளில் உண்டு. இத்தாலி, கிரேக்கம், ஜப்பான், ஜேர்மனி, அமெரிக்கா போன்ற பல வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கோயில் காடுகளை ஒத்த காடுகள் உள்ளன" என்றார் கேரளக் காவுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து வரும் மோகன் நம்பியார்.

கோயில் காடுகள் எப்போது தோற்றம் பெற்றன?

கோயில் காடுகள் எப்போது தோற்றம் பெற்றன என்பதற்கான சரியான தரவுகள் யாரிடமும் இல்லை. காடுகள் தோற்றம் பெறத் தொடங்கிய காலத்தில் இருந்தே இவை இருப்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

"சம்பாதியிருந்த சம்பாதி வனமும்
தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை
கவேரனாங் கிருந்த கவேரவனமும்"

என 'சம்பாதி வனம்', 'கவேரவனம்' போன்ற கோவில் காடுகள், பூம்புகாரில் இருந்ததாக சிலப்பதிகாரம் சொல்கிறது.

அது மட்டுமல்ல, 'திருவெண்காடு', 'நிலவந்திகை சோலை' 'பெருந்தோட்டம்' போன்ற கோயில் காடுகள் இருந்ததற்கான ஆதாரங்களும் சிலப்பதிகாரத்தில் உள்ளன. ராஜராஜ சோழன் 'பிடாரி கோவில்காடு', 'ஐயன் கோவில் காடு' ஆகியவற்றைப் பாதுகாத்து வழிபட்டதற்கான வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன.

இந்தக் காடுகளில் யாரும் கைவைக்காமல் இருக்க, பயமும், பக்தியும் வேண்டும் என்பதனால் ஒவ்வொரு கோவில் காட்டுக்கும் ஒவ்வொரு தனித்துவமான கதைகள் உள்ளன. கேட்பவர்களுக்கு வெடிக்கலக்கம் ஊட்டக் கூடியவையாக இருக்கும் அந்தக் கதைகள்தான், அந்தந்த சாமிச் சோலைகளின் ஜீவ ஆதாரங்களாக உள்ளன.

அப்படி ஒருகதை இது...

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, கொல்லி மலையில், சந்தன மரங்கள் நிறைந்த காட்டில், மரங்களை கிராமத்தவர்கள் வெட்டி எடுத்துச் சென்றனர். அப்படிச் செல்கின்ற வேளையிலே சந்தன மரங்களை வெட்டியவர்கள் மீது ஒருநாள் கல் மழை பொழிந்தது. மரக் கிளைகள் ஒடிந்து விழுந்தன. கூடவே புகை போன்ற ஒரு

உருவமும் காட்சியளித்தது. சந்தன மரங்களை வெட்டி வன தேவதையை கோபப்படுத்துகிறோம் என்பதைப் புரிந்து கொண்ட கிராமத்தவர்கள் அங்கிருந்த மரங்களை வெட்டாமல் மண்ணாலான அம்மனின் சிலையை வைத்து வழிபடத் தொடங்கினார்கள். இது கொல்லிமலை, "பொன்னுக் குட்டு அம்மன்" தொடர்பான கதை. இதே போல ஒவ்வொரு கோயில் காடுகளுக்கும் ஒவ்வொரு தனித்துவமான கதைகள் உள்ளன.

**கோயில் காடுகளின் சூழலியல் முக்கியத்துவம்.**

"கோயில் காடுகளில் உயர்ந்த மரங்களும் செடி கொடிகளும் நெருக்கமாக அடர்ந்திருக்கும். கரியமில வாயுவைப் பிடித்து வைக்கும் சேமிப்பு வங்கியாகவும் இவை திகழ்கின்றன. இந்த இயற்கைக் காடுகளில் மூலிகைத் தாவரங்கள் உள்பட அழியக்கூடிய நிலையில் உள்ள அபூர்வமான பல தாவரங்களும் இன்றைக்கும் நிலைத்து நிற்கின்றன. இங்கே காணப்படும் மருத்துவ குணங்கள் நிறைந்த பல மூலிகைகள் பல்லாயிரக்கணக்கான கிராம மக்களின் நோய்ப்பிணியைப் போக்குகின்றன. இந்தக் கோவில் காடுகள், அங்குள்ள பறவைகள், பூச்சிகள், உயிர்வாழ் விலங்குகளுக்கு வாழ்விடமாகத் திகழ்கின்றன. என்கிறார் தமிழ் நாட்டின் பருவநிலை மாற்றத்தை ஆராய்ந்து "நிகழ்காலம்" என்ற பெயரில் புத்தமாக எழுதிய பத்திரிகையாளர் பொன். தனசேகரன்.

"அந்தந்தப் பிராந்தியத்திற்குரிய மரம் செடி கொடிகளே கோவில் காடுகளில் காணப்படுகின்றன. அவை தெய்வத் தன்மை ஊட்டி பாதுகாக்கப்படுகின்றன. இக்காடுகளில் காணப்படும் உயிர்ப்பன்மையால், சிறிய உயிரினப் பாதுகாப்பு மண்டலமாகவும் திகழ்கின்றன என்கிறார். சி.பி.ஆர். சுற்றுச் சூழல் ஃபவுண்டேஷனின் ஆராய்ச்சியாளர் எம்.அமிர்தலிங்கம்.

"கேரளத்தின் இந்தக் காவுகள், 475 வகையான பறவைகளுக்கு, 100 வகையான பாலூட்டிகளுக்கு, 156 வகையான ஊர்வனவிற்கு, 196 வகை மீன்களுக்கும், 150 வகையான வண்ணத்துப் பூச்சிகளுக்கும் வாழிடமாக உள்ளன" என்றார் மோகன் நம்பியார். இக் காவுகளில் உள்ள பல அரிய வகை மரங்கள் காவுகளின் உயிர் பல்வகைமைக்கு ஆதாரங்களாக உள்ளன.

கல்கத்தாவின் கடற்கரையோரங்களிலும், அலையாத்திக் காடுகளாலான கோயில் காடுகள் காணப்படுகின்றன. கடல் நீர் மட்டம் உயர்வதால் ஏற்படும் பாதிப்பில் இருந்து கடலோரங்களை இந்த அலையாத்திக் காடுகள் பாதுகாக்கின்றன. தமிழகத்தை கொடும் சுனாமி தாக்கியபோது, டி.எஸ்.பேட்டை என்ற கடற்கரை

கிராமத்துக்கு சிறு சேதம் கூட ஏற்படவில்லை. அக் கிராமத்தின் கடற்கரையானது, அலையாத்திக் காடுகளால் பாதுகாக்கப்பட்டு வந்ததே அதற்கான காரணமாகும். ஒரு காலத்தில் தில்லையில் அலையாத்திக் கோயில் காடுகள் இருந்ததற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. சிதம்பரம் கோவிலின் கிழக்குக் கோபுரத்தில் தல விருட்சமாக இருந்த அலையாத்திகள் இன்று அழிந்து போய்விட்டன.

### கோயில் காடுகளின் அழிவு...

"சென்னை, கிண்டி என்.ஜி.ஓ காலனி செல்லும் வழியில் உட்பக்கமாக ஒரு ஐயனார் கோயிலும், அதைச் சுற்றி கோவில் காடும் உள்ளது. நான் படிக்கின்ற காலத்தில் சுமார் ஒரு ஏக்கர் வரை அடர்த்தியாக இருந்த அந்தக் கோயில் காடு இன்று ஒரு சில மரங்களுடன், பரிதாபமாகக் காட்சி தருகிறது. இங்கு மட்டுமல்ல எல்லா இடங்களிலுமே கோவில் காடுகளின் அடர்த்தி மோசமாகக் குறைந்து வருகின்றன" என்றார் ஆராய்ச்சி மாணவர் சண்முகம்.

சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும், திட்டுத் திட்டாக, அடர்த்தியான கோயில் காடுகள் நிறையவே இருந்தன. அந்தக் காடுகளில் இருந்த மரங்கள், கடற்கரைச் சூழலுக்கு ஏற்ப வறட்சியைத் தாங்கி வளரக் கூடியவையாக இருந்தன. இன்று அவற்றில் பெரும்பாலானவை அழிக்கப்பட்டு விட்டன.

கேரளத்திலும் இதே நிலைதான், **1900** ஆண்டுகளில், **15,000-**ஆக இருந்த கேரளத்தின் கோவில் காடுகள், **1956-** ஆம் ஆண்டு, கேரள மாநிலம் உருவாக்கப்பட்ட போது, பத்தாயிரமாக ஒடுங்கி, இப்போது சுமார் இரண்டாயிரமே எஞ்சியுள்ளன.

கொட்டியூர் நண்பர் வினோத் நாயரின் தரவாட்டின்/ பரம்பரை வீட்டின் பின்னால் அவர்களது பரம்பரை அம்மன் காவு உள்ளது. கேரள இந்து உயர் ஜாதிகள், தங்களது பெரிய தரவாடுகளில், ஒரு சிறிய பங்கு நிலத்தை, "காவாக" ஒதுக்கி வழிபடும் மரபு ஆதிக் கேரளத்தில் இருந்துள்ளது. தரவாட்டை ஒட்டிய காவுகள், கூட்டுக் குடும்பங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

கேரளத்தின் காவுகளின் அழிவிற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து, தனிக் குடும்பங்களாக ஆனதே, பிரதான காரணமாக சொல்லப்படுகிறது. தரவாடுகளில் இருந்த காவுகளை அழித்து அங்கே வீடுகளைக் கட்டுகிறார்கள். இதை நான் கேரளத்தில் பரவலாகப் பார்த்தேன்.

கோவில் காடுகள் அழிவடைந்து செல்வதற்கு இன்னொரு பிரதான காரணியாக மதமாற்றம் திகழ்கிறது. அவர்கள் இந்துக்களாக இருக்கும் வரைக்கும் பிரச்னை இல்லை. இந்து மதத்தில் சிறு தெய்வ வழிபாடும், இயற்கை வழிபாடும் உண்டு. ஆனால், அவர்கள் மதம் மாறியவுடன், தாம் அதுவரை வணங்கிய தெய்வங்களையும், இயற்கையையும் பார்த்து "சாத்தான்" என்பதுதான் வேடிக்கையாக உள்ளது என்றார் பிரம்மகிரி மலையில் நான் சந்தித்த மலைவாசியொருவர். இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் அதிகளவில் மதமாற்றம் நிகழ்வதால் அப்பிராந்தியத்தில் உள்ள கோயில் காடுகள் பெருமளவு அபாயத்தை எதிர்நோக்குகின்றன என்கின்றன தரவுகள்.

"கோயில் காடுகள் சம்பந்தமான பயங்கள், நம்பிக்கைகள் இன்னமும் அப்படியேதான் உள்ளன. ஆனால், அவை வெறும் பக்தியாக மட்டுமே உள்ளனவா இல்லை, தெய்வ நம்பிக்கை சார்ந்து உள்ளனவா என்பது முக்கியமானது. தெய்வத்தின் மீது உள்ள அதே நம்பிக்கையை எமது முன்னோர்கள் அதைச் சூழவுள்ள காடுகள் மீதும் வைத்தார்கள். ஆனால், இன்று அந்த நம்பிக்கை தனியே தெய்வ நம்பிக்கையாக மட்டுமே சுருங்கி விட்டது. இந்தக் கோவில் காடுகளால் ஏற்படும் சூழலியல் சார்ந்த நன்மைகளை அப்பகுதி மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தனியே இறை பயத்தால் மட்டுமே கோயில் காடுகளைக் காப்பாற்றலாம் என்பதை விடுத்து, இந்தக் காடுகளால் மனித குலம் பெறும் நன்மைகளை மக்களுக்கு தெரியப்படுத்தி சூழலியல் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அரசின் கடமை" என்றார் முனைவர் ஆலிவர் கிங்.

வடக்குக் கேரளமான, மலபார் தேசத்தின் பெரும்பாலான காவுகள், தெய்யக் கலையுடன் தொடர்புடைய, "தெய்யக் காவு"களாக உள்ளன. இக்காவுகளில் "தெய்ய" நடனமாடி, வழிபடுகிறார்கள். அந்தந்தக் காவுகளில் அந்தந்த ஜாதியினர் தான் பூஜை செய்கிறார்கள்.

இடுக்கியில், ஈழவ மக்களுடன் தங்கியிருந்த வீட்டை ஒட்டி, ஒரு "சர்ப்பக்காவு" உண்டு. அங்கே நாக விக்கிரகங்கள் சிலவற்றைப் பார்த்தேன். வடக்கு கேரளத்தின் பெரும்பாலான காவுகள் பெண்கடவுளர்களுக்கும், ஆவிகளுக்கும் அர்ப்பணிக்கப் பட்டுள்ளன. அம்மா, அயிரவள்ளி, பகவதி, துர்கா, வன துர்க்கா, வன தேவதை, யக்ஷி, கந்தர்வன், முத்தப்பன் ஆகியன வடக்கு கேரளத்தின் காவுகளிலுள்ள சில கடவுளர்களாகும். தென் கேரளத்தின் காவுகள்,

பெரும்பாலும் நாக வழிபாட்டுடன் தொடர்புடையவையாக உள்ளன. சாஸ்தா காவுகள் என்ற ஐயப்பன் காவுகள், கேரளத்தில் புகழ் பெற்றவை. காவுகளை மையப்படுத்திய,"சர்ப்பப் பாடல்"களை கண்ணூரில் கேட்டேன். இப்பாடல்கள் தென் கேரளத்தில் பிரபலமானவை.

காடுகளின் பலனை அறிந்த எமது முன்னோர்கள், காடுகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக அவற்றிற்கு தெய்வ நம்பிக்கை ஊட்டிக் கோயில் காடுகளாகப் பாதுகாத்தனர். அவை அழிந்து போகாமல் பாதுகாப்பது இன்றைய தலைமுறையின் கடமை இல்லையா..?

குறிப்பு :-

இக்கட்டுரையின் எடிட் செய்யப்பட்ட இன்னொரு வடிவம்,
"தினமணி" யில் வெளியானது,

ஈழத்திலும் கோயில் காடுகளை ஒத்த கோயில்கள் உள்ளன.
அவற்றைப் பற்றிய கட்டுரையை "கேரள டயரீஸ் 2" புத்தகத்தில்
எதிர்பாருங்கள்.

# வேர் தேடுவோம்

"யாழ்ப்பாணத்தில் முதலில் குடியேறியவர்கள் சேர நாட்டினராகிய மலையாளிகள்" என்கிறார் நீலகண்ட சாஸ்திரி என்ற வரலாற்றாசிரியர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, மலையாளிகள், யாழ்ப்பாணம் வந்து குடியேறினர் என்பது யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய நம்பிக்கை என்கிறார் சேர். எமேசன் ரெனென்ற் என்ற ஆய்வாளர். (யாழ்ப்பாணக் குடியேற்றம் புத்தகம்)

ஆனால், சேர நாட்டினர் மட்டும்தான் யாழ்ப்பாணத்தில் குடியேறினார்கள் என்றால் அது தவறாகும். சிறியளவில் கன்னட, தெலுங்குக் குடியேற்றங்களும் நிகழ்ந்தன. இன்றைய தமிழ்நாட்டில் இருந்தும் குடியேற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால், சேர நாட்டு வாழ்க்கை முறை இன்னும் யாழ்ப்பாணத்தில் மிஞ்சியிருப்பதற்கு, அதிகளவான குடியேற்றம் சேர நாட்டில் இருந்து நிகழ்ந்ததே காரணமாகும்.

சில சிங்களக் குடியேற்றங்கள் கூட யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தன. போர்க் கைதிகளாகக் கொண்டுவரப்பட்ட சிங்களவர்கள், யாழ்ப்பாணத்தில் குடியேற்றப்பட்டனர் என்றும் அவர்களின், வழித் தோன்றல்கள்தான் இன்றைய, கோவியர் சாதியினர் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. சிங்களவர்களில், கோவி / கோவிகம என்ற ஜாதியினரே விவசாயிகளாக உள்ளனர். வெள்ளாளரின் வேலையாட்களாக தென் இந்தியாவில் இருந்து வந்தவர்களே கோவியர் என்போரும் உண்டு. இல்லை, ஈழத்தில் நடந்த தெலுங்கு குடியேற்றத்தின் எச்சங்களே கோவியர் என்போரும் உண்டு. எது எப்படியோ, கோவியர் என்ற ஜாதி கேரளாவிலும் இல்லை. தமிழ் நாட்டிலும் இல்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமே உண்டு.

சேர நாட்டினர் ஏன் யாழ்ப்பாணம் வந்தார்கள் என்பதற்கு பல விதமான கதைகள் சொல்லப்படுகின்றன. கேரளத்தில் இருந்து நாடு

கடத்தப்பட்டவர்களே, ஈழம் வந்தார்கள் என்கிறார் லிபிறோஸ் என்ற சரித்திர ஆசிரியர்.

வழமைபோல இதற்கொரு நம்பூதிரிக் கதையும் சொல்லப்படுகிறது. அதாவது, கேரளாவில் பரசுராமரால் குடியேற்றப்பட்ட நம்பூதிரிகள், அங்கிருந்த பூர்வ குடிகளான சேர நாட்டுத் தமிழர்களை கேரளத்தை விட்டு வெளியேற்றினார்களாம். "கேரளோற்பத்தி" என்ற, மலையாள சரித்திரநூல் இப்படிச் சொல்கிறது. பரசுராமர் கதையே, நம்பூதிரிகள் விட்ட கப்சா. இறைவனின் அவதாரமான பரசுராமர், தன்னுடைய பரசு என்ற கோடரியை கடலுக்குள் எறிந்து, கடல் விலகி வழிவிட்ட நிலத்தை, நம்பூதிரிகளிடம் கொடுத்தாராம். நிலத்தை மட்டும் கொடுக்கவில்லை, கேரளத்தின் மண், பொன், பெண் என அனைத்தையும் அனுபவிக்கும் முதலுரிமையையும், முழு உரிமையையும் நம்பூதிரிக்குக் கொடுத்து, நம்பூதிரிகள், விட்டுக்கொடுப்பவற்றை மட்டுமே மற்றவர்கள் அனுபவிக்க முடியும் (அட அதுதானே வர்ண தர்மம்) என்றாராம் பரசுராமர்.




பரசுராமர்

உண்மையில் பரசுராமர் என்ற கற்பனைப் பாத்திரத்தை உருவாக்கி அதன் மூலமாக, கேரளத்தின் மண், பொன், பெண் என எல்லாவற்றையும் சுரண்டி வாழ்ந்தார்கள் நம்பூதிரிப் பிராமணர்கள்.

கேரளத்தின் உயர் ஜாதிகளின் ஒன்றின் உட்பிரிவு ஒன்றில் அண்மைக்காலம் வரைக்கும் ஒரு வழக்கம் இருந்தது. அண்மைக் காலம் என்றால் சுமார் 50 வருஷங்களுக்கு முன்பு வரை. அந்த வழக்கத்தின் பிரகாரம், அந்த ஜாதியைச் சேர்ந்த பெண் திருமணம் முடிந்து முதலிரவுக்கு முன்பாக, நம்பூதிரி ஒருவருடன் உடலுறவு கொள்ள வேண்டும். அப்போது அந்தப் பெண், தன்னுடைய ஏழு சந்ததிக்குத் தேவையான புண்ணியத்தை பெறுவாளாம். அதாவது நம்பூதிரிகளின் 'ஆண்குறி' ஏழு சந்ததிகளுக்கு புண்ணியத்தைக் கடத்தும் கனெக்டராகத் தொழில்பட்டிருக்கிறது.

நம்பூதிரிகள், "பூதேவர்"கள். அதாவது, பூவுலகில் வாழும் தேவர்களாம். அவர்களுக்கு பணிவிடை செய்வது மற்ற ஜாதியினர் அனைவரின் கடமை என்கிறார்கள் நம்பூதிரிகள். அதுமட்டுமல்ல, சேர நாட்டின் கோயில்களில் பணிபுரியும் சூத்திரர்களும், நில முதலாளிகளாக விளங்கிய நாயர் சாதியினரும், தேவலோக



அழகிகளான அப்ஸரஸ்களின் வழித் தோன்றல்கள், என்றொரு கதையை நம்பூதிரிகள் கிளப்பி விட்டனர். அதற்கு என்ன காரணம் என்றால், இந்த பூதேவர்களான, நம்பூதிரிகளை தேவலோகத்தில் குஷிப் படுத்தியது தேவலோக அழகிகளான அப்ஸரசுகள்.

ஆகவே, அந்த பூதேவர்களின் வழித்தோன்றல்களான நம்பூதிரிகளை, பூலோகத்தில் குஷிப்படுத்த வேண்டியது, இந்த இரண்டு ஜாதிப் பெண்களின் கடமை என்றார்கள். நம்பூதிரிகளுடன் உடலுறவு கொள்வதென்பது பிறவிப் பெரும்பயன் என்றார்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். எவ்வளவு அயோக்கியர்களாக இந்த நம்பூதிரிகள் இருந்துள்ளார்கள்..?

இதைவிட சொத்துக்களைக் கொள்ளை அடிக்க இன்னும் கிரிமினலான விஷயம் ஒன்றை நம்பூதிரிகள் செய்தார்கள். ஆரிய வம்சமான நம்பூதிரிகள், ஆண் வழிச் சொத்துரிமை கொண்டவர்கள். அதாவது, குடும்பச் சொத்துக்கள் எல்லாமே குடும்பத்தின் மூத்த ஆண் மகனுக்கே செல்லும். இதனால், தங்களது மூத்த மகனை, நம்பூதிரிப் பெண்ணுக்கே திருமணம் முடித்து வைத்தனர். நம்பூதிரிகளின் சொத்து நம்பூதிரி மகனுக்கே சென்றது. ஆனால், நாயர் ஜாதியினர், யாழ்ப்பாணத்தவர்கள்போல, சேர நாட்டு, மகள் வழிச் சொத்துரிமையைக் கொண்டவர்கள். குடும்பச் சொத்துக்கள் எல்லாமே பெண்களுக்குத்தான் செல்லும் இதனால், நிலமுதலாளிகளாக இருந்த நாயர்களின் வீட்டுப் பெண்களை நம்பூதிரிகளின் இளைய மகன்கள் திருமணம் செய்து கொண்டனர், நிலங்கள், கோடிக் கணக்கான சொத்துகள் அனைத்தும் நம்பூதிரிகளிடம் சென்றது.

கடவுள் சித்தம், இந்த நம்பூதிரிகளிடம் கடல் தாண்டிச் செல்லும் பழக்கம் இருந்திருக்கவில்லை. கடும் பிராமணர்களான அவர்கள், கடல் தாண்டிச் செல்வதைக் குற்றமாக நினைத்தனர். கடல் தாண்டிச் சென்றால் தங்களது தூய்மை பறியோய்விடும் என

நினைத்தனர். இதனால், சேர நாட்டில் இருந்து ஈழத்தில் பெருங் குடியேற்றங்கள் நிகழ்ந்த போதும், நம்பூதிரிகளின் குடியேற்றம் நிகழவில்லை. நம்பூதிரிகளின் குடியேற்றம் மட்டும் ஈழத்தில் நிகழ்ந்திருந்தால், சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து நம்பூதிரிகளுக்கெதிராகப் போராட வேண்டிய தேவை வந்திருக்கும்.

அப்படியாயின் இலங்கைப் பிராமணர்கள் யார்..?

இந்தியாவைப் போல யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் ஆதிக்க சாதி இல்லை. இவர்கள் யாழ்ப்பாணத்தின் ஆதிக்க சாதியான வெள்ளாளரால் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள் என்பதுதான் யாழ்ப்பாணப் பிராமணர்கள் தொடர்பான பொதுவான நம்பிக்கையாகும்.

இப்போதுதான் யாழ்ப்பாணத்தில், கல்வி கற்ற, கோயிலுக்குள் மட்டும் முடங்கிக் கிடக்காத பிராமண இளம் தலைமுறை உருவாகியுள்ளது. அதற்கு முன்பு பிராமணர்கள் யாழ்ப்பாணக் கோவில்களுக்குள்ளே முடங்கிக் கிடந்தனர். அவர்களால் யாழ்ப்பாணத்தின் இயங்கு நிலையில் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. ஆனால், சமூக அடுக்குகளில் முதல் இடத்தில் இருந்தனர்.

யாழ்ப்பாண பிராமணர்கள் உண்மையில் பிராமண சாதி இல்லை எனவும், குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் தமது சாதியில் இருந்து, தேர்ந்தெடுத்த சிலரை கோவில்களில் பூசை செய்ய வைத்தார்கள் என்றும், அவர்களே காலப்போக்கில் யாழில் பிராமணர்கள் ஆனார்கள் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

ஆறுமுக நாவலரின் சைவ சமய எழுச்சிக்குப் பிறகு, தமிழ் நாட்டில் இருந்து சில பிராமணர்கள் யாழ்ப்பாணம் வந்து குடியேறினார்கள்.



**கேரள நம்பூதிரி வீடு**
(மாதிரி ஓவியம்)

ஆதி காலத்தில் கொடுங் கடலைக் கடப்பதென்பது இயலாத காரியம் என்பதால், யாழ்ப்பாணத்தில் பிராமணக் குடியேற்றம் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்பது அவர்களது வாதம். மேலும் ஆதி காலத்தில் கடல் கடந்தால், ஒருவரின் பிராமண சாதி விலக்குச் செய்யப்படுவார் என்றும் அதனால் அவரது பிராமண அடையாளம் இல்லாமல் போய்விடும் என்பதால் பிராமணர்கள் கடல் கடந்து வந்திருக்க வாய்ப்பில்லை என்பவர்களும் உண்டு.

எது எப்படியோ, இந்தியாவைப் போலல்லாது, யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரைக்கும், பிராமணர்கள் என்போர் எந்தவிதமான ஆதிக்கத்துக்கும் செல்லாத பச்சைப் புள்ளைகளாக உள்ளனர்.

# வெள்ளாளர்கள், யாழ்ப்பாணத்தின் துயரம்

"குவாங்கோ நதியை சீனாவின் துயரம் என்பதுபோல, யாழ்ப்பாணத்தின் துயரம், யாழ்ப்பாணத்து வெள்ளாளர்" என்பார் நண்பர் ஒருவர். யாழ்ப்பாணத்தில், பிராமணர்கள் ஆதிக்க சாதி இல்லை என்று பார்த்தோம். ஆனால், பிராமணர்கள் செய்யக் கூடிய கொடுமைகளை, கீழ் ஜாதியினருக்கு வட்டியும் முதலுமாகச் செய்தனர் வெள்ளாளர்கள். உண்மையில் கேரளத்துக்கு நம்பூதிரிகளோ எப்படியோ, யாழ்ப்பாணத்துக்கு வெள்ளாளர்கள் அப்படி.

பிரிட்டிஷ் மகாராணிக்கு கணிதம் கற்பித்ததாக பில்டப் கொடுக்கப்பட்ட, "அடங்காத் தமிழன்" சுந்தரலிங்கம் என்ற சைவ வெள்ளாளர், "ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி" என்ற ஒன்றைத் தொடங்கினார். சிங்களப் பேரினவாதிகளுக்குப் பதிலடி கொடுக்கத்தான் அவர் அந்த அமைப்பைத் தொடங்கினார் என நீங்கள் நினைத்தால் அது அறியாமைகிவிடக்கூடும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில், வழிபடும் சம உரிமை கேட்டுவந்த ஒடுக்கப்பட்ட சாதி தமிழ் மக்களுக்கெதிராகவே கேடயம், அம்பு, வில் சகிதம் போர்க் கோலம் பூண்டார் அடங்காத் தமிழன். கண்டித்திருக்க வேண்டிய தந்தை செல்வா, என்ற கிறித்தவ வேளாளர் வாய் மூடி மௌனியாக இருந்தார். தளபதி அமிர்தலிங்கம் என்ற சைவ வெள்ளாளர், 'சாதிப் பிரச்சனையில் கட்சி தலையிடக் கூடாது' என்றார்.



'அடங்காத்தமிழன்' சுந்தரலிங்கம்

ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள் ஜாக்கெட் போடக் கூடாது என்றொரு

எழுதப்படாத சட்டம் அண்மைக்காலம் வரைக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்தது. எங்களது ஊரில், ஜாக்கெட் அணிந்து சென்ற, ஒடுக்கப்பட்ட ஜாதிப் பெண்ணொருவரின் ஜாக்கெட்டை, கொக்கத்தடியால் இழுத்துக் கிழித்ததை, வீரமாகச் சொன்னார் எனது நண்பனின் சைவ வெள்ளாளத் தாத்தா.


தந்தை செல்வா


தளபதி அமீர்

"சைவ வெள்ளாளர்கள் மட்டும்தான் அப்பிடி, நாங்கள் திறமானவர்கள்" என கிறித்தவ வெள்ளாளர்கள் சொல்ல முடியாது. சைவ வெள்ளாளர்களுக்கு கொஞ்சமும் குறைவில்லாத சாதித் தடிப்புடையவர்களாக கிறித்தவ வெள்ளாளர்கள் இருந்தனர், இருக்கின்றனர். இம்மானுவேல் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைத் தவிர, வெள்ளாளர் இல்லாத இன்னொரு ஆண்டகையை உங்களால் அடையாளம் காட்ட முடியாது. "கத்தோலிக்கர்கள் தான் அப்பிடி, நாங்கள் நல்லோர்கள்" என புரட்டஸ்தாந்து சபைகளாலும் கூற முடியாது. அந்த சபைகளை ஆளும் அதிகாரமும் வெள்ளாளருக்குத்தான் உண்டு. நண்பர் ஒருவர் காமெடியாக, "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்ற வேதாகம வசனம், தேவனுக்குப் பொருந்தாவிட்டாலும், வெள்ளாளருக்கும், கிறித்தவர்களுக்கும் நன்றாகப் பொருந்திப் போகும்" என்பார்.

பெரிய பம்பல் என்னவென்றால், மேலாதிக்கம், தூய்மைவாதம் பேசி மற்ற ஜாதிகளை அடக்கி ஆள நினைக்கும், யாழ்ப்பாண வெள்ளாளர்கள், உண்மையில் ஒரு தனி சாதியினர் இல்லை. யாழ்ப்பாண சமூகத்தை ஆய்வு செய்த பேங்ஸ் என்ற மேலை நாட்டவர், "வெள்ளாள சாதி" என்ற வார்த்தைக்குப் பதிலாக, "வெள்ளாளர் பகுதி" என்கிறார். அதாவது, யாழ்ப்பாண வெள்ளாளர் என்பது இந்திய வெள்ளாளர், போலத் தனித்த ஒரு சாதியினர் இல்லை. "வெள்ளாள சாதியக் கூட்டமைப்பு" என்பதுதான் உண்மையில் சரியானது. அதாவது மக்களே! யாழ்ப்பாணத்தின் விவசாய நிலங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட,

சாதிகளின் தொகுப்புத்தான் யாழ்ப்பாண வெள்ளாளர்கள் என்கிறார்கள் ஒட்டுமொத்தமாக எல்லா ஆராய்ச்சியாளர்களுமே.

மாதவன் நாயரை, மலையாள மனோரமா நண்பர் ஒருவர் அறிமுகப் படுத்தி வைத்தார். கோழிக்கோட்டை சொந்த இடமாகக் கொண்ட அவர், சுமார் நான்கு தடவைகள் இலங்கைக்கு வந்துள்ளார். நாயர் சாதியைச் சேர்ந்த அவருக்கு ஈழத் தமிழனான என்னிடம் சொல்ல ஒரு கதை இருந்தது. நாயர்கள் பொதுவாக *Genealogy*-யில் (பாரம்பரியவியல் எனத் தமிழ்ப் படுத்தலாமா..?) விண்ணர்கள். தங்களுடைய மூதாதையர்களை கவனமாக ஆவணப்படுத்தி வைப்பார்கள். மாதவன் நாயரின் முன்னோர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக, யாழ்ப்பாணம் வந்து குடியேறினார்களாம். அவர்களின் சந்ததியைக் கண்டறிவதுதான் அவரின் இலக்கு. யாழ்ப்பாணம் எங்கும் தேடியும் அவரால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் குடியேறிய நாயர்கள் எல்லாம் வெள்ளாளராகிப் போனார்கள் எனக் கவலையுடன் சொன்னார் மாதவன் நாயர்.

ஒன்றைச் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா..?

இலங்கையில் பிரித்தானியருக் கெதிராகப் போராடி மடிந்தார் பண்டார வன்னியன் எனப் படித்துள்ளோம். கடைசிச் சங்கிலி மன்னனைக் காட்டிக் கொடுத்தார் காக்கை வன்னியன் என்கிறது வரலாறு. கருணா பிரிந்தபோது, "அடுத்த காக்கை வன்னியன்.." என எழுதினோம். யாழ்ப்பாணப் பகுதியில் ஏற்பட்ட இரண்டு வன்னிக் குடியேற்றங்களைப்பற்றி, யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இதை"வையா பாட"லும் வழிமொழிகிறது. வன்னியர்கள் ஆண்டதாலேயே, அந் நிலம் "வன்னி" எனப் பெயர் பெற்றது என்பது எங்களுக்குத் தெரிந்த செய்தி.

மறவர்கள் குடியேறி வாழ்ந்த இடம் என்பதனால் அது மறாட்சி (மறவர் - ஆட்சி) என்று அழைக்கப்பட்டது. பின் காலப்போக்கில், வடமராட்சி, தென்மராட்சி என இரண்டாகப் பிரிந்தது என்கிறது வரலாறு.வீரமாணிக்க தேவன் என்னும் வீரம் மிக்க மறவர் படைத் தலைவன் ஒருவன் பருத்தித்துறையிலிருந்தான் என்கிறது "யாழ்ப்பாண சரித்திரம்" நூல்.

ஒல்லாந்தர் ஆட்சியில், 1697ஆம் ஆண்டு, எழுதப்பட்ட அறிக்கையொன்று, யாழ்ப்பாணத்தில் நாற்பது பிரதான சாதிப் பிரிவுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. 1790 ஆண்டில் தலைவரி வசூலிப்பதற்காக, யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட சாதிவாரியான கணக்கெடுப்புப் பட்டியலில், 58சாதிப்பிரிவுகள் தெளிவாக

அடையாளங் காணப்பட்டுள்ளன.

நல்லூர் நகரத்திலே ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வீதியிருந்தது என்கிறது இலங்கை சரித்திர சூசனம் என்னும் நூல். "அந்தணர்க்குகொரு தெருவும், செட்டிகளுக்கொரு தெருவும், வேளாளர்க்கொரு தெருவும், கன்னாருக்கொரு தெருவும், தட்டாருக்கொரு தெருவும், கைக்கோளர்க்கொரு தெருவும், சாயக்காரருக்கொரு தெருவும், உப்பு வாணிகருக்கொரு தெருவும், சிவிகையார்க்கொரு தெருவுமாக இப்படி அறுபத்துநான்கு தெருக்களிருந்தன. இந்நகரத்தினுள்ளே, அம்பட்டர், வண்ணார், பள்ளர், நளவர், பறையர், துரும்பர் முதலியோர்க்கு இருக்கையில்லை. அவரெல்லாம் புறஞ்சேரிகளிலேயே வசித்தார்கள்" என்கிறது அந்தப் புத்தகம்.

வன்னியர்கள் ஆண்ட "வன்னி மண்" அதே பேரில் இன்னும் இருக்கிறது. "மறவர்கள்" ஆண்ட மண்ணும் 'வடமராட்சி', 'தென்மராட்சி' என அதே பேரில் இருக்கின்றன. அப்படியென்றால், எங்கே சென்றார்கள், இந்த வன்னியர்களும், மறவர்களும்...? யாழ்ப்பாணத்திலோ, இல்லை வன்னியிலோ நீங்கள் எவ்வளவு தேடினாலும் இந்த இரண்டு சாதியையும் கண்டுபிடிக்க முடியாதே? ஒல்லாந்தரின் கணக்கெடுப்பின்போது இருந்த 58 சாதிகளில் இன்று எத்தனை சாதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளது..? அது மட்டும் இல்லை, வேறு எங்கும் இல்லாமல் யாழ்ப்பாணத்தில் மட்டும் எப்படி வெள்ளாளர்கள் அபரிதமான சதவீதத்தில் உள்ளனர்..?

ஆதிசைவ வெள்ளாளர், ஊற்று வளநாட்டு வேளாளர், சைவ வேளாளர், அசைவ வேளாளர், காக்கட்டு வேளாளர் என இந்திய வேளாளரில் ஆயிரத்தி எட்டுப் பிரிவுகள் இருக்கும்போது, யாழ்ப்பாணத்தில் மட்டும் எப்படி எல்லாரும் ஒரே வெள்ளாளர் ஆகினர். (சைவவேளாளர், கிறித்தவ வேளாளர் காமெடியை விடுங்கள்)

உண்மையில் ஆதிக்க சாதிகளாக இருந்த வெள்ளாளர், மறவர், வன்னியர், கள்ளர், அகம்படியார் போன்ற பல ஜாதிகள் ஒன்றாகி காலப்போக்கில் வெள்ளாளராகினர். தூய்மை வாதம் பேசிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண வெள்ளாளர்களால் ஜீரணிக்க முடியாத உண்மை இது. "கள்ளர், மறவர், கனத்த அகம்படியார் மெல்ல மெல்ல வெள்ளாளர் ஆனார்" என்பது யாழ்ப்பாணத்தின் மூத்த மொழி. அதை நாங்கள் மறக்கக் கூடாது.

ஆதிக்க சாதிகள் ஒன்றாகி வெள்ளாளர் ஆனாலும்,சாதிய

வேறுபாடு அண்மைக்காலம் வரை இவர்களுக்குள் லைட்டாக "கேரட்" வடிவில் இருந்தது. சில பகுதிகளைச் சேர்ந்த வெள்ளாளர்கள், தாங்கள்தான் "தூய 24 கேரட்" என்பார்கள். இரண்டு வெள்ளாளர் குடும்பங்களில் இருந்து வந்த எனது பெற்றோர், காதல் திருமணம் செய்ய முடிவெடுத்தபோது, இந்த 'கேரட்' பெரிய தலைவலியாக இருந்ததாம். தாங்கள்தான் 24கேரட் தூய வெள்ளாளர் என இருபகுதியும் பிடுங்குப்பட்டார்களாம்.

நண்பன் ஒருவனின் அப்பா சொன்னார், சில ஆண்டுகளுக்கு முன்புவரை, புலோலி, பருத்தித்துறை, அராலி ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த வெள்ளாளர்கள், மற்றைய பிராந்தியங்களைச் சேர்ந்த வெள்ளாளர்களை மதிக்க மாட்டார்களாம். மற்றவர்கள் "கேரட்" குறைவென்பது அவர்களது முடிவாம். வெள்ளாளர்களுக்குள் இன்னும் லைட்டாக இருக்கும் இந்தக் கேரட் வேறுபாடானது, அவர்களுடன் இணைந்த வேறு சாதிகளால் ஏற்பட்டது என்பது எனது ஆய்வின் முடிவு.

நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களோ இல்லையோ, யாழ்ப்பாணத்தில் இருந்த சாதியப் பாகுபாட்டை விடுதலைப் புலிகள் ஓரளவுக்கேனும் போக்கினார்கள். விடுதலைப் புலிகளின் ஆட்சியில் எந்தவிதமான ஆவணப்படுத்தப்பட்ட சாதி வன்முறையும் நிகழவில்லை. நண்பன் ஒருவன் ஒரு கதை சொன்னான். ஒருமுறை தன்னுடன் வீணாகத் தனகி 'கொழுத்தாடு' பிடித்த யாழ்ப்பாண சைவ வேளாளர் ஒருவருக்கு, பள்ளர் ஜாதியைச் சேர்ந்த ஒருவர், வாகாகப் போட்டு அல்லையில் மிதித்து விட்டாராம். விடுதலைப் புலிகளிடம் நீதி கேட்கச் சென்ற அவர் "பள்ளன் என்னை அடித்து விட்டான்" என்றாராம். வெள்ளாளரை அடித்த குற்றத்துக்காக, பள்ள சாதியைச் சேர்ந்த அவரை இரண்டு நாட்கள் பங்கர் வெட்டச் சொன்ன புலிகள், "பள்ளர்" என்று சாதிப்பேர் சொல்லி அழைத்ததால், அந்த சைவ வெள்ளாளரை நான்கு நாட்கள் பங்கர் வெட்டச் சொன்னார்களாம்.

வடமராட்சியில் உச்ச மொத்த சாதித் தடிப்புள்ள வெள்ளாளர்கள் வாழும் பகுதியிலுள்ள தெரு ஒன்றுக்கு, மாவீரர் ஒருவரின் பெயரைப் புலிகள் வைத்தனர். வெள்ளாளர்களுக்கு பேஸ்தடித்து விட்டது. காரணம், அந்த மாவீரர் 'பறையர்' ஜாதியைச் சேர்ந்தவர்.வெளியில் காட்ட முடியாமல் மனசுக்குள் கறுவிக் கொண்டிருந்தனராம் வெள்ளாளர்கள்.

'தீண்டத்தகாதவர்கள்' பட்டியலில் இருந்த, அம்பட்டர் ஜாதியைச் சேர்ந்த சு.ப.தமிழ் செல்வன், விடுதலைப் புலிகளின்

அரசியல் துறைப் பொறுப்பாளராக உயர்ந்தார். இதெல்லாம் ஆயுதப் போராட்டம் இல்லாமல் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத விஷயமாகும். அம்பட்டர் போன்ற, ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரை, யாழ்ப்பாணத்தவர்கள், தலைவனாக ஏற்றுக் கொள்வார்களா? சம்பந்தன், சுமந்திரன் என எங்களின் தலைவர்கள் எல்லாம் வெள்ளாளராகத்தானே உள்ளனர்?

தமிழ் ஈழம் கிடைத்திருந்தால், அது நிச்சயமாக சாதிய வேறுபாடு இல்லாமல்தான் இருந்திருக்கும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. ஏனென்றால், புலிகள் கடும் இனவாதிகளாக இருந்தனர். ஆனால், சாதிய வாதிகளாக அவர்கள் என்றைக்குமே இருந்ததில்லை.

# நாவலரும் - சைவ வெள்ளாள மேலாதிக்கமும்

வயநாடு- கர்நாடகா எல்லையில், இயற்கை எழில் கொஞ்சும் காளந்தி நதியோரம் உள்ள சிறு வீடொன்றில், இவாஞ்சலின் மெரிலின் ஜோசப் அம்மையாரைச் சந்தித்தேன். 'மலையாள மனோரமா' வின் மாதவன் நாயர் தான் அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். இவாஞ்சலின் அம்மையாருக்கும், யாழ்ப்பாணத்துக்கும் பூர்வீக சம்பந்தமொன்று உண்டு. அவருடைய முப்பாட்டன், அமெரிக்கன் மிஷனரியில் இருந்து யாழ்ப்பாணத்தில், தேவனுக்கு ஊழியம் செய்துள்ளார். அவருடைய பாட்டிகளில் ஒருவர் உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றுள்ளார்.

அவருடைய பரம்பரைக்கே ஒரு பெயர் பிடிக்காது. அது ஆறுமுக நாவலர். எனது பூர்வீகம் யாழ்ப்பாணம் எனத் தெரிந்து, கூடவே எனது காவி வேஷ்டி, உருத்திராக்கம் ஆகியவற்றைப் பார்த்துவிட்டு, "நாவலரின் பாதிப்போ...?" என்றார். நான் "இல்லை..."என்றேன். "ஒரு யாழ்ப்பாண சைவத் தமிழன் எப்படி, நாவலரின் பாதிப்பு இல்லாமல் இருக்க முடியும்..?" என்றார் "நான் சைவன் இல்லை. ஆறுமுக நாவலரைப் பல தளங்களில் மறுதலிக்கும் ஆதி இந்து" என்றேன். நிமிர்ந்து அமர்ந்து என் கதையைக் கேட்க ஆரம்பித்தார் அந்த முதிர்ந்த கிறித்தவத் தாய்.

என்னுடைய பாடசாலைப் பருவத்தில் நான் ஒரு ஊரறிந்த 'அடியா புடியா' பேச்சாளனாக இருந்தேன். இலங்கை முழுக்க நடந்த பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு சுமார் 15 தங்கப் பதக்கங்களையாவது வென்றிருப்பேன். அதிலே குறைந்தது ஐந்து பதக்கங்களாவது ஆறுமுக நாவலரைப் பற்றிப் பேசியதால் கிடைத்ததாகும்.

இப்போது கூட தூக்கத்திலிருந்து என்னை எழுப்பி, ஆறுமுக



ஆறுமுக நாவலர்

நாவலரைப் பற்றிப் பேசச் சொன்னால், குறைந்தது ஐந்து நிமிடங்களுக்காவது, "அந்நியர் ஆட்சியிலே சைவம் வளர்த்த சிவ பூமியாம் யாழ்ப்பாணத்தில், சைவமும் தமிழும் நலிவுற்றிருந்த போது, சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் யாழ்ப்பாணத் தமிழர்கள் செய்த பிறவிப் பெரும்பயனால் நல்லூர் கந்தப்பிள்ளை, சிவகாமி தம்பதிகளுக்கு மகனான 1822ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 18-ஆம் தேதி புதன் கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் ஆறுமுக நாவலர் அவதரித்தார்" என்று வெளுத்து வாங்க முடியும்.

வயதுக்கு வந்து, உலகம் தெரிந்த பிறகு, நின்று நிதானமாக யோசித்துப் பார்த்ததில், இன்று யாழ்ப்பாணத்தில் தாண்டவமாடும் அத்தனை வெள்ளாளக் கொழுப்புக்கும், ஆறுமுக நாவலர் ஐயாவே மூல காரணமாக இருந்துள்ளார் என்பது தெரியவந்தது. நாவலர் சைவத்தையும் தமிழையுமா மட்டுமா வளர்த்தார்? சைவம், தமிழ் ஊடக யாழ்ப்பாணத்தில், வெள்ளாளர்களின் மேலாதிக்கத்தையும் அல்லாவா வளர்த்தார்?

**மிஷனரிகளின் ஆதிக்கம்:**

ஆறுமுக நாவலரைப் புரிந்துகொள்ள முன்பாக, அவர் காலத்தில் இருந்த மிஷனரிகளின் ஆதிக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாவலரின் காலத்தில் அமெரிக்க மிஷன், அங்கிலிக்கன் திருச்சபை உள்பட ஒன்பது கிறிஷ்தவ மிஷனரிகள் தங்களுடைய உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து, யாழ்ப்பாண மக்களை மதம் மாற்ற முயற்சித்தனர். *Juggernaut* என்று ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை உள்ளது. பூரி ஜகந்நாதர் ஆலயத்தின் பிரமாண்டமான தேரைப் பார்த்து அதிசயித்துப்போன ஆங்கிலேயர்கள் *Juggernaut* என்ற வார்த்தையை ஆங்கிலத்துக்கு எடுத்துச் சென்றனர். 'நிறுத்த முடியாத பெரும் சக்தி' என அதைத் தமிழ்படுத்தலாம். கிறித்தவ மிசனரிகள் யாழ்ப்பாணத்தில் யாராலும் தடுக்க முடியாத *Juggernaut* ஆக இருந்தனர். ஆறுமுக நாவலர்

அவர்களுக்குச் சறுக்குக் கட்டை போட்டார்.

தமிழ்நாட்டில், மீன்பிடிப் பரதவர்களை ஒட்டு மொத்தமாக மதம் மாற்றியதைப்போல, யாழ்ப்பாணத் தமிழர்களை மதம் மாற்ற கிறித்தவ மிஷனரிகளால் முடியவில்லை. ஆறுமுக நாவலர் அவர்களின் கனவுக்கு குறுக்கே பெருமலை போல நின்றார்.

போர்த்துக்கேயர்கள் ஆயுதமுனையில் மதம் பரப்பினார்கள் என்றால், இந்த மிஷனரிகள் மக்களோடு மக்களாகக் கலந்து, அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்தி அதன் மூலமாக மதம் மாற்ற முயற்சித்தனர். கல்வியை, மதம் மாற்றும் முழு ஆயுதமாக அமெரிக்கன் மிஷன் கையில் எடுத்தது.

1816ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் முதலாவது அமெரிக்க மிஷன் பாடசாலை (யூனியன் காலேஜ்) ஆரம்பிக்கப்பட்டது. வெறும் 32ஆண்டுகளில் ,அதாவது 1848-ஆம் ஆண்டு, சின்னஞ்சிறிய யாழ்ப்பாண தேசத்தில், 105தமிழ் பாடசாலைகளையும், 16ஆங்கில மொழிப் பாடசாலைகளையும் அமெரிக்க மிஷன் நிர்மாணித்தது.

1823ஆம்ஆண்டு *'Batticota Seminary'* என்ற பெயரில், வெளிநாட்டுக் கல்வி நிலையங்களின் தரத்தில் அமைந்த கல்லூரி ஒன்றை அமெரிக்கன் மிஷனரி ஆரம்பிக்கவும்,யாழ்ப்பாணத்தின் உயர் குடியைச் சேர்ந்த திறமையான மாணவர்கள் இந்தக் கல்வி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். யாழ்ப்பாண உயர் குடிகளை தரமான கல்வியைக் காட்டி மதம் மாற்றினால், முழு யாழ்ப்பாணத்தையும் இலகுவாக மதம் மாற்றிவிடலாம் என அமெரிக்கன் மிஷன் 'மாஸ்டர் பிளான்' போட்டது.

இந்த *Batticota seminary*-யின் முக்கியமான மாணவர்களில் ஒருவர்தான் சைவக் காவலர் சி.வை.தாமோதரம்பிள்ளை. கிறிஸ்தவராக மதம் மாறி, *Batticota seminary*- யில் மிக உயர்ந்த, வெளிநாட்டுத் தரத்திலமைந்த, ஆங்கிலக் கல்வியைப் பெற்றுவிட்டு, பின்பு தாய் மதத்துக்குத் திரும்பி, நாவலரின் படைத்தளபதிகளில் ஒருவராகி,

"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்,
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே - எல்லவரும் ஏத்து
புராணமகா கமக்களேங்கேப் பிரசங்கமெங்கே
யாத்தனறிவெங்கே யறை" எனப் பாடினார்.

இன்றும் மிஷனரி வழிவந்த கொழுத்த கிறிஸ்தவர்கள், சி.வை.தாமோதரம் பிள்ளை ஐயாவை 'துரோகி' எனத் திட்டுவதைப்



சாமுவேல்
ஃபிஸ்க் கிறீன்

பார்க்கலாம். ரத்ன ஜீவன் கூல் ஐயா ஒருமுறை திட்டி இருந்ததைப் பார்த்தேன். மதம் மாற்றும் முயற்சி பிசகியதால், இந்த *Batticota Seminary*-யை 1855 இல் இழுத்து மூடிய அமெரிக்கன் மிஷன், 1867 ஆம் ஆண்டு அதை "யாழ்ப்பாணக் கல்லூரி" யாக மாற்றியது.

1824ஆம் ஆண்டு, தெற்கு ஆசியாவிலே முதல்முறையாக பெண்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியுள்ள, உடுவில் மகளிர் கல்லூரியை அமெரிக்கன் மிஷன் ஆரம்பித்தது. பெண்கள் வீட்டை விட்டே வெளியே அனுமதிக்கப்படாத காலத்தில், விடுதி வசதியுள்ள பெண்கள் கல்லூரியை ஆரம்பித்து கலாச்சாரப் புரட்சியைச் செய்தது அமெரிக்கன் மிஷன். யாழ்ப்பாணப் பெண்கள் எல்லாம் தலைவணங்க வேண்டிய மாபெரும் சமூகப் புரட்சி அது!

1820ஆம் ஆண்டு வடக்கின் முதலாவது அச்சுக் கூடம், இலங்கையின் இரண்டாவது பழமையான ஆங்கிலப் பத்திரிகையான "மோர்னிங் ஸ்டார்", முதலாவது தமிழ் - ஆங்கில அகராதி, முதலாவது தமிழ் பத்திரிகை 'உதய தாரகை' என பலவற்றை அமெரிக்கன் மிஷன் ஆரம்பித்தது .

கல்வியைப் போலவே சுகாதாரத் தளத்தில் யாழ்ப்பாண மக்களை தரம் உயர்த்தியதில் மிஷனரிகளின் பங்களிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. *Samuel Fisk Green* என்ற மிஷனரி மருத்துவர், 1848 ஆம் ஆண்டு மானிப்பாய் வைத்தியசாலையை *(Green Memorial Hospital)* நிறுவினார். இவ் வைத்தியசாலை உள்பட பல வைத்திய சாலைகள் அமெரிக்க மிஷனால் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டன.ஆங்கில மருத்துவம் தொடர்பாக எதுவுமே தெரிந்திராத உள்ளூர் மாணவர்களுக்கு, மானிப்பாய் வைத்தியசாலையில், மருத்துவப் பயிற்சியும் வழங்கப்பட்டன.டாக்டர். *Samuel Fisk Green* யாழ்ப்பாணத்தில் 30 ஆண்டுகள் தங்கியிருந்து மருத்துவ சேவை செய்தார். தமிழ் படித்து ஆங்கிலத்தில் இருந்த மருத்துவக் குறிப்புகளை சுமார் 400 பக்கங்களில் தமிழுக்கு மொழி மாற்றம் செய்தார். மத பரப்புரைக்காக வந்திருந்தாலும், டாக்டர் கிரீனின் மருத்துவப் பங்களிப்பை யாழ்ப்பாணத்தவர்கள் அனைவருமே நன்றியுடன் நினைவு கூரவேண்டும்.

மருத்துவ வரலாற்றாசிரியர் *Dr.C.G.Uragoda* தனது , *Surgery in Sri*

*Lanka - the past* என்ற புத்தகத்தில், 'இலங்கையில் மருத்துவத் துறையின் முன்னோடி' என கிரீனைப் புகழ்கிறார். சத்தியமான வார்த்தைகள். இன்றும் அமெரிக்காவின் *Massachusetts* மாநிலம் நகரிலுள்ள அவரது கல்லறையில் என்ன வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன தெரியுமா..? (*"Medical Evangelist to the Tamils."*)

இத்தனை பெருமுயற்சிகள், அர்ப்பணிப்புகள் செய்தும் அமெரிக்கன் மிஷனால் வெறும் அறுநூற்றிச் சில்லறை மக்களையே மதம் மாற்ற முடிந்தது. அமெரிக்கன் மிஷன் வரலாற்றில், யாழ்ப்பாணம் படுதோல்வியாகப்போக ஆறுமுக நாவலர் ஏற்படுத்திய 'சைவ எழுச்சி' காரணமாக இருந்தது.

அமெரிக்க மிஷன் மட்டுமல்ல, பிரித்தானிய மெதடிஸ்ட் திருச்சபையாலும் யாழ் மத்திய கல்லூரி, ஹாட்லி கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி போன்ற முக்கியமான பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கிலிக்கன் திருச்சபையும் தனது பங்குக்கு பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எனப் பாடசாலைகளை ஆரம்பித்தன. இவர்கள் யாராலும் யாழ்ப்பாணிகளை ஒட்டு மொத்தமாக மதம் மாற்ற முடியவில்லை.

பாடசாலைகள், மருத்துவமனைகள் எனக் கோடி கோடியாகப் பணத்தையும், ஆளணியை இறைத்தும், யாழ்ப்பாணத்தில் கிறித்தவ மிஷனரிகளின் பாச்சா பலிக்கவில்லை. இன்றும் யாழ்ப்பாணத்தின்



**யாழ்ப்பாணத்தின் முதலாவது மருத்துவ மாணவர்கள்**

கிறித்தவர்களில் தோராயமாக 90 சதவிகிதத்தினர் போர்த்துக்கேயர் களால்,கத்தோலிக்ககிறிஸ்தவர்களாக மதம் மாற்றப்பட்டவர்களே. ஒட்டுமொத்த திருச் சபைகளாலும் மதம் மாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை சில ஆயிரங்களுக்குள்ளே அடங்கும். ஆறுமுக நாவலர் உருவாக்கிய 'சைவ சமய எழுச்சி' இந்த மிஷனரிகளின் கனவில் டன் கணக்கில் மண்ணை அள்ளிப் போட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது, சுமார் 60% அரச வேலைகளில் தமிழர்கள் இருந்தனர். 1956ஆம் ஆண்டு, இலங்கையில் மொத்த மருத்துவர்களிலும், பொறியியலாளர் களிலும் 60சதவீதமானவர்கள் தமிழர்களாக இருந்தனர். மிஷனரிகளின் கல்வி இதற்கு மிக முக்கியமான காரணமாக இருந்தது. இன்றும் யாழ்ப்பாணத் தமிழர்கள் கெட்டித்தனத்தில், யூதர்களுக்கு ஒப்பானவர்களாக மதிக்கப்படுவதில் மிஷனரிகள் புகுத்திய கல்வி முறைக்கு முக்கிய பங்குண்டு. இதை நாங்கள் மறுக்க முடியாது.

1970ல் சிங்கள அரசு கொண்டுவந்த தரப்படுத்தல் தமிழ் பொறியியலாளர்களை வெறும் 5சதவீதமாகவும், தமிழ் மருத்துவர்களை வெறும் 10சதவீதமாகவும் குறைத்தது. ஈழத்தில் கொழுந்து விட்டெரிந்த இனப் பிரச்சனை இந்தத் தரப்படுத்தலுடனேயே ஆரம்பித்தது. மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் வாய்ப்பு தரப்படுத்தலால் தட்டிப் பறிக்கப்பட்ட பொன். சிவகுமாரன்தான், சிங்கள அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கிய முதல் போராளி!

### நாவலரின் தமிழ் சமய பங்கு

சிக்கலான பாட்டுத் தமிழாக இருந்த யாழ்ப்பாணத் தமிழை, எளியவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய உரைநடைத் தமிழாக்கியதில் நாவலரின் பங்கு அளப்பரியது. காலனித்துவத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களில் நாவலர் முதன்மை பெறுகிறார். கிறித்தவ மிஷனரிகளுக்கு போட்டியாக, யாழ்ப்பாணத்தில் சைவத் தமிழ் பாடசாலைகளை உருவாக்கினார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமைவாய்ந்தவராக இருந்த நாவலர்தான், பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார். எல்லாத் தமிழ்க் கிறித்தவர்களாலும் இன்று பயன்படுத்தப்படும் 'பரிசுத்த ஆவி' என்ற பதத்தைக் கண்டுபிடித்தவரும் நாவலரே.

சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய நாவலரிடம் ஒரு பெரிய பிரச்னை இருந்தது. ஆறுமுக நாவலர் அடிப்படையில் பெரிய சாதிமானாக, சாதி வெறியராக இருந்தார். தான் எழுதிய புத்தகங்களில் தீண்டாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என

வலியுறுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்களை கோவிலுக்குச் செல்ல வக்கற்றவர்கள் என்கிறார். ஒடுக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து உணவருந்தினால் தீட்டு என்கிறார். ஆங்கிலேயர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர் என்றால், அதை ஈடு செய்யப் பதிலுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடலாமா...?

வெள்ளாள மயமாகிய 'சைவ சித்தாந்தம்' மூலமாக, மனு தர்மத்தின் புது வெர்ஷனை யாழ்ப்பாணத்தில் பரப்பி, ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் ஒடுக்கினார். தான் எழுதிய புத்தகங்களில் வெள்ளாளர்களைப் பற்றிக் குறிக்க "நாயனார்", "அரசர்", "அடியவர்" போன்ற பதங்களை உபயோகித்து, வெள்ளாள சாதிக்கு மைலேஜ் சேர்த்தார். யாழ்ப்பாண மாணவர்கள் எல்லோருமே ஆறுமுக நாவலரின் சைவ வினாவிடையைப் படித்திருக்கலாம். என நினைக்கிறேன். கலைஞரின் 'தானே கேள்வி தானே பதில்' முறைக்கு அப்பனான அந்தப் புத்தகத்தின் 255- ஆவது கேள்வி இப்படியாக இருக்கிறது.

கேள்வி: நியமகாலத்திலன்றி, இன்னும் எவ்வெப்பொழுது ஸ்நானஞ் செய்வது ஆவசியகம்?

பதில்: "சண்டாளருடைய நிழல் படினும், இழிந்த சாதியாரும் புறச்சமயிகளும், வியாதியாளரும், சனன மரணா சௌசமுடையவரும், நாய், கழுதை, பன்றி, கழுகு, கோழி முதலியவைகளும் தீண்டினும், எலும்பு, சீலை முதலியவற்றை மிதிக்கினும், க்ஷௌரஞ் செய்து கொள்ளினும், சுற்றத்தார் இறக்கக் கேட்கினும், துச்சொப்பனங் காணினும், பிணப் புகை படினும், சுடுகாட்டிற் போகினும், சர்த்தி செய்யினும் உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ் செய்வது ஆவசியகம்".

அதாவது நாய், கழுதை, பன்றி, கழுகு, கோழி கூடவே ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டினாலும் உடனடியாக உடுத்தியிருக்கும் ஆடையுடனேயே குளிக்க வேண்டும் என்கிறார். உடலின் கலங்களில் எல்லாம் சாதிவெறி படிந்த ஒருவரால்தானே யாழ்ப்பாண சமூகத்தின் முக்கிய அங்கமான ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி இப்படிக் கேவலமாகப் புசத்த முடியும்.

உடனே நாவலர் செய்த சைவத் தமிழ் தொண்டுகளைக் காரணம் காட்டி அவரின் சாதி வெறிக்கு நீங்கள் முட்டுக் கொடுத்தால், மனித குலத்துக்கு நீங்கள் மாபெரும் துரோகத்தை செய்கிறீர்கள் என்று அர்த்தம். "நாவலர் என்ன செய்வார் பாவம்! அவர் வாழ்ந்த காலம் அப்படிப்பட்டது. சைவமும், தமிழுக்கும் எதிராக

ஆங்கிலேயர்கள் கொடுமையான வன்முறையை பிரயோகித்த காலமது. வேறென்ன செய்வார் பாவம் அவர்!" இப்படியான முட்டுக் கொடுப்புகளை பல படித்த நண்பர்களிடம் இருந்து கூட நான் கேட்டுள்ளேன். சரி. சைவத்துக்கும் தமிழுக்கும் ஆபத்து என்றால் அதற்காகப் போராட வேண்டியதுதானே? எதற்காக ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டினால் உடுத்த உடுப்புடனேயே குளிக்க வேண்டும் என நஞ்சைக் கொட்ட வேண்டும்? வன்முறையைக் கட்டவிழ்த்து விட வேண்டும்?

உணர்ச்சிவசப்பாடாமல் யோசித்துப் பார்த்தால், நாவலர் அடிப்படையில் ஒரு சாதி வெறியராக இருந்துள்ளார் என்பதையும், வெள்ளாளர்களை ஒரு படையாகத் திரட்டி, அவர்களுக்குத் முக்கிய அந்தஸ்துக் கொடுத்து, இன்றைய தடித்த யாழ்ப்பாண சைவ வெள்ளாள சிந்தனைகளுக்கெல்லாம் நாவலர் ஐயாதான் காரணமாக இருந்துள்ளார் என்பதையும் புரிந்து கொள்வதொன்றும் கம்ப சூத்திரம் கிடையாது.

**கோவில்களை மையமாக வைத்து வெள்ளாள மேலாதிக்கம்**

கோவில்களை மையமாக வைத்து சைவ வெள்ளாள மேலாதிக்க சிந்தனை யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரால் ஆழமாகப் பரப்பப்பட்டது. இக்கோவில்களுக்குப் பூசை செய்ய இந்தியாவில் இருந்து பிராமணர்கள் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் கோவில் முதலாளிகளான, வெள்ளாளர்கள் முன்பு கைகட்டி ஊழியம் செய்தனர். "பார்ரா.. வெள்ளாளர் முன்பு ஐயரே கைகட்டி நிற்கிறார்" என வெள்ளாள மேலாதிக்கம் வளர்க்கப்பட்டது.

இப்போது யாழ்ப்பாணக் கோவில்கள் வெள்ளாளர்கள் வசம் இருப்பதுபோல் இல்லாமல், அந்தக் காலத்தில் கோவில்கள் எல்லாச் சாதிக்கும் பொதுவானதாக இருந்தன. நல்லூர் கந்தசாமி கோவில் செங்குந்த சாதியினரிடமும், செல்வசந்நிதி முருகன் கோவில் பரதவ குலத்தினரின் கையிலும் இருந்தன. இதுபோன்ற நூற்றுக்கணக்கான ஆதாரங்களைக் காட்ட முடியும். ஆனால் இந்தியாவில் இருந்து பிராமணர்களை இறக்குமதி செய்து அவர்களுக்கு குஞ்சம் கட்டிக் கோவிலில் முதல் ஸ்தானத்தை வழங்கிவிட்டு, இரண்டாவது ஸ்தானத்தை தனது வெள்ளாள சாதிக்கு உருவாக்கி கொடுத்தார் நாவலர்.

அன்றைய யாழ்ப்பாணத்தில் சிறு தெய்வங்கள் பரவிக் கிடந்தன. சிறுதெய்வக் கோயில்களில் எல்லாச் சாதியினரும் பூசை செய்தனர். அங்கே வெள்ளாள மேலாதிக்கம் இருக்கவில்லை. சிறுதெய்வ வழிபாட்டை, சைவத்துக்கு எதிரானது எனப் பழித்து, அதை

இல்லாமல் செய்ததன் மூலமாக வெள்ளாளரின் மேலாதிக்கத்தை கோயில்களை மையமாகக் கொண்டு உறுதிசெய்யதார் நாவலர்.

பெரிய பம்பல் என்னவென்றால், தடித்த இந்து மனுதர்மக் கோட்பாட்டின் பிரகாரம், 'சூத்திரர்கள்' என்ற அடிமட்ட சாதிப் படிநிலைக்குள்தான் வெள்ளாளர்கள் அடக்கப்பட்டுள்ளனர். எங்களது சாதிமான்களின் ஈகோவைச் சீண்டும் விஷயம் இது. வர்ணத்தின் அடிப்படையில், விவசாயம் செய்யும் வெள்ளாளர்களை, மனுதர் இறுதி நிலையிலேயே வைத்துள்ளது. அதன் பிரகாரம், பிராமணர்கள், போர் செய்யும் சத்திரியர்கள், வணிகம் செய்யும் வைஷிகர்களுக்குப் பிறகே, விவசாயம் செய்யும் வெள்ளாளர்கள் வருகிறார்கள். தனக்கு மேலுள்ள மூன்று வர்ணத்தினருக்கும் சேவை செய்வதுதான், சூத்திரர்களான வெள்ளாளரின் கடமை என்கிறது மனுதர்மம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த மனுதர்மத்தின் எந்தப் பிரிவுகளுக்கும் அடங்குவதில்லை. அவர்களை தீண்டத்தகா தவர்களாக, வர்ண முறைகளுக்குள் அடங்காத 'அவர்ணர்கள்' எனப் பழிக்கிறது மனுதர்மம். ஆதி இந்துக்களின் வாழ்க்கையில் இல்லாத சாதி வேறுபாடுகளும், ஒடுக்கப்பட்டவர்கள் மீது கொடிய வன்முறை இன்றளவு பிரயோகிக்கப்படவும் இந்து மதத்தில் இடையில் புகுத்தப்பட்ட இந்த மனுதர்மமே மூல காரணமாகிறது.

இந்த மனுதர்மத்தை வெட்டி ஒட்டி கொஞ்சம் டிங்கரிங் செய்து, சூத்திரர்களான வெள்ளாளர்களை உயர்ந்தவர்களாக நிறுவியதுதான் ஆறுமுக நாவலர் செய்த பெரிய சாதிக் கடமையாகும். சூத்திரர்களாக ஒடுக்கப்பட்ட வெள்ளாளர்களை சமூக, ஆன்மிக தளத்தில் உயர்ந்தவர்களாக மாற்ற சூத்திரர்களான வெள்ளாளர்களை, ஆசாரிகளாக்க ஆறுமுக நாவலர் டெக்னிக்கலாக யோசித்தார். அதற்காக அவர் மனுதர்மத்தின் வழியையே தேர்ந்தெடுத்தார்.

சைவ வினாவிடை உள்பட தன் நூல்களில், முதல் ஸ்தானத்தை பிராமணர்களுக்கு வழங்கிவிட்டு, இரண்டாவது ஸ்தானத்தை வெள்ளாள சாதிக்கு கொடுத்தார். சிவ தீட்சை என்ற ஒன்றைப் பயன்படுத்தி, சூத்திரர்களான வெள்ளாளர்களை, பிரமாணர்களுக்கு நிகரானவர்களாகக் கட்டமைத்தார். மனுதர்மத்தைப்போல, நாவலரின் சைவப் பிரிவுகளிலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு இடமே இல்லை. இதனால்தான் சைவ வினாவிடையை நவீன மனுதர்மம் என்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்கள் சைவர்களாக இருந்தாலும், நாவலரின் சைவ வரைவிலக்கணக்கத்தில் அடங்க மாட்டார்கள்.

அதாவது நாவலரின் கண்களில், ஒடுக்கப்பட்டவர்கள் சைவர்களும் கிடையாது. மனிதர்களும் கிடையாது.

சைவ வினாவிடையின் கீழ் வரும் கேள்விகளைப் பார்ப்போம்.

*131.* ஆசாரியராதற்கு யோக்கியர் யாவர்?

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருள்ளும், மனக்குற்றங்களும், உடற்குற்றங்களும் இல்லாதவராய், நிகண்டு கற்று, இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணமுந் தருக்கமும், நீதிநூல்களுஞ் சிவபுராணங்களும் படித்தறிந்தவராய், தேவார திருவாசங்களைப் பண்ணோடு ஓதினவராய், சைவாகமங்களை ஓதி அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராய், சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையுஞ் சைவ சமயத்தையும் போதித்தலின்கண் அதிசமர்த்தராய் உள்ளவர்.

*134.* இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன வருணத்தாருக்கு ஆசாரியராகலாம் என்னும் நியமம் உண்டோ?

ஆம், பிராமணர், பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கும், க்ஷத்திரியர், க்ஷத்திரியர் முதலிய மூன்று வருணத்தாருக்கும், வைசியர், வைசியர் முதலிய இரண்டு வருணத்தாருக்கும், சூத்திரர், சூத்திரருக்குஞ் சங்கரசாதியருக்கும் ஆசாரியராகலாம். இந்நியமங் கிரியாகாண்டத்தின் மாத்திரமேயாம், ஞான காண்டத்திலோ வெனின், நான்கு வருணத்துள்ளும் உயர்ந்த வருணத்தாருக்குத் தாழ்ந்த வருணத்தாரும் ஆசாரியராகலாம்.

*134*-வது கேள்வியில், சூத்திரியர்களான வெள்ளாளர்கள், பிராமணர்களுக்கும் ஆசாரியாகலாம் எனக் கூறுவதன் மூலம், வெள்ளாள சாதியை சமூக ஆன்மீக தளத்தில் உயர்த்துகிறார். மனுதர்மத்தில் வந்த இந்தியப் பிராமணர்களிடம் "ஒரு சூத்திரியர் உங்களுக்கு ஆசாரியாகலாமா..?" எனக் கேட்டுப் பாருங்கள். டென்சனாகி விடுவார்கள். மனுதர்மத்தை கொஞ்சம் டிங்கரிங் செய்து, தனது வெள்ளாள சாதிக்குத் தகுந்ததுபோல அதை நாவலர் மாற்றிக் கொண்டார். வெள்ளாளர்கள் ஆசாரிகளாகலாம் என நிறுவியதன் மூலமாக, வெள்ளாளர்களை, சைவ ஆன்மிக தளத்தில் உயர்த்தினார்.

"ஆறுமுக நாவலர் வாழ்ந்த காலம் அப்படி, சாதிக் கொடுமைகள் நிறைந்த காலம்" என்றால், அவர் வாழ்ந்த அதே காலத்தில்தானே வள்ளலாரும் வாழ்ந்தார்? "சாதி வேறுபாடு கூடாது. எல்லோரும் இறைவனின் குழந்தைகள்" என்று சொன்ன வள்ளலாருடன் தானே கொடுக்குக் கட்டிக் கொண்டு போர் செய்தார் நாவலர்?.

ஆறுமுக நாவலரோ இல்லை அவரின் அடிப்பொடிகளோ, யாழ்ப்பாண மருத்துவ வரலாற்றில் ஒரு சிறு பங்களிப்பையேனும் வழங்கவில்லை. பணம் கொழுத்த கோவில்களை எல்லாம் கைவசம் வைத்திருந்த நாவலர் அந்தக் கோவில்களை மையமாக வைத்து எந்த விதமான சுகாதாரக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்தவில்லை. மருத்துவமனை கட்டினால், குறைந்த சாதிக்கும் மருத்துவம் பார்க்க வேண்டி வருமே என நாவலர் ஐயா அங்கலாய்த்திருக்கலாம். மிஷனரிகளுடன் கொடுக்குக் கட்டிப் போர் செய்த நாவலரும் அவரது அடிப்பொடிகளும் வருத்தம் துன்பம் என்றால் அதே மிஷனரிகளின் மருத்துவமனைக்கே சென்றனர். பப்பி ஷேமான விஷயம் இது.

இயற்கை வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்தில், எங்களது மண்ணுக்கு சிறிதும் தொடர்பில்லாத, ஆகம வழிபாட்டைப் புகுத்தியவரும் நாவலரே. கண்ணகி கோயில்கள், கண்ணகி அம்மன் கோயில்களாக்கப்பட்டன. வேல் கோட்டங்கள், முருகன் கோயில்களாக்கப்பட்டன. பெரும்பாலான சிறுதெய்வக் கோயில்கள் நாவலரால் ஆகம முறையிலமைந்த பெருங் கோவில்களாக மாற்றப்பட்டன.

சிறுதெய்வ வழிபாடு யாழ்ப்பாணத்தில் இன்று கிட்டத்தட்ட முற்றுமுழுதாகவே சிதைக்கப்பட்டுவிட்டது. சிறு தெய்வக் கோவில்கள் எல்லாம் ஆகம முறைப்படி அமைந்த பெருந் தெய்வக் கோவில்கள் ஆக்கப்பட்டுவிட்டன. கண்ணகி, ஐயனார், கருப்பண்ணசாமி, சுடலை முனி, மாடசாமி, கன்னிமார், முனியப்பர், அண்ணன்மார் போன்ற பல சிறுதெய்வங்கள் இவரால் காணாமல் போகச் செய்யப்பட்டன. இதன் மூலம் எமது மண்ணின் ஆன்மாவை நீர்த்துப்போகச் செய்தார் ஆறுமுக நாவலர்.

நான் நாவலரின் பாரம்பரியம் என நம்பப்படும் சைவ பாரம்பரியத்தில் வந்தவன். வீட்டிலும், நான் படித்த பாடசாலையிலும் நாவலரின் பங்கு மிகப் பெரியதாக இருந்தது. எனது சிறுவயது சிந்தனைப் போக்கில் நாவலரின் பங்கு மிகப் பெரியது. சைவ பரிபாலன சபை வைத்த அத்தனை பரீட்சையிலும் நான் தோற்றிருக்கிறேன். நாவலர் பேச்சுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றுள்ளேன். எனது பிரச்சனை, இன்று யாழ்ப்பாணத்தில் தாண்டவமாடும் வெள்ளாள சாதிக் கொழுப்புகளுக்கு நாவலர் காரணமாக இருந்துள்ளார் என்பதுதான். அதை எதிர்க்க வேண்டியது எங்களது கடமை.

எனது பரம்பரை மதம் மாறாமல், நான் இன்னும் ஆதி இந்துவாக

இருப்பதற்கு, நாவலர் ஐயாவின் பங்களிப்புக் காரணமாக இருந்திருந்தால் நான் அதற்குத் தலை வணங்குகிறேன். ஆனால், நாவலர் ஐயாவால் யாழ்ப்பாணத்தில் பரப்பப்பட்ட சைவ வெள்ளாளக் கருத்தாக்கத்தை நாங்கள் அனைவரும் மறுக்க வேண்டிய காலத்தில் நிற்கிறோம்.

ஒடுக்கப்பட்ட மக்களின் பெரும் பங்களிப்புடன் நடைபெற்ற விடுதலைப் போராட்டம், கொடுமையான முறையில் மௌனமாக்கப்பட்ட பிறகு, அடுத்தகட்டத்தை நோக்கி சிந்திக்க வேண்டிய யாழ்ப்பாண மக்கள், தமது சுபிட்சத்தின் முதல் படியை நாவலரால் ஊட்டப்பட்ட வெள்ளாள சாதி மேலாதிக்கத்தை மறுதலித்தலில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஆதி இந்து மதத்தில் சாதி என்பதே இல்லை. சாதி பார்க்காத வெள்ளாளர்களும் உள்ளனர். ஆனால், சாதியை பெருமையாக நினைக்கும் வெள்ளாளர்கள் தாங்களே, கேடு கெட்ட வர்ண கோட்பாட்டில் மிகக் கீழ் நிலையில் உள்ளவர்கள் என்பதைப் புரிந்து கொள்வதுதான் உயர் சாதிய மன நிலையில் இருக்கும் பெரும்பாலான யாழ்ப்பாண வெள்ளாளர்களை, சாதியே வேண்டாம் என வெறுக்க வைக்கும். வீண் சாதிப் பெருமைகளைப் பேசுவதை நிறுத்த வைக்கும்.

இதைக் கேட்ட இவாஞ்சலின் மெரிலின் ஜோசப் அம்மையார், என்னை நிமிர்ந்து பார்த்து "எப்படி..?" என்றார்.

"ஆதி இந்து மதம், சாதி வேறுபாடே இல்லாத வாழ்க்கை முறை. ஓர் ஆதி இந்து சாதி என்ற பெயரில் சக ஜீவன்களை வதைக்க மாட்டான்" என்றேன்.

# வீரத்தை இழந்த கதை




ஈழத்தில் வரலாற்றுக் காலத்தில் இருந்த தமிழர் தேசம்

யாழ்ப்பாண வெள்ளாளர்கள் தூய்மைவாதம் பேச முடியாத வகையில், பல ஜாதிகளின் கூட்டமைப்பு எனப் பார்த்தோம். அகம்படி, நாயர், தீயர், பணிக்கர், கணக்கர், மடப்பள்ளி வேளாளர், சீர்பரதர், கள்ளர், மறவர், பட்டினவர், மழவர், பாணர், தேவர், செட்டி, தனக்காரர், தவசிகள், சாணாரில் ஒரு பகுதியினர் மற்றும் சிவியரில் ஒரு பகுதியினர் ஆகியன சேர்ந்து யாழ்ப்பாண வெள்ளாளர்கள் ஆனார்கள் என்கின்றன ஆய்வுகள்.

இந்தச் சாதிகள் இணைந்தமையானது, வெள்ளாள ஜாதிக்கு அசுர பலத்தைக் கொடுத்தது. அவர்களும் அசுர பலத்துடன் மற்ற ஜாதிகளை அடக்கியதுடன், ஒடுக்கப்பட்டவர்கள் மீது கொடும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். இந்த சாதிகளின் இணைவு பலசமுக, பொருளாதார மாற்றங்களுக்குக் காரணமாகியது. ஆனால், இந்த சாதிகளின் இணைப்பால் பழந்தமிழரின் பழந் தொழில்களில் ஒன்றை ஈழத் தமிழர்கள் அடியோடு மறந்து போயிருந்தனர். அதை பிரபாகரன் தூசுதட்டி எடுத்தார். அது ஒரு பெரிய கதை.

"போர்த் தொழில் பழகு!" என்றான் பாரதி. பழந்தமிழ் இலக்கியங்கள் எல்லாமே போரைத் தொழில் என்கின்றன. நப்பூதனாரின் முல்லைப் பாட்டு, நக்கீரரின் நெடுநல்வாடை உள்பட பல சங்க இலக்கியப் பாடல்களில், போரைத் "தொழில்" என்றழைப்பதற்கான குறிப்புகள் உள்ளன. ஆரியப் படை கடந்த முற்காலப் பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றி சங்க இலக்கியம் பத்துப்பாட்டில் ஒன்றான நெடுநல்வாடையில் சொல்லும்போது, "நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான், சிலரொடு திரிதரும் வேந்தன், பலரொடு முரணிய பாசறைத்

தொழிலே!" என்கிறார் நக்கீரர். அதாவது, போருக்குச் சென்ற தலைவன், தலைவியை நினைத்து, நள்ளிரவில் கூடத் தூக்கம் வராமல் தவிக்கிறான். அந்த வெறுமையைப் போக்க அந்த நள்ளிரவிலும் சிலரோடு பேசித் திரிகிறான் தலைவன். பாவம் என்ன செய்வான்! பழிக் கோதாரி! பலரோடு போர்செய்யும் பாசறைத் தொழில் அவனுக்கு என அலுத்துக் கொள்கிறார் நக்கீரர்.

சங்க இலக்கியங்கள் கூறும், ஆதித் தமிழர்களின் ஆதித் தொழில்களில் ஒன்றான போர்த் தொழிலை, ஈழத் தமிழரினம் மறந்து போனதற்குப் பின்னால் காலனி நாடுகள் செய்த பெரிய துரோகத்தின் கதை உள்ளது. பழந்தமிழர் சமூகத்தில் போர் என்பது, தொழிலாக *(Profession)* இருந்ததால், அது, ஜாதி சார்ந்தே இருந்தது. அதாவது வெள்ளாளரின் தொழில் விவசாயம், கொல்லர் ஜாதியின் தொழில் இரும்பு வேலை, அம்பட்டர் ஜாதியின் தொழில் முடி வெட்டுதல் போல மறவர் ஜாதிகளின் தொழிலாகப் போர் இருந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்ற முயற்சித்த, போர்த்துக்கேயர்களுடன், அதி வீரமாகப் போரிட்டனர் கடைசிச் சங்கிலி மன்னனின் (சங்கிலி குமாரனின்) படையினர். சங்கிலி மன்னனின் படை அந்த யுத்தத்தில் தோற்றுப் போனாலும், படை வீரர்களின் வீரம், விட்டுக் கொடுக்காத தன்மை ஆகியன போர்த்துக்கேயர்களை ஆச்சரியப்பட வைத்தன. இப்படி ஒரு தமிழ் மறவர் படைதான் இலங்கை தேசம் முழுக்க வெற்றிக் கொடி நாட்டியது என்ற தமிழர் வரலாறு அறிந்து, அலேர்ட் ஆகிவிடுகிறார்கள்.

ஈழத் தமிழரினத்தின் இரத்தத்தில் ஊறிய, வீரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்றால், இந்தப் போர்ச் சாதிகளை இல்லாமல் செய்தால் போதும் என முடிவு கட்டுகிறார்கள் போர்த்துக்கேயர்கள். போர்த் தொழில் புரிந்து வந்த போர்ச் சாதிகள் எல்லாமே, அரச நிர்வாகத்தின் உதவியுடன் வெள்ளாளர்களாக சாதி மாற்றம் செய்யப்பட்டனர்.

வெள்ளாளர் என்ற விவசாயிகள், போர்த் தொழில் தெரியாதவர்கள். மரபணுக்களில் போர்க்கலை ஊறாதவர்கள். வாயால் வீரம் பேசுவார்களே தவிர, களமாடமாட்டார்கள். ஆனால், அப்போதே, யாழ்ப்பாணத்தின் சமூக அடுக்குகளில் முன்னிலையில் இருந்தனர். போர்த் தொழில் செய்து வந்த, மறவர் ஜாதிகள் சமூக அடுக்குகளில் வெள்ளாளருக்கு கீழேயே இருந்தனர். ஆகவே, வெள்ளாளர்களாகப் பதவியுயர்வு பெறுவதை அவர்களும் எதிர்க்கவில்லை. போர்த்துக்கேயர்களின் வலைக்குள் விழுந்தனர்.

பாரம்பரியமாக போர்த் தொழில் செய்து வந்த மறவர்கள், வெள்ளாளர்களாகி, விவசாயம் செய்து, காலப் போக்கில் போர்த் தொழிலை அடியோடு மறந்து போனார்கள்.

போர்த்துக்கேயர்கள் தொடங்கிய இந்த சாதி மாற்றத்தை, அவர்களுக்குப் பிறகு வந்த ஒல்லாந்தர்களும், ஆங்கிலேயர்களும் தவறாமல் பின்பற்றினர். யாழ்ப்பாண தேசத்தில், போர் ஜாதி ஒழிப்பின் மூலமே, தொந்தரவில்லாத காலனி ஆதிக்கத்தை அந்நியர்கள் தக்கவைத்தனர். காலனி ஆதிக்க நாடுகள் போர் சாதி ஒழிப்பை மிகக் கவனமாகத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தின. போர்ச் சாதி ஒழிப்பின் முதல் படியாக, 'ராயர்', 'அதிரேயர்' போன்ற போர்ச் சாதிகளுக்குப் பிரத்யேகமான பட்டங்கள் போர்த்துக்கேயர்களால் இல்லாமல் செய்யப்பட்டன.அடுத்த படியாக, போர்ச் சாதிகளை சாதி மாற்றும் திட்டத்தை 1627- ஆம் ஆண்டு, போர்த்துக்கேயர்களின் யாழ்ப்பாணத் தளபதியான *Lançarote de Seixas Cabreira* கொண்டு வந்தார்.

கொடும் போர் புரிந்த வீரர்கள், சாதி மாற்றப்பட்டு, மென்மையான போர்த் தொழில் மறந்த விவசாயிகள் ஆக்கப்பட்டனர். அந்தக் காலம் 'மடப்பள்ளி' என்ற இன்னொரு போர்த் தொழில் தெரியாத ஆதிக்க சாதியும் யாழ்ப்பாணத்தில் இருந்தது. போர் வீரர்கள் மடப்பள்ளிகளாகவும் மாற்றப்பட்டனர். இந்த மடப்பள்ளி ஜாதி, காலப்போக்கில் வெள்ளாளர்களுடன் கலந்து காணாமல் போனது.

1834- ஆம் ஆண்டு, சைமன் காசிச் செட்டி என்பவர் தயாரித்த விளக்கச் சுட்டியில், கள்ளர், மறவர், அகம்படியார், வன்னியர் ஆகிய நான்கு போர் ஜாதிகளையும், வெள்ளாள சாதியின் உப பிரிவுகளாகக் குறிப்பிடுகிறார். போர்ச் சாதிகள் வெள்ளாளர்களாக சாதி மாற்றம் செய்யப்பட்டாலும், போர்ச்சாதிகளின் வடுக்கள் இன்னும் யாழ்ப்பாணத்தில் உள்ளன. 'ராயன்', 'மழவன்', 'தேவன்' போன்ற போர்ச்சாதிப் பட்டங்களை, அண்மைக் காலம்வரை உபயோகித்ததற்கான சான்றுகள் உண்டு. 'மழவராயர்' என்ற போர்ச் சாதிப் பெயருடைய வெள்ளாளக் குடும்பங்களை அண்மைக் காலத்தில் கூட நீங்கள் சந்தித்து இருக்கலாம்.

போர்த்துக்கேயர்களை எதிர்த்து மிக வீரமாகப் போராடிய சங்கிலி குமாரன், போரில் கைது செய்யப்பட்டு, இந்தியாவில் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்த, கோவாக்கு கொண்டு செல்லப்பட்டு, 1621 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார். சங்கிலி குமாரனின் குடும்பமும் அவரின் மூன்று

மகள்களும் கோவாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கே அவர்கள் கிறித்தவர்களாக மாற்றப்பட்டார்கள். சங்கிலி குமாரனின் மூத்த மகள் "சொரர் மறியா டா விஸ்டாகோ" என்ற கிறித்தவப் பெயருடன், போர்த்துக்கேய அரச குடும்பத்தில் திருமணம் செய்து, தேவனுக்கு ஊழியம் செய்தார்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிக்கு உரித்தானவர்கள் எல்லோரும் போர்த்துக்கேயர்களால் கொல்லப்பட்டனர். சங்கிலி குமாரனுடன் ஈழத்தில் தமிழராட்சி தாற்காலிகமாக முடிவுக்கு வந்தது. சங்கிலி குமாரனின் படையணியில் பெரும்பாலான வீரர்கள் போரில் வீர மரணம் எய்தினர். கைது செய்யப்பட்ட சிறிய தொகுதி படைவீரர்கள் போர்த்துக்கேயர்களால் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

மிகச்சிறிய தொகுதி படைவீரர்கள், போர்த்துக்கீயர்களின் கொலைவெறிக்குத் தப்பி, யாழ்ப்பாணத்துக்கு வடக்கே சுமார் 15மைல் தொலைவிலுள்ள, வல்வெட்டித்துறை என்ற கரையோர நகரத்துக்குச் சென்று குடியேறினார்கள். உடலின் கலங்களில், மரபணுக்களில் எல்லாம் போர்த் தொழிலும், விட்டுக் கொடுக்காத தன்மையும், வீரமும் ஊறிப் போயிருந்த, அந்த சுத்த வீரர்கள், நிலத்தின் தன்மைக்கு ஏற்ப காலப்போக்கில், கடல் தொழில் செய்து வாழ்ந்து வந்தனர். சங்கிலி குமாரனுக்குப் பிறகு, ஈழத்திலே தமிழர் தேசமொன்றை ஆண்ட தலைவன் அதே வல்வெட்டித்துறையில் சுமார் 350 ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தான். அந்தக் குழந்தைக்குப் பெற்றோர், "பிரபாகரன்" எனப் பெயர் இட்டனர்.


போர்த்துக்கேயர்கள்

# தேசவழமை என்ற வெள்ளாளச் சட்டம்

யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள வெள்ளாளத் தடிப்புகளுக்கு ஆறுமுக நாவலர் ஐயா ஒருவகையில் காரணமாக இருந்தார் என்றால், இன்னொரு வகையில் "தேசவழமைச் சட்டம்" என்ற வெள்ளாள மையப்படுத்தப்பட்ட சட்டம் காரணமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர்களுக்கிருந்த/ இருக்கின்ற எல்லையில்லா அதிகாரங்களுக்கு, "தேசவழமைச் சட்டம்" ஒரு வகையில் காரணமாகிறது.

யாழ்ப்பாணத்து வெள்ளாள முதலிகள் பன்னிரெண்டு பேரின் உதவியுடன், 1707ஆம் ஆண்டு, ஒல்லாந்தர்களால், ஒருங்கிணைக்கப்பட்ட இந்தச் சட்டம், வெள்ளாளர்களுக்கு எல்லையில்லாத அதிகாரங்களை வழங்கி, அவர்களை *caste hierarchy*-யில் உச்சத்தில் நிறுத்துகிறது.

ஒல்லாந்தரின் வருகைக்கு முன்பே, காலம்காலமாக யாழ்ப்பாணத்தில் இருக்கும் வழக்கங்களின் தொகுப்பே தேசவழமைச் சட்டமாகும். "தேசவழமை இலங்கையின் வடபகுதியில் பல நூற்றாண்டுகளாக போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னதாகவே நடப்பிலிருக்கும் ஒரு மரபு" என்கிறார் கலாநிதி ராஜசிங்கம் நரேந்திரன்.

யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் வாசிகளுக்கும், மலபார் ஆண்களைத் திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கும், இந்த சட்டம் செல்லுபடியாகும். காலனி நாடுகளின் ஆட்சியில், யாழ்பாணத்தவர்கள், "மலபார் வாசிகள்" என்றே அடையாளம் காணப்பட்டனர். யாழ்ப்பாணத்துக்கும், கேரளாவிற்கும் இடையிலான தொடர்புக்கு இது பிரதான சான்றாகிறது.

யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டு வந்த பாரம்பரிய

வழக்கங்களை, ஒருங்கிணைத்து *(codify)* சமூக, சாதிக் கட்டமைப்புகளில் வெள்ளாளர்களுக்கு வானளாவிய அதிகாரத்தை இந்தச் சட்டம் கொடுத்தது. காலனித்துவமும், நமது சாதிமான்களும் "அதிகாரம்" என்ற புள்ளியில் ஒன்றிணைந்து தேசவழமையைச் சட்ட மூலமாக்கினார்கள்.

*சுதேச சட்டங்கள்:*

இலங்கையில் பொதுவான சட்டத்திற்கு மேலதிகமாக, ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனித்துவமான மரபுகள், சட்டங்களாக உள்ளன. இவற்றை "சுதேச சட்டங்கள்" என்பர். சுதேச சட்டங்களை, 'இலங்கை வாழ் மக்களால் ஆரம்ப காலம் தொட்டே மரபுகள் மூலம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழமைகளாகும்' என வரைவிலக்கணப்படுத்தலாம். இன்று இலங்கையில் தேசவழமைச் சட்டம் *(Thesawalamai Law)* கண்டியச் சட்டம் *(Kandiyan law)* முஸ்லீம் சட்டம் *(Muslim Law)* என மூன்று விதமான சுதேச சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

தேசவழமைச் சட்டமானது, ஆள்சார் சட்டமாகவும் *(Personal law)* இடம் சார் *(Geographical Law)* சட்டமாகவும் உள்ளது. இலங்கையின் மற்றைய இரண்டு சுதேச சட்டங்களும் ஆள்சார் சட்டமாக இருக்க, தேசவழமைச் சட்டமோ, ஆள் சார்ந்தும் இடம் சார்ந்தும் டுயல் ரோல் செய்கிறது. ஆள்சார் சட்டமாக இருப்பதால், மலபார் தமிழர்கள் இலங்கையின் எப்பாகத்தில் வசித்தாலும், அவர்களுக்கு தேசவழமைச் சட்டம் பொருந்திப் போகும். இடம்சார் சட்டமாக இருப்பதால், வடமாகாணத்தின் நிலங்கள் யாவும் இச்சட்டம் மூலம் ஆளப்படுகின்றன. வடமாகாணத்தில் சிங்களவர், முஸ்லிம் உள்பட எவர் காணியை வைத்திருந்தாலும், அந்நிலங்கள் தேசவழமைச் சட்டத்துக்குக் கீழேயே வருகின்றன.

1707ஆம் ஆண்டு அப்போதைய ஒல்லாந்த ஆளுநர் ஜோன் சைமன்ஸின் உத்தரவுக்கிணங்க, கிளாஸ் ஐசாக்ஸ் *(Class Issakz)* என்பவரால் தேசவழமை தொகுக்கப்பட்டது. அதே ஆண்டு, ஜான் பைரஸ் *(Jan Piras)* என்பவர் இந்தத் தேசவழமையைத் தமிழில் மொழி பெயர்த்தார். கிளாஸ் ஐசாக்ஸ், தேசவழமையைத் தொகுக்க, யாழ்ப்பாணத்தின் உயர்குடி வெள்ளாள முதலியார்கள் பன்னிருவரின் உதவியைப் பெற்றுக் கொண்டார். ஆகவே, வெள்ளாளரால், வெள்ளாளருக்காக, வெள்ளாள நலன்களைப் பேண ஒருங்கிணைக் கப்பட்ட சட்டமே, தேசவழமைச் சட்டம் என அதை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

தேசவழமைச் சட்டம், வெள்ளாளர்களுக்கு வானாளவிய

அதிகாரங்களை மட்டும் கொடுக்கவில்லை. அச் சட்டம், யாழ்ப்பாணத்தில் அடிமை முறையையும் உறுதி செய்தது. ஒடுக்கப்பட்ட மக்கள், வெள்ளாளருக்கு அடிமை சேவகம் செய்யப் பிறந்தவர்கள் என்கிறது தேசவழமைச் சட்டம்.

சமூக, சாதித் தளங்களில் உயர்ந்தவர்களாக இருந்த வெள்ளாளர்களை, தேசவழமைச் சட்டம், சட்ட ரீதியாக உயர்ந்தவர்களாக்கியது. சட்ட ரீதியாக கேட்பார் மேய்ப்பார் இல்லாத நிலைக்குச் சென்ற யாழ்ப்பாண வெள்ளாளர்கள், முழு வீச்சுடன் ஒடுக்கப்பட்டவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர்.

தேசவழமைச் சட்டத்தின் உதவியுடன், யாழ்ப்பாணத்தின் மிகப் பெரும் சக்தியாக வெள்ளாளர்கள் உருவானார்கள். யாழ்ப்பாண சைவ சமயம், ஆன்மீகத் தளத்தில் வெள்ளாளர்களே உயர்ந்தவர்கள் என்ற அதேவேளை, சட்டத்தின் வழியாக வெள்ளாளர்களே உயர்ந்தவர்கள் என்றது தேசவழமைச் சட்டம். யாழ்ப்பாண சைவ சமயமும், தேச வழமைச் சட்டமும் ஒன்றாக இயங்கி, யாழ்ப்பாணத்தின் அனைத்துத் தளங்களிலும் வெள்ளாளர்களை உயர்த்தின.

தேசவழமைச் சட்டத்தால் மிருக பலம் கொண்ட வெள்ளாளர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் மீது மிகக் கொடிய வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். ஒடுக்கப்பட்டவர்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. ஒடுக்கப்பட்டவர்களை அனுமதித்த பாடசாலைகள் வெள்ளாள சாதி வெறியர்களால் கொழுத்தப்பட்டன. ஒடுக்கப்பட்ட இனப் பெண்கள் ஆபரணங்கள், ரவிக்கைகள் அணியத் தடை விதிக்கப்பட்டன.

1844ஆம் ஆண்டு ஈழத்தில் இருந்த அடிமை முறை சட்ட ரீதியாக ஆங்கிலேயர்களால் ஒழிக்கப்பட்டது. இருந்தாலும்,



வெள்ளாளர்களிடமே யாழ்ப்பாணத்தின் ஒட்டுமொத்த நிலங்களும் இருந்ததால், அடிமை முறையில் இருந்து சட்ட ரீதியாக ஒடுக்கப்பட்டவர்கள் விலக்கப்பட்டாலும், அவர்கள் வெள்ளாளர்களுக்குத் தொண்டு துறவறம் செய்து வாழ வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர்.

தேசவழமை போன்ற, போடியார் மரபு உருவாக்கிய மரபுவழி சமூகச்சட்டங்கள் 'முக்குவர் சட்டம்' என்ற பெயரில் மட்டக்களப்பில் இருந்தன. இன்று "அச்சட்டம்" காலவதியாகிவிட்டது.

ஒடுக்கப்பட்டவர்களின் திருமணங்களையும், தேசவழமைச் சட்டமே முடிவு செய்தது. ஒடுக்கப்பட்டவர்களின் திருமணங்கள், அவர்களை அடிமைகளாக வைத்திருக்கும் வெள்ளாள சாதிமான்களின் அனுமதி பெற்றால் மட்டுமே செல்லுபடியாகும் என மனித குலத்துக்கு எதிராகச் சொன்னது தேசவழமை. வெள்ளாளரின் அனுமதி இல்லாமல், ஒடுக்கப்பட்டவர்கள் திருமணம் செய்தால், அத்திருமணங்களுக்கு, தேசவழமையின்படி, சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்காமல் போனது.

யாழ்ப்பாணத்தின் நிலங்கள் எல்லாம் ஆண்டாண்டு காலமாக வெள்ளாள நிலச் சுவாந்தர்களிடமே இருந்தன. இந்த நிலங்கள், வெள்ளாளர்களிடம் இருந்து கை மாறிப் போகாமல் இருப்பதை, தேசவழமைச் சட்டம் பல வழிகளில் உறுதி செய்கிறது.

தேசவழமையின், முதுசொம், சீதனம், தேடிய தேட்டம், உரிமை என்ற நான்கு கூறுகளும் யாழ்ப்பாணத்தின் நிலங்கள் மரபுவழியாக வெள்ளாளர்களிடம் இருப்பதை உறுதிசெய்கின்றன. இவற்றையாவது மரபு வழிவந்த நிலங்கள் அடுத்த மரபுவழி வந்த சொந்தங்களுக்குச் செல்கின்றன என எடுக்கலாம். ஆனால், முன்னுரிமை சட்டம் *(law of pre-emption)* என்ற தேசவழமையின் கூறுகளில் ஒன்று, நிலச் சுவாந்தர்களான வெள்ளாளர்கள், தங்களது காணிகளை வெளியாட்களுக்கு விற்கும்போது அது மீண்டும் வெள்ளாள சாதிக்கே கிடைப்பதை உறுதி செய்கிறது. இந்த "முன்னுரிமைச் சட்டம்" இன்னும் யாழ்ப்பாணத்தில் வழக்கில் உள்ளமை கொடுமையான விஷயமாகும்.

இந்த நில முன்னுரிமைச் சட்டத்தின்படி, யாழ்ப்பாணத்தவர்கள், நிலமொன்றை விற்கும்போது, முதலில் வருங்கால உரித்தாளருக்கும், அடுத்து பங்கு காணி உரிமையாளருக்கும் பிறகு அயல் காணிக்காரருக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இம்மூவரில் ஒருவர் காணியை வாங்கத் தயாராக இருந்தால்,

அக்காணியை அவர்களுக்கே விற்க வேண்டும். இம் மூவரும் வாங்க விருப்பம் தெரிவித்தால், அவர்களில் யார் அதிக பணத்தைக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு, காணியை விற்கவேண்டும் என்கிறது தேசவழமை. இம் மூவரை விட, வேறு ஒருவர் அக்காணியை வாங்க விரும்பினால் அவர் இம் மூவர் கொடுக்கும் பணத்தை விட அதிகமாகக் கொடுக்க வேண்டும்.



வெள்ளாளர்களின் நிலங்களின் வருங்கால உரித்தாளர்களாக வெள்ளாளர்களே இருப்பார்கள். இது ஒன்றும் கம்பசூத்திரம் கிடையாது. வெள்ளாளர்களின் பங்குக் காணிக்காரராகவும் வெள்ளாளர்களே இருப்பார்கள். வெள்ளாளரின் அயல் காணிக்காரராக வெள்ளாளர் தவிர்ந்த சாதிகள் இருக்கும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவாகும். ஆகவே ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர், வெள்ளாளர்களின் நிலங்களை வாங்க வேண்டும் என்றால் அவர்கள் சந்தைப் பெறுமதியை விட மிக மிக அதிகமான பணத்தைக் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நிலம் வைத்திருக்கும் எல்லோருக்கும் பொருந்திப்போகும் சட்டம்தானே இது என வியாக்கியானம் பேச முடியாது. ஏனென்றால், யாழ்ப்பாணத்தின் நிலங்கள் எல்லாம் உயர் குடி வெள்ளாளர்களிடம் இருந்தன, இருக்கின்றன. வெள்ளாள நிலங்களைப் பாதுகாக்க வெள்ளாளர்களால் உருவாக்கப்பட்டதே," இந்த முன்னுரிமைச் சட்டமாகும்.

மிக அதிகமாகப் பணம் கொடுத்தாலும், வெள்ளாளர்கள் தங்களது நிலங்களை ஒடுக்கப்பட்டவர்களுக்கு விற்கும் சந்தர்ப்பங்கள் குதிரைக் கொம்பாகும். வெள்ளாள சாதியைச் சேர்ந்த எனது நண்பனொருவனுக்கு (பெயர் வேண்டாம்) வெளிநாடு போய் உயர் கல்வி கற்கப் பணம் தேவைப்பட்டது. சாவகச்சேரியிலுள்ள அவனுக்குச் சொந்தமான காணியை அறா விலைக்கு வெள்ளாளர்கள் கேட்டனர். உடனே அவன் பறையர் சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு அக் காணியை விற்கப் போகிறேன் என ஒரு கதையைக் கிளப்பி விட்டான். அல்லோலகல்லோலப்பட்ட வெள்ளாளர்கள் அதிக விலை கொடுத்து அந்தக் காணியை வாங்கினார்கள். இது நடந்தது 2009 ஜூனில். அதாவது இறுதிப்

போர் முடிந்த அடுத்த மாதம்.

இன்றும் உயர் குடி வெள்ளாளர்கள் நிலம் வாங்கும்போது சுற்று வட்டாரங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் யாராவது நிலம் வாங்கி உள்ளார்களா என்பதைக் கண்களில் விளக்கெண்ணெய் விட்டுப் பார்த்தே வாங்குகிறார்கள். வெள்ளாள நிலங்களுக்கிடையில், ஒடுக்கப்பட்ட ஒருவர் நிலம் வாங்கி விட்டால் அந்த பிரதேசத்தின் ஒட்டுமொத்த மதிப்பும் வெள்ளாளர்களின் பார்வையில் குறைந்து போய்விடுகிறது. ஆகவே,ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவுதான் அதிக விலை கொடுக்க முன்வந்தாலும், அந்த நிலங்களை ஒடுக்கப்பட்டவர்களின் கைகளுக்குச் செல்ல வெள்ளாளர்கள் விடவே மாட்டார்கள்.தேசவழமைச் சட்டத்தை எங்களது உயர்குடி வெள்ளாளத் தலைவர்கள் எல்லோரும் கொண்டாடித் திரிந்தனர்.

முன்னொரு காலம் யாழ்ப்பாணத்தில், ஒடுக்கப்பட்ட பெண் ஒருவரின் சாவீட்டில், பறை அடித்து ஒடுக்கப்பட்ட மக்கள் ஊர்வலம் நடத்தினார்கள். "பஞ்சமன் செத்த வீட்டில் பஞ்சமனே பறை அடிப்பதோ" என யாழ்ப்பாண தடித்த சாதிமான்கள் டென்சனாகி விட்டனர். அந்தப் பெண்ணின் செத்த வீட்டில் போய் பறை அடிக்கக் கூடாது எனச் சலம்பல் குழப்படி செய்த சாதிமான்கள் கைதாகிறார்கள். கைது செய்யப்பட்ட சாதிமான்களுக்கு ஆதரவாகக் ஒரு பெருந்தலைவர் குரல் கொடுத்தார். "ஒடுக்கப்பட்டவர்கள் பறை அடித்து சாவீடு செய்தால், அதைக் குழப்பும் உரிமை உயர் குடி வெள்ளாளருக்கு உண்டு" என அவர் நீதிமன்றத்தில் பெருங்குரலில் கர்ச்சித்தார். அந்தத் தலைவர்தான், ஈழத் தமிழரின் பாதுகாவலர் என்றெல்லாம் எங்களால் பில்டப் ஏத்தப்பட்ட ஐயா சேர்.பொன்.இராமநாதன் அவர்கள்.

# பணியாக்களும், குறிச்சியர்களும்

காசர்கோடு, கண்ணூர், கோழிக்கோடு, வயநாடு, மலப்புறம், பாலக்காடு ஆகிய இப்போதைய கேரளத்தின் ஆறு மாவட்டங்கள் ஆங்கிலேயர் ஆட்சியில், சென்னை இராஜதானிக்கு உட்பட்ட மலபார் தேசமாக இருந்தது. மலபார் என்றால், மலைநாடு எனப் பொருள்படும். "அசல் மலையாள தேசம், இந்த மலபார் தேசம்தான்" என்றார் காசர்கோடில் நான் சந்தித்த குஞ்சுண்ணி நம்பியார் என்ற மலையாள ஆசிரியர்.

இந்த மலபார் தேசத்துக்கு உரித்தான பழங்குடிகள்தான் பணியாவும், குறிச்சியரும். வயநாடு, கோழிக்கோடு, கண்ணூர், மலப்புரம் என்ற மலபார் தேசத்துக்குரிய நான்கு மாவட்டங்களில் இப் பழங்குடியினர் வாழ்கிறார்கள். பணியாக்களில் சிலர், தமிழ்நாட்டின் நீலகிரி மலைகளிலும், குறிச்சியர்களில் சிலர் தமிழ்நாட்டின் தர்மபுரியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

பணியா என்றால் 'பணியாளர்' எனப் பொருள்படும். இன்னும் விபரித்தால் அடிமைகள் எனப் பொருள்படும். இந்தப் பணியாக்களின் வரலாறு மகா கொடுமையானது. மலபாரின் நில முதலாளிகளும், உயர் ஜாதியினரும் இந்தப் பணியாக்களை சுமார், 50 ஆண்டுகள் முன்புவரைக்கும் அடிமைகளாக வைத்திருந்தனர்.

வயநாட்டில் கபினி ஆற்றங்கரையில் 'வள்ளியூர் காவு' என்றொரு பழமையான பகவதி கோவில் உள்ளது. மலபாரிகளின் வரலாற்றுடன் இணைந்த இக் கோவிலின் வருடாந்திர மகோற்சவம், 'ஆராட்டு' எனும் பெயரில் மிகச் சிறப்பாக நடைபெறும். இந்த ஆராட்டின் போதே, அடிமை வியாபாரமும் நடந்துள்ளது. மலபார் தேசம் வரும், உயர் ஜாதியினர் தங்களுக்குத் தோதான அடிமைகளை இவ் விழாவின்போது வாங்கிச் சென்றார்கள். அடிமைகளின் ஒப்பந்தம் புதுப்பிக்கும் சடங்கும், அடிமைகள் பண்டமாற்றம்

செய்யப்படும் சடங்கும் இந்த ஆராட்டின் போது நடைபெற்றது. முழுவதுமிருந்து அடிமை முறையின் பொலிஷ் செய்யப்பட்ட வடிவம் இது.

*1843* ஆம் ஆண்டு, இந்தியாவில் இருந்து,அடிமை முறை சட்ட ரீதியாக ஆங்கிலேயர்களால் தடைசெய்யப்பட்டாலும், வள்ளியூர் காவின் அடிமை வியாபாரத்தை அந்த சட்டத்தால் முழுமையாக தடை செய்ய முடியவில்லை. இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் கூட, இந்த அடிமை முறையின் தொடர்ச்சி இருந்துள்ளது. மலபாரின் உயர் ஜாதிகளின் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்பவர்களாக இந்தப் பணியாக்கள் இன்னும் உள்ளனர்.

**இயற்கை வழிபாடு:**

பணியாக்களிடம் இயற்கை வழிபாடு இன்னமும் மிச்சமிருக்கிறது. 'காடு பகவதி' என்ற பெயரில், காட்டை வழிபடுகிறார்கள். மிகுந்த பய பக்தியுடன் காட்டை அணுகுகிறார்கள்.

ஆலமரத்தைக் கடவுள் ஸ்தானத்தில் வைத்து வணங்குகிறார்கள். இதன் கிளையைக் கூட ஒடிக்க மாட்டார்கள். ஆலமரத்தை வெட்டுபவன் நோய்வந்து சாவான் என்பது இவர்களின் நம்பிக்கை. இயற்கை வழிபாட்டுடன், மூத்தோர் வழிபாடும் பணியாக்களிடம் முதன்மை பெறுகிறது. விதவைகள் மறுமணம் மட்டுமல்ல, *polygamy* என்ற பலதார திருமணமும் இவர்களிடையே உண்டு. ஆண்களில் இரண்டு தாரங்களை உடையவர்களைச் சந்தித்தேன். பெண்களால், ஆண்களைப் போல பலதார மணம் செய்ய முடியாது. ஆனால், கணவனைத் தவிர்த்து வேறு ஆணுடன் உறவு கொள்ளும் பெண், சில தூய்மையாக்கல் சடங்குகளுக்குப் பிறகு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்.

பணியாக்களின் கருமை நிறம், நீண்ட மூக்கு, சுருள் முடி, அகன்ற காது என்பவற்றை வைத்து அவர்கள் ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாக வந்தவர்கள் என்று சொல்பவர்களும் உண்டு. திராவிடர்கள், ஆரியர்கள் இந்தியா வருகை தர முதல், இந்தியாவில் வாழ்ந்த *Negritos* இன் வழித் தோன்றல்கள்தான் இவர்கள். இந்தியாவின் பூர்வ குடிகளாக, காடுகளுக்குள் வாழ்ந்த இவர்களை நிலச் சுவாந்தர்கள் அடிமைகளாக்கிக் கொண்டார்கள் என்று சொல்பவர்களும் உண்டு. *Negritos*- இன் வழித் தோன்றல்கள் என்றால் இவர்கள் பேசும் பணிய மொழி, திராவிட மொழியாக இருப்பது எப்படி என்றொரு கேள்வியும் உண்டு.

இன்று இந்தியாவில், சுமார் ஒரு லட்சத்துக்கும் குறைவான பணியாக்களே உள்ளனர். அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காடுகள் கொள்ளையிடப்படுகின்றன. இவர்களின் வாழ்க்கையைச் சொல்லும், 'தனல் தேடுன்ன பூமி' என்றொரு குறும்படத்தை சில மாதங்களுக்கு முன்பு பார்த்தேன். தொடர்ச்சியான வேண்டுகோள்களுக்குப் பிறகு, ஓர் நாள் அவர்கள் என்னைத் தங்களோடு கொட்டியூர் பாலுகாச்சி மலையை ஒட்டிய காட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

குறிச்சியர்


பழசி ராஜா

பணியாக்களைப் போலவே, இப்பிரதேசத்தில் வசிக்கும் இன்னொரு பழங்குடியினர் குறிச்சியர்கள். ஆனால், பணியாக்கள் போலல்லாமல் குறிச்சியர்களின் வாழ்க்கை நிலை உயர்வாக உள்ளது. கேரள மன்னன் பழசி ராஜாவின் படையில் இணைந்து ஆங்கிலேயர்களுக் கெதிராகப் போராடியவர்கள் என்ற வரலாற்றுப் பெருமையும் இவர்களுக்கு உண்டு. அடர் காட்டுக்குள் இருந்த கொட்டியூர் சிவன் கோவிலை இவர்கள்தான் கண்டுபிடித்தார்கள். அதனால், ஒரு வருஷத்தில், வெறும் 28 நாட்கள் மட்டுமே திறக்கப்படும் அக்கரைக் கொட்டியூருக்கு, கோவில் சார்பில் முதன்முதலில் செல்லும் போது, இந்தக் குறிச்சியர்களிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்பது எழுதப்படாத சட்டமாகும்.

குறிச்சியர்கள் தங்களின் வரலாற்றின் பிரகாரம், தங்களை பிராமணர்களை விட உயர்வாக நினைக்கிறார்கள். அவர்களுடைய இந்த 'கெத்து' எனக்குப் பிடித்திருந்தது. குறிச்சியர்களில் சிலர் பொருளாதாரத்தில் உயர்ந்து, இன்றைக்கு மாடிவீட்டு முதலாளிகளாகவும் உள்ளனர்.

இவர்கள் பேசும் மொழியான "குறிச்சியா"வும், திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததே. குறிச்சியா மொழி இன்று அழியும் அபாயத்தில் உள்ளது. இம்மொழியைப் பேசி வந்த பலரும் இன்று அதைக் கைவிட்டு மலையாளம் பேசுகின்றனர். "வீடுகளில் குறிச்சியா மொழியைப் பேசுகிறோம். ஆனால், வெளியில் மலையாளம் பேச வேண்டிய சூழல் நிலவுவதால், அம்மொழியின் ஜீவிதத் தன்மை கேள்விக்குறியாகவே உள்ளது" எனக் கவலையுடன் சொன்னார் குறிச்சியரின் தலைவர்களில் ஒருவர்.

நியாயமான கவலை.

# கொட்டியூர் மர்மங்கள்

"நாடோடியாக ஊர் ஊராக, கோவில் கோவிலாகச் சுத்றியே, உன் வாழ்க்கையில் பார்த்த மகா விசித்திரமான கோவில் எது..?" வென யாராவது என்னைப் பிடித்துக் கேட்டால், தயங்காமல், 'கொட்டியூர் சிவன் கோவில்' என்று சொல்வேன். கேரளத்தின் அடர் காட்டுக்குள், ஜன சஞ்சாரம் இல்லாத, பாவலி ஆற்றங்கரையில், ஏகப்பட்ட மர்மங்களையும் அருளையும் தன்னகத்தே புதைத்தபடி ஹாயாக அமர்ந்திருக்கிறார் கொட்டியூர் சிவபெருமான்.

கண்ணூர் மாவட்டத்தில், கண்ணூர்- வயநாடு நெடுஞ்சாலையில் ஆழமாகச் சென்றால், கேரளத்தின் ஆதிக் குடியேற்றக் கிராமங்களில் ஒன்றான, 'மணத்தனா' விற்குச் செல்லலாம். அங்கிருந்து 8 கிலோமீட்டர் தொலைவில், அடர் காடுகளுக்கிடையில் அமைந்துள்ளது 'கொட்டியூர் மகா சேஷ்திரம்'



மகா சேஷ்திரம்

தஞ்சைப் பெரியகோயில் போன்ற பிரமாண்டமான கோயில்களை விபரிக்கத்தான், 'மகா சேஷ்திரம்' என்ற வார்த்தையைப் உபயோகிப்பார்கள். ஆனால், சில ஓலைகளைக் கொண்டு வேயப்பட்ட கொட்டியூரைக் கேரளத்தின் மகா சேஷ்திரங்களில் ஒன்றாகக் கருதுகிறார்கள்.

'அக்கரை சேஷ்திரம்', 'இக்கரை சேஷ்திரம்' எனக் கொட்டியூரில் இரு கோயில்கள் உண்டு. பாவலி ஆற்றின் அந்தக் கரையில் அமைந்துள்ள அக்கரை சேஷ்திரத்தை, வெறும் இருபத்து எட்டு நாட்களுக்கு மட்டுமே திறக்கிறார்கள். அக்கரையில் நிலையான கட்டடங்கள் எதுவும் அமைக்கக் கூடாது என்பது ஐதீகம் என்பதனால், திருவிழாக் காலத்தில் மட்டும் வெறும் ஓலைக் குடில்களைப் போட்டு மகா சேஷ்திரத்தைத் தயார்ப்படுத்துகிறார்கள். கொட்டியூரின் வருடாந்த வைகாச மகோற்சவம், வடக்குக் கேரளத்தின் மிகப் பிரபலமான, கொண்டாட்டமான திருவிழாவாகும். இந்த மகோற்சவத்துக்கு, வடக்கு கேரளத்தில் மட்டும் இருந்து சுமார் ஐம்பது லட்சம் பக்தர்கள் வருகை தருகின்றனர். வடக்கு கேரளாவைத் தவிர இன்னும் சரியாகச் சொல்லப்போனால், மலபார் தேசத்துக்கு வெளியே யாருக்கும் தெரியாத கோயிலாகவே கொட்டியூர் உள்ளது. கொட்டியூருக்கு இதுவரை வருகை தந்த தமிழர்களை விரல் விட்டு எண்ணலாம் என்றார் கொட்டியூரின் நிர்வாகிகளில் ஒருவர்.

*தட்ச யாகம்*

முப்பது முக்கோடி தேவர்களையும், கடவுளர்களையும், ரிஷிகளையும் மகரிஷிகளையும் அழைத்து தட்சன் மகா யாகம் செய்த கதையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்தத் தட்ச யாகம் நடந்த இடமெனக் நம்பப்படும் இடமே கொட்டியூர் ஆகும். இந்து மதமும் மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவன் மூணு பேரும் இந்த ஸ்தலத்தில் 'கூடி'யதால் 'இந்த ஸ்தலம் கூடியூர்' ஆகி, அது மருவி, 'கொட்டியூர்' ஆனது என்றார் கொட்டியூர் கோவிலின் பரம்பரை தர்மகஸ்தா பாலன் நாயர்.


கொட்டியூரைச் சூழ உள்ள இடங்களின் பெயர்களும் தட்ச யாகத்தை நினைவு படுத்தும் வகையிலேயே உள்ளன. கொட்டியூரை நோக்கி சதி தேவி நடந்து வருகிறார், மகா யாகம் நடைபெறும் சத்தம் கேட்கிறது. தலையை நீட்டிப் பார்க்கிறார், அந்த இடம் 'நீண்டு நோக்கி', தொடர்ச்சியாக நடந்ததால் களைத்துப் போன சதிதேவி, கொஞ்சம் மந்தமாக நடக்கிறார், அந்த இடம் 'மந்தன்சேரி' கொட்டியூரைச் சூழ்ந்துள்ள மிக அழகிய மலைத்

தொடரில் சதி தேவியார் பால் காய்ச்சியதால், அது 'பாலு காச்சி மலை'.

சதிதேவியார் தற்கொலை செய்து கொள்ள மிகுந்த மன வேதனையும், சினமும் கொண்ட சிவன், வீரபத்திர ரூபம் எடுத்து, தட்சனின் தலையைக் கொய்த பிறகு, சினம் அடங்கி, அக்கரைக் கொட்டியூரில் சுயம்புவாக எழுந்தருளினார் என்பது ஐதீகம். ஒரு வருஷத்தில் வெறும் 28 நாட்கள் தவிர மற்ற நாள்களில் முப்பத்து முக்கோடி தேவர்களும் வழிபாடு செய்வதாக நம்பப்படுவதால், மனிதர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வைகாச மகோற்சவத்தை முன்னிட்டு அக்கரைக் கொட்டியூரில், 28 நாள்கள் நடைபெறும் விழா மிக நுணுக்கமான உள்ளடுக்குகளைக் கொண்டது. அதைப் புரிந்து கொள்வது மிகக் கடினம்.

கேரளத்தின் 64 ஜாதிகள் ஒன்றாகச் சேர்ந்து இக்கோவிலின் வைகாச மகோற்சவத்தை செய்கிறார்கள். தீண்டாமைக் கொடுமை கேரளத்தில் உச்சத்தில் இருந்த காலத்திலேயே, குறிச்சியார் என்ற ஆதிவாசிகள் முதல், நம்பூதிரிப் பிராமணர்கள் வரை ஒன்று சேர்ந்து இக்கோவில் திருவிழாவை செய்தார்கள் என்பது வரலாறு. இந்த 64 ஜாதிகளில் ஒரு ஜாதியின் பங்களிப்பு இல்லாமல் கூட வைகாச மகோற்சவத்தை முழுமையாக செய்ய முடியாது.

தட்ச யாகம் நடந்து பின்பு மனிதர்களால் கைவிடப்பட்டுப் போயிருந்த இந்த இடத்தை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குறிச்சியார் என்ற பழங்குடினரே கண்டு பிடித்தனர். இதனால், அக்கரைக் கொட்டியூரில் குறிச்சியார்கள் அனுமதிக்காவிட்டால்,



நம்பூதிரிகளால் காட்டுக்குள் செல்ல முடியாது. இது இன்னமும் பின்பற்றப்படுகிறது.

*அடியேந்திர யோகம்:*

யோகம் என்றால் மலையாளத்தில் கூட்டம் எனப் பொருள்படும். **64** ஜாதிகளுக்கு கொட்டியூரில் பங்கிருப்பதால், கோவில் சார்ந்து எந்த முடிவு எடுப்பதென்றாலும் இவர்கள் அனைவரும் கூட வேண்டும் என்பது வழமை ஆகும்.

இந்த **64** ஜாதிகளைச் சேர்ந்தவர்களை, மலையாளத்தில் 'அவகாசிகள்' என்கிறார்கள் இந்த அவகாசிகள் அனைவரும் ஒன்றாகக் கூடும் கூட்டத்தை, "மகா அடியேந்திர யோகம்" என அழைக்கிறார்கள்.

கேரளத்தின் மூலை முடுக்கில் எல்லாம் வாழும் இந்த **64** ஜாதிகளும் எப்போதும் ஒன்றாகச் சேர முடியாது என்பதனால், மிக முக்கியமான **14** ஜாதிகளைச் சேர்ந்த அவகாசிகள் பங்கெடுக்கும் யோகத்தை, "அடியேந்திர யோகம்" என அழைக்கிறார்கள். "மகா அடியேந்திர யோகம்" இல்லை சாதாரண "அடியேந்திர யோகம்" நடைபெறாமல் கொட்டியூர் தொடர்பான எந்தவொரு முடிவையும் இங்கே எடுக்க முடியாது. சாதிகளின் சமத்துவத்துக்கு உதாரணமாக விளங்கும் இந்த "அடியேந்திர யோகம்" பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த யோகத்தில் பிராமணர்கள் அங்கம் வகிப்பதில்லை. "பிராமணர்கள், கேரளாவிற்கு வருவதற்கு முன்பே அடியேந்திர யோகம் நடைபெற்று வருவதாலேயே அடியேந்திரயோகத்தில் அவர்களுக்கு இடமில்லை" என்றார் பாலன் நாயர்.

அக்கரைக் கொட்டியூரில் நிலையான கட்டடங்கள் எதுவுமே இல்லை. திருவிழா நடைபெறும் நாள்களில் மட்டும், அக்கரையில் சிறு குடிசைகளை அமைத்துத் தங்குகிறார்கள். இச் சிறு குடிசைகளை, 'கையாலா' என அழைக்கிறார்கள். இக்குடிசைகளில் தான் பிராமணர்கள் உள்பட அனைத்து சாதியினரும் தங்குகிறார்கள். திருவிழா நாள்களில் மட்டும்தான் சுயம்பு லிங்கத்தை சூழ குடிசை அமைக்கிறார்கள். மற்ற நாள்களில் திறந்தே இருக்கிறது சிவலிங்கம். இயற்கையுடன் இணைந்து சிவனை வழிபடுவதுதான் இக் கோவிலின் சிறப்பு!

இச் சிவலிங்கத்தை சூழ மக்கள் வழிபாடு செய்யும் இடம் "திருவஞ்சரா" எனப்படுகிறது. இந்த "திருவஞ்சரா" எப்போதுமே நீரால் சூழப்பட்டிருக்கும். தட்சனின் இரத்தம்தான் அந்த நீர் என்பது

கொட்டியூரின் ஐதீகம். இக்கோவிலுக்கென்றே நுட்பமான, பிரத்யேகமான பூசை முறைகளை சங்கராச்சாரியார் வடிவமைத்தார் என்கிறார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இக்கோவிலுக்கு வந்த ஆதி சங்கராச்சாரியார், கேரளத்தின் எல்லா ஜாதிகளையும் ஒருங்கிணைத்து இக்கோவிலின் பூசை முறையை வடிவமைத்தாராம்.

கோவிலுக்கருகில் உள்ள பாவலி ஆறு "தட்சிண கங்கை" எனவும், இந்த ஆற்றிலே உள்ள கற்கள் எல்லாமே சிவலிங்கங்களாகவும் வணங்கப்படுகின்றன. பாலுகாச்சி மலை உச்சியில் உற்பத்தியாகும் இந்த ஆறு கேரளத்தின் மிகச் சுத்தமான ஆறுகளில் ஒன்றாகும். ஆற்றின் அடியில் ஓடும் சிறு மீன் குஞ்சுகளைக் கூட நீங்கள் வெற்றுக் கண்களால் அவதானிக்கலாம்.

மலை உச்சியில் உற்பத்தியாகி காடுகளுக்குள்ளால் ஓடி வரும் பாவலி ஆற்றின் நீரில் பல மருத்துவக் குணங்கள் நிரம்பி உள்ளன. இந்த ஆற்று நீரை அள்ளி முகர்ந்து பார்த்தால் அதில் மூலிகை வாசம் அடிப்பதை புரிந்து கொள்ளலாம். " பிணி தீர்க்கும் காட்டு மூலிகை வாசம்" என்றார் கேரளத்துச் சேட்டன் ஒருவர். இந்த ஆற்றில் குளித்துவிட்டு, ஆற்றில் உள்ள இரண்டு கற்களை எடுத்துத் தேய்த்தால் சந்தனம் போலொரு "வஸ்து" கிடைக்கிறது. இதுதான் கொட்டியூருக்குப் பிரத்யேகமான சிவ சின்னம்.

வாள் எழுந்நலத்து

கொட்டியூருக்கென்றே பிரத்யேகமான விசித்திரமான சடங்குகளில் "வாள் எழுந்நலத்து" முக்கியமானது. தட்சனின் தலையை வாளால் கொய்துவிட்டு, கோபத்துடன் அந்த வாளைச் சிவன் சுழற்றி எறிய அது *35* கிலோ மீட்டர் தொலைவிலுள்ள முதிரேரியில் போய் விழ, வாள் விழுந்த இடத்தில் ஒரு சிவன் கோவில் உருவாகி, அது "முதிரேரிக் காவு" எனப்பட்டது. ஆகவே, கொட்டியூர் வைகாச மகோற்சவத்தின் முதல்நாள், முதிரேரியில் இருந்து கொட்டியூருக்கு, வாளை எடுத்து வருகிறார்கள். பல நூறு ஆண்டுகளாக, கொட்டியூர் விழாவின் முதல்நாள் நடைபெறும் இந்தச் சடங்கை "வாள் எழுந்நலத்து" என்கிறார்கள்.

இந்த வாள் எடுத்து வரும் சடங்கு அவ்வளவு இலகுவானதல்ல. முதிரேரியில் இருந்து *35* கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, கொட்டியூருக்கு ஒரே மூச்சில் ஓட்டமும் நடையுமாக வாளை எடுத்து வர வேண்டும். பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்து வருகிறார்கள். வாளை எடுத்து வருபவர், இடையில் எந்த இடத்திலும் நிற்க முடியாது. நீர் கூட அருந்த முடியாது. வாளைக் கையில் எடுத்தால், ஒரே மூச்சாக அதைக்

கொண்டுவந்து கொட்டியூரில் வைத்து விட்டுத்தான் மறுவேலை பார்க்க முடியும்.

கரிம்பனக்கல் கோபுரம்:

கொட்டியூருக்கு சொந்தமான கோடிக்கணக்கான நகைகளையும் ஆபரணங்களையும், கொட்டியூரில் இருந்து ஏழு கிலோ மீட்டர்கள் தொலைவிலுள்ள "கரிம்பனக்கல் கோபுரம்" என்னும் சிறியதொரு கட்டடத்தில் பாதுகாத்து வைக்கிறார்கள். இந்தக் கரிம்பனக்கல் கோபுரம், ஆங்கிலேயர்களால் இடிக்கப்பட்ட "கோபுரம்" எனும் புகழ்பெற்ற கோவிலின் இடிபாடுகளுக்கருகில் உள்ளது. கோடிக்கணக்கான நகைகள் இந்தச் சிறிய கட்டடத்தில் வைத்தே பாதுகாக்கப்படுகின்றன என்ற தகவல் இரகசியமானதல்ல. எல்லோருக்கும் தெரிந்ததொன்றே. இருந்தாலும் வரலாற்றில் இன்றுவரை சிறியதொரு திருட்டுச் சம்பவம் கூட நிகழவில்லை. கொட்டியூர் பெருமானின் பவர் அப்படியானது.

இங்கே பாதுகாத்து வைக்கப்படும் நகைகளை, 28நாள்கள் நடைபெறும் வைகாச மகோற்சவ விழாவில் மட்டுமே பயன்படுத்துகிறார்கள். விழாத் தேவைகளுக்காக, திருவிழாவின் இரண்டாம் நாள், 64 கலசங்களில், நகைகள், ஆபரணங்கள், வைரங்கள், வைடூரியங்கள் என இக்கட்டடத்தில் இருந்து எடுத்து வருவார்கள். இந்தக் கலசங்களைப் "பண்ணாரம்" எனவும், இந்தக் கலசங்களை, கொற்றியூருக்கு எடுத்துவரும் சடங்கை," பண்ணாரம் எழுந்நலத்து" எனவும் அழைப்பார்கள். இந்தச் சடங்கை, செய்பவர்கள்"குடிபதிகள்" எனப்படுவார்கள்.

கொட்டியூரின் நான்கு முதலாளிகளும், கரிம்பனக்கல் கோபுரத்தின் ஒவ்வொரு சாவியை வைத்திருப்பார்கள். இந்த கட்டடத்தின் வெளிச் சாவியை "மணாளன்" என்பவர் வைத்திருப்பார். இந்த ஐந்து சாவிகளும் ஒன்றாக வந்தால் மட்டுமே கரிம்பனக்கல் கோபுரத்தை திறக்க முடியும். இந்த மர்மப் பூட்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது.

கோடிக்கணக்கான நகைகளை, வெறும் மர்மப் பூட்டொன்றின் உதவியுடன் பாதுகாத்து வைக்க முடியுமா என்றொரு கேள்வி எழும்புவது இயல்பே. இந்த நகைகள் இங்கே மர்மப் பூட்டால் மட்டுமல்ல, கொடிய விஷமுள்ள பாம்புகளாலும் பாதுகாக்கப்

**கொட்டியூர் கோவிலில் நூலாசிரியர் அருளினியன்**



படுகின்றன என்பதும் இந்தக் கட்டடத்தின் அருகில் தேவையில்லாத யாராவது நடமாடினால் அவர்களை பாம்பு கடித்து விடும் என்பதும் இங்குள்ள மாறாத நம்பிக்கை ஆகும்.

"கரிம்பனக்கல் கட்டடத்தில்" இருந்து, திருவிழாவிற்குத் தேவையான, **64** கலசங்களை மட்டுமே எடுக்கலாம். மேலதிகமாக ஒரு கலசத்தையாவது எடுத்தால், எடுப்பவரின் கையை நாகபாம்பு சுற்றிக் கொள்ளும். இது ஒரு *indication*. இதையும் மீறி எடுத்தால், எடுப்பவரைப் பாம்பு கடிக்குமாம்.

"இவ்வளவு கோடிக்கணக்கான நகைகள் உள்ளனவே.ஒரு திருடன் சார் கூடவா திருட முயற்சிக்கவில்லை" என ஏரியா இன்ஸ்பெக்டரிடம் கேட்டேன். அவர் எனக்கொரு கதை சொன்னார். சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஸ்டீபன் என்றொரு கில்லாடித் திருடனை கேரளத்தின் இன்னொரு மூலையில் கைது செய்த காவல்துறை அவனிடம் விசாரணை நடத்தியது. கரிம்பனக்கல் கோபுரத்தில் உள்ள கொட்டியூரின் நகைகளைத் திருடும் பொருட்டு, கேரளத்தின் கை தேர்ந்த திருடர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மணத்தனா வந்தார்களாம். ஆனால், அவர்களால் கரிம்மனக்கல் கட்டடம் இருந்த இடத்தை நெருங்கவே முடியவில்லையாம். ஏதோ ஒரு சக்தி எங்களை மூர்க்கமாகத் அடித்ததுத் துரத்தியது எனத் திருடன் ஸ்டீபன் சொன்னதாக எனக்குச் சொன்னார் அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

### ஆலிங்கன புஷ்பாஞ்சலி:

வைகாச மகோற்சவத்தின், ரோகினி நட்சத்திர நாளில் நடைபெறும், "ஆலிங்கன புஷ்பாஞ்சலி" கொட்டியூரின் முக்கியமான சடங்குகளில் ஒன்றாகும். தனது காதல் மனைவியான சதிதேவி, தீயில் விழுந்து உயிர் துறந்ததால் கடும் மன வேதனைக்கும், சினத்துக்கும் உள்ளாகிய சிவனை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. கோபம் கொந்தளிக்க அலைந்து திரிந்த அவரை சாந்தப்படுத்த, முப்பது முக்கோடி தேவர்களும், சிவனின் மச்சானான விஷ்ணுவை கொட்டியூருக்கு அழைத்தார்களாம். அவரும் வந்து கோபத்தில் விம்மி வெடித்துக் கொண்டிருந்த சிவனை ஆரத் தழுவி அவரின் கோபத்தைத் தணித்தார் என்பது கொட்டியூரின் வரலாறு. கொட்டியூர் விழாவை ஒட்டி வரும், ரோகிணி நட்சத்திர நாளில் இந்த சடங்கு நடைபெறுகிறது.

"குறுமாதூர் இல்லம்" என்ற குடும்பத்தின் மிக மூத்த உறுப்பினர் இந்த விழாவில் விஷ்ணு வேஷம் பூணுவார். அக்கரைக் கொற்றியூரில், முதலில் சிவலிங்கத்துக்கு பூக்களால், புஷ்பாஞ்சலி

செய்து விட்டு, பிறகு சுயம்பு சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ள குழிக்குள் இறங்கி சிவலிங்கத்தை ஆரத் தழுவிக் கொள்வார். சுற்றியிருக்கும் ஜன வெள்ளத்தின் "ஹரி கோவிந்தா" என்ற கோஷம் வானைப் பிளக்கும். இந்த சிவன் கோவிலில் எங்கே தேடினாலும், சிவன் கோவில்களுக்கு உரித்தான, பஞ்சாட்சர மந்திரத்தை உங்களால் கேட்கவே முடியாது. எங்கும் எதிலும் "ஹரி கோவிந்தா" என்ற கோஷத்தைத்தான் கேட்கலாம்.

அது எப்படி சிவன் கோவிலில் "ஹரி கோவிந்தா" கோஷம் சாத்தியமானது..?

கோபத்தில் இருந்த சிவனை, விஷ்ணு ஆரத் தழுவித் சாந்தப்படுத்தினார் இல்லையா..?

உடனே, மகிழ்ந்து போன சிவன், விஷ்ணுவைப் பார்த்து, "இனி உனது நாமம்தான் இங்கே ஒலிக்க வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தாராம். அதிலிருந்து, கொட்டியூர் என்ற சிவ ஸ்தலத்தில், "ஹரி கோவிந்தா" என்ற, விஷ்ணுவின் நாமமே ஒலிக்கிறது.


"சிவன் வந்து பயங்கரமான டென்சன் பார்ட்டி, டக்கெனு டென்சனாகி அழிச்சிட்டு, டக்கெனு சாந்தமுமாகிடுவாரு. உங்க தமிழ் படங்கள்ள வாற சிவாஜி கணேசன் மாதிரி" என அதைப் புரிய வைத்தார், கொட்டியூரின் பரம்பரை தர்மகர்த்தா பாலன் நாயர்.

# கண்ணகித் தெய்வமும், கண்டிப் பெரஹராவும்.

*2015 ஆம் ஆண்டு, "சபாரி" என்ற மலையாளச் சேனலில் பேசிய கண்ணூரின் ஓய்வுபெற்ற டி.ஜி.பி அலெக்சாண்டர் ஜேக்கப், தன்னுடைய பணிக்காலத்தில் நடைபெற்ற சுவாரசியமான சம்பங்களைப் பகிர்ந்து கொண்டார். அதன் சாராம்சம் இப்படியாக இருந்தது.*

*வட கேரள கண்ணூர் மாவட்டத்தில் உள்ள, மலைக் கிராமமான "முழக்குன்னு"வில் மிகப் பழமையான, "மிருதங்க சைலேஸ்வரி" எனும் கோவில் உள்ளது. இந்த கோவிலின் மூலஸ்தானத்தில் பஞ்ச உலோகத்தால் ஆன மிருதங்க சைஸேஸ்வரியின், சிலை உள்ளது. இந்த சிலையின் மதிப்பு சுமார் 1.5 கோடி ரூபாய்.*

*சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கைவிடப்பட்ட நிலையில், கோவில் என்ற பெயரில் சிறு கல் கட்டடம் ஒன்றுதான் இருந்தது. இந்தக் கோவிலின் மூலஸ்தானச் சிலையைக் கொள்ளையடிக்க சில அக்மார்க் திருடர்கள் திட்டம் போட்டனர். கோவில் கிட்டத்தட்டக் கைவிடப்பட்ட நிலையில் இருந்தால், சிலையை இலகுவாக லவட்டி விடுகிறார்கள். ஆனால், அவர்களால் அந்தச் சிலையை அதிக தூரம் எடுத்துச் செல்ல முடியவில்லை. திடீரென சிலையின் கனம் அதிகரித்தது. சிலையை தூக்கிச் சென்ற திருடர்களுக்கு ஓயாமல் சிறுநீர் முட்டிக் கொண்டு வந்தது. சில பூத கணங்கள் தங்களைத் துரத்துவது போலக் காட்சிப் பிழை உண்டாகியது.*



**மிருதங்க சைலேஸ்வரி**

பயந்துபோன திருடர்கள் சிலையைப் போட்டுவிட்டு தப்பி ஓடினார்களாம். இப்படியாக மூன்று தடவைகள் நடைபெற்ற திருட்டுச் சம்பவங்களும் படுதோல்வியில் முடிந்தன. வேறு திருட்டு வழக்கில் சிக்கியபோது இந்த உண்மைகளை டி.ஜி.பியிடம் கக்கியுள்ளனர் மேன்மைதாங்கிய திருடர்கள்.

இந்த சம்பவத்தை எதேட்சையாக, "சபாரி" சேனலில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டுப் பேசினார் டி.ஜி.பி அலெக்சாண்டர் ஜேக்கப். அவர் பேசிய ஆடியோவும், வீடியோவும் வாட்ஸ் அப்பிலும், ஃபேஸ்புக்கிலும் தீயாய் பரவ, மக்களால் கைவிடப்பட்டு, காடு பத்திப்போயிருந்த, மிருதங்க சைலேஸ்வரி கோவிலை நோக்கி, ஆயிரக் கணக்கில் பக்தர்கள் படையெடுக்கத் தொடங்கினார்கள்.

மிருதங்க சைலேஸ்வரி, பெயர் என்ன வித்தியாசமாக இருக்கிறது எனப் பார்க்கிறீர்களா...?

"மிளாவு" இல்லை "முழவு" என்றொரு இசைக் கருவியைப் பாத்திருக்கிறீர்களா..? நம்முடைய கர்நாடக இசைக் கச்சேரிகளில் உபயோகிக்கப்படும் "கடம்" போல இருக்கும், ஆனால், கடத்தை விட அளவில் மிகப் பெரியதாக இருக்கும். அடித்தால் இடி இடிப்பதுபோலச் சத்தம் வரும். கேரளத்தின் சாக்கைக் கூத்தில் இதை உபயோகிப்பார்கள். பழந்தமிழகத்தின் ஆதிக் கலைகளில் ஒன்றான 'சாக்கைக் கூத்து' இன்று கேரளத்தில் மட்டுமே ஜீவித்திருக்கிறது. புராணக் கதைகளை நடிப்பாலும், உடல் மொழியாலும், நகைச்சுவை கலந்து சொல்லும், இக் கூத்தில் இந்த "மிளாவு" என்ற இசைக் கருவி முக்கியம் பெறுகிறது.

"சாக்கைக் கூத்தை" நான் முதன்முதலாக கண்ணூரில்தான் பார்த்தேன். சாக்கைக் கூத்து நடைபெறும், 'கூத்தம்பல'த்தில் கூத்தை நடத்தும் "சாக்கையன்" மூன்று கால்களையுடைய முக்காலியொன்றின் மீது படு ஸ்டைலாக அமர்ந்திருப்பார். அவர் விநோதமான சரிகைத் தலைப்பாகை ஒன்றை அணிந்திருப்பார். தலைப்பாகையே இப்படியென்றால் அவருடைய உடுப்பு அதைவிட விநோதமாக இருக்கும். அந்த உடுப்பின் ஓரங்கள் பல நிறங்களில் அமைந்திருக்கும். அந்த ஆடை அகலத்தில் குறுகி, நீண்டும், எண்ணுக்கணக்கற்ற மடிப்புக்களைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.

"சாக்கைக் கூத்து"க்கு பல நூற்றாண்டு வரலாறு உண்டு. சோழர் காலத்தில் கோயில் விழாக்களில் "சாக்கைக் கூத்து" நடத்தப்பட்டன என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. திருவீழிமிழலை,

கோட்டூர், காமரசவல்லி, கீரனூர், கீழப்பழுவூர் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் திருவிழாக் காலங்களில் சாக்கைக்கூத்து நடத்தப்பட்டதாக அங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோவில்களிலும் அரண்மனைகளிலும் பாடி ஆடும் ஜாதியைச் சேர்ந்தவர்களை "சாக்கையர்" என்று அழைத்ததாக வரலாறு சொல்கிறது.

"கூத்தச் சாக்கையன் ஆடலின்" என்கிறார் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள். மதுரையை எரித்த கண்ணகி கோபம் தணியாமல் சேர நாட்டுக்குச் சென்றார். சேர நாட்டு மன்னன் சேரன் செங்குட்டுவன், கண்ணகியின் பெருமையை அறிந்து அவருக்கு கோவில் கட்ட விரும்பினான். பொதியமலையில் இருந்து கல் எடுத்து இலகுவாகக் கட்டி இருக்கலாம். ஆனால், கோவில் கட்ட முடிவெடுத்த சமயம் அவனுக்கு தமிழ் மன்னர்களை ஒரு காலத்தில் எள்ளி நகையாடிக் "கொழுத்தாடு" பிடித்த கனக வியாசர் என்ற வடநாட்டு மன்னனின் நினைவு வந்தது. உடனே அவன் தனது ரத கஜ துரக பதாதிகளுடன் வடநாட்டுக்குப் படையெடுத்தான். கொடிய போரில், கனக வியாசரை வென்ற அவன், இமயமலையில் கல்லெடுத்து அதை கனக வியாசரினதும் அவரது மந்திரி பிரதானிகளின் தலைகளில் சுமக்கவைத்து, கண்ணகி கோவிலைக் கட்டினான் என்கிறது சிலப்பதிகாரம்.

இக்கதையில் எங்கே சாக்கைக் கூத்து வருகிறது எனப் பார்க்கிறீர்களா...? இமயம் சென்று சண்டைபிடித்த சேரன் செங்குட்டுவன் மிகுந்த களைப்புடன் தனது தலைநகரான வஞ்சிக்குத் திரும்புகிறான். அவனது களைப்பைப் போக்க, "சாக்கைக்




கூத்து" நடத்தப் பட்டதாக சொல்கிறது சிலப்பதிகாரம்.

சேரன் செங்குட்டுவனின் அவையில், சாக்கைக் கூத்தாடும், சாக்கையன், சிவபெருமான் உமாதேவியை இடப்பாகத்தில் தாங்கியபடி ஆடிய "கொட்டிச் சேதம்" என்னும் கூத்தை ஆடிக் காட்டினானாம். இந்தக் கொட்டிச் சேதத்தை, திரிபுரத்தை எரித்தபின், சிவன் ஆடினார் என்கிறது சிவ புராணம்.

சேரன் செங்குட்டுவன் அமைத்த கண்ணகி கோவிலின் திறப்பு விழாவில், இலங்கை மன்னன் முதலாம் கஜபாகு கலந்து கொண்டான். கண்ணகித் தெய்வ வழிபாட்டை இலங்கை சிங்கள மக்களிடையே எடுத்துச் சென்றவன் இவனே. இவனை சிலப்பதிகாரம், "கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தன்" என்கிறது.

கடும் சிங்கள இனவாதிகள் கூடப் "பத்தினித் தெய்யோ" என்றால் பம்முவார்கள். இலங்கையில் தொன்மை வாய்ந்த வழிபாட்டு முறைகளில், பத்தினித் தெய்வ வழிபாட்டு முறையும் ஒன்றாகும். சிங்களவர்களின் இந்தப் "பத்தினித் தெய்யோ"தான் கண்ணகி அம்மன். தொற்று நோய்கள், பஞ்சம், வரட்சி ஆகியவற்றில் இருந்து காக்கும் தெய்வம் என "பத்தினித் தெய்யோ" சிங்கள மக்களால் நம்பப்படுகிறது. கஜபாகு மன்னன் தனது தலைநகரில் கண்ணகி அம்மனுக்குக் கோவில் அமைத்தான். அதோடுமட்டுமல்லாமல், கண்ணகியைக் கொண்டாட வருடம் தோறும் ஆடி மாதத்தில் கண்ணகிக்கு விழா எடுத்தான். இந்த விழாவில் தலைநகரைச் சுற்றி கண்ணகித் தெய்வத்துக்கு ஊர்வலம் நடத்தப்பட்டது. பிரகாரம் என்றால், வெளிமுற்றம் எனப்படும். இந்தப் பிரகாரம் என்ற வார்த்தையில் இருந்துதான் "பெரஹரா" உருவாகியுள்ளது. கஜபாகு



மதுரையை
எரித்த
கண்ணகி

மன்னனால் கண்ணகித் தெய்வத்துக்கு நடத்தப்பட்ட ஊர்வலம்தான் காலப்போக்கில் "கண்டிப் பெரஹரா" ஆகியது என்பது கொஞ்சம் அதிர்ச்சியான வரலாறுதான்.

கஜபாகு மன்னனின் இந்த ஊர்வலத்தில் கண்ணகியுடன், 'நாத தெய்யோ' என்ற சிவனும், 'விஷ்ணு தெய்யோ' என்ற திருமாலும், 'கதிர்காம தெய்யோ' என்ற முருகனும் இடம்பெற்றனர். சிங்கள மன்னர்கள் காலத்துக்குக் காலம் தலைநகரை மாற்றியபோது, பத்தினித் தெய்வ விழாவும் இடம்மாறி அந்தந்த தலைநகரங்களில் நடைபெற்றது. சிங்கள பௌத்த மக்களால், கண்ணகித் தெய்வம், சிவன், விநாயகர், விஷ்ணு, முருகன் என இந்துக் கடவுளர்களைத் தாங்கி நடத்தப்பட்ட ஊர்வலம் சில பௌத்த பிக்குகளின் கண்களை உறுத்தியது. இப்படியிருக்கையில், பதினெட்டாம் நூற்றாண்டில் "சீய நாடு" எனப்படும் தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு வந்த புத்த துறவிகள் புத்தரின் புனிதப் பல்லைத் தாங்கிய பேழையும் இந்தப் பெரஹராவில் எடுத்துச் செல்லவேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. கண்ணகி அம்மனுக்கு எடுக்கும் விழாவாக ஆரம்பிக்கப்பட்ட பெரஹராவில், 18 ஆம் நூற்றாண்டில் இருந்துதான் புத்தரின் பல் முதன்மை பெற்றது. கஜபாகு மன்னனால் கண்ணகி தெய்வத்துக்கு என ஆரம்பிக்கப்பட்ட இந்த பெரஹரா, சிங்கள மன்னர்கள் தங்களது தலைநகரை மாற்றியபோதெல்லாம் அந்தத் தலைநகருக்கு மாறி, கடைசித் தலைநகரான கண்டியில் நிலை கொண்டது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின் 'அன்புக்குரிய' இனவாத அரசுகளால், படிப்படியாக இந்தப் பெரஹராவில் மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது முழுக்க முழுக்க புத்த சமய விழாவாகவே கொண்டாடப்பட்டு வருகிறது.

"பிள்ளை பெற்றதை மறைக்கலாம், ஆனால், தழும்பை மறைக்க முடியாது" என்பது போல, என்னதான் முழுக்க முழுக்க பௌத்த சமய விழாவாக்கப்பட்டாலும் அதன் ஆதி இந்து மதத் தொடர்பை இனவாதிகளால் முற்றாக மறைக்க முடியவில்லை. இன்றும், பெரஹராவின் இரண்டாவது ஊர்வலம் நாத தெய்யோ ஆலயத்திலிருந்தும், மூன்றாவது ஊர்வலம் விஷ்ணு தெய்யோ ஆலயத்திலிருந்தும், நான்காவது ஊர்வலம் கதிர்காம தெய்யோ ஆலயத்திலிருந்தும், ஐந்தாவது ஊர்வலம் பத்தினி தெய்யோ ஆலயத்திலிருந்தும்தான் தொடங்குகின்றன.

"மிருதங்க சைலேஸ்வரி" என்ற பெயர் எப்படி வந்தது என ஆரம்பித்து, சிங்கள இனவாதம் வரை வந்துவிட்டேன். "சாக்கைக்

கூத்"தில் பயன்படுத்தும் "மிளாவு" இல்லை "முழவு" என்ற வாத்தியக் கருவியின் வடிவில்தான் அம்பிகை இங்கே உறைகிறார் என்பது நம்பிக்கை. உலகத்தில் நீங்கள் எங்கு தேடினாலும் இசைக் கருவியின் வடிவில் இறைவன் உறைவதாக நம்பப்படும் வேறு ஒரு கோவிலைக் கண்டுபிடிக்க முடியாது என்றார் கோவிலின் அதிகாரிகளில் ஒருவர். இந்தக் கோவில் அமைந்துள்ள மலை "மிளா"வின் வடிவில் அமைந்துள்ளது. "சைலம்" என்றால் மலை. "சைலேஸ்வரி" என்றால் "மலைகளை ஆள்பவள்" என்று அர்த்தம். 'மிளாவு' என்ற இசைக் கருவி, திராவிட இனத்தின் இசைக் கருவி. ஆரிய சமஸ்கிருதத்தில் அவ்வார்த்தை இல்லை. எனவே 'மிளா'வை ஒரளவுக்கு ஒத்த மிருதங்கத்தின் பெயரால் இக்கோவில் 'மிருதங்க சைலேஸ்வரி' என அழைக்கப்பட்டு அந்தப் பெயரே நிலை பெற்றது.


இக்கோவிலில்தான் கேரளத்தின் புகழ் பெற்ற கதக்களி தோற்றம் பெற்றது!

# களரி

"முழக்குன்னு" என்ற கேரளாவின் அற்புதமான கிராமங்களில் ஒன்றில்தான் நான் சுகுமாரன் குருக்களைச் சந்தித்தேன். இந்தக் குருக்கள், களரிக் குருக்கள். அதாவது களரி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்.

பள்ளி முடிந்து களரி கற்க வரும் மாணவர்களுக்காக காத்திருந்த சுகுமாரன் குருக்களின் முகத்தில் அவ்வளவு சந்தோஷம். "பாரம்பரிய போர்க்கலை ஒன்றை அடுத்த சந்ததிக்கு கற்றுக் கொடுக்க தம்பிரான் புண்ணியம் வேண்டும்" என்றார். அவர் சொன்ன தம்பிரான் சிவன்.

குங்பூ, கராத்தே போல களரி உலகப் பிரசித்தமானது அல்ல. ஆனால், உலகில் இன்று புழக்கத்தில் உள்ள *Martial arts* களுக்கு எல்லாம் அப்பன்போலப் பல நூற்றாண்டுகாலப் பழமை வாய்ந்தது இந்தக் களரி, குங்பூ என்ற சீனத்தின் பாரம்பரிய போர்க்கலைக்கும்,



களரிக்கும் இடையே நிறையத் தொடர்புகள் உள்ளன. களரியில் இருந்துதான் குங்பூ உருவாக்கப்பட்டது என்றொரு நம்பிக்கையும் உண்டு. களரி மிகப் பழமையான போர்க்கலைதான். ஆனால், அது எத்தனை பழமையானது என்பது ஆய்வுக்குரியது.

மலையாளிகளிடம் ஒரு பிரச்னை உண்டு. எந்த ஒரு பழைமையான விஷயமாக இருந்தாலும், அது பரசுராமரால் உருவாக்கப்பட்டது என்பார்கள். களரியையும் பரசுராமர் உருவாக்கியதாகவே சொல்கிறார்கள். களரியை உருவாக்கியது மட்டும் இல்லாமல் அதை கேரளம் முழுவதும் பரப்ப 108 களரிப்பயிற்று இடங்களை பரசுராமர் ஸ்தாபித்தார் என்றார்கள். வரலாற்று ஆதாரம் இல்லாத எதையுமே நாங்கள் வெறும் 'பில்டப்'பாகத்தான் பார்க்க வேண்டும். களரிக்கும் பரசுராமருக்குமான தொடர்பையும் நான் அப்படித்தான் பார்க்கிறேன்.

ஆனால், களரிக்கு சுமார் 1000 ஆண்டுக்கு மேலான தெளிவான வரலாறு உண்டு. சோழர்- சேரர் இடையான சண்டையில் இந்தக் களரி முக்கியத்துவம் பெற்றது என்பது வரலாறு. களரியை ஆங்கிலேயர் காலத்தில் தடை செய்யப்பட்டது. அது ஒரு சுவாரசியமான கதை.

"களரி வீரர்கள், எப்போதும் வெல்வதில்லை, ஆனால் அவர்கள் இறுதி வரைக்கும் போராடுவார்கள்". இது கேரளாவின் முதுமொழி.

"கேரளச் சிங்கம்" என்றழைக்கப்படும் வீர கேரள வர்மா பழசி ராஜா களரியில் கை தேர்ந்தவராக இருந்தார். சில நூறு படையினரை வைத்துக் கொண்டு நவீன துப்பாக்கி, பீரங்கி சகிதம் இருந்த ஆங்கிலேயரின் வயிற்றில் லீட்டர் கணக்கில் புளியைக் கரைத்தார் பழசி. களரி என்ற போர்க்கலையை அக்கு வேறு ஆணி வேறாகக் கற்றிருந்த பழசியின் படையணியினர், உடல் வலிமையில் மட்டும் இல்லாமல் மன வலிமையிலும் தேர்ந்தவர்களாக இருந்தனர். பழசி ராஜாவின் படையுடனான நேரடி மோதலில் ஒருதடவை ஆங்கிலேயர்கள் தோற்றுப் போய்விட்டார்கள். பழசி ராஜாவின் வெற்றிக்கு களரிதான் காரணம் என்பதை உணர்ந்து கொண்ட ஆங்கிலேயர்கள் அதைக் கேரளாவில் இருந்து தடை செய்தனர். இந்தத் தடை, இந்தியா சுதந்திரம் பெற்ற 1947-ஆம் ஆண்டு வரைக்கும் இருந்தது.

களரி தனியே போர்க்கலையாக மட்டும் இல்லாமல், அது மிகச் சிறந்த தேக அப்பியாசமாகவும் இருக்கிறது. களரியில் பல மருத்துவச் செயன் முறைகள் உள்ளன. கை கால் சுளுக்கில் இருந்து,

மிக்ரேன் தலைவலியைக் கூடக் களரியால் தீர்க்கலாம்.

களரியைக் கற்றுக் கொடுக்கும் " குருக்கள்", களரியில் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டும் போதாது, அவருக்கு அடிப்படை மருத்துவ அறிவும் அவசியம். அந்தந்த களரிக் குருக்கள்தான் அந்தந்தக் கிராமங்களின் *De facto* மருத்துவர்களாக இருப்பதைக் கண்டேன். பல குக் கிராமங்களில் இவர்கள்தான் பிரதான மருத்துவர்களாக உள்ளனர். களரி மசாஜ் என்றொரு மசாஜ், இது கால்களால் செய்யப்படும் மசாஜ் ஆகும். உடலில் உள்ள அத்தனை வலிகளையும் போக்கும் வல்லமை உடையது. இது கேரளாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒன்றாகும்.

களரி, தமிழ்க் கலையா இல்லை கேரளக் கலையா என்ற பஞ்சாயத்து பல ஆண்டுகளாகவே உண்டு. களரி தொடர்பான பழைய நூல்கள் எல்லாம் பழந்ததமிழில் உள்ளன. அதனால் களரியை தமிழர் கலை என நிறுபுவர்களும் உண்டு. ஆனால், பண்டைய பழந்தமிழகத்தில் சேர நாடாகிய கேரளாவும் ஒரு அங்கம் என்பதையும், சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரைக்கும், மலையாளிகளும் பழந்தமிழ் தான் பேசினார்கள் என்பதையும் நாங்கள் மறக்கக் கூடாது. களரியை நான் மண் சார்ந்த கலையாகத்தான் பார்க்கிறேன். எது எப்படியோ. இன்று களரி கேரளத்தின் போர்க்கலையாகிவிட்டது. கன்யாகுமரி போன்ற கேரளத்தின் எல்லையில் உள்ள தமிழ் மாவட்டங்களில் களரி இன்றும் புழக்கத்தில் உண்டு என்பது தமிழர்களுக்கு கொஞ்சமேனும் ஆறுதலான விஷயம்.

கண்ணூரின் "முளக் குன்னு" களரியைப் பொறுத்த வரைக்கும் முக்கியமானதொரு இடமாகும். இங்கே உள்ள களரித் தெய்வத்தின் கோவிலில் தான் பழசி ராஜாவும் அவரது படையினரும் களரி பயின்றனர். இன்றும் அந்தக் கோவில் உள்ளது. அந்தக் கோவிலின் அருகேதான் சுகுமாரன் குருக்களின் களரிப்பயிற்று பள்ளி உண்டு

'எனக்குத் தெரிந்த கலையை அடுத்த சந்ததிக்கு சொல்லிக் கொடுக்கிறேன். பணம் வாங்காமல்' என்றார். பள்ளி முடிந்து மாணவ மாணவிகள் பலரும் களரி பயில ஆர்வமாக வருவதைப் பார்த்தேன். பள்ளி முடிந்து வரும் பிள்ளையை, இங்கிலீஷ் கிளாசுக்கு போ, ட்ராயிங் கிளாசுக்குப் போ என அலுப்புக் கொடுக்காமல், பண்டைய போர்கலை ஒன்றை கற்க அனுப்பும் அந்தப் பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகள் பாக்கியவான்கள்.

களரி கற்கும் மாணவர்கள் இரும்பு போன்ற தசையும் எக்கு போன்ற நரம்புகளும் கொண்டவர்களாக உள்ளனர். ஒருவரின்

உடலில் கூட அனாவசியமான ஊளைச் சதை இல்லை.

"குங்பூ, கராத்தே, ஜூடோ, டைக்குவாண்டோ என வெளிநாட்டு தற்பாதுகாப்புக் கலைகளை விழுந்து புரண்டு கற்க நாம் காட்டும் ஆர்வத்தில் சிறிதையாவது, தற்காப்புக் கலையாக, போர்க் கலையாக, மருத்துவக் கலையாக உள்ள களரியைக் கற்கக் காட்ட வேண்டும்" என்றார் சுகுமாரன் குருக்கள். குருக்களை நான் வழிமொழிகிறேன்.

# கதக்களியும் மத ஒருமைப்பாடும்



கதக்களிக்கும் மிருதங்க சைலேஸ்வரி கோவிலுக்கும் இடையே நெருங்கிய வரலாற்றுத் தொடர்புகளுண்டு. ஆதி திராவிடக் கலைகளான, கிருஷ்ணன் ஆட்டம், கூடி ஆட்டம், ராமனாட்டம் போன்றவற்றை வெட்டி ஒட்டி டிங்கரிங் செய்து உருவாக்கப்பட்டதுதான் இந்தக் "கதக்களி". கதக்களியின் இன்றைய வடிவத்தின் தந்தை என்று மதிக்கப்படும், கோட்டயத்துத் தம்புரானின் குல தெய்வம் இந்த மிருதங்க சைலேஸ்வரி.

கதக்களியின் ஆரம்பத்தில் பாடும் பாடலைக் கவனித்து இருக்கிறீர்களா..? அதில் இக்கோவில் தொடர்பான வரி வரும். கோட்டயத்துத் தம்பிரான் சிறுவயதில் மன நலம் குன்றி இருந்தார். அவரை மிருதங்க சைலேஸ்வரி கோவிலுக்கருகில் உள்ள "குமாரதாரா" என்ற இடத்தில் பெற்றோர் கைவிட்டுச் சென்றனர். அங்கே உள்ள தீர்த்தத்தில் குளித்த அவரின் மனநிலை சரியாகியது. இன்றும் குமாரதாரா சென்றால் கோட்டயத்துத் தம்பிரானின் கதையைக் கேட்க முடியும். களரி, தெய்யம் போல கதக்களியும் மலபார் தேசத்திலேதான் தோன்றியது. இந்திய சேர்க்கஸ்ஸின் பிறப்பிடமும் மலபார்தான்.

கதக்களி செம்மைப்படுத்தப்பட்ட, அதன் இன்றைய வடிவத்தை, 17 ஆம் நூற்றாண்டிலேயே பெற்றது. "முக பாஷா", "முகழி" என ஆரம்பத்தில் அழைக்கப்பட்டு வந்த இந்தக் கலை பிற்காலத்தில் "கதக்களி" எனப் பெயர் பெற்றது. கதையை, ஆடலுடன் சொல்லும் கலை வடிவம் என்பதே கதக்களி என்பதன் கருத்தாகும்.

மகாபாரதம், இராமாயணம் போன்ற பழம் பெரும் இலக்கியங்களையும், சமயம் சார்ந்த பழங் கதைகளையும், நாட்டிய நடனமாகச் சொல்கிறார்கள். முக அபிநயங்கள் மூலமாகவும், 24 வகையான கை அசைவுகள் மூலமாகவும் கதை சொல்லப்படுகிறது.

சிருங்காரம் (*Amour*), நகைச்சுவை/ஹாஸ்யம் ( *Ridicule*), இரக்கம்/ கருணம் (*Pathos*), ரௌத்திரம் (*wrath*), வீரம் (*valour*), பயம் (*fear*) அருவருப்பு/ பிபஷ்தம் (*disgust*) சாந்தம் (*Tranquility*) அற்புதம் (*wonder*) ஆகிய ஒன்பது மனித உணர்வுகளை, முக பாகங்கள் மூலமாக வெளிக்காட்டுகிறார்கள். கதக்களி ஆடுவது அவ்வளவு இலகுவான மேட்டர் இல்லை. கதக்களியில் ஒருவர் தேர்ச்சி பெறக் குறைந்தது பத்து ஆண்டுகளாவது ஆகும்.

இயற்கைச் சாயங்களைக் கொண்டே கதக்களியில் மேக்கப் போடுகிறார்கள். வெள்ளை தாடி போன்று முகத்தில் வரைவதற்கு சுட்டி என்று பெயர், அதனை வரைபவர் "சுட்டிக்காரன்" எனப்படுவார். இந்தச் சுட்டி, அரிசி மாவால் செய்யப்படுகிறது. மேக்கப் போடுவதும் இலகுவான மேட்டர் இல்லை, முழுமையாக மேக்கப் போட்டு முடிக்க சுமார் 5 மணி நேரமாவது ஆகிறது. தங்களுக்குத் தாங்களே மேக்கப் போடுபவர்களும் உண்டு. அதைத் 'தீப்பு' என்று அழைப்பார்கள். ஒப்பனையில் ஒவ்வொரு வர்ணத்துக்கும் ஒவ்வொரு அர்த்தம் உண்டு. பச்சை நிறம் இயற்கையைக் குறிக்கிறது. கருப்பு நிறம் பழிவாங்குதலையும் மஞ்சள் நிறம் பக்தியையும், வெள்ளை நிறம் ஆன்மீகத்தையும் குறிக்கின்றன.

கதக்களியின் ஆடைகளில் இஸ்லாமியத் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கதகளியில் வரும், பெண் கதாபாத்திரம் தலைக்கு முக்காடிட்டே வருகிறார். மலபார் பகுதியில் முஸ்லிம்கள் அதிகம் வாழ்வதால், இங்குள்ள கலை வடிவங்களில், இஸ்லாத்தின் பாதிப்பை அவதானிக்கலாம். இப்பிரதேசத்து முஸ்லிம்கள் "மாப்பிள" இல்லை "மாப்பிளமார்" என அழைக்கப்படுகிறார்கள். "மார்க்கப் பிள்ளை" என்பது மருகியே "மாப்பிள" ஆனது என்றார், கோழிக்கோட்டில் நான் சந்தித்த முகமது மீரான்.

வாசுதேவன் நாயர் என்ற பத்திரிகை நண்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவரின் மனைவியார் தலையை மறைத்து பட்டினால் ஆன முக்காடு போன்ற ஒரு வஸ்தை அணிந்திருந்தார். வீட்டில் பூஜை செய்யும்போது தங்களது குடும்பப் பெண்கள் தலையை மறைப்பார்கள் என்றார் அவர். மங்கல

காரியங்களின்போது தலைமுடியை மறைப்பதென்பது இஸ்லாமியக் கலாச்சாரம். அது எப்படி தீவிர இந்துவான வாசுதேவன் நாயரின் மிட்டில் வந்தது..?

15ஆம் நூற்றாண்டில், டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக்கின் ஆட்சியில் கேரளா இருந்தது. அப்போது, அரச அவையில் அங்கம் வகித்தவர்களும், ஆளும் வர்க்கத்துக்கு அடிபணிந்து செல்பவர்களும் இஸ்லாத்துக்கு மாறி, பின் இஸ்லாமிய ஆட்சி அகன்ற பின் இந்துக்களாக மாறினார்கள். அதேபோல கடல் வணிகத்தில் சிறந்து விளங்கிய முஸ்லிம்கள், இந்துக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்ததால், இஸ்லாமிய பண்பாடுகள் மலையாளிகளிடையே கலந்தன. எப்படி இருந்தாலும், "கதக்களி" போன்ற பாரம்பரிய இந்துக் கலை வடிவங்களில் உள்ள இஸ்லாத்தின் தாக்கம், இந்தியாவின் ஆன்மாவான மத ஒற்றுமையை பறைசாற்றி நிற்கின்றன.

# பாலாறும் பாவலி ஆறும்

*நான் கேரளாவில் செல்லும் இடங்களில் எல்லாம் பெருமழை பெய்கிறது. நான் கேரளத்தில் இருப்பதால், ஔவைப் பாட்டி சொல்லியபடி, 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்கிறது மழை' அப்பிடின்னுதான் முதலில் நினைத்தேன். ஆனால், பேப்பரை விரித்துப் படித்தால், கேரளாவில், பருவ மழை தொடங்கிவிட்டதாம்.*

*பகடியை விட்டுப் பார்த்தால், கேரளாவை, இயற்கை என்றைக்குமே வஞ்சித்தது இல்லை. கேரளாவில் நான் பயணம் செய்யும் இடங்களில் எல்லாம் பெரு மழை பொழிகிறது. குளங்கள், குட்டைகள், ஆறுகளில் நீர் நிறைந்து வழிகிறது. சென்னைக் கொடும் வெயிலிலுக்கு, குடை பிடித்து நடக்கும் நான், இங்கே மழைக்கு குடை பிடித்து நடக்கிறேன்.*

*கேரளாவில் இருந்து சுமார் **300** கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, தமிழ்நாட்டிலோ அசுர வெய்யில் கொழுத்துகிறது. எந்த நீர் நிலைகளிலுமோ, ஆறுகளிலுமோ எப்பன் கூட நீர் இல்லை. சென்னையில் மழை பெய்தால் ஒரேயடியாகப் பெய்கிறது. இல்லை ஒரேயடியா வறட்சி தாண்டவமாடுகிறது. ஆனால், கேரளாவில் எல்லாமே சம நிலையில் உள்ளன. இந்த சூட்சுமத்தை நாம் யோசித்தாவது பார்த்திருக்கிறோமா..?*


*அண்மையில் பெய்த மழைக்கு புதுப் பெண் போல பொங்கிப் பூரித்து ஓடிக் கொண்டிருந்த "பாவலி" ஆற்றை வயநாட்டிலே பஸ்ஸில் பயணம் செய்யும்போது பார்த்தேன். உடனடியாக, பஸ்ஸைவிட்டு இறங்கி பாவலி ஆற்றில் குளித்தேன். 'பாவாலி' ஆற்றின் நீர் பளிங்குபோல சுத்தமாக இருந்தது. எந்தளவுக் கென்றால்; ஆற்றின் அடியில் ஓடிக் கொண்டிருக்கும் சிறு மீன்கள்*

கூடக் கண்ணுக்குத் தெரியும் அளவுக்கு. எனக்கருகில் குளித்துக் கொண்டிருந்த சேட்டனிடம், "பளிங்குபோலச் சுத்தமான நீர்" என்றேன். "இல்லை இல்லை... கண்ணீர் போலச் சுத்தமான நீர்" என்றார். மிகத் தூய்மையானது என்பதைச் சொல்ல கேரளத்தில் கண்ணீரை உவமையாகப் பயன்படுத்துகிறார்கள். கண்ணீரைப் போலத் தூய்மை, நல்லாத்தான் இருக்கு.

பாவலியில் குளித்தபோது, எனக்குத் திடீரெனப் "பாலாறு" நினைவுக்கு வந்து போனது. கடந்த 2015 ஆம் ஆண்டு சென்னையையொட்டிப் பெய்த அகோர மழையால் 'பாலா'ற்றில் நீர் வரத்து மீண்டும் வந்ததை அறிந்திருப்பீர்கள். செத்துப்போன நதியாக இருந்த 'பாலாறு' நீர்வரத்தைத் தொடர்ந்து மீண்டும் பேசுபொருளானது. பாலாற்றைப் பின் தொடர்ந்து 'தொடர்' ஒன்று எழுத, பாலாறு ஊற்றெடுக்கும் கர்நாடகத்தின் நந்தி மலையில் இருந்து, பாலாறு கடலுடன் கலக்கும், காஞ்சிபுரம் வரைக்கும் பயணம் செய்தேன்.

கர்நாடகத்தின் நந்தி மலையில் 'பாலாறு' உற்பத்தியானாலும், கர்நாடகத்தில் பெரும்பாலும் தரைக்குக் கீழாகவே ஓடுகிறது. கோலாரில் மீண்டும் தரைக்கு வெளியே வந்து ஓடுகின்றது. ஆந்திரப் பிரதேசத்தில் இந் நதி வெறும் 33கிலோ மீட்டர்கள் தூரம்தான் ஓடுகின்றது. ஆனால், தமிழ் நாட்டில் 222கி.மீ நெடுந்தூரம் ஓடி, காஞ்சிபுரம் அருகேயுள்ள வயலூரில் கடலில் கலக்கிறது. ஆந்திராவில் பாலாறு ஓடும் 33 கிலோ மீட்டரில் சுமார் 20ற்கும் மேற்பட்ட சிறிய அணைகளைக் கட்டி பாலாற்று நீரை ஒழுங்கு படுத்துகிறது ஆந்திர அரசு. 222 கிலோ மீட்டர் ஓடும் தமிழ் நாட்டில் வெறும் உக்கிப்போன ஒரே ஒரு அணைதான் உள்ளது.

முன்னொரு காலத்தில் வட தமிழகத்தின் பிரதான நீர் ஆதாரமாக பாலாறுதான் இருந்து வந்தது. சுமார், 250,000 ஏக்கர் பாசன நிலம் இந்நதியால் பயன் பெற்றன. இந்நதியோர மக்களின் பிரதான குடிநீர்



பாவலி ஆறு

ஆதாரமாகவும் இந்த நதிதான் இருந்தது. பால் போன்ற தெளிவாக நீர் இருந்ததால்தான் "பாலாறு" என்ற பெயரைப் பெற்றதை மறக்கக் கூடாது.

ஆந்திராவில் "பாலாறு" அட்டகாசமாக ஓடுகிறது. ஆனால், தமிழ் நாட்டில் "பாலாறு" என்றொரு நதி டெக்னிக்கலாக இல்லை. ஏனென்றால் ஒரு நதியின் ஜீவிதத்தை அதன் மணல் படுக்கையை வைத்தே கணக்கிடலாம். அப்படியாக கணக்கிட்டால், "பாலாறு" என்றொரு நதி இப்போது தமிழ்நாட்டில் இல்லை. பாலாற்றின் மணல் படுக்கை முற்று முழுதாக களவாடப்பட்டுவிட்டது. பாலாற்றுப் படுக்கையெங்கும் பெரும் பள்ளங்கள் தோண்டி மணல் கொள்ளை நடைபெறுகிறது. நம்ப வேண்டும், வேலூரில் 900 அடி ஆழத்துக்குக் கூடப் பெரும் குழிகள் வெட்டப்பட்டு மணல் கொள்ளையிடப்படுகிறது. ஆற்றின் நீரோட்டப் பாதையில், நடு ஆற்றில் மணல் குவாரி அமைத்து, மணல் கொள்ளை நடைபெறுகிறது. இதெல்லாம் தமிழ்நாட்டில் மட்டுமே சாத்தியமாகும் என நினைக்கிறேன். வேலூர் டவுனில் ஒரு மணிநேரம் நின்றாலே, மணல் ஏற்றியபடி வருகின்ற சுமார் 100 மாட்டு வண்டில்களையாவது நீங்கள் சந்திப்பீர்கள். பாலாற்றில் மணல் கொள்ளை திருட்டுத் தனமாக எல்லாம் நடக்கவில்லை, வெளிப்படையாக பட்டாவர்தனமாக, அரசின் முழு ஆசீர்வாதத்துடன் நடக்கிறது.

மணல் கொள்ளையில், கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு சமத்துவத்தைப் பேணுகின்றன. கட்சி பேதமில்லாமல் பாலாற்று மணலைக் கொள்ளையடிக்கிறார்கள். ஒரு மணல் குவாரி திமுக பிரமுகருடையது என்றால், அடுத்த குவாரி அதிமுக பிரமுகருடையதாக இருக்கிறது. ஊரை அடித்து உலையில் போடுவதை தங்களுக்குள் போட்டியில்லாமல் கன கச்சிதமாகச் செய்கிறார்கள் கரைவேட்டிகள்.


"பால்போல தெளிவான நீருங்கிறதாலதான் பாலாறுன்னு பேர் வந்திச்சு. பாலாறு முழுவதும் மணல் படுக்கையாக இருக்கும். மணலை கைகளால் விலக்கிப் பார்த்தால் உள்ளே நீர் இருக்கும். குடிநீரில் இருந்து விவசாயம் வரைக்கும் பாலாத்துத் தண்ணிலதான் முடிச்சுப்போம். ம்ம்ம். அது ஒரு காலம்" எனப் பெரு மூச்சு விட்டார் பாலாற்றுப் படுக்கையில் நான் சந்தித்த பெரியவர் ஒருவர்.

இப்போது எல்லாமே போய் விட்டது. வேலூரில் மட்டுமே சுமார் 1200 தோல் தொழிற்சாலைகள் உள்ளன. இந்தியாவின் மொத்தத் தோல் ஏற்றுமதியில் வேலூர் மாவட்டத்தின் பங்கு 37

விழுக்காடு ஆகும். தோல் தொழிற்சாலைகள் வெளியேற்றும் சையனைடு, பாதரசம், குரோமியம் உள்ளிட்ட வேதியியல் இராசயனக் கலவைகள் எந்தவிதமான சுத்திகரிப்பும் இல்லாமல் பாலாற்றில் நேரடியாகக் கலகப்படுகின்றன. கடும் சிவப்பு நிறத்தில் உள்ள ஊத்தை இரசாயனங்களை பாலாற்றுப் படுக்கையில் நேரடியாகத் திறந்து விடப்படுவதைப் பார்த்தேன்.

முன்பெல்லாம் பாலாற்றுப் படுக்கையில் உள்ள மணலை வெறும் கைகளால் தவிர்த்து விட்டு பாலைப் போலத் தூய்மையான நீரைக் குடித்து வந்த பாலாற்று வழி வாழும் மக்கள் இன்று சுமார் **300** அடி ஆழத்துக்கு போர்வெல் போட்டாலும் நீர் கிடைக்காமல் அவதியுற்று வருகின்றனர். புராண கால சரஸ்வதி நதியை இப்போது சேட்டலைட் உதவியுடன் தேடுவதுபோல, இன்னும் சில வருடங்களில் பாலாற்றை நாங்கள் தேடப்போகிறோம். தொலைத்துவிட்டுத் தேடுவதுதானே எமது வழமை.

கேரளாவில் காசர்கோடு மாவட்டத்திலுள்ள மதூருக்குச் சென்றிருந்தேன். எனது பயண நெறிமுறைப்படி, அறையில் குளிப்பதை விடுத்து, ஊரில் உள்ள சிறு குளத்தில் குளித்தேன். என்னருகே ஒருவர் குளித்துக் கொண்டிருந்தார். வெளியூர்க்காரர் என நினைக்கிறேன். குளிக்கும்போது சோப்பை உபயோகித்தார். ஒரு வயதான முதியவர் குளத்தை நோக்கிப் பதட்டத்துடன் ஓடி வந்தார். " மீன்கள், பூச்சிகள், வாத்துகள், நாரைகள், நீர்தாவரங்கள் எல்லாம் ஒன்றாக வாழும் குளத்தில், இப்படியாக இரசாயன சோப்பைப் பயன்படுத்துவது நியாயமா....? இயற்கையை இப்படிப் பழுதாக்குவது நியாயமா" என்றார். அவர் குரலில் அத்தனை



ஆதங்கம் இருந்தது. கோபம் இருந்தது.

"இயற்கை அனுமதிக்கும் வரைக்கும்தான் மனித குலத்தால் இந்தப் பூமியில் வாழ முடியும்" என்றார் கண்ணூரின் ஆற்றங்கரையொன்றில் நான் சந்தித்த பெரியவர் ஒருவர். இயற்கையை சீரழிக்கக் கூடாது என்ற புரிதல் கேரளாவின் சாதாரண மக்களிடம் தெளிவாக உள்ளதை அனுபவரீதியாகக் கண்டு கொண்டேன்.

கேரளாவின் கடும் மழைக்கு குடை பிடித்து நடந்தபோது ஒன்றைச் சிந்தித்துப் பார்த்தேன். தமிழ் நாட்டையும், தமிழர்களை வைச்சுச் செய்யும் இயற்கை, கடவுளின் தேசமான கேரளாவையோ மலையாளிகளையோ வஞ்சிப்பதில்லை. கொஞ்சம் அழுத்தி யோசித்துப்பாருங்கள் அந்த சூட்சுமம் புரியும். கடவுளின் தேசத்தைச் சேர்ந்த அவர்கள், இயற்கையை அனுசரித்து வாழும், கடவுளின் குழந்தைகளாக உள்ளனர். அதுதான் அந்த சூட்சுமம்.

# முத்தப்பனும் தெய்யமும், கள்ளும் கருவாடும்

நான் மங்களூரில் இருந்து கண்ணூருக்கு வந்தது முத்தப்பனைப் பார்க்க. முத்தப்பன், சேட்டா இல்லை. அவர் கேரளத்தின் புகழ் பெற்ற சிறு தெய்வம். 'பசினிக்கடவு' என்ற இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் கிராமத்தில், 'வலப்பட்டணம்' என்ற நதியோரம் ஜம்மென வீற்றிருக்கிறார் முத்தப்பன்.

முத்தப்பன், உண்மையில் "தெய்யம்" என்ற கேரளத்தின் இசை வடிவத்துடன் பின்னிப் பிணைந்துள்ள, கேரளத்தின் *Folk deity.* ஆனால், முத்தப்பனை, சிவனின் அவதாரம் என்றும், விஷ்ணுவின் அவதாரம் என்றும் நிறுவ, தலையால் தண்ணி குடிக்கிறார்கள் கேரளத்து நம்பூதிரிகள். முத்தப்பன் என்ற வேத விதிகளுக்கும், ஆகம விதிகளுக்கும், பிராமணியத்துக்கும், ஆர்ய மாயைகளுக்கும் கட்டுப்படாத சிறுதெய்வத்தின் கோவிலுக்கு லட்சக்கணக்கில் மக்கள் படையெடுப்பது, அவர்களை சஞ்சலத்துக்கு உள்ளாக்குகிறது. முத்தப்பன் கோவிலில் நடைபெறும் பூஜை முறை என் வாழ்நாளில் நான் பார்த்த அத்தனை கோவில்களின் வழிபாட்டு முறைகளிலிருந்தும் முற்று முழுதாக வேறுபட்டு மகா சுவாரசியமாக இருந்தது.

கள்ளும் கருவாடும்தான் முத்தப்பனுக்கு பிடித்த உணவுகள். முத்தப்பன் வேஷம் அணிந்த ஒருவர் முட்டி



**முத்தப்பன் கோவில்**

நிறையக் கள்ளருந்தி விட்டு, கேரளத்தின் பாரம்பரிய 'தெய்யம்' நடனத்தை ஆடுவார். இந்த நடனத்தில், முத்தப்பனின் நண்பனான சண்டனும் இணைந்து கொள்வர். செண்டை மேளம் ஒலிக்க, உக்கிரமாக இவர்கள் ஆடும் நடனத்தைப் பார்க்க ஆயிரம் கண் வேண்டும். இங்கே, 'தெய்யம்' என்ற பாரம்பரிய இசை நடன வடிவத்தின் வழியே இறைவனை வேண்டுகிறார்கள்.

வடக்கு மலபார் தேசத்தின் பக்திமுறை, கேரளத்தின் மற்றைய இடங்களின் பக்தி முறைகளில் இருந்து வேறுபட்டது. 'தெய்யம்' என்பது வடக்கு மலபாருக்கென்றே பிரத்யேகமான பக்தியின் வடிவமாகும். இங்கெல்லாம், தெய்யம் என்ற இசை நடனக் கலை மூலமாக இறைவனுடன் சம்பாஷிக்கிறார்கள். தெய்வம்" என்பதுதான் மருகி "தெய்யம்" ஆனது. வேதாகம முறைப்படி அமைக்கப்படாத கோவில்களில்தான் தெய்யாட்டம் மூலம் இறைவனை வணங்குகிறார்கள்.

கடுமையான விரதங்கள், நோன்புகள் இருந்த பின்புதான் ஒருவரால் தெய்ய அவதாரம் எடுக்க முடியும். தெய்யமாய் மாறுபவர்கள், சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத செயல்களைச் செய்வதைப் பார்த்தேன். கண்ணூரின் காவுகள் ஒன்றில் தெய்யமாடிய ஒருவர், அசால்டாக பெரும் மரக் குற்றி ஒன்றை தலைக்குமேல் சுழற்றி ஆடினார். "இதென்னங்க பெரிசு, தீயில் கூட விழுந்து புரண்டு ஆடுவார்கள்" என்றார் என்னுடன் வந்திருந்த கிருஷ்ணன் நாயர். தெய்யம் ஆடுபவர்தான் இறைவன் எனக் கருதப்படுவதால், தெய்யம் ஆடுபவர் உடலில் தெய்வீக சக்தி புகுந்துவிடும் என்றார்கள்.



தெய்யம் ஆடுபவர்

தெய்யத்தின் நூல் பிடித்துச் சென்றால் அது மூத்தோர் வழிபாட்டில் வந்து நிற்கும். தங்களுக்காக உயிர்துறந்த போர் வீரர்களையும், அவர்கள் உபயோகித்த ஆயுதங்களையும் வணங்கி வழிபடுவதுதான் தெய்யத்தின் அடிப்படை. தமிழுக்கு இது புதிதல்ல, கோவில்களில் அருள் வந்து 'வெறியாட்டம்' ஆடுபவர்களை நாம் காமெடியாகக் கடந்து போயிருப்போம். ஆனால், இந்த வெறியாட்டத்துக்கு பல ஆயிரமாண்டுகள் வரலாறு உண்டு. வெறியாட்டம் பற்றிய பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படையில் வெறியாட்டம் ஆடுபவனை "வேலன்" என்று குறிப்பிடுகிறார் நக்கீரர். "வேலன் வெறியாட்டல்" பண்டைய தமிழகத்தில் புகழ் பெற்றிருந்தது. தமிழ்நாட்டின் சில பகுதிகளில் இன்னமும் இதை ஆடுகிறார்கள்.

முத்தப்பன் கோவிலில், தெய்யம் வேஷம் போடுபவர்தான், முத்தப்பனாகக் கருதப்படுவார். என்னதான் தெய்யத்தில் தேர்ச்சி பெற்றவராக இருந்தாலும், இறைவனின் கிருபை இல்லாமல் தெய்யம் ஆட முடியாது என்பது மலையாளிகளின் நம்பிக்கை. சேர நாட்டுப் பழந்தமிழர்களின் பாரம்பரிய நடனமான தெய்யம், கீழ் ஜாதி இந்துக்களுக்குப் பிரத்யேகமானதாக இருப்பதை அவதானித்தேன்.

தெய்யத்தின் பிறகு குறி சொல்லல் படலம் நடைபெறுகிறது. முத்தப்பன் வேஷம் அணிந்தவரிடம் உண்மையாகவே முத்தப்பன் இறங்கிவிடுவதாக ஐதீகம் இருப்பதால், அவர் நன்றாகக் கள் அடித்துவிட்டு, நிறை வெறியில் குறி சொல்வார். வரிசையாகப் பெருங் கூட்டமாக வந்து இவரிடம் மக்கள் குறி கேட்பார்கள். என் முறை வந்தபோது, என் கைகளைப் பிடித்து மலையாளத்தில் ஏதோ சொன்னார். புரியவில்லை.

முத்தப்பன் கோவிலில் முக்கியத்துவம் பெறும் இன்னொன்று, நாய்கள். முத்தப்பன் பெரும் வேட்டைக்காரனாக இருந்தார் என்பது வரலாறு என்பதனால் அவருடன் நாய்கள் எப்போதுமே இருக்கும் என்பது ஐதீகம். முத்தப்பன் சன்னதியில் இரு பெரிய நாய்களின் சிலைகள் உண்டு. அதைத் தவிர பக்தர்கள் கூட்டங்களிடையே ஹாயாக பல நாய்கள் வாக்கிங் போவதைப் பார்க்கலாம். பூசையின் போதும் நாய்களுக்கு தனி மரியாதை செலுத்தப்படுவதைப் பார்த்தேன். நாய்களுக்குத் தனிப் படையல் வேறு உண்டு.

பக்கர்களுக்கு தேங்காய் சொட்டுப் பிரசாதம் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு வரைக்கும், கள்ளும் கருவாடும்தான் இக்கோவிலில் பிரசாதமாக வழங்கப்பட்டன. எனக்கு முத்தப்பன்

கோவிலை அவ்வளவு பிடித்துப்போனதற்கு, வலப்பட்டணம் நதியோ, கள்ளும் கருவாடுமோ இல்லை, கோவிலுக்கருகிலுள்ள அழகு சொரியும் பரசின்னிப் பாலமோ காரணம் இல்லை. ஒரு சிறு தெய்வத்தின் கோவில், இந்தியா முழுவதும் இருந்து, லட்சக்கணக்கான பக்தர்களை கவர்ந்து இழுக்கிறது என்பதுதான் அந்தக் காரணமாகும்.

சிறு தெய்வ வழிபாட்டிலேயே இந்து மதத்தின் ஆத்மா மறைந்துள்ளது எனத் தீவிரமாக நம்புபவன் நான். இந்து மதத்தின் சிறப்பே, அது யாரையும் கட்டுப்படுத்துவதில்லை. 'இதைச் செய்'... 'அதைச் செய்' என ஆக்கினை கொடுப்பதில்லை. பிடித்திருந்தால் வணங்கு, பிடிக்காவிட்டால் வணங்காதே இதுதான் இந்து மதத்தின் அடிப்படை. இறைவன் என்ற சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட இந்து சமயத்தில் அங்கம் வகிக்கலாம். பிராமணக் கலப்பில்லாத, சிறு தெய்வ வழிபாடுகள்தான் இந்து மதத்தை மிகச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

பெங்களூரில் நான் வசித்த, கிராமமும் நகரமும் கலந்த கலவையான இடத்தில் வருஷத்துக்கு ஒரு தடவை ஊர் கூடி "முன்னேஸ்வர"னுக்கு விழா செய்வார்கள். ஒரு வாரம் ஊரே விழாக் கோலம் பூணும். மிலிட்ரி சரக்கு, 8 பி.எம், ராயல் சேலஞ்சர்ஸ், ஹெர்குலஸ் விஸ்கி, பெரும் சுருட்டுகள், ஆட்டிறைச்சி எனப் படையல் அமோகமாக இருக்கும். விழா நடக்கும் நாட்களில் தினம்



முத்தப்பன் கோவில்

தோறும் ஆடு வெட்டி, முனியப்பனின் பெயரால் கிராமத்துக்கே படையல் நடத்துவார்கள். பேச்சிலராக ரூம் எடுத்து இருந்த எங்களுக்கு, ஆட்டிறைச்சியிடன், சில கோழிக் கால்களையும் ஸ்பெஷலாகத் தருவார் ரூம் ஓனர் மஞ்சு அண்ண. சாராயத்தை இறைவனுக்குப் படையல் என்ற பெயரில் லைட்டாகத் தெளித்து விட்டு, பிறகு ஆரம்பிக்கும் தீர்த்தப் பார்ட்டி, இரவு 9 மணிக்கு, மிலிட்ரியில் ஆரம்பிக்கும் திருவிழா அடுத்த நாள் காலை 9 மணிக்கு வி.எஸ்.ஓ.பி யில் முடியும். கொத்து மீசையுடன், கம்பீரமாக முன்னேஸ்வரனுக்குப் பூசை செய்யும் பூசாரி, நிறை வெறியில் எங்களைக் கட்டிப் பிடித்துக் கமலா அக்காவை கரெக்ட் செய்த கதையைச் சொல்வார்.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள தனது கிராமத்தின் ஊர் திருவிழாவுக்கு கடந்த வருடம் அழைத்துச் சென்றான் நண்பனொருவன். சிறுமலைகள் சூழ்ந்த குக்கிராமம் அது. கிராமத்தின் ஒதுக்குப் புறமான இடத்திலே, சில நடுகல்கள் உள்ளன. அந்த நடுகல்களை மையமாக வைத்து, திருவிழா காலத்தில் மட்டும் ராட்சத உருவங்களை நிலத்தில் வரைவார்கள். இந்தியாவின் எந்த மூலையில் இருந்தாலும், அந்த ஊரில் பிறந்தவர்களாக இருந்தால், திருவிழாவிற்கு கரெக்டாக வந்து விடுவார்கள். ஆடு வெட்டிப் படையல் போட்டு, சண்டை சச்சரவுகளைப் பேசித் தீர்த்துக் கொள்வார்கள். தீராப் பகைகள் எல்லாம், படையல் சோற்றிலும் ஒரு போத்தல் சாராயத்திலும் முடிந்துபோவதைப் பார்த்தேன்.

இயற்கை வழிபாடுதான் உலகின் மிகத் தொன்மையான வழிபாட்டு முறையாகும். இயற்கை வழிபாட்டுக்கு அடுத்த மிகத் தொன்மையான வழிபாட்டு முறை சிறுதெய்வ வழிபாடாகும். இன்று இந்து மதத்தில் புழக்கத்தில் உள்ள, பெருந்தெய்வங்கள் எல்லாவற்றையும் விட பல ஆயிரமாண்டுகள் பழமையானவை இந்த சிறு தெய்வ வழிபாடுகள். இந்தியாவின் பக்தி மட்டுமல்ல இந்தியாவின் ஆத்மாகூட இப்படியான சிறுதெய்வக் கோவில்களில்தான் ஒளிந்துள்ளன. இந்து சமயம் வாழ்க்கையை வாழச் சொல்கிறது. சிறுதெய்வ வழிபாடுகள், ஒரு படிமேலே போய் வாழ்க்கையை கொண்டாட்டமாக வாழச் சொல்கின்றன. அந்த வகையில், இந்து மதத்தை அவைதான் மிகச் சரியான முறையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

கண்ணூர் வந்தால் மறக்காமல் முத்தப்பன் என்ற எங்களின் மூத்தோனை ஒரு தடவை பார்த்துச் செல்லுங்கள்.


# தட்சனின் தாடி

பெங்களூரில்தான் முதன்முதலாக ஓடப் பூவைப் பார்த்தேன். கூடப் படித்த கேரளப் பெண் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, வீட்டின் நடு மையத்தில் வெள்ளை நிறமான மினியேச்சர் தும்புத்தடி போன்ற ஒரு அயிட்டத்தைக் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள். என்னெவென்று கேட்டால், 'ஓடப்பூ..' என்றார்கள்.. 'அப்படியென்றால் என்ன என்று கேட்டேன்..' 'தட்சனின் தாடி' என்றார்கள்.

தட்சன் யாகம் செய்த கதையை சிறுவர்களாகப் படித்திருப்போம். தட்சன் மகா பெரிய யாகம் செய்ததும், அதற்கு தன்னுடன் 'கொழுத்தாடு' பிடித்துக் கொண்டிருந்த மருமகன் சிவனை அழைக்காமல் விட்டதும், மகளான சதிதேவி, எல்லாப் பெண்களையும்போல, கணவனின் சொல்பேச்சுக் கேட்காமல், தகப்பன் நடத்திய யாகத்துக்கு சென்றதும். யாகத்தில் வைத்து, தட்சன் மகளைக் கேவலப்படுத்த, மனமுடைந்த சதிதேவி, யாகத்தீயில் விழுந்து உயிரை மாய்த்ததையும், சிவன் டென்சனாகி, வீரபத்திர ரூபம் எடுத்து தட்சனின் தலையைக் கொய்ததையும் படித்திருப்போம். இந்தத் தட்ச யாகம் நடந்த இடம் என நம்பப்படும் கோவில்தான் 'கொட்டியூர்'. கேரளத்தின் அடர் காட்டுக் கிடையே அமைந்துள்ள, ஏகப்பட்ட மர்மங்களையும், அருளையும் ஒருங்கே கொண்ட மகா சேஷ்திரம்.

கொட்டியூர். ஆகா.. மகா சேஷ்த்திரம் எனக் குஷியோடு கொட்டியூருக்கு வந்த என்னை மிகச் சிறிய கோவிலொன்றே வரவேற்றது. இது இக்கரை சேஷ்திரம். அக்கரை சேஷ்திரம் நாளைதான் திறக்கப்படும் என்றார்கள்.

பாவலி ஆற்றின் பக்கத்தில், அடர்ந்த காட்டுக்குள்




அமைந்துள்ளது "அக்கரைக் கொட்டியூர்". இங்கேதான் புகழ்பெற்ற தட்சன் யாகத்தை ஆண்டுதோறும் செய்கிறார்கள். அதில் என்ன விஷேஷம் என்று கேட்கிறீர்களா..? அந்தத் தட்சன் யாகம் நடைபெறும் 28 நாட்கள் மட்டும்தான் அக்கரை கொட்டியூரை மனித நடமாட்டத்துக்குத் திறக்கிறார்கள். மற்ற நாட்களில் மனித நடமாட்டம் சிறிதும் இல்லாமல், காட்டு விலங்குகளின் சாம்ராஜ்ஜியமாக உள்ளது கோவில்.

கொட்டியூர் மகா பெரிய மர்மங்களை தன்னகத்தே புதைத்து வைத்துள்ள கோவில். கொட்டியூரின் பிரத்யேகமான பூஜை முறைகளை மற்றவர்களால் விளங்கிக் கொள்ள முடியாது. தாழ்ந்த ஜாதியினரை கோவிலுக்கு அனுமதிக்காத கொடுமைகள் நடந்த காலத்தில், எல்லா ஜாதிகளும் சேர்ந்து கொட்டியூர் யாகம் செய்தது வரலாறு. ஜாதி ஒற்றுமைக்கு இக்கோவில் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

28நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில் கேரளத்தின் 64 ஜாதிகள், உப ஜாதிகள் பங்கு பெறுகின்றன. பிராமணரில் இருந்து குறிச்சியார் என்ற வேடுவர்கள் வரைக்கும் இந்த விழாவில் பங்கு பெறுகின்றனர். இவர்களை "அவகாசிகள்" இல்லை "ஸ்தானிகர்கள்" என்பார்கள். இந்த 64 அவகாசிகளின் பங்களிப்பு இல்லாமல் விழாவை முழுமையாக முடிக்க முடியாது.

இவர்களின் பங்களிப்பு எப்படி இருக்கும் என்றால், பூஜைக்குத் தேவையான நெய்யை ஒரு ஜாதியினர் ஆண்டு முழுவதும் தயார்ப்படுத்தி எடுத்து வருவார்கள். விளக்கெரிக்கத் தேவையான

எண்ணையை இன்னொரு ஜாதியினர் தயார்ப்படுத்துவார்கள். விளக்குத் திரியை இன்னொரு ஜாதியினரும், படையலுக்குத் தேவையான அரிசியை இன்னொரு ஜாதியினரும் விளைவிப்பார்கள். இப்படியாக, ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு வேலை விதிக்கப்பட்டுள்ளது. அந்த வேலை, பெரும்பாலும் அந்த ஜாதியினரின் குலத் தொழிலாக இருக்கும்.

டென்சனான சிவன், தட்சனின் தலையை இந்தத் ஸ்தலத்தில் வைத்து வெட்டினார் என்பது வரலாறு இல்லையா..?வெள்ளைப் பஞ்சுபோலுள்ள 'ஓடப் பூ' தட்சனின் தாடியை குறிக்கிறது என்பது கொட்டியூரின் நம்பிக்கை. அதாவது சிவன் வெட்டிய தட்சனின் தலையில் இருந்து தட்சனின் தாடியை, பக்தர்கள் சிம்பாலிக்காக வீட்டுக்கு எடுத்துச் செல்கிறார்கள் என்பது ஐதீகம். வெறும் ஐதீகம் என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். கொட்டியூரின் பிரதான வருமானம் இந்த ஓடப் பூதான். கொட்டியூருக்கென்றே பிரத்யேகமானது இந்த ஓடப்பூ. உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும், அது கொட்டியூரில் இருந்தே சென்றிருக்க வேண்டும்.

ஒரு வருஷத்தில் கொட்டியூர் திருவிழாவை ஒட்டிய சுமார் 40 நாட்கள் மட்டுமே வேலை செய்கிறார் பரமேஸ்வரன் நாயர். அந்த வருமானத்தை வைத்து, அடுத்த திருவிழாவரைக்கும் காலத்தை ஓட்டுகிறார். கொற்றியூரின் அடுத்த கிராமமான "நீண்டு நோக்கி" யைச் சேர்ந்த வினோத் மேனனும் இதைத்தான் சொன்னார். நாற்பது நாட்கள் வேலை, ஆண்டு முழுவதும் ஜாலி. அவர்கள் செய்வது ஓடப்பூ. இவர்களைப் போல இந்தப் பகுதியில் வாழும் பெரும்பாலோருக்குச் சோறு போடுகிறது தட்சனின் தாடி.

ஓடப் பூ செய்யும் முறையைப் பக்கத்தில் இருந்து பார்த்தேன். சுவாரசியமாக இருந்தது. காட்டுக்குச் சென்று காட்டு மூங்கிலைப் பறித்து வந்து அதை பாகம் பாகமாக வெட்டுவார்கள். பிறகு அதைத் கையால் தும்பு கிளம்ப அடித்து, சீப்புப் போன்றொரு வஸ்தால் அந்த தும்பு கிளம்பிய மூங்கிலை நேர்த்தியாகச் சீவி ஓடப்பூவைச் செய்கிறார்கள். காட்டு மூங்கில், ஓடப் பூவாக மாறுவதற்கிடையில் பலரின் உழைப்பு உண்டு.

காட்டுக்குச் சென்று, சரியான மூங்கிலைத் தேர்ந்தெடுப்பதை சிலரும். அந்த மூங்கிலை சிறு சிறு துண்டுகளாக வெட்டி அதை தும்பு கிளம்ப அடிப்பதை இன்னும் சிலரும், பிறகு அதை நேர்த்தியாகச் சீவுவதை இன்னும் சிலரும் செய்கிறார்கள். இதை எல்லாம் ஒன்றாகச் செய்பவர்களும் உண்டு.

ஒரு ஓடப் பூவை 10 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரைக்கும்

விற்கிறார்கள். கொற்றியூருக்கு வரும் பக்தர்கள் எல்லோருமே ஓடப்பூ வாங்கிச் செல்ல வேண்டும் என்பது வழமை. வெறும் 28 நாட்கள் மட்டுமே நடக்கும் விழாவிற்கு, கேரளம் முழுவதிலும் இருந்து சுமார் 50 லட்சம் பேர் வருகிறார்கள். ஓடப்பூவை வீட்டில், வாகனத்தில், வணிக நிலையங்களில் ஐஸ்வர்யத்துக்காகத் தொங்க விடலாம். ஒருவர் பல ஓடப் பூக்களையும் வாங்கிச் செல்வார்கள். 50 லட்சம் பக்தர்கள் வரும் கோவிலில் எத்தனை கோடி ஓடப் பூ விற்பனையாகும் என்பதைக் கணக்குப் போட்டுப் பாருங்கள்.

மத ஒற்றுமையிலும் ஓடப் பூ முக்கிய இடம் வகிக்கிறது. கொட்டியூரில் வாழ்பவர்களில், சுமார் 60 சதவீதமானவர்கள் கிறித்தவர்கள். முஸ்லிம்களும் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். இவர்களும் தங்களது பிரதான தொழிலாக ஓடப்பூ செய்வதையே வைத்துள்ளனர்.


5வயது சிறு குழந்தைகள் கூட மூங்கிலை நேர்ந்தியாகச் சீவி ஓடப் பூ செய்வதைப் பார்த்தேன். மத வேறுபாடு மட்டுமல்ல, ஜாதி வேறுபாடும் இல்லாமல் ஓடப் பூவைச் செய்கிறார்கள். கொட்டியூரின் பூசாரிகளில் ஒருவரான கிருஷ்ணன் நம்பூதிரி என்னை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தார். அவரின் வீட்டிலும் ஓடப்பூ செய்யப்படுவதைப் பார்த்தேன். கொட்டியூரின் அடர் காட்டுக்கு என்னை அழைத்துச் சென்ற, சஜின் என்ற குறிச்சியரின் வீட்டிலும் ஓடப் பூ செய்யப்படுவதைப் பார்த்தேன்.

சகுந்தலா அம்மா, 28நாட்களுக்கு மட்டும், களனி வேலைக்கு செல்லாமல் ஓடப் பூவுக்கு மூங்கிலை அடித்துக் கொடுக்கும் வேலையைச் செய்து வருகிறார். ஒரு மூங்கில் துண்டை வாகாக அடித்துக் கொடுத்தால், நான்கு ரூபாய் கொடுப்பார்கள். ஒரு நாளுக்குத் தம் பிடித்து அடித்தால், 300 மூங்கில் அடிப்பேன் என்றார். இந்த 28 நாள் வருமானம் எவ்வளவு நாட்களுக்குப் போதும் என்று கேட்டேன். ஒரு மழை காலத்தை இப்பணத்தின் உதவியுடன் ஓட்டுவேன் என்றார்.

ஒரு பழங்கால நம்பிக்கை, ஒரு பிராந்தியத்தின் ஆதார வருமானமாக இருப்பதை இங்கு கண்டேன்.

அட நம்பிக்கைதானே வாழ்க்கை பாஸ்!


# மாட்டிறைச்சி அரசியல்



*பசுக்களையும் எருதுகளையும் இறைச்சிக்காக விற்கக் கூடாது என மோடி அரசு சட்டம் போட்ட தினத்தில் நான் கண்ணூரில் இருந்தேன். மாட்டிறைச்சியையே ஒட்டுமொத்தமாக மோடி அரசு தடை செய்து விட்டது என மீடியாக்கள் அலறின. கேரளாவே கொந்தளித்துப்போனது எனலாம். அன்றுமட்டும், கேரளத்தில் தோராயமா ஐநூறு மாட்டுக்கறி உண்ணும் விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. மலையாளிகளின் விருப்பத்துக்குரிய உணவுகளின் பட்டியலில், Beef-ற்கு என்றுமே இடம் உண்டு. மலையாளிகளுக்குப் பிடித்த கறிகளின் வரிசையில், மாட்டுக்கறிக்குப் பிறகுதான் ஆட்டுக் கறி, கோழிக்கறி எல்லாமே வருகின்றன. கேரளத்தில் உண்ணப்படும் மொத்த இறைச்சியில், 60 சதவீதமானது மாட்டிறைச்சியே.*

*2011- ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீடு கேரளாவில், 54.73 %- இந்துக்கள், 26.56%- முஸ்லிம்கள், 18.38%- கிறித்தவர்கள் உள்ளனர் என்கிறது. முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் மட்டுமல்ல, கேரள இந்துக்களும் மாட்டிறைச்சியை விரும்பி உண்கிறார்கள். இன்றும் கேரளத்தில் எழுபத்திரண்டு இந்து சாதிகள் மாட்டிறைச்சியைப் புசிக்கின்றன. ஆதிக்க சாதிகளில் தொடங்கி ஒடுக்கப்பட்டவர்கள் வரை, கேரளத்தின் அனைவரது விருப்ப உணவாக மாட்டுக்கறி விளங்குகிறது.*

*ஐம்பத்து ஆறாம் ஆண்டு மலபார், திருவாங்கூர், கொச்சின், தட்சிண கன்னடாவின் சில பகுதிகளை இணைத்து, "கேரள மாகாணம்" உருவாக்கப்பட்டது. அடுத்த ஆண்டு நடைபெற்ற,*



கேரளத்தின் முதல் தேர்தலில், 'ஏலங்குளம் மனக்கல் சங்கரன்' நம்பூரிப்பாடு, என்ற ஈ.எம்.எஸ் நம்பூதிரிப்பாடு தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியினர் வெற்றி பெற்றனர். ஆசியாவில், கம்யூனிஸ்டுகளின் ஆட்சி முதன்முதலாகக் கேரளத்திலேயே ஏற்பட்டது.

கேரள மாநிலத்தின் உருவாக்கத்தில் இருந்தே, கம்யூனிச சித்தாந்தத்தின் ஆழமான வீச்சு கேரளத்தில் இருப்பதால், இந்துதத்துவ சக்திகளால் அங்கே ஆழமாகக் கால் ஊன்ற முடியவில்லை. இதுவரைக்கும் பத்துத் தடவைகள் கம்யூனிஸ்ட் கட்சி அங்கே ஆட்சி அமைத்துள்ளது. இப்போதும் பினராயி விஜயன் தலைமையிலான கம்யூனிச ஆட்சிதான் நடக்கிறது. கேரளத்தின் குக்கிராமங்களில் கூடத் தெளிவான கம்யூனிச சித்தாந்தங்களை அவதானிக்கலாம். இந்த கம்யூனிச சித்தாந்தங்களின் பாதிப்பால், இளம் தலைமுறையினரிடையே, "இந்துத்துவ" சிந்தனைகள் ஆழமாக வேர் ஊன்ற முடியவில்லை. கேரளாவில் மாடு, மாடாக மட்டுமே பார்க்கப்படுகிறது. மாட்டைத் தெய்வமாக்கும் விளையாட்டுக்கள் எல்லாம் அங்கு இல்லை.

மாடுகளை இறைச்சிக்காக விற்பதை மோடி அரசு தடைசெய்த அடுத்த நாள் நண்பகல் நேரம், சனப் புழக்கமான கண்ணூர் நகரின் மத்தியில் வெள்ளை வேஷ்டி, வெள்ளை சட்டை அணிந்த சில இளைஞர் காங்கிரஸ்காரர்கள் ஒன்று கூடினார்கள். கூடவே ஒரு பசு மாட்டையும் எடுத்து வந்திருந்தனர். "யூத்து காங்கிரஸ் சிந்தாபாத்" என அலறியவாறே, அந்த பசு மாட்டை வெட்டி, அதன் பச்சை இறைச்சியைப் பாகம்பிரித்து பார்வையாளர்களுக்குப் பரிமாறினார்கள்.

தங்களுடைய செயலை, காங்கிரஸ் மேலிடம் பாராட்டும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், காங்கிரஸ் மேலிடம் கடுப்பாகி, அதில் சம்பந்தப்பட்டவர்களை கட்சியை விட்டே தூக்கிக் கடாசியது. பி.ஜே.பி-க்கும் மாட்டரசியலுக்கும் எப்படி பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளதோ அதேபோல, மாட்டுக்கும்-காங்கிரஸுக்கும் பிரிக்கமுடியாததொரு பிணைப்பு உள்ளது.

இந்திரா காந்தி, காங்கிரஸ் தலைவியான சிறிது காலத்தில், காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்ததை அறிந்திருப்பீர்கள். இந்திரா தலைமை தாங்கிய காங்கிரஸின் பாகத்துக்கு, "பசுவும், கன்னுக்குட்டி" யும் உள்ள சின்னத்தை அவர் விரும்பிக் கேட்டு வாங்கிக் கொண்டார். "இந்துக்களின் தாயான பசுவே, எங்களது தேர்தல் இலச்சினை!" என அவர் பல கூட்டங்களில் முழக்கமிட்டார்.

பசுவை இந்திராகாந்தி எனவும் கன்னுக் குட்டியை சஞ்சய் காந்தி என்றும் எதிர்க் கட்சிகள் பயங்கரமாக நக்கல் அடித்தன. ராஜீவ் காந்தி, என்ற இந்திரா காந்தியின் மூத்த மகன், அரசியல் அறவே விருப்பமில்லாது அப்போது விமானம் ஓட்டிக் கொண்டிருந்தார். எந்த நிலையிலும், ராஜீவ் காந்தி அரசியலில் கால் வைக்கக் கூடாது என்பதில் ஒருவர் மிகத் தெளிவாகவும் தீவிரமாக இருந்தார். அவர் ராஜீவின் மனைவி சோனியா காந்தி! இன்றைய காங்கிரஸ் கட்சியின் அசைக்க முடியாத தலைவர்!

காங்கிரஸ் ஒன்றும் மாடு வெறுப்புக் கட்சி கிடையாது. மாட்டு அரசியல் தனியே பி.ஜே.பியுடன் முடிந்து போகும் விஷயமும் கிடையாது. மாடு அரசியல், இந்திய அரசியலில் நீக்கமற பின்னிப் பிணைந்துபோயுள்ளது. வரலாறு மிக முக்கியம் அமைச்சரே!

மோடியைப் பழிவாங்க, இளைஞர் காங்கிரஸ்காரர்கள் பசுவொன்றை, கண்ணூரின் நடுத்தெருவில் வைத்து வெட்டும்போதும் நான் கண்ணூரில்தான் இருந்தேன். பசுவை வெட்டிய கும்பலில் இருந்த ஒருவரையாவது சந்திக்க வேண்டும் என மலையாளப் பத்திரிகை நண்பர்களிடம் கேட்டேன். ஒருவரை நான் தங்கி இருந்த விடுதிக்கே அழைத்து வந்தார்கள். மாட்டை வெட்டியவர்களைப் போலீஸ் தேடத் தொடங்கியிருந்ததால், கொஞ்சம் கலவரமாக இருந்தார். "மாட்டிறைச்சி சாப்பிடுவ தென்பது உங்களின் உணவுப் பழக்கம். *I appreciate it.* அதில் நான் கருத்துத் தெரிவிக்க எதுவுமே இல்லை. ஆனால், வாயில்லா ஜீவனொன்றை, மோடி மீதுள்ள கடுப்புக்காக, தேவையே இல்லாமல் நடுத் தெருவில் வைத்து வெட்டலாமா..?" எனக் கேட்டேன். அவரிடம் பதில் இல்லை. ஆனால், தில்லி காங்கிரஸ் மேலிடம் தங்களது செய்கையை *entertain* செய்யும் என அவர்கள் விசுவாசமாக நம்பியிருந்ததாகச் சொன்னார். கட்சியை விட்டுத் தூக்கிக் கடாசியதில் கொஞ்சம் ஆடித்தான் போயிருந்தார்.

"இஸ்லாமியர்கள்தான் இந்தியாவில் மாட்டிறைச்சியை அறிமுகப் படுத்தினார்கள். இஸ்லாமியர்களின் வருகைக்கு முதல்,

இந்திய உணவுப் பழக்கங்களில் மாட்டிறைச்சி இல்லவே இல்லை" என்றொரு கருத்து மிக நுட்பமாக, சில சக்திகளால் பரப்பப்பட்டு வருகிறது. ஆனால், இந்தியாவில் இஸ்லாம் மதம் வேரூன்றப் பல நூற்றாண்டுகள் முன்பே, பிராமணர்கள் உள்பட, பெரும்பான்மை இந்துக்களின் விருப்ப உணவாக மாட்டிறைச்சி இருந்துள்ளது. என்கின்றன ஆதி இந்து, புத்த, சமண நூல்கள்.

**வேத காலத்தில் மாட்டிறைச்சி:**

"இந்து வேதங்களின்படி, மாட்டிறைச்சியை உண்ணாத ஒருவன் சிறந்த இந்துவாக இருக்க முடியாது!" என்றார் விவேகானந்தர். "பெண்களின் திருமண வைபவங்களில் பசு மாட்டையும் காளை மாட்டையும் அறுக்க வேண்டும்" என்கிறது ரிக் வேதம். ஒரு பிராமணர், வழிபாட்டின்போது தனக்குக் கொடுக்கப்பட்ட இறைச்சியை உண்ண மறுத்தால் நரகம் செல்வார் என்றார் வஷிட்ட மகரிஷி. "மிக மிருதுவாகவும் சுவையாகவும் இருப்பதால் பசு மாட்டிறைச்சியை உண்கிறேன்" என்றார் யாக்யவல்க்கியர்.

உண்மையில், வேத காலங்களில் நம்முடைய கடவுளர்கள் எல்லாமே பயங்கர அசைவப் பட்சினிகளாக இருந்தனர். காளை மாட்டின் இறைச்சியில் உயிரையே வைத்திருந்தார் இந்திரன். பசுமாட்டு இறைச்சியை வெளுத்துக் கட்டினார் அக்னி. நம்முடைய வேதங்களில் மனிதர்கள் உண்ணக் கூடியதாக 50 விலங்குகளின் பெயர்கள் தரவுபடுத்தப்பட்டுள்ளன. அதில், பசுமாட்டிறைச்சியும், காளை மாட்டிறைச்சியும் அடக்கம்.

மாட்டிறைச்சி மிகச் சிறந்த உணவு எனப் பரிந்துரை செய்கிறது தைத்திரிய உபநிடதம். ரந்திதேவா என்ற மன்னன், பிராமணர்களுக்கு மாட்டிறைச்சி தானம் செய்து அழியாப் புகழ் பெற்றான் என்கிறது மகாபாரதம். வேத காலத்தில், விலங்குகளைப் பலியிட்டு நடைபெறும் வேள்விகள் அடிக்கடி நடைபெற்றன. வேள்வியின், முன்னேற்பாட்டுச் சடங்கான 'அக்கினித் தேய'த்தில் பசுவே கொல்லப்பட்டது. அறுநூறு விலங்குகளையும், பறவைகளையும் கொல்லக்கொடுத்து நடைபெறும் "அசுவமேத யாக"த்தில், அதன் நிறைவைக் குறிப்பிடும் வகையில் இருபத்தொரு பசுக்கள் கொல்லப்பட்டன. 'கொசவயாகத்'திலும் பசுவே பலியிடப்பட்டது.

விருந்தினர்களை வரவேற்கும் போது பசுக்களைக் கொன்று உணவாகப் படைப்பது வேதகாலத்தில் பெருமைக்குரியதொரு மேட்டராக இருந்துள்ளது. பிராமணர்களின் இறுதிச் சடங்குகளின் போது பிராமணர்கள் பசுக்களை கொன்று தின்ற சான்றுகள் வேதத்தில் உள்ளன. வேதங்களுக்கு பல நூற்றாண்டுகளுக்கு பிறகு

எழுதப்பட்ட மனுஸ்மிருதி கூட மாட்டிறைச்சி உண்பதை தடை செய்யவில்லை. மாறாக, இறைச்சிக்குரிய மிருகங்களை மனிதர்கள் உண்ணுவது பாவமில்லை. உண்ணுபவர்களையும் உணவுகளையும் பிரம்மனே படைத்தான் என்கிறது.

படித்த பிராமணரை வரவேற்பதாயின், பெரிய காளையையோ, ஆட்டையோ படையலாக்கி வரவேற்க வேண்டும் என்று "யக்ஞவல்கீய ஸ்மிருதி" சொல்கிறது. இரந்திதேவ அரசரின் அடுக்களையில் மட்டும் ஒவ்வொரு நாளும் இரண்டாயிரம் பசுக்கள் அடித்துக் கொல்லப்பட்டு உணவாக்கப்பட்டன. மகாபாரதத்தின் கதை மாந்தர்களில் பெரும் பாலானவர்கள் அசைவ உணவை உண்பவர்களாக இருந்தனர்.

இந்திய மருத்துவ முறைகளில் மருந்துக்காக மாட்டிறைச்சி பயன்படுத்தப்பட்டது பல இலக்கியங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. காளிதாசர், பவபுத்தி, சிறீஹர்சர் ஆகியோரின் இலக்கியங்களில் மாட்டுக்கறி தொடர்பான குறிப்புகள் உள்ளன. ஆசாரம் மிகுந்த இந்துக்கள் மருத்துவத்தின் பெயரில், மாட்டிறைச்சி சூப்/ தேநீர் குடிப்பதைக் காந்தியடிகள் பலமுறை கேலி செய்திருக்கிறார். அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் தங்கியிருந்தபோது அவர் மாட்டிறைச்சியைத் தின்றார் என்கின்றன தரவுகள்.

### கோமாதா பிம்பம்:

பண்டைய பாரதத்தில், பிராமணர்கள் உள்பட அனைத்து இந்துக்களினதும் முக்கிய உணவாக இருந்த மாடு, புனித பிம்மத்தையும், தாய் ஸ்தானத்தையும், புத்த மதத்தின் பெரு வளர்ச்சிக்குப் பிறகே பெற்றது.

இந்து மதத்தின் பெயரால் நடைபெற்றுக் கொண்டிருந்த கேலிக் கூத்துக்களை பலவற்றை எதிர்த்த, இந்து மதத்தில் தோன்றிய முதலாவது சீர்திருத்தவாதி கௌதம புத்தராவார். இறைவனின் பெயரால், இந்து மதத்தின் பெயரால், பல்லாயிரக்கணக்கான விலங்குகள் பலியிடப்படும் வேள்விகளை பார்த்து வெகுண்ட புத்தர், "மனித தர்மம், மிருக காருண்யம் இரண்டையுமே பொசுக்கி யாகம் செய்கிறீர்களே?" என யாகம் நடத்தும் இடத்துக்கேபோய் கேள்விகள் கேட்டார்.

"குதிரைக்கு மோட்சம் கிடைக்கும். கூடவே, உலகத்துக்கும் நன்மை கிடைக்கும்" என்றார்கள் பிராமணர்கள். "எல்லாம் அறிந்த பிராமணனாகிய நீங்கள் மோட்சம் பெற வேண்டாமா? அந்த

அக்கினி குண்டத்தில் யாகம் நடத்தும் உங்களையும் தூக்கிப் போட்டால் உங்களுக்கும் மோட்சம் கிட்டுமல்லவா?" என்றாராம் புத்தர்.

" பல்லாயிரக்கணக்கான பசுக்களையும், எருதுகளையும் வீணாக பலி கொடுப்பதற்குப் பதிலாக அவற்றை, விவசாயத்திற்குப் பயன் படுத்தலாமே" என எதிர்க் குரல் கொடுத்தார் புத்தர். பிராமணர் இல்லாத மற்றைய இந்துக்களிடம் இந்த எதிர்ப்புக் குரலுக்கு அமோக வரவேற்புக் கிடைத்தது. நாடு முழுவதும் பயணம் செய்து, பலியிடுதலுக்கு எதிராக மக்களின் பொதுப் புத்தியைத் தட்டி எழுப்பினார். பௌத்த மதம் எளிய மக்களிடையே மிக வேகமாகப் பரவியது.

விலங்குகளை, வேள்வி என்ற பெயரில் அநியாயமாகக் கொல்லாமல், விவசாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற புத்தரின் பிரச்சாரத்தினால் விவசாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்து மதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் கூட்டம் கூட்டமாக பௌத்த மதத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

குட்டதந்தா என்ற பிராமணன் எழுநூறு எருதுகள், எழுநூறு பசுக்கள், எழுநூறு ஆடுகளைக் பலியிட்டு பெரும் வேள்வி ஒன்றை நடத்த தயாராகிக் கொண்டுள்ளார் எனக் கேள்விப்பட்ட புத்தர், குட்டதந்தாவுடன் வாதிட்டு, அந்தப் பிரமாண்டமான வேள்வியை தடுத்து நிறுத்தினார். இப்படியான செயல்கள், மக்களிடையே அபாரமான வரவேற்பைப் பெற்றன. பெரும் எண்ணிக்கையில் மக்கள் புத்த மத்ததை பின்பற்றத் தொடங்கியதால், இந்தியாவில், புத்த மதம் பெரு வளர்ச்சி பெற்றது. தாழ்ந்த ஜாதி இந்துக்கள் முழுமையாக தங்களை புத்த மதத்தில் இணைத்துக் கொண்டனர். பிராமணர்களின் முழு ஆதிக்கத்தில் இருந்த இந்து மதத்துக்கு பெரும் ஆபத்தாக மாறிப்போனார் புத்தர். புத்தரின் செல்வாக்கால் செல்லாக்காசாகிப் கொண்டிருந்தார்கள் பிராமணர்கள்.

தங்களுடைய செல்வாக்கு குறைந்து வருவதைக் கண்ட பிராமணர்கள் இந்தியாவில் இருந்து பௌத்த மதத்தை ஒழித்துக் கட்ட "மாஸ்டர் பிளான்" போட்டனர். இந்த மாஸ்டர் பிளான் பல தளங்களில் போடப்பட்டது. பிராமணர்களுக்கு நெருக்கமான மன்னர்களின் துணையுடன் பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டனர். பௌத்தத்தை பின்பற்றும் மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஷஷாங் என்ற பிராமண மன்னன், புத்தர் ஞானம் பெற்ற போதிமரத்தை அழித்தான். பௌத்த மதத்துக்கு எதிரான

சித்தாந்த ரீதியான போரை ஆதி சங்கரர் என்ற பிராமணர் தொடங்கினார். இந்தக் களேபரங்களுக்கு மத்தியில்தான், பிராமணர்கள் உள்பட அனைத்து இந்துக்களாலும் ஒரு காலத்தில் மிகவும் விரும்பி உண்ணப்பட்ட மாடு, தெய்வ ஸ்தானத்தையும், தாய் ஸ்தானத்தையும் பெற்றது.

அதாவது, மாடுகளைக் கொல்லாமல் அவற்றை, விவசாயத்துக்குப் பயன்படுத்தலாம் என்ற புத்தரின் கோரிக்கையே அவர்பால் ஆயிரக்கணக்கான, நம்பிக்கையாளர்களை ஈர்த்தது. பார்த்தார்கள் பிராமணர்கள், புத்தரின் அந்தக் கோரிக்கையை தங்களது கோரிக்கையாக்கினர். மாட்டை கொல்லக் கூடாது என்பதற்காக மாட்டுக்குத் தெய்வ வடிவம் கொடுத்தார்கள். பசுவின் தலையில் சிவன், நெற்றியில் சிவசக்தி, மூக்கின் நுனியில் முருகன் என பசுவின் உடல் முழுவதும் கடவுளர்கள் உறைவதாக கதை விட்டனர். வெறும் கோ, "கோமாதா" ஆக்கப்பட்டது. கடவுளர்களாலும், தேவர்களாலும் விரும்பிப் புசிக்கப்பட்ட மாட்டிறைச்சி இந்துக்களின் உணவுப்பழக்கத்தில் இருந்து தடை செய்யப்பட்டது.

மாட்டுக்கு தெய்வ ஸ்தானம், பிராமணர்களால் வலிந்து கொடுக்கப்பட்டதால், எல்லா இந்துக்களும் மாட்டைத் தெய்வமாக வணங்க நிர்பந்திக்கப்பட்டனர். மாட்டுக்கறி உண்பவர்கள் இந்துக்களே இல்லை எனப் பழிக்கப்பட்டனர். 2500 ஆண்டுகளுக்கு முன்பு, மாட்டிறைச்சி தொடர்பாக, பிராமணர்களால் உருவாக்கப்பட்ட வன்மம், 2017- ஆம் ஆண்டு, டெல்லி- மதுரா ரெயிலில் பயணம் செய்து கொண்டிருந்த ஜுனைத் கான் என்ற பதினாறு வயதுச் சிறுவனை, "மாட்டுக் கறி உண்பவன்" எனக் கோஷமிட்டவாறே சில வன்முறையாளர்கள் கொலை செய்யக் காரணமாகியது.


சான்றுகள்:

1. *Rigveda (The Oldest Divine Book), F. Max Muller.*
2. *The Holy Vedas: Rig Veda, Yajur Veda, Sama Veda and Atharva Veda: Bibek Debroy*
3. *The myth of the holy cow: D N Jha*
4. *Holy Cow: Beef in Indian Dietary Traditions (2002): D N Jha*
5. *Did Hindus Never Eat Beef? BR Ambedkar*
6. *Mother India: A Political Biography of Indira Gandhi: Pranay Gupte*

# மிருகபலி ஆரியர்

வள்ளியூர் காவில் நடைபெறும் அடிமை வியாபாரம் தொடர்பில் எழுதி இருந்தேன் இல்லையா..? அந்த வள்ளியூர் காவுக்கு மீண்டும் ஒரு தடவை சென்றிருந்தேன். பத்திரிகையாளர் எனத் தெரிந்தவுடன், காவின் நம்பூதிரி வந்து பேச்சுக் கொடுத்தார். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, ஆதிவாசிகளின் கோவிலாக இருந்த வள்ளியூரில், இப்போது நம்பூதிரிகள் பூசை செய்கிறார்கள். வள்ளியூர் காவின் வருடாந்த விழாவிற்கு, கேரளத்தின் மூலை முடுக்கிலெல்லாம் இருந்து சுமார் இருபது இலட்சம் ஆதிவாசிகள் கூடுவார்கள். பல கிலோமீட்டர்களில் ஆதிவாசிகளின் கண்காட்சி களைகட்டும்.

கேரளத்து ஆதிவாசிகளால் வழிபடப்பட்ட, அவர்களின் பிரதான தெய்வம் வள்ளியூர் பகவதி இப்போது, நம்பூதிரிகளின் கைகளில். காலம் காலமாக ஆதிவாசிகளால் பூசை செய்யப்பட்டு வந்த, வள்ளியூர் காவில், இப்போது நம்பூதிரிகளே பூசை செய்கின்றனர். வள்ளியூர் காவு மட்டுமல்ல, கேரளத்தின் புராதன கோவில்களின் நூல் பிடித்துச் சென்றால், அவற்றில் எல்லாம் மற்ற சாதியினரே காலம் காலமாக பூசை செய்ததை அறிந்து கொள்ளலாம். வரலாற்றுப் புகழ் பெற்ற, கொட்டியூர் சிவனில் வரலாற்றுக் காலத்தில், நாயர் ஜாதியினரே பூசகர்களாக இருந்தனர். இப்போது, நம்பூதிரிகள் பூசை செய்கிறார்கள். இப்படியாக நம்பூதிரிகள் வசமாகிய கோவில்கள் எனக் கேரளத்தில், பல நூறு கோவில்களை வகைப்படுத்தலாம். மிகத் திட்டமிடப்பட்டு இந்தக் கோவில்களை தமது ஆளுகைக்கு நம்பூதிரிகள் கொண்டுவந்தார்கள்.

"ஆடு வெட்டி, பலி கொடுத்து, சாராயம் படைச்சு, அதைக் குடிச்சு ரொம்பவும் அசிங்கமாக வழிபட்டாங்க, நம்பூதிரிங்க நாங்கதான் உயிர்ப்பலியைத் தடுத்து, மதுவைத் தடுத்து, கோவிலின்

புனிதத்தை நிலை நாட்டி இருக்கோம். உண்மையில், ஆதிவாசிங்க நமக்குத்தான் நன்றி சொல்லணும்" என்றார், "ஆதிவாசிகளின் பரம்பரைத் தெய்வம், எப்படி உங்களின் கைகளுக்கு வந்தது..?" என்ற எனது கேள்விக்கு, வள்ளியூர் காவின் நம்பூதிரி.

"நம்பூதிரி சொன்னால், தெய்வ வாக்கு" என்றொரு நம்பிக்கையை, நம்பூதிரிகளே, கேரளத்தில் பரப்பி உள்ளனர். அவர்கள் கூறுவதை தெய்வ வாக்காகப் பார்க்காமல், கொஞ்சம் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், 'வள்ளியூர் காவு' நம்பூதிரி சொன்னது பச்சைப் பொய் என்பது தெரிய வரும்.

ஒரு பிராமணர் உங்களிடம் வந்து "நான் கொல்லாமையைக் கடைப்பிடிக்கிறேன்" என்றால் அது உண்மை. "என்னுடைய கடந்த ஏழு சந்ததிகளும் கொல்லாமையைக் கடைப்பிடிக்கின்றன!" என்றால் அதுவும் உண்மையாக இருக்கலாம். ஆனால், "எங்களுடைய பிராமண வரலாற்றில், நாங்கள் உயிரினங்களைக் கொன்றதே இல்லை, மதுபானம் அருந்தியதே இல்லை என்றால் அது மகா பெரிய புளுகு!".

வரலாறு என்ன சொல்கிறது....

இந்தியப் பெருங் கண்டத்துக்கு திராவிடர்கள் வருகை தந்த பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அதாவது, தோராயமாக கி.மு. 1500ம் ஆண்டளவில், மத்திய ஆசியாவில் இருந்து, கைபர் கணவாய் ஊடாக, இந்தியாவிற்கு, ஆரியர்கள் வருகை தந்தனர். மேய்ச்சல் நில நாடோடிகளான, இந்தோ-ஐரோப்பிய ஆரியர்கள், இந்தியா வருகை தந்தபோது, தங்களின் கடவுளர்களையும், தங்களின் பழக்க வழக்கங்களையும் கூடவே எடுத்துவந்தனர். அதில் ஒன்றுதான் 'மிருக பலி'.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மழை, பூமி, ஆகாயம், காற்று ஆகிய அனைத்து இயற்கை சக்திகளும் அவர்களால் தெய்வங்களாக வணங்கப்பட்டன. இந்தக் கடவுள்களுக்கெல்லாம் தலைவனாக, "சுப்ரீம் கமாண்டர்" இந்திரன் இருந்தார். போர்க் கடவுளாக மட்டுமல்லாமல், இடி, மின்னல், புயல், மழை, ஆறு கூடவே பகைவர்களை அழிக்கும் ஆற்றலைத் தரும் கடவுளாகவும் இந்திரன் இருந்தார். பூமித் தாயின் பெயர் "பிருதிவி", ஆகாயக் கடவுளின் பெயர் "தையாஸ் பிதா", பூமிக் கடவுளான "பிருதிவி"யை, "தையாஸ்" திருமணம் செய்து கொண்டிருந்தார். நெருப்புக் கடவுளாக "அக்னி"யும், விடியல் கடவுளாக "உஷா" வும், நீர் கடவுளாக "வருண"னும் இருந்தனர். இந்தக் கடவுள்களை வேண்டியும், புகழ்ந்தும் பாடிய பாடல்களின் தொகுப்பே ஆதி

வேதமான, ரிக் வேதமாகும்.

ஆரியர்கள் தங்களது கடவுளர்கள் மீது பயங்கரப் பயங்கொண்டிருந்தனர். அக்கடவுளர்களை, சாந்தமாக வைத்திருக்க, அடிக்கடி பலி கொடுத்தனர். அவர்கள் வாழும் இடங்களில் நிரந்தரப் பலி பீடங்கள் கட்டப்பட்டன. இந்தப் பலி கொடுக்கும் சடங்குகளை முன்னின்று நடத்திய ஆரியர் குழு, "பிராமணர்கள்" எனப்பட்டனர். இந்தப் பிராமணர்கள், கடவுளர்களுடன் நேரடியாகப் பேசும் சக்தி கொண்டவர்கள் என ஆரியர்கள் நம்பினார்கள். கடவுள்களுடன் டீலிங் செய்வதால், சமூகத் தளத்தில் பிராமணர்கள் உயர்வானவர்களாக மதிக்கப்பட்டனர்.



சந்திரன் சிலை

இந்தப் பிராமணர்கள் முன்னின்று நடத்திய வேள்விகளில், இந்துக்களின் தாயாக இன்று மதிக்கப்படும் பசு உள்பட, பல விலங்குகள் பலி கொடுக்கப்பட்டன. "குதிரைகள், எருதுகள், காளை மாடுகள், கருவுறாத பசுக்கள், ஆட்டுக்கடாக்கள் என்பன அக்கினி தேவனுக்காகத் தியாகம் செய்யப்பட்டன" என்கிறது இருக்கு வேதம் *(91.14)*.

தங்களுடைய நெருப்புக் கடவுளான "அக்னி" மீது ஆரியர்கள் வெடிக்கலக்கத்தில் இருந்தனர். ஆரியர்களின் அன்றாட வாழ்க்கையில், "அக்னி" முக்கிய இடம் பிடித்தார். இன்றும் கூட, ஆரியர்களின் சடங்குகளிலும், அன்றாட வாழ்க்கையிலும் நெருப்பைத் தவிர்க்கவே முடியாது. கல்யாணத்திலும், கருமாதியிலும், அக்னி தேவன் சாட்சியாக்கப்பட்டார். அக்னியை சாந்தப்படுத்த, விலங்குகளை, அக்னி குண்டத்தில், உயிரோடு போட்டு, ஆகுதி ஆக்கினார்கள்.

காளைகளையும், கன்றுகளையும் எரித்துப் பலியிடப்படுவது தொடர்பான குறிப்புகள், தைத்திரிய பிரமாணத்தில் உள்ளது. விலங்குகளை எரித்து அக்னிக்கு ஆகுதி ஆக்குவது தொடர்பான குறிப்புகள், வேதங்கள் எங்குமே பரவியுள்ளன.



அசுவமேத யாகம்

அசுவமேத யாகம்:

குழந்தைப் பிள்ளையாக, மகாபாரதம் படித்த போது, அசுவமேத யாகம் தொடர்பிலும் படித்திருப்பீர்கள். அரசனொருவன் தனது குதிரையில், தனது "அதிகார" கொடியை கட்டித் துரத்திவிடுவான். அந்தக் குதிரை செல்லும் இடமெல்லாம் பெரும் படை நடத்தி அவன் வெற்றி கொள்வான். எல்லா நாடுகளையும் வென்று சக்கரவர்த்தியாக முடி சூடிக் கொண்டபிறகு, யாகத்தீயில் அந்தக் குதிரையைப் பொசுக்கி விருந்தாக்குவார்கள். அசுவமேத யாகமும் மிருக பலிதான்.

சோம பானம்

மிருகங்களைப் பலி கொடுத்துவிட்டு, ஆரியர்கள் கூட்டாக அமர்ந்து சோமபானம் அருந்தினர் என்கின்றன வேதங்கள். உள்ளூர் வழக்குகளில் இன்றும் சாராயத்துக்கு "கோட் வேர்ட்டாக", "சோமபானம்" என்ற வார்த்தையே இருந்து வருகிறது. "சோம" என்பது ஒரு தாவரமாகும். அது என்ன தாவரம் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. வேதத்தில், இந்த சோம தாவரம் வனத்தின் தலைவன் (வனஸ்பதி), வாழ்விடத் தலைவன் (ஷேத்திரஸ்பதி), வாக்கின் தலைவன் (வாக்பதி) என்றெல்லாம் போற்றப்படுகிறது. சோம பானத்துக்குப் பயன்பட்ட தாவரம் சோம தேவதை என வேதங்களில் போற்றப்பட்டது.

ஆதி வேதமான ரிக் வேதத்தில், "சோம தாவரம்" தொடர்பில் 120 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ரிக்வேதத்தின் ஒன்பதாவது மண்டலம் முழுதும் சோம பானம் பற்றியே பாடப்பட்டுள்ளது.

"சோமத்தை பருகி இந்திரனுடைய வயிறு கடல்போல் பரவுகிறது", "ஊக்கமளிப்பதும், உற்சாகமளிப்பதுமான இந்த சோமத்தை இந்திரனுக்கு அளியுங்கள்", இவை எல்லாம் வேதங்களில், சோமபானம் தொடர்பில் உள்ள தரவுகளில் சில

உதாரணங்கள்.

பகவத் கீதையிலும் சோம பானத்தின் பெருமைய கண்ணன் பாடுகிறார்.

சோம பானம் அருந்தி பாவம் அகன்றோர் , மூன்று வேதங்களை அறிந்தோர், என்னை வேள்விகளால் வணங்கி வான் உலகைத் தர வேண்டுகின்றனர் என்கிறார்.

"பூஜை செய்யவேண்டும் என்கிற எண்ணம் கொண்டிருந்த சரளமான இயல்புடைய ஆரியர்கள், ஆத்மாவை உற்சாகப்படுத்தி உயர்த்துவதற்கும், சாதாரண நிலையில் செய்யமுடியாத செயல்களைச் செய்வதற்குமுரிய ஊக்கமும் திறமையும் மனிதர்களுக்கு உருவாகத் தாற்காலிகமாக ஒருவகை வெறி ஏற்படுத்த ஒரு திரவத்திற்கு முடியுமெனக் கண்டதோடு அதை திவ்யமான ஏதோ ஒன்று எனக் கருதத் தொடங்கினர். அதனை உட்கொள்கிற மனிதர்களுக்கெல்லாம் தெய்வீக சக்தி அளிக்கிற ஒரு தேவதையாக அவர்களது நோக்கில் அந்தப் பானம் தெரிந்தது" என்கிறார் டாக்டர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்.

ஆரியர்களின் இந்த சோமபானத்தின் மூலப் பொருள் என்ன எனத் தேடி பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தி உள்ளனர். சோம தாவரம் எது என்ற தெளிவான முடிவுக்கு அவர்களால் வரவில்லை. கஞ்சாதான் சோமதாவரம், கஞ்சா இலையுடன் பாலும் தேனும் கலந்து தயார் செய்யப்படுவதுதான், சோம பானம் எனும் ஆராய்ச்சியாளர்கள், திபெத் நாட்டில், கஞ்சாவை, "சோமராஜா" என்றே இன்றும் அழைப்பதைத் துணைக்கு அழைக்கிறார்கள். கஞ்சாவுடன் ஒப்பியம், சிரியன் ரூ, சீன ஜின்செங்க், மற்றும் போதை தரும் பூஞ்சணம் (*Amanita muscaria*) போன்றவைகளும் சோமபானத்துக்கு பயன்பட்ட சோம தாவரமாக இருக்கலாம் என பல ஆராய்ச்சியாளர்கள் தங்களது முடிவை வெளியிட்டு உள்ளனர்.

இந்திய நிலப்பரப்பில் மிகுதியாக காணப்படும் தாமரைதான் "சோமதாவரம்" எனும் கருதுகோளை எத்னோ-தாவரவியலாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட், வலுவாக முன்வைக்கிறார். இது தொடர்பான விரிவான கட்டுரையை, எழுத்தாளர் அரவிந்தன் நீலகண்டன், "சோம பானம் எனும் மர்மம்" எனும் தலைப்பில் எழுதியுள்ளார்.

வேதங்களை நீங்கள் மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்தாலே, அதில், மிருகபலி கொடுக்கப்பட்டதற்கான பல உதாரணங்களும்,

சோம பானம் எனும் இன்றைய மதுவுக்கு, மூதாதையான ஒரு போதைத் திரவத்தை அவர்கள் பயன்படுத்தியதையும் இலகுவாகத் தெரிந்து கொள்ளலாம்.

அப்படி என்றால் வள்ளியூர் காவு நம்பூதிரி எனக்குச் சொன்னது பொய் தானே..?

**மரபணு ஆராய்ச்சியும் ஆரியர்களும்.**

ஆரியர்கள் இன்னொரு தேசத்தில் இருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்துள்ளனர், என்பதை மரபணு ஆராய்ச்சி மூலமாக விஞ்ஞானிகள் அண்மையில் நிரூபித்துள்ளனர். இந்து பத்திரிகையில், டோனி ஜோசஃப் *(Tony Joseph)* என்பவர் இது தொடர்பாக எழுதிய மிக விபரமான கட்டுரை, பெரும் விவாதப் பொருளானது. நான் வள்ளியூர் காவு நம்பூதிரியை சந்தித்து, ஆரியர்கள் வந்தேறிகள் எனவும், மிருக பலி கொடுப்பவர்கள் எனவும் வாதிட்ட இரண்டு நாட்களில் இந்தக் கட்டுரை வெளியானது.

ஆதி இந்திய மண்ணுக்கு பொருந்தாத மொழியையும், விநோதமான கலாச்சாரத்தையும் உடைய ஒரு இனக் குழுமம் சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் குடியேறியுள்ளனர். ஆரியர்கள்தான் அவர்கள் என்பதே அந்த நிரூபணம்.

சமீபகாலம்வரை செய்யப்பட்டு வந்த மரபணு ஆய்வுகளின் முடிவுகள், கடந்த **12,500** ஆண்டுகளாக, இந்திய மக்களின் மரபணுத் தொகுதிக்குள், எந்த புதிய மரபணுக்களின் சேர்க்கையும் நடைபெறவில்லை என்றன. ஆரிய இனம் இந்தியாவிலேயே தோன்றின என்பதை நிரூபிக்க ஆரியர்களுக்கு இந்த மரபணு ஆய்வு முடிவுகள் வசதியாகப் போயின.

ஆனால், இந்த முடிவுகள் எல்லாமே, தாயிடமிருந்து பெண் வாரிசுகளுக்கு கடத்தப்படுகின்ற *mtDNA (matrilineal DNA)* என்ற வஸ்தை ஆய்வு செய்து பெறப்பட்ட முடிவுகளாகும் ஆண் வம்சாவழிக்குக் காரணமான Y-DNA தரவுகளை அவர்கள் ஏனோ கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால், மிக அண்மைக் காலத்தில், *Y-DNA*-யை மையமாக வைத்து விஞ்ஞானிகள் செய்த ஆய்வுகளில், இந்திய ஆண்களின் மரபணுத் தொகுதியில், வெளியிலிருந்து வந்த மரபணுக்கள் கலந்திருக்கின்றன என்பதைக் கண்டறிந்துள்ளனர். இதன் மூலம், கடந்த **12,500** ஆண்டுகளில், இந்தியாவில் எந்தவிதமான குடியேற்றமும் நிகழவில்லை என்ற ஆரியர்களின்

வாதம் பொய் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்குள் குடியேறியவர்களில் பெரும்பாலானவர்கள், ஆண்களாக இருந்தமையால், பெண் மரபணுத் தொகுதியில் தெரியாத மாற்றங்கள், ஆண் மரபணுத் தொகுதியில் தெரிந்தன.

மரபணு விஞ்ஞானத்தில், *Haplogroup* என்றொரு பதம் உள்ளது. ஒரே வம்சாவளியைக் குறிக்க இந்தப் பதத்தை பயன்படுத்துவார்கள். அதாவது, ஒரே *Haplogroup*-ஐ சேர்ந்தவர்கள், ஒரே வம்சாவளியில் இருந்து வந்தவர்கள் எனப் பொருள்படும். இந்திய ஆண்களில் தோராயமாக **17.5** சதவீதமானவர்களின் மரபணுக்கள், மத்திய ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், தெற்கு ஆசியாவிலும் பரவியிருக்கும் *R1a-Haplogroup*-வுடன் ஒத்துப் போகிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அது என்ன *R1a-Haplogroup..?*

ஐரோப்பா, ஆசியா வில் மிகப் பரவலாகக் காணப்படும், வம்சாவளித் தொடர்ச்சியை, *R1a- Haplogroup* என்கிறார்கள். இந்த *R1a* வம்சாவழி, மத்திய ஆசியாவின் ஸ்டெப்பி புல்வெளிப் பிராந்தியத்தில் இருந்து, மேற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும் பரவியதென்றும் அவ்வாறு பரவும் வழியில் அது பல்வேறு துணைக்கிளைகளாக பிரிந்ததென்றும் நவீன மரபணு ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்திய ஆண்களின் உடலில் பரவலாகக் காணப்படும், *R1a* குழுவைச் சேர்ந்த மரபணுக்கள், மத்திய ஆசியாவில் இருந்து, இந்தியாவிற்குள் குடியேறினார்கள் என்பதற்கு சான்றாக உள்ளது. இந்த *R1a*-யிற்கு , *R-M420* என இன்னொரு பெயரும் உண்டு. இந்த *R-M420*-யுடன் ஒத்துப் போகிறவர்கள் ஆரிய வம்சாவளியினர் என்கிறார்கள் விஞ்ஞானிகள். ( ஆரியர்கள் சரியான **420** ஆக இருந்தாதால்தான், அந்த மரபணுத் தொடர்ச்சிக்கு, *R-M420* என விஞ்ஞானிகள் பெயர் வைத்ததாக அர்த்தம் கொள்ளக் கூடாது)

அதாவது, சுமார் **2000- 4000** முற்பட்ட காலப்பகுதியில், ஒரு சிக்கலான மரபணுக் கலப்பு, இந்தியப் பெருந்தேசத்தில் நிகழ்ந்துள்ளது. ஆதிவேதமான ரிக் வேதம் இயற்றப்பட்ட காலமும் இதுவே என்பதால், அந்த மரபணுக் கலப்பு ஆரியர்கள் வருகையால் ஏற்பட்டதென்கிறார்கள் விஞ்ஞானிகள். அப்படியென்றால் இந்தியாவின் பூர்விக குடிகள் திராவிடர்களா என்றால், அதுவும் இல்லை. அந்த வரலாறு அறிய சுமார் ஒன்றரை லட்சம் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

"நாங்களெல்லாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்" என மகிந்த ராஜபக்ச சொல்வது, தமிழர்- சிங்களவர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் பொருந்தும். மனித குலம் முழுவதும் ஒரே பெண்ணில் இருந்துதான் உருவாக்கப்பட்டது என்கிறார்கள் விஞ்ஞானிகள். எங்கள் எல்லோரதும் ஆதித் தாய், சுமார் 150,000 ஆண்டுகளுக்கு முன்பாக கிழக்கு ஆபிரிக்காவில் தோன்றினார். அவர் தோன்றிய பொறிமுறையைத்தான் "கூர்ப்பு" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

உன் மொழி பெரிதா என் மொழி பெரிதா என எத்தனை பிக்கல் பிடுங்கல்கள். சண்டைகள். ஆனால், உலகில் இன்று புழக்கத்தில் உள்ள நாலாயிரத்துச் சில்லறை மொழிகளும் ஒரே ஒரு ஆதி மொழியில் இருந்துதான் உருவாகியுள்ளது. சுமார் 15,000 ஆண்டுகளுக்கு முன்புவரை அந்த ஆதி மொழிதான் மனித குலத்தின் மொழியாக இருந்துள்ளது. அதில் இருந்துதான் அனைத்து மொழிகளும் தோன்றின.

இந்தியாவின் ஆதிக் குடிகள் யார்..? ஆரியரா இல்லை திராவிடரா..? இருவருமே இல்லை என்கின்றன ஆய்வுகள். இந்தியாவிற்கு முதலில் வந்தவர்கள் *Negritos*. குப்தர்களின் சிலைகளிலும், அஜந்தா ஓவியங்களிலும் காணப்படும் இவர்கள், இன்று மிகச் சொற்ப அளவில் அந்தமான் நிக்கோபார் காடுகளில் எஞ்சி உள்ளனர்.

இந்தியாவிற்கு விவசாயத்தை கொண்டுவந்து, நாகரீகத்தைக் கட்டி எழுப்பியவர்கள் *Mediterraneans*. இவர்கள் திராவிட மொழியொன்றைப் பேசினார்கள். அந்த மொழி ஆதித் தமிழ் மொழியாக இருக்கும் வாய்ப்புகளை மறுக்கமுடியாது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் ஆதியில் வாழ்ந்த திராவிடர்கள், பிற்காலத்தில், ஆரியர்களால் இந்தியாவின் கீழ் பாகத்துக்கு துரத்தப்பட்டனர்.

*Caucasoid* என்ற பெரும் இனத்தின் இன்னொரு உப இனம்தான் ஆரியர்கள். இவர்கள் திராவிடர்கள் இந்தியாவிற்கு வருகை தந்த பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இந்தியாவிற்கு வந்து, காலம் முழுவதும் திராவிடர்களுடன் கொழுவுப்பட்டனர். திராவிடர்கள் ஆரியர்களைப்போல உலகம் முழுவதும் இருந்து பல இனக் குழுமங்கள் இந்தியாவை நோக்கி வந்தன. இங்கே வாழ்ந்தன. இனக் கலப்பு செய்து கொண்டன.

ஆரியர்களும் திராவிடர்களும் கலந்த இனத்தவர்கள் உத்தரப் பிரதேசம், பீகார் மற்றும் ராஜஸ்தானில் வாழ்கின்றனர். *Caucasians*

இனத்தின் வழித் தோன்றல்கள் பஞ்சாப்பிலும் காஷ்மீரிலும் வாழ்கின்றனர். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் துருக்கி-ஈரானியக் கலவையால் உருவான மக்கள் வாழ்கின்றனர். மங்கோலிய வழி வந்தவர்கள் வங்காளத்திலும், ஒரிசாவின் சில பகுதிகளும் வாழ்கின்றனர். திராவிட இனத்தின் வழி வந்தவர்கள் தென் இந்தியாவில் வாழ்கின்றனர்.

தொடர்சியான குடியேற்றங்களாலும், படையெடுப்பு களாலுமே இந்தியா என்ற பெரும் தேசம் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் யாருமே மொழி, இன, மத அடிப்படையில் தூய்மைவாதம் பேசமுடியாது. பாபர் மசூதியை உடைத்த கரசேவகர்களின் உடலில் முஸ்லிம்களின் மரபணுக்கள் உள்ள அதேவேளை, மும்பையில் குண்டை வெடிக்க வைத்த முஸ்லிம் தீவிரவாதிகளின் உடலில் இந்து மரபணுக்கள் உள்ளன. இதுதான் சத்தியம்.

சான்றுகள்


1. *the Rig-Veda: Edward Delavan Perry*
2. சோமபானம் எனும் மர்மம்- அரவிந்தன் நீலகண்டன்.
3. *Soma: divine mushroom of immortality: R. Gordon Wasson*
4. *The Indus: Lost Civilizations : Andrew Robinson*


ooo



# திப்புசுல்தானும் ஜெயலலிதாவும்



*தளிப்பறம்பு ராஜராஜேஸ்வரர் கோவிலுக்கு எதேட்சையாகத் தான் சென்றிருந்தேன். தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்ட கோவில் நம்பூதிரி ஒருவர், "திப்பு சுல்தான் அழித்த கோவிலை உங்க ஜெயலலிதாதான் மீட்டுக் கொண்டுவந்தார்" என்றார். I was too engrossed.*

*கொஞ்சம் வரலாறு பார்ப்போம்.*

*வரலாற்றுப் பிரசித்தமான ராஜராஜேஸ்வரன் கோவில் கேரளத்தின் கண்ணூர் மாவட்டத்தில் தளிப்பறம்பில் உள்ளது. கேரளாவில் உள்ள பண்டைய 108 சிவ ஸ்தலங்களில் இக்கோவில் முக்கியமானது. திரேதா யுகத்தில் இருந்தே இந்தக் கோவிலுக்கு வரலாறு உள்ளது. இங்கே சிவனும் விஷ்ணுவும் இணைந்து "ராஜராஜேஸ்வரனாக" உள்ளமை இன்னொரு சிறப்பாகும்.*

*இராவணனுடன் கொழுவுப்பட இலங்கை சென்ற ராமன் நாடு திரும்பும் வழியில் இந்தக் கோவிலுக்கு வந்து சிவனை வணங்கிச் சென்றார் என்றொரு வரலாறு உண்டு. உட்லாக்கடியாக இருக்கும் என நினைத்தேன். ஆனால், மூலஸ்தானம் முன்பாக உள்ள ராமர் வழிபட்ட, "நமஸ்கார மண்டபம்" இன்றும் பூட்டிய படியே உள்ளது. "ராமர் வணங்கிய இடத்தில் மற்றவர்களை வணங்க எப்படி அனுமதிப்பது..?" என லாஜிக் சொன்னார், கோவில் நம்பூதிரி ஒருவர். சிவனும் விஷ்ணுவும் சேர்ந்து இக்கோவில் உறைவதாக கதை உள்ளதால் இங்கே வழிபாட்டுக்காக துளசி இலைகளின் தளிர்களையே பயன்படுத்துகிறார்கள்.*

*18ஆம் நூற்றாண்டு வரை இந்தக் கோவிலுக்கு ஏழு அடுக்குப் பிரமாண்டமான கோபுரம் இருந்தது. ராஜராஜ சோழன் கட்டியிருந்தார். 18-ஆம் நூற்றாண்டில் திப்பு சுல்தான் படையெடுத்து வந்து இக்கோயில் கோபுரத்தை*

தரைமட்டமாக்கினார். முன்னேறிச்சென்று, கோவிலை தரைமட்டமாகச் முற்றெடுத்த திப்புவின் படைத்தளபதியை பாம்பு கடித்ததால், அந்த முயற்சி கைவிடப்பட்டது. இரண்டு நூற்றாண்டுகள் கழித்தும், இன்றும் கோபுரத்தின் உடைந்த சிதிலங்களை இக்கோவில் பிரகாரத்தில் காணலாம். கர்நாடகாவிலும், கேரளாவிலும் இப்படியாக பல கோவில்கள் திப்பு சுல்தான் என்ற மதவெறி ஆட்சியாளரால் அழிக்கப்பட்டன.

திப்பு சுல்தானால் பெருமை இழக்கச் செய்யப்பட்ட இந்தக் கோவில் மீண்டும் "லைம் லைட்"டுக்கு வந்தது ஜெயலலிதாவால் என்பதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்.

பரப்பனங்காடி உன்னிகிருஷ்ண பணிக்கர் என்ற கேரளாவின் புகழ்பெற்ற ஜோசியர் ஜெயலலிதாவின் ஆஸ்தான ஜோதிடராகப் பல ஆண்டுகள் இருந்தார். இவர் கண்ணூருக்கு அடுத்த மலப்புரத்தை சேர்ந்தவர். பரம்பரை பரம்பரையாகவே ராஜராஜஸ்வரர் கோவிலின் பெருமைகளை அறிந்தவர்.

2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில், வியாழ பகவான், ஜெயலலிதாவிற்கு கொஞ்சம் அலுப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார். இந்தக் கோவிலில் வியாழ பகவான் எப்போது உறைவதாக ஒரு ஐதீகம் உண்டு என்பதால், இந்தக் கோவிலில் பரிகாரம் செய்யச் சொன்னார் உன்னி.

2001ஆம் ஆண்டு தன்னுடைய தோழி, சசிகலா சகிதம் பெரும் *convoy* யில் கோவிலுக்குப் படையெடுத்தார் ஜெயலலிதா. சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு வேறு வரவிருந்த நேரம். இந்தியாவின் அனைத்து மீடியாக்களும் கோவிலுக்குப் படையெடுத்தன. அடித்தது லக் ராஜராஜேஸ்வரனுக்கு. ஒரேநாளில், எங்கும் எதிலும் பேசு பொருளானார் ராஜராஜேஸ்வரர்.




**திப்பு சுல்தான் உடல் கண்டெடுக்கப்பட்ட இடம்**

இன்றும் கோவிலில் உள்ள நம்பூதிரிகளிடம் பேசிப் பாருங்கள், ஜெயலலிதாவின் வருகைக்குப் பிறகே புதர் மண்டிப்போய் இருந்த கோவில் வெளியுலகின் வெளிச்சத்துக்கு வந்தது என்பார்கள். ராஜராஜேஸ்வரனாகப் பார்த்துத் தான் ஜெயலலிதாவை அனுப்பியதாக ஒரு நம்பீசர் சொன்னார். (நம்பீசர் வேறு, நம்பூதிரிகள் வேறு, நம்பீசர்கள் கோவிலில் பூஜை செய்தல் தவிர்ந்த சில்லறைப் பணிகளை பரம்பரை பரம்பரையாக செய்து வரும் ஜாதியினர்).

"திப்பு சுல்தானால் அழிக்கப்பட்ட கோவில், ஜெயலலிதாவால் மறுவாழ்வு பெற்ற"தென்றார் ஒரு நம்பூதிரி. *Exaggeration* இல்லை. தளிப்பறம்பில் யாரைக் கேட்டாலும் அப்படித்தான் சொல்கிறார்கள். இன்னொரு மேட்டரையும் அவதானித்தேன். நம்பூதிரிகள் யாருமே ஜெயலலிதாவை விட்டுக் கொடுத்துப் பேசவில்லை. அவரை, ஏதோ காமராஜர் ரேஞ்சில் நேர்மையான தலைவர் போலவே பேசினர். பிராமண ஜாதிப் பாசம் காரணமாக இருக்கலாம் என நினைக்கிறேன்.

ஜெயலலிதாவை பின்பற்றி, சிக்கல் ஏற்படும்போதெல்லாம், பல அரசியல் தலைவர்கள் இக் கோவிலுக்கு படையெடுக்கின்றனர். எப்போதெல்லாம் பிரச்னை வருகிறதோ, அப்போதெல்லாம், இக்கோவிலுக்கு வருவதை வழக்கமாக வைத்திருக்கிறார், கர்நாடக முன்னாள் முதல் மந்திரி எடியூரப்பா. வழக்கில் சிக்கிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் முன்னாள் தலைவர் சிறீனிவாசன் கூட இந்தக் கோவிலுக்கு வந்துள்ளார். ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் இக்கோவிலில் நெய்விளக்கு அபிஷேகம் நடத்தப்பட்டதாகச் சொன்னார் கோவில் அதிகாரி ஒருவர். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூட இந்தக் கோவிலுக்கு வந்து பரிகாரம் செய்துள்ளார்.

இராமர் காலம் முதல்கொண்டு இந்தக் கோவில் இருந்தாலும், முதலாம் இராஜராஜ சோழன் இக் கோவிலை பிரமாண்டமாகக் கட்டினான் என்பது வரலாறு. அதனால்தான் இக்கோவில், ராஜ ராஜேஸ்வரன் கோவில் எனப் பேர் பெற்றது என்றொரு கதையும் உண்டு. கோவிலின் வெளிப்பிரகாரம், பிரமாண்டமான சுற்றுமதிலில் எல்லாமே சோழர்களின் கட்டடக் கலை அப்பட்டமாகத் தெரிகிறது. கோவில் குளமான, "ஆச்சிரமத்துச் சிறை"யில் பழந்தமிழர் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இத்தனை இருந்தும், இக் கோவிலுக்கும், தமிழர்களுக்குமான வரலாற்றுத்

தொடர்பு, திட்டமிட்டு மறைக்கப்படுகிறது. ராஜராஜேஸ்வரன் கோவில் என்றால், சோழ மன்னனின் பெயரில் ஆகிவிடும் என்பதால், இக்கோவிலை, "ராஜராஜேஸ்வரி அம்பலம்" என்றுதான் தளிப்பறம்பில் அழைக்கிறார்கள். (அம்பலம் என்றால் மலையாளத்தில் கோவில்).

கோவிலில் பொறுப்புக்களில் பல தமிழர்கள் உள்ளனர். ஆனால், அவர்கள் தங்களை தமிழர்களாக வெளிக்காட்டத் தயங்குகிறார்கள். மிக அழகாகத் தமிழ் பேசிய, கோவில் அதிகாரி ஒருவரிடம், "நீங்கள் தமிழரா.." எனக் கேட்டேன்.. சுற்றும் முற்றும் பார்த்தவர். "ஆமா... தமிழன்தான் ஆனா, வெளில சொல்றதில்ல" என்றார்.

# திலீப் ஏட்டனும் டிங்கோயிஸ்ட்டுகளும்

"ஜனப்பிரிய நாயகன்" திலீப் ஏட்டனை கடைசியும் முதலுமாக ஒரே ஒரு தடவைதான் சந்தித்தேன். "சினிமா எக்ஸ்பிர"ஸிஸ் உதவி ஆசிரியராக இருந்தபோது; பேட்டிக்காக வேண்டித் தொலைபேசினேன். கொச்சின் வரச் சொன்னார். அங்கே புகழ் பெற்ற கல்லூரி ஒன்றில் நடைபெற்ற கலாச்சார விழாவிற்கு பிரதம விருந்தினராகச் சென்றபோது; கூடவே அழைத்துச் சென்றார்; காரிலே பலதும் பத்தும் பேசிக் கொண்டு சென்றோம். அந்தக் கார் கல்லூரியை அடையும் வரை திலீப் என்ற நடிகனின் பிரமாண்ட பிம்பம் எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

கல்லூரியை அடைந்ததும் காரைச் சூழ்ந்தவர்கள் "திலீப் ஏட்டா" என்ற பலமான, அடித்தொண்டையில் இருந்து எழுந்த அலறல்களுடன் அவரை வரவேற்றனர். அந்த அடித்தொண்டை அலறல், திலீப் கேரளத்தில் எவ்வளவு பெரிய மாஸ் ஹீரோ என்பதை எனக்கு உணர்த்தியது. ரசிகர்கள் மொய்த்து காயம் ஏதும் படாமல் இருக்க; காரைச் சூழந்த போலீசார்; "ஜனப்பிரிய நாயக"னை, ஜனங்களிடம் இருந்து காத்தனர்.

துல்கர் சல்மான், நிவின் பாலி, பஹத் பாசில் என இளவட்ட ஹீரோக்கள் அள்ளு கொள்ளையாக கேரளத்தில் இருந்தாலும், மோகன் லால், மம்முட்டிக்கு அடுத்து; வணிக ரீதியிலும், ரசிகர் ரீதியிலும் கேரளத்தின் மிகப் பெரிய ஸ்டார் திலீப் ஏட்டன் தான்.

ஆயிரக்கணக்கான ரசிகர்களால் "திலீப் ஏட்டா" என்ற உணர்ச்சிகரமான அடித்தொண்டை அலறல்களுடன், கொச்சின் கல்லூரியில் வரவேற்கப்பட்ட அதே திலீப் ஏட்டனை; பயங்கரக் கிரிமினலைப் போலக் கழுத்தைப் பிடித்துக் கேரளப் போலிஸ் கைது செய்து கொண்டு சென்ற வேளையில் நான் கேரளத்தின் அடர்

காடுகளுக்குள் ஈழத்தின் வேர் தேடிச் சுத்திக் கொண்டிருந்தேன். திலீப் ஏட்டனை விசாரணைக்காகக் கொண்டு சென்ற ஆலுவா போலீஸ் நிலையம் முன்பாகக் கூடிய நூற்றுக் கணக்கான மலையாளிகள், முக்கியமாக திலீப் ஏட்டனின் பரம ரசிகர்கள், திலீப் ஏட்டனை படு கேவலமாக வைதார்கள். அவரை நோக்கி பரிகசித்துக் "கூ" அடித்தனர். "*Welcome to central jail*" என்ற அவரின் மிகப் பிரபலமான படத்தின் பெயரை, சற்றே பரிகசிக்கும் தொனியில் கூவித் திலீப்பை இகழ்ந்தனர். "ஜனப்பிரிய நாயகன்" என மக்களால் புகழப்பட்ட நாயகனை; ஜனங்கள் தாக்கிவிடக் கூடாது என்பதற்காக, அவரைச் சூழக் கடும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. "*King liar*" என்ற திலீப்பின் படத்தை ஒளிபரப்பி சில்லறை பார்த்த டி.வி சேனல்கள்; அதே "கிங் லையர்" என்ற பெயரில் திலீப்பை பரிகசித்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்பின.

நான் அடுத்த நாள் பஸ் பிடித்து திலீப் ஏட்டனைப் பார்க்க ஆலுவா சென்றேன்.

கேரளத்தில் உள்ள அத்தனை மக்களதும் இந்தக் கணத்தின் பேசு பொருளாகத் திலீப் ஏட்டன் தான் உள்ளார். தாங்கள் தலையில் வைத்துக் கொண்டாடித் தீர்த்த ஒரு மகா நடிகனின் பிம்பம்; மணல் கோட்டைபோல பொலபொல வென்று உடைந்து விழுந்ததை மலையாளிகளால் தாங்க முடியவில்லை. நான் பார்க்கும் மலையாளிகள் எல்லாம் திலீப்பை வைகிறார்கள். நம்பி ஏமாந்துபோன தொனி அவர்களின் வார்த்தைகளில் தெரிகிறது.



கைதாகும் திலீப்

அந்த ஏமாற்றம் சினமாக வெடிக்கிறது. சினம் வார்த்தைகளாக வெடிக்கிறது. உலகிலேயே மோசமான சித்திரவதை என்ன தெரியுமா...? நாங்கள் நேசிக்கும் ஒருவரின் பிம்பம் உடைந்து போவதுதான் அது!




திலீப் என்ற நடிகனை மக்கள் திட்டுவது இது முதல் முறையல்ல.

கோபாலகிருஷ்ணன் பத்மநாபன் பிள்ளை என்ற இயற் பெயரும்; "திலீப்" என்ற நடிப்புப் பெயரும் உடைய பெரிதாக புகழ் மேகம் சூழாத வளர்ந்துவரும் இளம் நடிகர் ஒருவர்; மஞ்சு வாரியர் என்ற கேரளத்தின் தேவதையை திடீர் திருமணம் செய்து; திருமணத்தின் தொடர்ச்சியாக, இனிமேல் திரைப்படங்களில் நடிக்க மாட்டேன் என மஞ்சு வாரியர் அறிவித்தபோது, அத் தேவதையின் ரசிகர்களாக இருந்த ஒட்டுமொத்த கேரளமுமே திலீப் ஏட்டனை வைதது. இரண்டு வைதல்களையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்த முடியாவிட்டாலும். இரண்டுமே வைதல்கள்தான்.

ஆலுவா புழையோரமாக, எந்தவிதமான சினிமாப் பின்னணியும் இல்லாத, சாதாரண நாயர் குடும்பத்தில், பிறந்த குண்டான, கட்டையான சினிமா அழகுகளுக்கு அப்பால் பட்ட ஒரு இளைஞன், மிமிக்ரி ஆர்ட்டிஸ்ட்டாகி, தனி ஒருவனாகக் குத்தி முறிந்து மலையாள தேசத்தின் மகா நடிகனாகி, அது மட்டுமல்லாமல் மலையாள தேசத்தின் உணவு வர்தகத்திலும், ரியல் எஸ்டேட்டிலும் முதலிடம் பிடித்து, மலையாளிகளின் இதய நாயகியான மஞ்சு வாரியரை கல்யாணம் செய்தான் என்பதை அதிரடித் திருப்பங்கள் நிறைந்த சகாச சினிமாவாக எடுக்கலாம்.

திலீப்பின் இன்றைய பிம்பங்களுக்குப் பின்னால், அவரின் கடின உழைப்பு, விடா முயற்சி, அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை, விட்டுக் கொடுக்காத தன்மை எல்லாமே உண்டு. ஆனால், அதே மலையாளிகளின் உள்ளங்கவர் நாயகன், கழுத்தைப் பிடித்துக் கிரிமினல் போலக் கைது செய்யப்படவும் அவரின் குண இயல்பே காரணமாகியது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா!" என்றான் தமிழின் ஆதிப் புலவன் கணியன் பூங்குன்றனார்.

டிங்கோயிஸ்ட்டுகள்:

"ஒன்று தெரியுமா..? டிங்கனை மதிக்காததுதான் திலீப் சிறை செல்லக் காரணம்" அடித்துச் சொன்னார் எர்ணாங்குளத்தில் நான் சந்தித்த டிங்கோயிஸ்ட் ஒருவர். அது என்ன "டிங்கன்", "டிங்கோயிஸ்ட்" என்கிறீர்களா..?



டிங்கோயிஸ்ட் எலி

நம்ம ஊர் "அம்புலி மாமா" போல, கேரளத்தில் அநியாயத்துக்கு சக்கைபோடு போட்ட சிறுவர் இதழ் "பால மங்கலம்". இந்த "பாலமங்கலம்" இதழில் தொடராக வெளிவந்த, கற்பனை சூப்பர் ஹீரோ பாத்திரம்தான் "டிங்கன்". நம்ம ஊர் "இரும்புக்கை மாயாவி" போல என வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் "டிங்கன்" ஒரு எலி. அதாவது "சூப்பர் எலி"

மலையாள சிறுவர் எழுத்தாளர் சோமசேகரன், ஓவியர் பாபி ஆகியோர் இணைந்து, டிங்கன் எலியை 1983-ஆம் ஆண்டு உருவாக்கினார்கள். "பாலமங்கலம்" இதழில், சுமார் 30 ஆண்டுகள் தொடராக வெளிவந்த டிங்கன் கார்ட்டூன், 2012-ஆம் ஆண்டு பாலமங்கலம் இதழ் இழுத்து மூட நிறைவுக்கு வந்தது. ஆனால், கேரளத்து இளம் தலைமுறை இடையே டிங்கனுக்கான மவுசு குறையவில்லை. டிங்கன் பயங்கரமாகக் கொண்டாடப்பட்டார்.

அந்த டிங்கனை சில மலையாளிகள் கடவுளாக வழிபடுகின்றனர். டிங்கனைக் கடவுளாக வழிபடுவதால் அவர்கள் "டிங்கோயிஸ்டுகள்". அவர்கள் மதம் "டிங்கோயிஸம்". அவர்களின் வேத நூல் "டிங்கா புராணம்"

இந்த டிங்கோயிஸ்ட்டுகளைக் கிண்டல் அடித்து, "புரபெஷர் டிங்கன்" என்ற படத்தில் நடிக்க இருந்தார் திலீப். "பார்த்தீர்களா, ஏக இறைவன் டிங்கனின் பலம் தெரியாமல், மோதப் போய், இன்னிக்கு ஜெயில்ல இருக்கார் திலீப். டிங்கனைக் கோபப்படுத்தியவர்கள் வாழ்வில் உய்யவே முடியாது. இதை நான் சொல்லல சாரே 'டிங்கா புராணம்' சொல்லுது" என்றார் சுதீப் என்ற டிங்கோயிஸ்ட்.

சுதீப்பின் வீட்டை சுற்றும் முற்றும் நோக்கினேன். வீட்டில் பெரிய டிங்கன் எலியின் படமும், அதற்குக் கீழே, பூசை புனஸ்காரத்துக்குத் தேவையான பொருள்களும் இருந்தன.

என்னுடன் பேசத் தொடங்க முன்னர் டிங்கனை மனமுருக வழிபட்டார். என்னை உட்கார வைத்து, "டிங்கன் எப்படி இந்த உலகைப் படைத்தார் தெரியுமா..?" எனப் பாடம் எடுத்தார். சிரிக்காமல் கேட்டேன். ஏனென்றால், அவர் கூறிய கதைகளில் உள்ள டிங்கனை நீக்கி விட்டு அந்த இடங்களில் சிவனையோ, யேசுவையோ, அல்லாவையோ வைத்தால் அவை நாம் காலம் காலமாகக் கேட்டு அலுத்துப் போன, எங்களின் வேதங்கள், பைபிள், குரான் சொன்ன கதைகள்போலவே இருக்கும்.

அவர்கள் ஏன் டிங்கனை கடவுளாக வழிபடுகின்றனர்..?

அது ஒரு பகிடிக் கதை...

மதங்களின் பெயரால் நடைபெறும் கேலிக் கூத்துக்களை கிண்டல் செய்ய சில ஏதிஸ்டுகளால், 2008- ஆம் ஆண்டு கேரளத்தில் உருவாக்கப்பட்ட, *Parody Religion*, டிங்கோயிஸம். டிங்கோயிஸம் மூலமாக பிரதான மதங்களின் மூர்க்கத் தன்மைகளையும், முட்டாள் தனங்களையும் கிண்டல் அடிப்பதுதான் டிங்கோயிஸம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கமாகும். "நீ இறைவன் என்ற பெயரில் யாரையோ வழிபடும்போது, நான் ஏன் சூப்பர் எலி டிங்கனை வழிபடக்கூடாது" என்பது அவர்களது வாதமாகும். சமூக வலைத் தளங்கள் மூலமாக, டிங்கோயிஸம் பரப்பப்பட்டது. டிங்கன் எலி மூலமாக மற்ற மதத்தின் கடவுளர்கள் எள்ளி நகையாடப்பட்டனர்.

*Organized* மதங்களைக் காமெடி செய்ய தொடங்கப்பட்ட டிங்கோயிஸம், இப்போது சில மலையாளிகளால், தீவிரமாகப் பின்பற்றப்படுவதுதான் ப்ளாக் காமெடி. டிங்கனைப் பின்பற்றுபவர்கள் எல்லோரும், டிங்கனைக் காமெடியாகப் பார்க்கவில்லை. சிலர் அவரை, தங்களது ஏக மீட்பராகப் பார்க்கிறார்கள். அவர்கள் டிங்கன் தொடர்பாக உருவாக்கி வைத்துள்ள கதைகள், பைபிள், குரான், இந்துமத வேதங்களுக்கு கொஞ்சமும் குறைந்ததல்ல.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டிங்கன் இந்த உலகைப் படைத்தார். பிறகு சில லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு, மனித குலத்தைப் படைத்தார். என்னை உங்களை எல்லாம் படைத்தார். உலகின் இன்றைய மதங்களுக்கெல்லாம் ஆதியானது டிங்கோயிஸம், டிங்கன்தான் இந்தப் பூமியின் ஆதிக் கடவுள் எனச் சொல்கிறார்கள். அதை நம்பவும் செய்கிறார்கள். நான் எர்ணாங்குளத்தில் சந்தித்த சுதீப் அதில் ஒருவர்.

இவர்களைக் கிண்டல் செய்து; "புரபெஷர் டிங்கன்" என்கிற படத்தில் நடிக்க இருந்தார் திலீப். தங்களது கடவுள் 'டிங்கனை'




காமெடி செய்யக் கூடாது என சில நாள்களுக்கு முன்பு, திலீப்பின் *Dhee puttu* கடைக்கு முன்பாக டிங்கோயிஸ்டுகள் போராட்டம் நடத்தினர். மதத்தின் பெயரால் நடக்கும் கூத்துகளைக் காமெடி செய்யவே அந்தப் போராட்டம் என்றனர்!. ஆனால், டிங்கனின் தீவிர பக்தர்கள் சிலரும் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

டிங்கனைக் காமெடிக் கடவுளாக வழிபடுபவர்களையும் கேரளத்தில் கடந்து வந்தேன். அதே நேரம் டிங்கனை ஏக இறைவனாக நினைத்து மனமுருக வழிபடுபவர்களையும் கேரளத்தில் கடந்து வந்தேன். காமெடிக்காகத் தொடங்கப்பட்ட டிங்கோயிஸம் நாளை பெரு மதமாகக் கூட உருவாகலாம். பெரும் எண்ணிக்கையான பக்தர்களை ஈர்க்கலாம். மாற்றுக் கருத்தாளர்கள் மேல் டிங்கனின் தீவிர பக்தர்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விடலாம். டிங்கன் கேட்பார் மேய்ப்பார் இல்லாத பெருங் கடவுள் ஆகலாம், எல்லா கடவுளர்களும் அப்படித்தானே உருவாக்கப்பட்டனர்..?

# *Buddy Love*

"மணத்தணா" என்ற கேரளத்தின் மிகச் சிறிய கிராமம் ஒன்றுக்கு வந்திருந்தேன். மணத்தனா கேரளத்தின் ஆதிக் குடியேற்றங்களில் ஒன்று. "சப்பாரம்" என்ற உலகப் புகழ் பெற்ற பகவதி அம்மன் கோவில் உள்பட, சுமார் பத்துக்கும் மேற்பட்ட பழமையான கோவில்கள் இச் சிறிய, வெறும் மூன்று கிலோமீட்டர்கள் பரப்பளவுள்ள, கிராமத்தில் உள்ளன. சுமார் **350** ஆண்டுகளுக்கு முன்பே, ஜனநாயக முறையிலான வாக்கெடுப்புகள் இக்கிராமத்தில் நடந்ததற்கான எழுத்து பூர்வமான ஆதாரங்கள் உள்ளன. அங்கே, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பாடப்பட்டுவரும் கிராமியப் பாடல்களிலும், இந்த வாக்கெடுப்பு முறை இருந்ததை அறிந்து கொள்ளலாம்.

இங்குள்ள பெரும்பாலான கோவில்கள் ஆங்கிலேயர்களால் அழிக்கப்பட்டன. "கோபுரம்" எனும் மிகப் பிரமாண்டமான போர்க்காளி அம்மன் கோவில் 'மணத்தனா'வில் இருந்து வந்தது. போர்க்காளி, போருக்கான அம்மனின் பிரத்யேகமான வடிவம். அந்தக் கோவிலின் கோபுரம் மிகப் பெரியதாக இருந்தது. எந்தளவுக்கென்றால், தூரத்தில் உள்ள மலையில் இருந்து பார்த்தால் தெரியக் கூடிய அளவுக்கு. இந்தக் "கோபுரம்" போர்க்காளி அம்மனை மையமாக வைத்துத்தான் பழசி ராஜாவின் முகாமும் "கிழக்கே கோவிலகம்" என்ற அவரின் மிடும் இருந்தன.

ஆங்கிலேயருடன் போருக்குச் செல்லும்போதெல்லாம் இங்கே வந்து சபதமெடுத்துச் செல்வாராம் பழசி ராஜா. பழசி ராஜாவைப் பிடிக்க முடியாத கடுப்பிலோ என்னவோ, தூரத்தில் உள்ள மலையில் இருந்து பீரங்கி மூலம் குறிபார்த்து, "கோபுரம்" கோவிலை ஒருநாள் சுட்டுத் தரைமட்டமாக்கினார்கள்

ஆங்கிலேயர்கள். பல நூறு ஆண்டுகள் கழிந்து, இன்னமும்,

அக்கோவிலின் இடிபாடுகள் அப்படியே உள்ளன.

இந்தக் கோவிலுக்கு அருகிலுள்ள டீக்கடையொன்றில்தான் மதுசூதனன் குறுப்பை நான் சந்தித்தேன். ( குறுப்பென்பது, நாயர் ஜாதிகளின் உப பிரிவுகளில் ஒன்று)

நான் ஓரளவுக்கு மலையாளம் பேசுவேன். மலையாளிகள் பேசும் தமிழில் மலையாளக் கலப்பு இருப்பதுபோல நான் பேசும் மலையாளத்தில் தமிழ்க் கலப்பிருக்கும். நான் டீக்கடையில் பேசிய மலையாளத்தை கேட்டவுடன், "எந்த ஊரிலிருந்து வாறீங்க...?" எனத் தமிழில் கேட்டார் மதுசூதனன் குறுப்பு. இந்தியன் ஆர்மியின் மெட்ராஸ் ரெஜிமண்டில் கேணலாகவும், இளம் படை வீரர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுனராகவும் உள்ளார். சீன எல்லையில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் சூடு வாங்கியதால் இரண்டு கைவிரல்கள் இல்லை. காஷ்மீரில் நடைபெற்ற குண்டுவெடிப்பில், வயிற்றுத்தசை கொஞ்சம் பிய்ந்துபோய்விட, விழுப்புண்கள் ஏந்திய 'முழு' இராணுவ வீரனாக இருந்தார்.

நிறைய ஈகோ, ஏகப்பட்ட வீண் பிடிவாதங்களுடன் ஆர்மியில் நுழையும் 18 வயது இளைஞனை, மூன்று ஆண்டுகளுக்குள் தேர்ந்த இராணுவ வீரனாக்குவது பயிற்றுனரான இவரின் பொறுப்பு. "ஒரு *unsophisticated* இளைஞனை எப்படி எதிர்கொள்வீர்கள்.." எனக் கேட்டேன். "அவனின் ஈகோவில் அடிப்பது மட்டும்தான் ஒரே வழி.." என்றார். "பெல்பாட்டம் ஜீன்ஸ், தலை நிறைய முடி, தாடி, மீசை என இராணுவத்துக்குத் தேர்வாகுபவனின் தலைமுடியை கிட்டத்தட்ட முழுமையாக வெட்டி விடுவோம். அதுவே அவனின் ஈகோவில் விழுந்த பெரிய அடியாக இருக்கும்" என்றார்.

"புரியவில்லை.." என்றேன்.

" பதின்ம வயது இளைஞர்கள் பெரும்பாலும் முடி வைத்துக் கொள்ள ஆசைப்படுவார்கள். நிறைய முடி வைத்துக் கொண்டு இராணுவத்தில் இருக்கக் கூடாதா என முரண்டு பிடிப்பார்கள். அவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமல் வலுக் கட்டாயமாக முடியை வெட்டிவிடுவோம். தன்னை மீறி ஒரு விஷயம் நடப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கும். சில நாட்கள் கறுவிக் கொண்டிருப்பான். போகப்போக இதுதான் இராணுவம் என்பதைப் புரிந்து கொள்வான். முறையான இராணுவப் பயிற்சியின் ஆரம்பம் முடியை வெட்டுவதுடனேதான் ஆரம்பிக்கும்" என்றார்.

"தாய்நாட்டுக்காக உயிர் துறக்க உங்களை எது தூண்டுகிறது" எனக் கேட்டேன். "நாங்கள் தாய்நாட்டுக்காக உயிரைக் கொடுக்கிறோம்

எனத்தான் பலரும் நினைக்கிறார்கள். உண்மையில் நாங்கள் நட்புக்காகத்தான் உயிர் துறக்கிறோம். இராணுவத்தின் அடிப்படையே நட்புத்தான்". என்றார். மீண்டும் "புரியவில்லை" என்றேன்.

ஒவ்வொரு இராணுவ வீரனின் பயிற்சிக் காலத்தில், அவனுக்கு ஒரு உயிர் நண்பனை இராணுவமே தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறது. அந்த நண்பனை, இராணுவ மொழியில் *ÒBuddyÓ* என்கிறார்கள். ஒரே வயதுக்காரர்களான அவர்கள், ஓய்வு பெறும் வரை ஒன்றாகப் பணியாற்றுவார்கள். ஒரு நண்பனைப் எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பதில் இருந்து அவனின் சுக துக்கங்களில் பங்குகொள்வது வரை இந்த *Buddy*யின் கடமை. தன் உயிரைக் கொடுத்தாவது தனது *Buddy* ஐ காக்க வேண்டியது இராணுவ வீரனின் கடமை. தனது சகாவை எதிரியிடம் பலிகொடுத்துவிட்டு வரும் நண்பனை இராணுவம் மதிக்காது.

கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், தாய் நாட்டின் மீதான பெருங் காதலை, இராணுவத்தில் சிறு அலகுகளாகப் பிரிக்கின்றனர். இப்பெருங்காதலின் மிகச் சிறிய அலகுதான் *Buddy love. ÒBuddy love*-ற்குப் பிறகு முக்கியமானது தாய்நாடு மீதான காதல்தானே..?" என்று கேட்டேன். "இல்லை. ரெஜிமண்ட் மீதான காதல்" என்றார். அதாவது, தாங்கள் அங்கம் வகிக்கும் ரெஜிமெண்ட் மீதான பாசம்தான், *Buddy love*-ற்கு அடுத்து முக்கியத்துவம் பெறுகிறது. ரெஜிமண்டின் மரியாதைக் காப்பாற்ற வேண்டியது, அந்த ரெஜிமண்டில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு இராணுவ வீரனினதும் தலையாய கடமையாகிறது. "தாய் நாடா இல்லை மெட்ராஸ் ரெஜிமண்டா என்று வந்தால் நான் மெட்ராஸ் ரெஜிமண்டையே தேர்ந்தெடுப்பேன். ஆனால், அப்படி ஒரு இக்கட்டு இராணுவ வீரனுக்கு ஏற்படாது" என்றார் மதுசூதனன்.

மதுசூதனன் குறுப்பின் அண்ணன், வடகிழக்கில் நடந்த நக்சலைட் தாக்குதலில் சில ஆண்டுகளுக்கு முன்பு கொல்லப்பட்டார். நக்சல்களின் எதிர்பாராத தாக்குதலில் கோபிநாத் காயமடைந்து விழுகிறார். நக்சல்கள் சூழ்ந்துள்ளனர் என்பது தெரிந்தும் அவரைக் காப்பாற்றச் சென்ற, கோபிநாத்தின் *Buddy* அலி கோபிநாத்தின் அருகிலேயே சூடுபட்டு இறந்துபோகிறார்.

இன்னொரு விஷயத்தையும் சொன்னார், சுமார் **1** மில்லியன் இராணுவ வீரர்களைக் கொண்ட இந்திய இராணுவத்தில் சுமார், **25** சத வீதமானவர்கள் முஸ்லிம்கள். முஸ்லிம்கள் இல்லாமல், இந்திய

இராணுவமே இல்லை என்றார் மதுசூதனன். இவரின் அண்ணன் கோபிநாத்தைப் போல, இவரின் *Buddy* கூட மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம். பெயர் இம்ரான். ஒரு மலையாள இந்துவின் சுக துக்கங்களில், கடந்த 27 ஆண்டுகளாகப் பங்கெடுத்து வருகிறார் ஒரு மேற்கு வங்காள முஸ்லிம். அட அதுதானே இந்தியாவின் ஆன்மா...?

இந்த *Buddy* சிஸ்டத்தில், மிகச் சிறந்த *Buddy* என்ற பெயரைப் பெற்றவர்கள் முஸ்லிம் இராணுவ வீரர்கள் என்றவர், "முஸ்லிம் இராணுவ *Buddy* கிடைக்கப்பெற்ற இராணுவ வீரன் ஆசீர்வதிக்கப்பட்டவன்" என்றார்.

இந்த முஸ்லிம்களைப் பார்த்துத்தான், ஆ..ஊ என்றால், நாங்கள் "பாகிஸ்தான் போ" என்கிறோம்.

ooo

*குறிப்பு இராணுவ வீரர்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.



# நன்றி:

**"THE STRUGGLE ENDS WHEN GRATITUDE BEGINS"**
- Neale Donald Walsch

**மூகாம்பிகை தாய்க்கு;**
கர்நாடகாவில் உள்ள, ஆனால், மலையாளிகளின் இஷ்ட தெய்வமான கொல்லூர் மூகாம்பிகை கோவிலில் இருந்துதான் எனது கேரளப் பயணத்தை ஆரம்பித்தேன். அத்தாயின் மகா கருணை, என் பயணம் முழுவதும் இருந்ததை உணர்ந்தேன்.

**கொட்டியூர் சிவனுக்கு;**
கொட்டியூர் வைகாச மகோற்சவ காலத்தில் இரண்டு வாரங்கள் கொட்டியூரில் தங்கியிருந்தேன். அடர் காட்டுக்குள், பாவலி ஆற்றங்கரையில் தங்கியிருந்து, கேரள டயரீஸின் மிக முக்கியமான கட்டுரைகளை எழுதிய அனுபவம் அலாதியானது.

**தளிப்பறம்பு இராஜராஜேஸ்வரனுக்கு;**
தளிப்பறம்பு இராஜராஜேஸ்வரன் கோவிலில் உள்ள புல்தரையில் இருந்தே எனது முதலாவது கேரள டயரியை எழுதினேன். அப்பன் சிவன் என் எழுத்தில் எந்தத் தடையையும் வைக்கவில்லை.

**முத்தப்பன் என்ற மூத்தோனுக்கு,**
கேரளத்தின் புகழ் பெற்ற சிறு தெய்வம், "பரசின்னிக்கடவு முத்தப்பன்" கோவில் வளாகத்தில் சில கட்டுரைகளை எழுதினேன். நான் அடர் காட்டுக்குள் வேர்தேடி அலைந்தபோது, முத்தப்பன் என்ற எங்களின் ஆதிவாசி மூத்தோன் துணையாக வந்தார்.

**பாவலி ஆறு,**
பாவலி ஆற்றங்கரையில்
உட்கார்ந்து
கட்டுரைகளுக்குத்
தேவையான பல
புத்தகங்களையும்,
கட்டுரைகளையும்
படித்தேன். 'பாவலி'
அன்னை என் மீது பெருங்
கருணையுடன் இருந்தார்.

**பிரம்மகிரி மலை,**
பிரம்மகிரி மலை
அடிவாரத்தில் இரு
வாரங்கள் தங்கியிருந்தேன்.
மனச் சோர்வடைந்தால்
மலை ஏறுவேன். கொய்யா,
பலா, மா, நாவல் என
பழங்களும் 'கருடன் பச்சை'
போன்ற அரிய
மூலிகைகளும் அங்கே
குவிந்திருக்கும். பிரம்மகிரி
மலை அன்னை மிகுந்த
பரிவுடன் என்னை எதிர்
கொண்டு, வாய் நிறையப்
பழங்களையும் மனசு நிறைய
சந்தோஷத்தையும்,
நுரையீரல் நிறைய
தூய்மையான
ஆக்சிஜனையும் தந்தார்.

**காளந்தி ஆறு,**
மலையிலிருந்து
உற்பத்தியாகி, மூலிகை
மணத்துடன் பொங்கிப்
பிரவாகித்து ஓடி வரும்
காளந்தி, என் மனசுக்கு மகா
நெருக்கமானது. மனசு
சோர்வான
தருணங்களிலெல்லாம்,
'காளந்தி' ஆற்றில் முங்கி
எழுந்து, புதிதாய்
பிறந்ததைப்போல
உணர்ந்துள்ளேன். காளந்தி
ஆற்றங்கரையில் சில
கட்டுரைகளை எழுதினேன்.

**மலைவாழ் மக்களுக்கு,**
ஈழவ வேர் தேடி நான்
அலைந்த மலைக்
கிராமங்களில் அம் மக்கள்
என்னை, மகா பிரியத்துடன்
அணுகினார்கள். தங்களில்
ஒருவனாகக்
கொண்டாடினார்கள்.
தங்களின் உணவைப்
பிரியத்துடன் பகிர்ந்து
கொண்டனர்.
அம்மக்களின் பிரியத்துக்கு.

மோகனன் சேட்டன் டீக் கடை:

பிரம்மகிரி மலை அடிவாரத்தில், காளந்தி நதியோரமாக, ஓலைக் குடிசையொன்றைத் தாக்காட்டி, சிறிய டீக் கடையாக தயார் செய்து வைத்துள்ள மோகனன் சேட்டன் இந்த "கேரள டயரீஸி" யில் முக்கியமானவர்.

நாடோடியாய் அலைந்து, மக்களைச் சந்தித்து, தகவல்களைத் திரட்டி பெயருக்கு கட்டுரையை எழுதிவிடுவேன். ஆனால், அதை மணி மாலைபோல கோர்த்து, தேவையற்றவற்றை நீக்கி, எந்த மேட்டரை முன்னே சொல்வது, எந்த மேட்டரை பின்னே சொல்வது எனத் தீர்மானிக்க வேண்டும் இல்லையா..?

அந்த ***Much needed*** "எடிட்டிங்" கை மோகனன் சேட்டாவின் கடையில்தான் செய்தேன்.

டைப் பண்ணிய மேட்டர்களை எல்லாம், போனில் உள்ள கூகிள் கீப்பில் போட்டுக் கொண்டு, மோகனன் சேட்டாவின் கடைக்கு காலையில் வருவேன். என்னைக் கண்டவுடனேயே, ஆவி பறக்க டீயும், இரண்டு புட்டுகளும் சில அப்பளங்களும் கொண்டுவந்து மேஜையில் வைப்பார். நான் மும்முரமாக போனிலேயே எடிட் செய்வேன். சிறிது நேரத்தில் இன்னொரு டீ வைப்பார். கொஞ்சம் மிக்ஷர் வைப்பார். ஒரு மணிக்கொருதடவை இது தொடரும். அந்த சிறு ஓலைக் கடையில், சுமார் ஐந்து மணி நேரமெல்லாம் உட்கார்ந்து எடிட் செய்திருக்கிறேன். மோகனன் சேட்டாவோ, அங்குவரும், பிரம்மகிரி அடி வாழ் மலைவாசி மக்களோ என்னை ஒரு நிமிஷம் கூடத் தொந்தரவு செய்ததே இல்லை.

ஒரு நாள் கையில் காசு இல்லை. காசு எடுக்க இருபது கிலோமீட்டர் பயணம் செய்து மாணந்தவாடியிலுள்ள ஏடிஎம் செல்ல வேண்டும். "காசில்லை, டீக்காசு நாளை தருகிறேன். மாணந்தவாடி போகணும்" எனத் தயங்கியவாறே சொன்னேன். மோகனன் சேட்டன் கெக்கட்டம் போட்டுச் சிரித்தார். லாச்சியைத் திறந்து, ஐநூறு ரூபாய் தாளொன்றை எடுத்துக் கொடுத்து "செலவுக்கு வைச்சிரு மோனே" என்றார். அந்த ஐநூறு ரூபாய் அச் சிறு டீக்கடையின் ஒரு வாரகால வருமானமாக இருக்கும். "இல்ல சேட்டா" என நான் தயங்க, "என்னால முடிஞ்சும், உனக்கு உதவலன்னா, அந்த மனச் சங்கடம் என்னை வாழ்நாள் பூராத் துரத்தும் மோனே" என்றார். நான் மோகனன் சேட்டனை வாழ்நாள் பூரா நேசிப்பதாக முடிவெடுத்தேன்.

**அனுபமா பரமேஸ்வரனுக்கு,**

கேரளம் மீதான எனது ஆதிப் பிரியம் அனுவில் இருந்துதான் ஆரம்பிக்கிறது. பிரம்மகிரி மலை வாழ் சிறு தங்கை பிரியாவைப்போல; பார்த்த முதல் நாளே; பசைபோல என்னுடன் ப்ரியமாக ஒட்டிக் கொண்ட சிறு தேவதை அவர் . கடவுளின் தேசம் மீது நான் ஆதிக் காதல் கொள்ள அவரே காரணமாக இருந்தார். அச் சிறு பெண்ணின் பெருங் கருணைக்கு,

**மலைவாழ் தங்கை பிரியாக்கு,**

பிரம்மகிரி மலை தந்த மலை வாழ் தங்கை பிரியா. ஈழவ வேர் தேடி, “தியா” மக்களுடன் சில காலம் தங்கியிருந்தேன். நான் தங்கியிருந்த வீட்டின் சிறு தேவதை, பிரியா. குண்டு விழிகளும், குண்டுக் கன்னங்களும், மா நிறமும் கொண்ட பேரழகியான அச் சிறுபெண், மலை அட்டை போல என்னுடன் ஒட்டிக் கொண்டார்.

மலையடிவாரத்தில் நான் நடக்கும்போதெல்லாம் கூடவே வருவார். கொய்யா, நாவல், ஈச்சம் பழங்களைப் பறித்துத் தருவார். “இங்கயே ஒரு சேச்சியை கல்யாணம் பண்ணிச் செட்டிலாகிடு” என்பார், “அந்த சிவப்புச் சேச்சியை இங்கிலீஷ் பேசியே கரெக்ட் பண்ணலாம்” என ஐடியாவெல்லாம் கொடுத்தார். அமைதியாகக் கேட்டுவிட்டு, “என் காதலிப் பெட்டை, என்னைத் தூக்கி உனக்கு அடிப்பார். பரவாயில்லையா..?” என்றேன். “உனக்கு லவ் வேற இருக்கா” எனத் தனது குண்டு விழிகளை இன்னும் விரித்து ஆச்சரியப்பட்டார்.

பெரும் மழைக்கு ஆர்ப்பரித்து ஓடிய வெள்ளத்தில் “கள்ளா முட்டி” என்ற சிறு மீன் பிடித்து, தன் கைகளால் மசாலா அரைத்து சமைத்துக் கொடுத்தார். சில காலமாக அசைவம் தவிர்த்து வந்த நான், அதை ஆசைப் பட்டு உண்டேன். பிரியத்துக்கு முன்னால் எல்லாமே தூசு என்பவன் நான்.

பிரம்மகிரியை நான் நீங்கிய தினம், கண்களில் நீருடன் விடை கொடுத்த அச் சிறு பெண்ணின் பெரும் பிரியத்தை இந்நூலில் நினைவு கூறாவிட்டால், நான் நன்றி மறந்தவன் ஆகிவிடுவேன்.

## உன்னி ஏட்டனுக்கு,

இரவுபகலாக காட்டு வேலை செய்து, இயற்கை தந்த சிக்ஸ் பேக்குடன் பார்ப்பதற்கு பிரமாண்டமாக இருப்பார் உன்னி ஏட்டன். "மொதக்கர" மலைக் கிராமமொன்றிலுள்ள, புலிக் குகைக்குப் பக்கத்தில், சக்கப்பணிய உட்கார்ந்து, கள்ளடித்துக் கொண்டிருந்தவர். என்னைக் கண்டதும் குதூகலமாகிவிட்டார்.

யாருமே புகாத கேரளத்தின் அடர் காட்டுக்குள் என்னை அழைத்துச் சென்றது அவர்தான். "யானை வந்தா, வளைஞ்சு வளைஞ்சு பள்ளத்தை நோக்கி ஓடணும். காட்டெருமை வந்தா பிலத்துக் கத்தணும். நரி, ஓநாய் வந்தால் கையிலுள்ள கட்டையால் எறியணும்" எனக் காட்டுக்குள் அழைத்துச் செல்ல முதல் பல குறிப்புகளைச் சொன்னவரை இடை மறித்து, "புலி வந்தால் என்ன செய்யணும்?" எனக் கேட்டேன். புலிக்காடு அது. "நாம ஒண்ணும் செய்றதுக்கில்ல. புலி நம்மள செஞ்சிட்டுப் போகும்" என வெத்திலை தெறிக்கச் சிரித்தார் உன்னி ஏட்டன்.

அடர் காடு, மழை காலம் வேறு, என் கால்களில், மலை அட்டை ஏறி அநியாயத்துக்கு இரத்தம் குடித்தது. உன்னி ஏட்டன் தூள் உப்புக் கொண்டு வந்திருந்தார். இடைக்கிடை என் கால்களுக்கு உப்பிட்டு தடவிவிட்டார். உப்புப்பட்டதுமே, டாக்குத்தர் மாப்பிளை செட்டாகியவுடன், காதலிப் பெட்டைகள் கழருவதைப்போல, அட்டைகள் கழன்று விழுந்தன.

காட்டுக்குள் சுமார் இருபத்தைந்து மைல்களாவது சுத்தியிருப்போம். என் கால்கள் வலி பின்னி எடுக்கும் போதெல்லாம், ஏதோ ஒரு மூலிகைத் தைலம் போட்டு நீவி விடுவார். "கால்ல எல்லாம் தொட்டுட்டு, நானே தடவுறேண்ணே" எனச் சங்கடப்பட்டால், "எங்குட்டனில்லே நீ" என இறுக்கி அணைத்துக் கொள்வார் உன்னி ஏட்டன்.

ஒரு மழை நாளில், உன்னி ஏட்டனும், நானும் "திருநெல்லி" கோவிலுக்குச் சென்றுவிட்டு வரும் வழியில் கடும் மழையில் சிக்கி அற நனைந்து விட்டோம். எப்படியோ வீடு வந்து சேர்ந்துவிட்டேன். கடுங் குளிர், உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. உன்னி ஏட்டன் பார்த்து விட்டார்.

இரவு பத்து மணிக்கு, என் அறைக்கதவை யாரோ தட்டிக் கேட்டது. யானை உலவும், மலைக் காட்டுப் பிரதேசங்களில், ஏழு

மணிக்கு பிறகு நடமாடுவதை விரும்ப மாட்டார்கள்.
சந்தேகத்துடன் கதவைத் திறந்தால் அங்கே உன்னி ஏட்டன் நின்று கொண்டிருந்தார்.

"குளிருதா குட்டா" என வாஞ்சையுடன் தலையைத் தடவினார். "ஓம்" என்றேன். சாரத்துக்குள் சொருகி வைத்திருந்த, "ஹெர்குலிஸ்" என்ற ராஜா விஸ்கியை எடுத்து, "இத அடிச்சிட்டுப் படு. குளிராது. நல்லா தூக்கம் வரும்" என்றார். "வேணாம் சேட்டா" என இழுத்தேன். எதுவுமே வற்புறுத்தாமல், இருட்டுக்குள் மறைந்தவர். திரும்ப வரும்போது கனத்த இரண்டு கம்பளிகளுடன் வந்தார். "இதப் போர்த்தி தூங்கிக்க குட்டா. குளிரவே குளிராது" என்றார். "இரண்டையும் கொடுத்துவிட்டால் உங்களுக்கு" என்றேன் சங்கடமாக, "இது குளிரால் அணுக முடியாத காட்டுடம்பு குட்டா" என்றவாறே இருட்டில் மறைந்துபோனார் உன்னி ஏட்டன்.

# வாசிப்பனுபவம்

*அருளினியன் எழுதும் "கேரள டயரீ"ஸின் பகுதிகளைப் படித்து வியந்திருக்கிறேன். ஆர்வமூட்டும் வசிகரமான எழுத்துநடை; தீவிரமான தேடலும் - அர்ப்பணிப்பும் மிக்க உழைப்பு. பரந்துபட்ட உலகஞானம். எத்தகைய இடர்களையும் தளர்ந்துவிடா ஓர்மையுடன் தாண்டி தனது இலக்குகளை அடைந்துவிடும் எத்தனிப்பு. அவருடைய "கேரள டயரீஸ்" நூலாக வெளிவருவதை அறிந்து மகிழ்வதோடு. ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ஈழவரின் வேர்களைத் தேடித் தொடங்கிய அவரது கேரள யாத்திரை - ஈழவரின் வேர்களை மட்டுமல்லாது தமிழர்களின் "உன்னதமான - கொண்டாட்டமான" வேர்களையும் கண்டடைந்து இருக்குமென நம்புகின்றேன்.*

**குப்பிளான் ஐ. சண்முகன்,** *எழுத்தாளர்.*

*"உங்க எழுத்து பாணி வசீகரிக்கிறது. சுஜாதா இப்படித்தான் ரொம்ப முந்தி எழுதி இருப்பாரோ? அவரை பாணி செய்வதாக சொல்லல. அவரின் ஒவ்வொரு வரியும் அடுத்த வரிக்கான ஆவலை தூண்டும். இங்கேயும் தூண்டுகிறதப்பா..!"*

**மனோ கணேசன்**
*தேசிய கலந்துரையாடல்களுக்கான அமைச்சர். இலங்கை.*

அருளினியனின் கேரளப்பயணம் எனக்கு சொந்த ஊரான மட்டக்களப்பில் திரிவதையே நினைவில் கொண்டுவருகிறது. எனது காலில் இல்லாத, நான் இழந்த வலிமையை அவரது காலோடு இணைத்து நானும் நடந்த ஒரு அனுபவம் இந்த பயணக்கதை. இதேபோக்கில் அவர் நீண்டு பயணிக்கவேண்டும். அப்படியே மட்டக்களப்புக்கும் வரவேண்டும். வழிமறிப்பு தாக்குதல் வழியில் வரலாம் அதனையும் கடந்துவா தம்பி.

- **சீவகன்** *மூத்த பத்திரிகையாளர்,* BBC

இவன் என்னை ஆச்சரியப்படுத்தும் ஒருவன்.

ஒருமையில் அழைப்பது தான் இந்த சிறு பதிவுக்கு ஒட்டும் என்பதால் அருளினியனின் அன்பர்கள், நண்பர்கள் பொறுத்துக்கொள்க. பெயரளவில் எனக்கு பழக்கமானபோது; நான் படித்த அதே யாழ் இந்துவின் குழப்படிகாரத் திறமைசாலிகளில் ஒருவனாக அறிந்தவனை, ஃபேஸ்புக் நெருக்கமாக்கியது. சில பல "ஹாய்" "வணக்க"ங்களின் பின்னர் திடீரென்று ஒருநாள் தமிழக, ஊடகவியலாளனாக எனக்குத் தகவல் அனுப்பினான். ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி. இவனது துணிச்சல், வெட்கப்படாத தன்மை, எதிலும் புதுமையும் ரசனையும் காண்கிற "பிறவிக் காதலன்" என்று தன்னைத்தானே பிரகடனம் செய்யும் குணம் என்பவை கண்டு, அருள் ஏதாவது புதிதாய் செய்வான் என்று தெரிந்திருந்தேன்.

திடீரென்று எனது காலக்கோட்டில் கேரளாவின் குளிர்ச்சி. நாடோடியாய்த் திரிகிறான் எங்கள் ஈழத்து மைந்தன். "கடவுளின் தேசம்" பற்றி கண்ணுக்கு குளிர்ச்சியாய் இடையிடையே படங்கள், வாசிக்க சுவாரஸ்யமான புதிய தகவல்கள், யாழையும் கேரளாவையும் கோர்க்கும் கோடுகள் என்று ஒரு பக்கம் "அட" போட்டுக்கொண்டிருக்க, இன்னொரு பக்கம் "வெள்ளாளர்கள்; யாழ்ப்பாணத்தின் துயரம்" என்று அதிர வைக்க இவனால் தான் முடியும். இந்த கேரள நாடோடி வாழ்க்கையில் தனியே இவன் மட்டும் மலைவாசிகளை சந்தித்து, கேரள மழையில் நனைந்து, அருவிகளில் நனைந்து சிலிரித்ததாக நான் நினைக்கவில்லை. நாமும் செல்வதாக உணர்கிறேன். அது தான் அருளினியனின் எளிமையான, வலிமையான எழுத்துக்களின் சக்தி. ஒரு பயணக்கட்டுரை என்றால் இப்படித் தான் இருக்கவேண்டும் என்றில்லாமல் அங்கேயும் இங்கேயும் அதுவும் இதுவும் என்று திடுக்கிட வைக்க, அதற்குள்ளே புகுந்து ரசிக்க வைக்கும் வசியம் கைவந்த கலையாக அவனுக்கு வாய்த்துள்ளது. நான் இதுவரை புகாத கேரளப் பிராந்தியங்களில் புகுந்து இன்னும் யாழின் வேர் தேடத் தயாராகிறேன்.

கூட்டிச்செல்லும் நாடோடிக்கு வாழ்த்துகள்!

**ரகுபதி பாலஸ்ரீதரன் வாமலோஷனன் (ஏஆர்வி லோஷன்)**
இயக்குநர், சூரியன் எப்.எம், சிரேஷ்ட வானொலிக் கலைஞர்

இவரது எழுத்து வாசகர்களை இழுத்து வைத்திருக்கும் சக்தி கொண்டது. எழுதுவது ஒரு கலை. அது இவருக்கு கைவந்த கலை.

ஒரு பயண ஆய்வு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான உதாரணம் இவரது கட்டுரைகள்.

வாசிக்கும்போது பொறாமையாகவும் இருந்தது. என்னால் இப்படி எழுதுமுடியவில்லை; என. மகிழ்சியாகவும் இருந்தது, நமது கனவுகளை ஒருவர் வாழும்போது. வாழ்த்துகள்

**மீராபாரதி**, ஆசிரியர் "பிரக்ஞை"

நானும் பலதடவை கேரளாவிற்கு பயணித்திருக்கிறேன். ஆனால் ஒரு தடவையேனும், "கேரள டயரீஸ்" போன்ற சிந்தனை எனக்கு வந்ததே இல்லை. தனது அனுபவங்களை தொகுத்து நூலுருவில் கொண்டு வந்திருப்பதால் பலருக்கும் பல பயனுள்ள தகவல்கள் கிடைக்கும் என நம்புகிறேன். இனிவருங்காலங்களில் இந்தியாவின் ஏன் உலகின் எந்தப்பகுதிக்கு சென்றாலும், ஈழத்தமிழன் தனது வேரைத் தேடுவதற்கு இந்தப்புத்தகம் ஒரு உந்துதலாக இருக்கும்.

**சாத்திரி**, எழுத்தாளர்

அருளினியன் எழுதிவந்த "கேரள டயரீஸ்" கட்டுரைகளை வாசித்து மிகவும் மகிழ்ந்தேன். இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அழிந்து போன, அழிக்கப்பட்ட நமது சுவடுகளை மீளக் கண்டுபிடிப்பு செய்யும் பணி ஸ்தம்பித்துப் போயுள்ளது. அருளினியனின் இந்தத் தேடல் என்னை ஆச்சரியப்படுத்த வைத்ததுடன், மிகுந்த மகிழ்ச்சியையும் தந்தது. அவரது குறிப்புகளும், புதிய தகவல்களும், தரவுகளும், அடுத்த மட்டத்துக்கான தேடலுக்கு வழிகளைத் திறந்துவிடும் என்பது நிச்சயம். பலரைப் போல இந்த நூலுக்காக காத்திருந்தவர்களில் நானும் ஒருவன்.

**என். சரவணன்**, எழுத்தாளர்.

ஈழத்தின் பெரும்பான்மை சமூகம் தமது இருப்பை தகவமைத்துக்கொள்ள பல புதிய கருத்தியல் யுத்தங்களை முன்னெடுக்கின்ற அளவிற்கு ஈழத்து தமிழ் சமூகம் தமது வரலாறுகளை தகவமைத்துக்கொள்ளப் பின் நிற்கின்றது. மூன்று காலனி நாடுகளின் பிடியில் இருந்த ஈழத் தமிழர்கள், அதற்கு முன்பிருந்த வரலாற்றுத் தகவல்களைப் போதியளவு ஆவணப்படுத்தவில்லை. ஈழத்தைச் சேர்ந்த அருளினியன் பொதுவெளியில் எழுதியிருந்த "கேரளா டயரீஸ்" ஈழத் தமிழர் வாழ்வியலையும் பண்பாட்டு விழுமியங்களின் ஆணி வேரை கண்டடைவதில் காத்திரமான பங்கை வகித்திருப்பதுடன்; மலபாரின் வாழ்வியலும் ஈழத்து வாழ்வியலும் எந்தவகையில் ஒத்துப்போகின்றது என்பதை கருத்தியல் ரீதியாக நிரூபணம் செய்ய விழைகிறது.

யாழ்ப்பாணிகள் இதுவரையில் ஆறுமுக நாவலரது சமயத்தொண்டையும், அவர் தமிழுக்கு ஆற்றிய சேவைகளையும் முன்நிலைப்படுத்தினரே ஒழிய ஆறுமுக நாவலரது கறுப்புப் பக்கங்களை மறந்தும் தொட்டது கிடையாது. ஆனால் அருளினியன் மிகவும் துணிச்சலாக ஆறுமுக நாவலரின் சைவ எழுச்சியும் அதனுடாக உச்சம் பெற்ற யாழ்ப்பாணிகளது மேட்டிமைகளை "வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தின் துயரம்" எனவும், "ஆறுமுக நாவலரும் சைவ வெள்ளாள மேலாதிக்கமும்" என ஒரேயடியாகப் போட்டு தாக்கியுள்ளார்.

அதன் உச்சக்கட்டமாக ஓரிடத்தில் அருளினியன் பின்வருமாறு கூறுகின்றார், "தமிழ் ஈழம் கிடைத்திருந்தால்; அது நிச்சயமாக சாதிய வேறுபாடு இல்லாமல்தான் இருந்திருக்கும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. ஏனென்றால், புலிகள் கடும் இனவாதிகளாக இருந்தனர். ஆனால், சாதியவாதிகளாக அவர்கள் என்றைக்குமே இருந்ததில்லை"

இந்த இடம் மிகவும் சர்ச்சைக்குரியது. எனது கருத்தின்படி இனவாதத்தின் தோற்றுவாய் என்பதே சாதியம் என்ற ஆணிவேருடன் தொடர்புபட்டது. புலிகளது காலத்தில் "சாதிய வேறுபாடுகள்" என்ற கருத்தியல் வாதத்தை அவர்கள் ஓரளவுதான் தங்களது கட்டுக்குள் வைத்திருந்தார்கள். அதில் அவர்களால் முற்றுமுழுதாக வெற்றிபெற முடியவில்லை என்பதற்கு, ஈழத்தின் போரியல் எழுத்துக்கள் எம்முன்னே வரலாற்று சாட்சிகளாக இருக்கின்றன. அதேவேளையில் ஈழத் தமிழ் மக்கள் யுத்தத்தின் அழிவுகளை சந்தித்திருந்தாலும் சாதிய வேறுபாடுகளைக்

களைவதற்கு அவர்கள் என்றுமே தயாராக இல்லை என்பதை தாயகத்து நிகழ்வுகள் எம்முன்னே காட்டி நிற்கின்றன.

"கேரளா டயரீஸ்"-ஐ வாசித்ததில் ஈழத்தமிழரின் பண்பாட்டு விழுமியங்களின் ஆணி வேரை மலபாரில் கண்டடைவதில் அது வெற்றி கண்டுள்ளது என்றுதான் சொல்லத்தோன்றுகின்றது. அருளினியனின் இலகு சொல்லாடல் நகர்த்துகை அதை மேலும் இலகுவாக்கியிருக்கின்றது என்றே சொல்வேன்.

**கோமகன்,** எழுத்தாளர்

ஈழத் தமிழர்களின் பூர்வீகம் எது என்பது ஒரு பெருங்கேள்வி. ஈழத் தமிழர்களை வந்தேறு குடிகள் இலங்கையின் இன்றைய பெரும்பான்மையினத்தின் ஒரு சிலர் குறிப்பிடும் வேளையில், ஈழத் தமிழர்கள் வரலாற்றுக்கு முன்பிருந்த குடிவழி வந்தவர்கள் என்று சில ஈழத் தமிழர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். இந்த முரண்கள் நிறைந்த, முடிவுகாணப்படா வாதத்தொடரில் பிரபலமான இன்னொரு கருத்துருவாக்கமானது ஈழத் தமிழர்கள் மலபார் வழிவந்த மலையாளப் பூர்வீகம் கொண்டவர்கள் என்பதாகும். இந்த கருத்துருவாக்கங்களின் பொருத்தப்பாடுகள், உண்மைத்தன்மை பற்றிய வாதங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த பின்புலத்தில்தான் அருளினியனின் "கேரள டயரீஸ்" என்ற கேரளப் பயணக் கட்டுரைத் தொடர் முக்கியத்துவம் பெறுகிறது. கேரளாவில் தான் கண்ட அனுபவங்களையும், அதன் பாரம்பரியங்கள் பற்றிய தேடலையும் பதிவுசெய்தது மட்டுமல்லாது, அவற்றிற்கும் ஈழத் தமிழருக்கும், ஈழத்தமிழர் தம் பண்பாடு மற்றும் பாரம்பரியங்களுக்கிடையிலான தொடர்புகள், ஒற்றுமைகள் பற்றியும் ஒப்பு நோக்கியிருக்கிறார். நேரடி அனுபவங்களின் வாயிலான இந்த ஆய்வு ஈழத் தமிழர்களின் மலையாளப் பூர்வீகம் பற்றிய கருத்துருவாக்கத்திற்கு வலுச் சேர்ப்பதாக அமைகிறது. அவ்வகையில் ஈழத் தமிழர்களின் பூர்வீகம் பற்றிய நீண்ட ஆய்வுப் பரப்பில் இந்த "கேரள டயரீஸ்" பதிவுகளும் பங்குபெறுகிறது.

**என். கே. அஷோக்பரன்,** சட்டத்தரணி, அரசியல் ஆய்வாளர்

தேடலில் தொடங்குகிறது மனித வாழ்க்கை. தொடக்கம் முதல் இறுதி வரை எதையாவது தேடுவதிலேயே உயிர்ப்பு இருக்கின்றது. வானோங்கிய சாகரத்தில் புதைந்து கிடைக்கும் உயிரின் ரகசியத்தை தேடுவது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. காட்டின் உயிர்ப்பு அசாத்திய சக்தி கொண்டது. அது எல்லாத் தேடல்களையும் அனுமதிப்பதில்லை; முடிவுகளும் அவ்வளவு சுலபமாகக் கிடைப்பதுமில்லை. முடிவற்ற தேடல்கள் இலைகளின் சலசலப்பிலும் புல்லின் நுனிகளிலும் சுழன்றடிக்கும் காற்றினிலும் அலைந்து கொண்டிருக்கின்றன. அவற்றைத் தேடியபடி இன்னொரு விழுது தரைதொட வளர்கிறது. அது போலவே எமக்கான வேர்களை நோக்கிய பயணமும். என் வேர்கள் ஆழ்ந்து ஓடிய மண்ணின் வாசம் என் மேல் இன்னமும் வீசிக் கொண்டிருப்பதற்கான சாத்தியங்கள் எவ்வளவு நிதர்சனமோ அத்துணை தீர்க்கமானது எனக்கான அடியினைக் கண்டறிதல். அந்த வகையில் வாசித்தவற்றில் குறிப்பிடத்தக்க தேடல் மிகுந்தது அருளினியனின் இந்த "கேரள டைரிஸ்". ஒரு மாணவன் தன்னைப் படைத்த ஆதித் தாயின் சுவடு தேடித் திரியும் தோற்றம் என் மனதில் விரிந்து கொண்டிருந்தது. அண்ட சராசரத்தில் ஒரு மூலையில் வாழும் ஒரு மூத்த குடியின் தொன்மையும் வலிமையையும் அதன் சரித்திரமும் எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பினும் ஒரு சாகரத்தில் குடி கொண்டிருக்கும் மௌனமாய், தனிமையாய் என் மேல் கவியக் கண்டேன். இனியன் பயணிக்கும் தெருக்கள் தோறும் காடு மலைகள் தோறும் மனது ஆளாய்ப் பறந்து திரிந்தது. இனியனின் கால்கள் அளந்த தேசத்தை மனதில் கண்டு கொண்டு கண்களை மூடும்போது என் அடியைத் தேடியலைந்த ஆற்றாமை பெருமூச்சாய் கடந்து போகிறது. இனியனின் எழுத்து நடையும் கதை சொல்லும் பாணியும் என்னை அவர் காண்பதையும் பார்க்க வைக்கின்றன. இனியனின் எழுத்துப் பயணம் இதே தேடலுடன் தொடர மனமார வாழ்த்தி..

**மயூ மனோ,** கவிஞர்.

கேரளா மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் சென்றும், மலைக் காடுகளில் கூட தங்கியிருந்தும், ஈழத்தமிழரின் வேர்கள் கேரளாவில் எங்குள்ளன என்பதை எழுத்தாளர் அருளினியன் ஆராய்ச்சி செய்துள்ளார். அதற்கு அவரது தனிப்பட்ட ஆர்வம் உந்துசக்தியாக இருந்த போதிலும், கூடவே ஒரு சமூகப் பொறுப்புணர்வும் இருந்துள்ளது. "கேரளா டயரீஸ்" நூலுருவில் வருவதன் மூலம், தமிழரின் அரசியல் வரலாறு வேறொரு கோணத்தில் இருந்தும் பார்க்கப்படும்.

அருளினியன் தனது அனுபவங்களை அன்றாடம் முகநூலில் பகிர்ந்து வரும் பொழுதே "கேரள டயரீஸ்" தொடர் என்னைக் கவர்ந்து விட்டது. தெளிந்த நீரோடை போன்று ஓடும் எழுத்து நடை அனைவரையும் வாசிக்கத் தூண்டும். இளம் வயதுக் குறும்பும், இடையிடையே தலைகாட்டும் நகைச்சுவை துணுக்குகளும் வாசகரை வசீகரிக்கும் தன்மை கொண்டவை.

ஆயிரம் நூல்களை படிப்பதை விட, ஒரு மைல் தூரம் பயணம் செய்வது அதிக பலனைத் தரும் என்று ஒரு சீனப் பழமொழி உள்ளது. ஊர்சுற்றிகளும், வெளிநாட்டுப் பயணங்களில் நாட்டம் கொண்டவர்களும் தான் உலக வரலாற்றை மாற்றி இருக்கிறார்கள். அந்த வகையில், தம்பி அருளினியனும் கேரளாவில் தங்கியிருந்து, மலையாளம் கற்றறிந்து, இந்த நூலுக்கான ஆய்வுகளை செய்துள்ளார்.

ஒருவர் நடைமுறை மூலம் பெற்றுக் கொள்ளும் அறிவை எழுதும்போது, அந்த எழுத்துக்கள் சாகாவரம் பெறுகின்றன. இபுன் பதூதா, மார்க்கோபோலோ எழுதிய பயணக்குறிப்புகள் இன்றளவும் படிக்கப் படுகின்றன. அந்த வகையில் அருளினியனின் கேரளா டயரீஸ் அடுத்து வரும் தலைமுறைக்கும் பயனுள்ளதாக அமையும்.

**கலையரசன்,** எழுத்தாளர்.

ஊர் சுற்றல் யாருக்குத்தான் பிடிக்காது? அதிலும் கேரளா போன்ற உன்னதமான பூமிக்கெனில் துள்ளிக் குதிக்க மாட்டார்களா? அப்படிப்பட்ட பூமியில் ஒரு தேசாந்திரியாய் சுற்றித்திரிந்து.. கண்ட, கொண்ட விஷயங்களை அனுபவங்களை எழுத்துப் படுத்தி நூலாக வெளியிடல் எல்லோர்க்கும் வாய்க்காது. அருளினியனுக்கு அது வாய்த்துள்ளது.

**வடிவரசு,** பாடலாசிரியர்.

"பனிவிழும் தேசத்தில் வாழ்ந்தாலும் மனமோ இன்னமும் முற்றத்துப் பனிக்கே ஏங்குகிறது" என்று புதுவை இரத்தினதுரை ஒருமுறை கூறியிருப்பார். பயணங்களும் அப்படித்தான். மலையேற்றம் செய்யும்போது தரையை மீண்டும் மீண்டும் குனிந்து பார்ப்பதுபோல, படகில் செல்லும்போது கரையை வியந்து ஏங்குவதுபோல, புதுக்காதலியை முகருகையில் முன்னால் காதலியின் வாசம் பிடிப்பதுபோலத்தான் பயணங்களும். பயணங்கள் நம் கடந்தகாலங்களையும் பிறந்து வளர்ந்த ஊர்களையும் எப்போதும் ஏதோ ஒரு விதத்தில் ஞாபகமூட்டிக்கொண்டே இருக்கின்றன. இதுபோல நம் ஊரில் இல்லையே. இவ்வுணவை விட நம்மூர் உணவு நன்றாக இருக்குமே. இந்தக் குழம்புக்கு கொஞ்சம் புளி சேர்த்தால் அம்மாவின் கூட்டுப்போல இருக்குமே என்று பயணங்களின் கடல்மட்டம் எப்போதும் நம்மூராகவே இருந்து விடுவதுண்டு.

அருளினியனின் "கேரள டயரீஸி"ல் கேரளம் இருக்கிறது. அதன் திணைகள் இருக்கின்றன. அங்குள்ள மனிதர்கள், உணவு, உணர்வுகள், அன்பு, நிறைய ஈரம், வெக்கை, அட்டைகள் என எல்லாமே இருக்கின்றன. இவை எல்லாவற்றிலும் ஏதோ ஒரு விதத்தில் அவருடைய சொந்த ஊரும் ஊடாடிக்கொண்டே இருக்கிறது. உணவுதொட்டு சாதியம்வரை கேரளத்து அனுபவங்கள் அவரை யாழ்ப்பாணத்துக்கே மீள இட்டுச் செல்கின்றன. கேரளத்தில் அவர் யாழ்ப்பாணத்தையே தேடியிருக்கிறார். நாவுக்கரசர் தில்லையில் கைலாயம் பார்த்ததுபோல. தேவையான அளவு சுவாரசியம். அயர்ச்சியின் போது சற்று நகைச்சுவை. அங்கதம். சிலவேளை செருக்கு. கொஞ்சம் அறச்சீற்றம். "கேரள டயரீ"ஸ் கட்டுரைகளை வாசிக்கும்போது நமக்கும் இவையெல்லாம் வந்துபோகிறது. உன்னி ஏட்டனும், மோகனனும், பிரியாவும், அவர்கள் சூழ் வாழ்வும் நம்மைச் சற்று பொறாமைப்படவும் வைக்கின்றன. அருளினியனின் பயணங்கள் முழுதும் மழை பெய்துகொண்டே இருக்கிறது. இனி எப்போது மழை பெய்தாலும் அது இந்தக் கேரளப் பயணத்தின் புழுக்கத்தை நம் உடல் எங்கும் வியாபித்து அழுங்கச் செய்யப்போகிறது. நினைவு ஏக்கத்தின் புழுக்கம் வலி மிகுந்தது. கேரளடயரீஸ் நூலைத் திறக்கையில் மழைவேறு பெய்து தொலைக்கிறது. கொடுமை.

*அருளினியன் செய்யப்போகும் அடுத்த பயணத்துக்கான காத்திருப்பில்.*

**ஜேகே,** எழுத்தாளர்.

ஈழத்தின் வேர் தேடி பயணித்த இவரது எழுத்துகளில்தான் எத்தனை எத்தனை புதிய செய்திகள்! செல்லும் இடமெல்லாம் அன்பை விதைத்துச் செல்லும் இவர் எண்ணம் போல சென்ற இடங்களிலும் அன்பை மட்டுமே விதைப்பவர்களோடு வாழ்ந்து திரும்பி இருக்கிறார். இலங்கையின் தமிழ் சிங்கள இனவாதத்திற்கும், தமிழர்களான இந்துகள் இஸ்லாமியர்களின் மதவாதத்திற்கும் இதுவே செய்தி. புத்தக வடிவில் முழுமையாகக் காண காத்து இருக்கிறேன் தோழர்.

**புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா**
*மாநில துணைச் செயலாளர், திமுக சிறுபான்மையினர் அணி*

பிரயாண இலக்கியம் நாம்போகாத இடங்களில் எம்மை சஞ்சரிக்கவைக்கும் ஒரு மாயக்கம்பளம். கேரளம் நான் பார்த்த இடங்களில் என்னைக் கவர்ந்த இடம். என்னால் பார்க்க முடியாத இடங்களை பத்திரிகையாளரின் அனுபவத்தின் ஊடாக பார்க்க எண்ணி "கேரள டயரீஸ்" படிக்கத் தொடங்கினேன். தங்கு தடையின்றி என் கைப் பிடித்து அழைத்துச் சென்றது அருளினியனின் எழுத்து.

**- நோயல் நடேசன்,** எழுத்தாளர்.

டயரீஸ்
தொடரும்...





யாழ்ப்பாணம் குப்பிளானில் பிறந்த அருளினியன் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்ப பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை பெங்களூர் பல்கலைக் கழகத்திலும் கற்றார்.

"ஆனந்த விகடன்" மாணவப் பத்திரிகையாளராக, பத்திரிகைத் துறைக்குள் நுழைந்த இவர், இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின், "சினிமா எக்ஸ்பிரஸ்", "தினமணி" ஆகியவற்றில் உதவி ஆசிரியராகவும், நிருபராகவும் பணியாற்றினார். தற்போது சுயாதீன பத்திரிகையாளராகவும், ட்ராவல் ஜேர்னலிஸ்ட்டாகவும் இயங்கும் அருளினியன், தமிழ் சினிமாவின் முக்கியமான சில படங்களின் திரைக்கதைகளிலும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

stoicdale publishers
Delhi | Bengaluru | Chennai
Ph: +91 9003048162, 9080133568

இந்தியா ₹ 230
இலங்கை ரூபாய் 450